பிரதமர்

# மோடி

அவர்களின்

## பாரத அரசு 2024



மாற்றம் → முன்னேற்றம் → வருங்காலம்

கார்த்திக் திருநாராயணன்

# பிரதமர் மோடி அவர்களின்

## பாரத அரசு 2024

மாற்றம் → முன்னேற்றம் → வருங்காலம்

கார்த்திக் திருநாராயணன்

notionpress.com

INDIA • SINGAPORE • MALAYSIA

Copyright © Karthik Thirunarayanan 2024
All Rights Reserved.

ISBN 979-8-89277-942-5

This book has been published with all efforts taken to make the material error-free after the consent of the author. However, the author and the publisher do not assume and hereby disclaim any liability to any party for any loss, damage, or disruption caused by errors or omissions, whether such errors or omissions result from negligence, accident, or any other cause.

While every effort has been made to avoid any mistake or omission, this publication is being sold on the condition and understanding that neither the author nor the publishers or printers would be liable in any manner to any person by reason of any mistake or omission in this publication or for any action taken or omitted to be taken or advice rendered or accepted on the basis of this work. For any defect in printing or binding the publishers will be liable only to replace the defective copy by another copy of this work then available.

# Contents

*முன்னுரை* 5

*நன்றி* 13

*ஆசிரியரின் குறிப்பு* 15

1. மோடி அரசு – ஆட்சி பொறுப்பின் முதல் ஐந்தாண்டுகளில் (2014 - 2019) – மாற்றத்தைக் கொண்டுவந்தது 21

2. சுருக்கத்தொகுப்பு (மோடி அரசு – முதல் முறை (2014-2019) – மாற்றத்திற்கான அடித்தளம் வரப்பட்டது) 205

3. மோடி அரசு – இரண்டாவது பதவிக்காலம் (2019-2024) – நிறைவேற்றப்பட்ட வளர்ச்சிப் பணிகள் 221

4. சுருக்கத்தொகுப்பு (மோடி அரசு – 2-ம் பதவிக்காலம் (2019-2024) – எட்டப்பட்ட வளர்ச்சி மேம்பாடுகள்) 337

5. எதிர்கால பாரத் 2024-க்கான பிரதமர் மோடியின் உத்தரவாதம்: முதன்மையான 5 காரணங்கள் 341

*முடிவுரை* 365

# முன்னுரை

பல ஆண்டுகளாக இந்நூலின் ஆசிரியருடன் வலுவான உறவைப் பேணுவதற்கான பாக்கியம் எனக்குக் கிடைத்தது, அவருடைய அசைக்க முடியாத ஈடுபாடு, தன்னலமற்ற நற்பண்புள்ள செயல்கள் மற்றும் நமது நாட்டின் மீதுள்ள தேசபக்தியின் தொடர்ச்சியான வெளிப்பாடுகள் ஆகியவற்றின் மூலம் அவருடன் உறுதியான நட்பை நான் கொண்டிருக்கிறேன். இப்புத்தகத்தின் ஆசிரியர் நல்லாட்சி பற்றிய ஆழமான அறிவைக் கொண்டவர். நமது மாண்புமிகு பிரதமர் திரு.நரேந்திர மோடியின் முன்னெடுப்புகள் மற்றும் நலத்திட்டங்களைப் பற்றிய உண்மைத் தகவல்களை ஆர்வத்துடன் பேச, விரிவாக விவாதிக்க மற்றும் அனைவரிடமும் பரப்பும் திறன் கொண்ட அவரைப் போன்ற நபர்களைக் காண்பது அரிது. பிரதமர் மோடியின் தீவிர ஆதரவாளராகவும், “நல்லாட்சி மற்றும் மேம்பாடு” தொடர்பான கொள்கைகள், திட்டங்கள், முன்னெடுப்புகளை அவர் முன்னுதாரணமாக செயல்படுத்தியதற்காகவும், எங்கள் உரையாடல்களின் போது பிரதமர் மோடியின் நல்லாட்சி மாதிரியின் முக்கிய சிறப்புகளை ஆசிரியர் மிகச்சிறப்பாக விளக்கும் போதெல்லாம் நான் தொடர்ந்து தெளிவான தகவல்களைப் பெறுகிறேன்.

மாண்புமிகு பிரதமர் மோடி தலைமையிலான போற்றத்தக்க, மாதிரியாக உள்ள நல்லாட்சி மற்றும் அரசாங்கத்தைப் பற்றி எனது நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள், சக ஊழியர்கள் மற்றும் அறிமுகமானவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக அவரிடம் இருந்து மதிப்புமிக்க நுண்ணறிவைப் பெறுவதே எனக்கு எப்போதும் முன்னுரிமையாக உள்ளது.

ஆசிரியருக்கு தொழில்முறைப் பணி, சமூக சேவைகள் மற்றும் பிற கடமைகள் இருந்தபோதிலும், இந்த புத்தகத்தை வடிவமைப்பதில் அவர் காட்டிய ஈடுபாடு பெரிதும் பாராட்டுக்குரியது. இந்தப் பணியை நிறைவேற்றுவதற்கான அவரது திறமைக்கு, பிரதமர் மோடியின் நல்லாட்சி என்ற கருத்தின் மீது அவர் கொண்டிருந்த ஆர்வமே காரணம் என்று கூறலாம். பிரதமர் மோடியின் நிர்வாகத்தால் கடந்த பத்து ஆண்டுகளில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட தேர்தல் அறிக்கையின் வாக்குறுதிகளைப் பற்றிய ஆழமான ஆய்வை இந்த புத்தகம் வழங்குகிறது. இந்தப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ள துல்லியமான விவரங்கள், வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் மோடி அரசாங்கம் காட்டிய தீவிரமிக்க உறுதியைப் பற்றிய தெளிவான புரிதலை வழங்குகிறது.

இந்த புத்தகம் மோடி ஆளுகையின் பாராட்டத்தக்க நிர்வாகத்தால் வழங்கப்பட்ட 2014-2019 மற்றும் 2019-2024 பதவிக்காலங்களை உள்ளடக்கியது. 2024-ஆம் ஆண்டில் நமது நாட்டிற்கான சிறந்த எதிர்காலத்தை வடிவமைக்க மோடியின் தலைமைக்கான அவசியத்தையும் சுட்டிக்காட்டி இப்புத்தகம் வலியுறுத்துகிறது. மேலும், மாண்புமிகு பிரதமர் திரு நரேந்திர மோடியின் வழிகாட்டுதலின் கீழ் உள்ள நிர்வாகம், தங்களின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட ஒவ்வொரு வாக்குறுதியையும் எவ்வாறு நிறைவேற்றியது என்பது பற்றிய விரிவான விளக்கத்தையும் இந்தப் புத்தகம் வழங்குகிறது. பிரதமர் மோடி 2014-ஆம் ஆண்டிலேயே நாட்டு மக்களுக்கு எவ்வாறு அதிகாரம் அளிக்க முடியும் என்பது குறித்து கொண்டிருந்த தொலைநோக்கு பார்வையின் பல்வேறு கோணங்களையும், பரிமாணங்களையும் உள்ளடக்கிய மதிப்பீட்டின் முழுமையானதொரு ஆய்வைக் கண்டு நான் வியப்படைந்தேன்.

மாண்புமிகு பிரதமர் திரு.நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் கடந்த 10 ஆண்டுகளில் நமது மதிப்பிற்குரிய பாரத நாடு அடைந்துள்ள மாபெரும் மாற்றத்தைப் முழுமையாகப் புரிந்துகொள்ள, இந்தப் புத்தகத்தின் குறைந்தபட்சம் இரண்டு பக்கங்களையாவது தினமும்

வாசிப்பது நம் கடமையும், பொறுப்பும் ஆகும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அனைத்து சமூகங்களையும் சார்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள், விவசாயத் தொழிலாளர்கள், பெண்கள், இளைஞர்கள் மற்றும் குழந்தைகள் உட்பட சாமானிய மக்களும் அதிகாரம் பெறும் வகையில் இந்தியா இதற்கு முன்பு கண்டிராத மிகச்சிறப்பான நிர்வாகத்தையும், சேவைகளையும் நமது பிரதமர் வழங்கியிருக்கிறார் என்பதை இது தெளிவாக எடுத்துரைக்கிறது.

வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட பலதரப்பட்ட மேம்பாட்டு முன்னெடுப்புகள் மற்றும் நலத்திட்டங்களைப் பற்றிய நுண்ணறிவைப் பெற, உலகத் தலைவர்கள் இந்த புத்தகத்தை வாசிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வேன். இதில் உள்ள செயல்திட்டங்கள், அந்தந்த நாட்டு அரசாங்கங்களால் மேலும் சிறந்த நல்லாட்சியை வழங்குவதற்கு சாத்தியமான முறையில் பயன்படுத்தப்படலாம் என்பது எனது நம்பிக்கை.

நமது நாட்டின் மேம்பட்ட எதிர்காலத்திற்காக பிரதமர் மோடி மேற்கொண்டுள்ள பல முன்னெடுப்புகள் பற்றிய விரிவான விழிப்புணர்வையும் அறிவையும் பெறுவதற்காக, பொறுப்புள்ள குடிமகன் என்ற முறையில், என்னுடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் தெரிந்தவர்கள் அனைவரையும் இந்தப் புத்தகத்தை வாசிக்க நான் ஊக்குவிப்பேன். இந்நூலின் ஆசிரியர் திரு. கார்த்திக் திருநாராயணன் அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகள்.

டாக்டர் ஐசரி கே. கணேஷ்

நிறுவனர் & வேந்தர் - வேல்ஸ் பல்கலைக்கழகம் (VISTAS)

# பிரதமர் மோடிக்கு வலிமையான தூண்களாகவும், ஆதரவாகவும் பணியாற்றிய இம்மூன்று மதிப்புமிக்க வல்லவர்களை நாம் நினைவுகூர்ந்து நினைவஞ்சலியை செலுத்துவோம்.

மறைந்த ஸ்ரீமதி. சுஷ்மா ஸ்வராஜி ஜி,
ஸ்ரீ. அருண் ஜெட்லி மற்றும்
ஸ்ரீ. மனோகர் பாரிக்கர் ஜி.

தேசபக்தி அளவிட முடியாதது என்பதால் அவர்களின் ஈடுபாட்டுறுதி, தைரியம் மற்றும் பங்களிப்பு ஆகியவற்றை அளவிட முடியாது. அவர்களின் அன்றாட நிகழ்ச்சி நிரல் என்பது, எப்போதும் பொது நலனில் இடைவிடாமல் கவனம் செலுத்துகின்ற, தேசமே எல்லாவற்றையும் விட முதன்மையானது என்னும் மனநிலையாக இருந்தது. 2014 ஆம் ஆண்டில், மாண்புமிகு பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையில் நாடு நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புகளால் நிரப்பப்பட்டபோது, நமது மரியாதைக்குரியனாடாந பாரதத்தின் சாமானிய மக்களைப் பாதுகாக்கவும், அதிகாரமளிக்கவும் ஒவ்வொரு அடியும், முன்னெடுப்பும், செயல் இலக்கும் மேற்கொள்ளப்படுவதை அவர்கள் உறுதி செய்தார்கள்.

## ஸ்ரீமதி. சுஷ்மா ஸ்வராஜ் ஜி

மதிப்பிற்குரிய ஸ்ரீமதி. சுஷ்மா ஸ்வராஜ் ஜி, வெளிநாட்டில் வசிக்கும் அனைத்து இந்தியர்களுக்கும் தாயைப் போன்ற ஒரு உருவம், *"நான் தூங்குவதில்லை, இந்திய தூதர்களை தூங்க விடமாட்டேன்"* என்று பிரகடனம் செய்தார். வெளிநாட்டு இந்திய குடிமக்களுக்கு 24 மணி நேரமும் தொடர்பு மற்றும் உதவியை உறுதிசெய்ய சமூக ஊடக தளங்களை உகந்த முறையில் பயன்படுத்திய முதல் வெளியுறவுத்துறை அமைச்சர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். சந்தேகத்திற்கு இடமின்றி, "எனது நாடு, எனது மக்கள்" என வார்த்தைகளில் பொதிந்திருந்த அவரது அணுகுமுறை, நமது நாடு மற்றும் உலகம் முழுவதும் உள்ள பாரத குடிமக்களின் மரியாதையையும் மதிப்பையும் பெருக்கி, ஒரு புலனுணர்வு மாற்றத்தை தூண்டியது.

## ஸ்ரீ. அருண் ஜெட்லி ஜி

பொருளாதாரத் துறையில் திறமையான, அனுபவமிக்க சட்ட புத்திசாலித்தனம், அறிவார்ந்த வலிமை, நிபுணத்துவம் ஆகிய பண்புகளால் புகழ்பெற்ற மேதையாக மதிக்கப்படுபவர். நமது நாட்டின் பொருளாதார அடித்தளத்தை நிறுவுவதில் அவர் ஆற்றிய அளப்பரிய பங்களிப்புக்காக நாம் தலைவணங்கக் கடமைப்பட்டுள்ளோம். சரக்கு மற்றும் சேவை வரி (GST), கடன் தீர்க்க வகையில்லா நிலை மற்றும் கடன் தீர்க்க வகையில்லா நிலைக்கு நிவாரணம் தேடும் சட்ட செயல்முறை விதித்தொகுப்பு (IBC), வங்கி சீர்திருத்தங்கள், பணமதிப்பு நீக்கம் போன்ற அடிப்படை பொருளாதார மற்றும் வரி சீர்திருத்தங்களை செயல்படுத்தியதன் மூலம், வளர்ச்சிப் பாதையில் நமது நாட்டின் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் வலுவான அடித்தளத்தை நிறுவியுள்ளது.

## ஸ்ரீ. மனோகர் பாரிக்கர் ஜி

முதலமைச்சர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் பதவிகளுக்கு உயர்ந்த இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் முதல் பட்டதாரி ஆவார். அவர் தனது எளிமையான, சாமானிய வாழ்க்கை முறைக்காகப் போற்றப்படுகிறார். கோவாவின் முதலமைச்சராக அவர் இருந்த காலம் பெரிதும் பாராட்டப்பட்டது. நமது மதிப்பிற்குரிய நாட்டின் பாதுகாப்புப் படைகளுக்கு அவர் ஆற்றிய குறிப்பிடத்தக்க பங்களிப்பு, ஆயுதப் படைகளை வலுப்படுத்துவதற்கான அவரது இடைவிடாத அர்ப்பணிப்பால் குறிக்கப்படுகிறது. அவரது பதவிக்காலத்தில் ஒரே பதவி, ஒரே ஓய்வூதியம் (OROP), துல்லிய இராணுவத் தாக்குதலை வெற்றிகரமாகச் செயல்படுத்துதல் மற்றும் ஆயுதப் படைகளின் நவீனமயமாக்கல் ஆகியவை செயல்படுத்தப்பட்டன.

# நன்றி

இந்தப் புத்தகத்தில் பட்டியலிடப்பட்டுள்ள விவரங்கள் பொதுவெளியில் இருக்கும் மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களின் இணையதளங்கள் மற்றும் ஆன்லைன் ஊடகங்களில் இருந்து எடுத்து குறிப்பிடப்பட்டுள்ளன. நமது பெருமைமிகு நாடான பாரதத்தில் உள்ள ஒவ்வொரு குடிமகனும், மக்கள் நலனில் கவனம் செலுத்தும் நமது பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்படுத்தியுள்ள இத்தகைய அற்புதமான மக்கள் நலன் சார்ந்த முன்முயற்சிகள் பற்றிய விழிப்புணர்வையும், அறிவையும் பெறுவதை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும்.

அனைத்து மாண்புமிகு மத்திய அமைச்சர்கள், அதிகாரிகள், அனைத்து மாநிலங்களின் மாண்புமிகு முதலமைச்சர்கள், மாண்புமிகு மாநில அமைச்சர்கள், மத்திய மற்றும் மாநில அரசுகளின் பொதுத்துறை நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் ஆகியோருக்கு, மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் தலைமையில் கீழ், கடந்த 10 ஆண்டுகளில் ஒவ்வொரு குடிமகனுக்கும் அதிகாரம் அளிக்கும் செயல்பாட்டிற்கான அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்புக்காக நான் மனப்பூர்வமாக நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

# ஆசிரியரின் குறிப்பு

கலாச்சாரம், பாரம்பரியம், மரியாதை, மனித விழுமியங்கள், அறிவியல், சுகாதாரம், தொழில்நுட்பம், வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் கல்வி ஆகியவற்றின் பிறப்பிடமாக விளங்கிய பெருமைமிக்க நாடு **பாரத்.** தொன்மையான நாகரீகங்களைக் கொண்ட பல நாடுகள் உலகில் உள்ளன, ஆனால், பாரதம் எப்போதும் ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் உத்வேகமளிக்கும் நாடாக இருந்து வந்திருக்கிறது. நமது பண்டைய மூதாதையர்கள் பாரதத்தை பூமியின் மிகப்பெரிய, பழமையான மற்றும் கலாச்சார செழுமை வாய்ந்த நாகரீகமாக உருவாக்கினர். முழு உலகமும் நமது கொள்கைகளைப் பின்பற்றி கற்றுக்கொண்டது. மனிதகுலம் தோன்றிய ஆரம்ப நாட்களில் இருந்தே அதன் அனைத்து கனவுகளும் உருவான ஓரிடம் என்றால் அது பாரதம்தான்.

*“இந்தியா மனித இனத்தின் தொட்டில், மனிதப் பேச்சின் பிறப்பிடம், வரலாற்றின் தாய், புராணத்தின் பாட்டி மற்றும் பாரம்பரியத்தின் மாபெரும் தாய். மனித வரலாற்றில் நமது மிகவும் மதிப்புமிக்க மற்றும் ஆக்கப்பூர்வமான பொருட்கள் இந்தியாவில் மட்டுமே கிடைத்துள்ளன”*

***– மார்க் ட்வைன் (அமெரிக்க எழுத்தாளர்)***

ராமாயணத்தில், பகவான் ராம் லட்சுமணனிடம், *“தாயும் தாய் நாடும் சொர்க்கத்தை விடச் சிறந்தது”* என்று கூறியுள்ளார்.

தாய்நாட்டின் பெருமையையும், பங்களிப்பையும் அறிந்தால் மட்டுமே அதன் மீதான பக்தியை வளர்க்க முடியும்.

உங்களைப் போல நானும் ஒரு சாதாரண குடிமகன். எளிய குடும்பத்தில் பிறந்தவன். என் தந்தை ஒரு டிரக் டிரைவர். ஏழைகளின் வலியை ஒரு சாதாரண மனிதனால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும் என்று அவர் எப்போதும் நம்பினார். என் பள்ளி விடுமுறை நாட்களில், என் தந்தை என்னையும் தன்னுடன் லாரியில் அழைத்துச் செல்வார். அவர் எதிர்கொள்ளும் சிரமங்களைப் பார்த்த நான், "இது எப்போது மாறும்?" என்று அவரிடம் கேட்டேன்.

"குறைந்தபட்சம் உங்கள் வாழ்நாளிலாவது, எளிய பின்னணியில் உள்ள ஒரு சாதாரண மனிதர் நம் நாட்டை வளர்ச்சியை நோக்கி உயர்த்துவார் என்று நான் நம்புகிறேன்" என்று என் தந்தை கூறினார்.

'மக்களின் பிரதமர்' மாண்புமிகு திரு நரேந்திர மோடி அவர்களின் கீழ், 10 வருட அர்ப்பணிப்புள்ள தலைமைக்கு பிறகு இன்று என்னால் என் தந்தை கூறிய யதார்த்தத்தை காண முடிந்தது என்று சொல்வதில் பெருமை அடைகிறேன்.

எனது முதல் புத்தகமான "நவீன பாரதத்தின் சிற்பி (Architect of New India)" நவம்பர் 2018-இல் எழுதப்பட்டது. அந்த புத்தகத்தை எழுத என்னைத் தூண்டிய விஷயத்தைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். 2018-ஆம் ஆண்டின் மத்தியில், பரேலியிலிருந்து (உத்தரப்பிரதேஷ்) சாலை வழியாக கான்பூருக்குப் பயணம் செய்யும்போது, இடைவேளைக்காக எங்கள் காரை நிறுத்தியிருந்தோம். எனது நண்பர்கள் தேநீர் அருந்துவவதாக முடிவு செய்தனர். நான் தேநீர்/காபி அருந்தாததால், அந்தச் சிறிய இடத்தில் ஒரு சிறிய பழக் கடையைக் கண்டேன். அந்தப் பழக்கடையை நிர்வகித்து வந்த 40 வயது மதிக்கத்தக்க ஒரு பெண், வாடிக்கையாளர் ஒருவர் பழங்கள் வாங்க வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். அந்தப் பழக்கடை நிறைய வாழைப்பழங்கள் மற்றும் வேறு சில பழங்களுடன் ஒரு சிறிய இடமாக இருந்தது. அங்கு கடவுளான சிவன் படத்திற்கு அடுத்தபடியாக மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் புகைப்படத்தைப் பார்த்ததும் எனக்கு ஆர்வம் உண்டானது. நான் அந்தப் பெண்ணிடம், "நீங்கள் பாஜக கட்சிக்காரரா?" என்று கேட்டேன். அதற்கு அவர்,

“இல்லை” என்று பதிலளித்தார். பின், “அவரது குடும்பத்தைச் சேர்ந்த யாராவது பாஜகவில் பதவியில் இருக்கிறார்களா?” என்று நான் அவரிடம் கேட்டேன். அதற்கும் அவர், “இல்லை” என்று பதிலளித்தார். மீண்டும் நான், “நீங்கள் மோடிஜியின் ரசிகரா?” என்று கேட்டேன், அதற்கும் அவர் “இல்லை” என்றே பதிலளித்தார். பிறகு நான், பிரதமர் மோடி புகைப்படத்தை கடையில் வைத்திருப்பதற்கான காரணத்தை அவரிடம் கேட்டேன். அதற்கு அந்தப் பெண், எனக்கு 2 மகள்கள் உள்ளனர் (ஒருவர் 11-ம் வகுப்பு மற்றும் இன்னொருவர் 9-ம் வகுப்பு). எங்கள் வீட்டிலும் சரி, அவர்களின் பள்ளியிலும் சரி, கழிவறை இல்லை. எனவே, பெண் குழந்தைகள் காலைக்கடன்களுக்காக வயல்களுக்குச் செல்ல வேண்டும், இது ஒரு பெரிய சவாலாகவும் பல வழிகளில் பாதுகாப்பற்றதாகவும் இருந்தது. குறிப்பாக கிராமங்களில். மேலும் இதன் காரணமாக எனது பிள்ளைகள் தொடர்ந்து பள்ளிக்குச் செல்ல இயலவில்லை.

இப்போது நான் பெருமையுடன் சொல்ல முடியும், என் குழந்தைகள் நன்றாகப் படிக்கிறார்கள் & என் வீட்டிலும் பள்ளியிலும் கழிப்பறை இருப்பதால் நான் பாதுகாப்பாக உணர்கிறேன். நமது பெண்களின் பிரச்சனையைப் புரிந்துகொள்ளும் பிரதமராக மோடி இருப்பதால்தான் இது நடந்துள்ளது. நாம் கடவுளிடம் வேண்டும்போது, கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு நபர் நம்மை ஆதரிக்கவும், நம் பிரச்சினைகளைத் தீர்க்கவும் வருகிறார் மற்றும் நான் பிரதமர் மோடியை கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட நபராகப் பார்க்கிறேன். எனவே, கடவுளுக்கு அடுத்தபடியாக நான் மதிக்கும் நபர் பிரதமர் மோடி” என்று கூறினார்.

அவரது இத்தகைய பதில், இந்த “மாற்றத்தை” அநேக மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்பதில், ஒரு குடிமகனாக என்னிடம் அதிகப் பொறுப்புணர்வை உருவாக்கியது. நகரங்களில் வாழும் நம்மில் பலருக்கு இது ஒன்றும் பெரிய விஷயமே இல்லை; சாமான்ய, ஏழை எளிய மக்களின் வலியைப் புரிந்துகொண்டு மாற்றத்தை வழங்க முனைப்புடன் செயல்படும் பிரதமர் மோடி அரசினால் நடத்தப்படும் இந்த நல்லாட்சியைப் பற்றி நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டும்.

ஒரு சாதாரண மனிதனுக்கும், அசாதாரண மனிதனுக்கும் உள்ள வித்தியாசம் அவனது சிந்தனைத் திறன், காரியங்களைச் செய்து முடிப்பதற்கான ஆர்வம் மற்றும் சாதிக்க வேண்டும் என்ற அர்ப்பணிப்பு என்பவையே. மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடியின் இலக்கு என்பது, நாட்டின் வளர்ச்சி! பாரத நாடும் மற்றும் மக்களின் நலனுமே முதன்மையானது என்னும் கொள்கையே அவரது தாரக மந்திரம்.

நமது பெருமைமிகு நாட்டின் 140 கோடி மக்களையும் தனது குடும்பமாகக் கருதும் தேசபக்தியுள்ள தலைமகனாக ஒரு சிறந்த பிரதமர் நமக்கு கிடைத்திருப்பது நாம் செய்த புண்ணியம்.

நமது நாட்டைப் போன்ற ஒரு பெருமைமிக்க நாட்டின் பிரதமர் என்பவர், தேசபக்தி, ஈடுபாடு, மன உறுதி, அர்ப்பணிப்பு, வீரம், தைரியம், தொலைநோக்கு மற்றும் மக்கள் நலனில் கவனம் செலுத்தும் நபராக, சொல்வதைச் செய்து காட்டுவதோடு, நமது நாட்டின் திறனைப் பற்றி பெருமையுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். மறைந்த பிரதமர் திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் ஜி அவர்களுக்குப் பிறகு, இந்த குணங்கள் அனைத்தையும் நமது மாண்புமிகு பிரதமர் மோடியிடம் கண்டு நான் பெருமைப்படுகிறேன்.

தனது 23 ஆண்டுகால பொதுச் சேவையில் (13 ஆண்டுகள் முதலமைச்சராகவும் 10 ஆண்டுகள் பிரதமராகவும்), நமது பெருமைமிக்க நாட்டின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காக, பொதுச் சேவைகளில் அதிகபட்ச மக்கள் நலத்திட்டங்கள் சார்ந்த முயற்சிகளைத் தொடர்ந்து செய்து பங்களிக்கும் முதல் நபர் திரு. நரேந்திர மோடி ஆவார்.

பாரதப் பிரதமராவதற்கு முன், நரேந்திர மோடி குஜராத்தின் முதல்வராக 13 ஆண்டுகள் இருந்தார். அவர் தனது 13 வருட முதல்வர் பதவிக்கான சம்பளம் முழுவதையும் நன்கொடையாக அளித்தார். அத்துடன் அவர் பெற்ற அனைத்துப் பரிசுகளையும் ஏலம் விட்டு அதன்மூலம் கிடைத்த முழுப்பணத்தையும் பெண் குழந்தைகளின் கல்வி மற்றும் நலனுக்காக வழங்கினார்.

நமது அன்றாட வாழ்வில், சாதாரண மக்களாகிய நாம், நமது தேவைகளின் ஒவ்வொரு அம்சத்திலும் தரம், தகுதி மற்றும் நேர்மையை எதிர்பார்க்கிறோம்.

ஒரு டம்ளர் தண்ணீரில் கூட **தரத்தை** எதிர்பார்க்கிறோம்

ஒவ்வொரு பொது சேவைகளிலும் **தகுதி**யை எதிர்பார்க்கிறோம்

எல்லோரிடமும் **நேர்மை**யை எதிர்பார்க்கிறோம்

ஆனால், தரம், தகுதி மற்றும் நேர்மை சார்ந்த மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்ட அரசு மட்டுமே நம் நாட்டின் அரசு நிர்வாகப் பொறுப்பிலிருந்து அதனை முன்னேற்ற வேண்டும் என்று நம்மில் எத்தனை பேர் நினைக்கிறோம்?

ஆம். 2014 மற்றும் 2019-இல் பொது மக்கள் இதை நன்கு உணர்ந்து மோடி தலைமையிலான அரசை தேர்வு செய்தனர். 2024-ல் ஒரு வல்லரசாக, நல்லரசாக இந்தியா மாற, மூன்றாவது முறையாக நாம் மோடிஜி அவர்களையே ஆட்சிப்பொறுப்பில் அமர்த்த வேண்டும்.

2014 & 2019 தேர்தல் அறிக்கைகளில் உறுதியளித்தபடி இந்த அரசாங்கம் தொடர்ந்து இருமுறை நடத்திய ஆட்சியில் மாற்றம் மற்றும் மேம்பாட்டை எவ்வாறு வழங்கியது என்பதை இந்த நூலில் ஆதாரங்களுடன் காணலாம்.

கடந்த 10 ஆண்டுகளில் பாரத மக்களுக்காக பாஜகவின் அர்ப்பணிப்புடன் கூடிய சேவைகளின் வாயிலாக, அவர்கள் அளித்த தேர்தல் வாக்குறுதிகளையும், அவை தொடர்பாக செயல்படுத்தப்பட்டுள்ள பணிகள் குறித்த துல்லியமான தகவல்களைப் பெற்று இங்கு வழங்க நான் முயற்சித்திருக்கிறேன்.

நன்றி!

**- கார்த்திக் திருநாராயணன்**

# மோடி அரசு – ஆட்சி பொறுப்பின் முதல் ஐந்தாண்டுகளில் (2014 - 2019) – மாற்றத்தைக் கொண்டுவந்தது

## 2014–க்கு முன் பாரதத்திற்கு இருந்த சவால்கள்

**பாரத மாதா –** உலகின் மிகப் பழமையான நாகரிகங்களில் ஒன்றைக் கொண்டிருந்த பெருமைமிகு நாடான நம் நாடு, பல சிறந்த மதங்கள், நம்பிக்கைகள், வளமான கலாச்சாரம் மற்றும் தேசபக்தியுள்ள தலைவர்களை உலகிற்கு அளித்துள்ளது. மே 2014-க்கு முன், உலக அரங்கில் பாரதத்தின் பிம்பமானது ஊழல், உறுதியான தலைமையின்மை, மோசமான முதலீடு, மெதுவான வளர்ச்சி, நாட்டிற்கான தொலைநோக்குப் பார்வை இல்லாமை, உள்நாட்டு வளர்ச்சிக்கான உறுதியான செயல்திட்டம் இல்லாமல் இருத்தல் மற்றும் அண்டை நாடுகள் மற்றும் வளர்ந்த நாடுகளுடனான பலவீனமான உறவுகள் ஆகியவற்றால் கறைபட்டு காணப்பட்டது.

அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஜெர்மனி, ஆஸ்திரேலியா போன்ற வளர்ந்த நாடாக இந்தியா மாறுவதற்கும், சக்திவாய்ந்த நாடாக உருவாவதற்கும், துடிப்பான பொருளாதார சூழ்நிலை, முதலீட்டுக்கு உகந்த சூழல், வலுவான பிணைப்பு, நம்பிக்கையைப் பெறுதல், வளர்ச்சியடைந்த மற்றும் அண்டை நாடுகளுடன் உறவை மேம்படுத்துதல் ஆகியவை உடனடியாக முதன்மையான முன்னுரிமை

அளித்து நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அத்தியாவசியமாக இருந்தன.

## ஏழை மக்கள்

சுதந்திரத்திற்குப் பிறகு, நமது நாடு மாற்றத்திற்கான பெரும் எதிர்பார்ப்புகளைக் கொண்டிருந்தது, குறிப்பாக ஏழை மக்களிடம் அதிகமான எதிர்பார்ப்புகள் இருந்தன. ஏழை மக்களின் வாழ்க்கை மேம்பாடு என்பது, தங்களது குடும்பம் மற்றும் உறவினர்கள் மட்டுமே அதிகாரமும் வளமும் பெறுவதற்காக உழைக்கும் அரசியல்வாதிகளால் வெறும் கனவாகவே இருக்குமாறு வைக்கப்பட்டிருந்தது. அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாவது அதிக வருவாய், நல்ல எதிர்காலம் ஆகியவையே சாமான்ய மக்களின் லட்சியங்களாக இருந்தன. ஆனால், அவைகள் நிறைவேறாமல் வெறும் கனவாகவே தொடர்ந்தன.

நம் நாட்டில் ஏழைகள் தொடர்ந்து ஏழைகளாகவே இருந்தனர், ஏனென்றால் அவர்களது நன்மைகள் சூறையாடப்பட்டன; வளர்ச்சி அழிக்கப்பட்டது; அவர்களுக்கான அரசின் ஆதரவு நிறுத்தப்பட்டது. இது பல ஆண்டுகளாகத் தொடர்ந்தது. இதன் காரணமாக வளர்ச்சி குறித்த ஏழைகளின் எதிர்பார்ப்பு செயலற்ற நிலையில் இருந்தது. நமது நாட்டின் ஏழைகளில் 40%-க்கும் அதிகமானோர் வங்கி கணக்கு கூட வைத்திருக்க இயலாதவாறு ஏழ்மையின் பிடியில் இருந்தனர்.

விவசாயிகளே நம் நாட்டின் உயிர்நாடி. பாரதத்தின் மக்கள்தொகையில் 58% பேருக்கு முதன்மையான வாழ்வாதாரமாக விவசாயம் உள்ளது. விவசாயக் கணக்கெடுப்பின்படி, நாட்டில் விவசாயம் செய்யப்படும் ஒட்டுமொத்த விவசாய நிலப்பரப்பில் 85% நிலம், 2 ஹெக்டேருக்கும் குறைவான சிறு மற்றும் குறு நிலங்களாகவே இருக்கிறது. அவர்களின் அன்றாட வாழ்க்கையை பாதிக்கக் கூடிய பல சவால்களையும், கஷ்டங்களையும் ஏழை விவசாயிகள் எதிர்கொண்டனர். ஏழை விவசாயிகளின் கடின உழைப்பை இடைத்தரகர்கள் கொள்ளையடித்தனர்.

பத்து ஆண்டுகளாக கிராமப்புற மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்கப்படாததன் காரணமாக, கிராமங்கள் வளர்ச்சியடையாமல் அப்படியே இருந்தன.

எளிய கட்டணத்தில் சுகாதார சேவை என்பது, ஏழை மக்களுக்கு மிக முக்கியமான தேவைகளில் ஒன்று. பெரும்பான்மையான மக்களுக்கு முக்கியமாக கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு, ஆரம்ப சுகாதார அமைப்புகளின் சேவைகள் கிடைக்கவில்லை. பலதரப்பட்ட மக்கள், குறிப்பாக ஏழைகள் மற்றும் பெண்கள், எளிய கட்டணத்தில் சுகாதார சேவைகள் கிடைக்காததால் பலர் இறந்தனர். பாரதத்தின் சுகாதார அமைப்பில் ஏழைகளுக்கான சுகாதார சேவையை வழங்குவதற்கான நல்ல நிர்வாகம் இருக்கவில்லை.

இதனால் குறைந்த வருமானம் கொண்ட பல குடும்பங்களால், அத்தியாவசிய சுகாதார வசதிகளையும், சிகிச்சைகளையும் அணுகிப்பெற முடியவில்லை. அத்துடன், கணிசமான மருத்துவ செலவுகள் அவர்களை மேலும் வறுமை நிலையில் தள்ளியது.

## குழந்தைகள் & பெண்கள்

குழந்தைகளே நமது பாரதத்தின் எதிர்காலம். குழந்தைப் பாதுகாப்பு, குழந்தைத் திருமண ஒழிப்பு மற்றும் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு, குழந்தைகள் வாழ்வு மேம்பாடு, பிறந்த குழந்தைகள் இறப்பதையும் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி வீதம் குன்றியதையும் தடுப்பது, திறந்த வெளியில் மலம் கழிப்பதை ஒழிப்பது, தரமான கல்வியை வழங்கப்படாமை போன்ற பல சவால்கள் இருந்தன. பல ஆண்டுகளாகவே, கவனம் செலுத்த வேண்டிய இத்தகைய அம்சங்கள் மீது முன்னுரிமை அளிக்கப்படவில்லை.

குழந்தைகள், குறிப்பாகப் பெண்கள், பின்தங்கிய குழுக்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகள் ஆகியோர் நீதித்துறை மற்றும் நிர்வாகரீதியில் கவனம் செலுத்தப்படாததால் பாதிக்கப்பட்டனர். குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல்

உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளை கடுமையாகத் தண்டிக்க கண்டிப்பான சட்டம் தேவைப்பட்டது.

பெண்கள் நமது நாட்டின் முதுகெலும்பாகவும் மற்றும் வளர்ச்சியடையும் பாரதத்தின் தூண்களாகவும் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு அதிகாரம் அளிக்கும் செயல்பாடானது எப்போதும் குறைந்த முக்கியத்துவத்துடன் மிக மெதுவாகவே நடந்து வருகிறது. போதுமான எண்ணிக்கையில் கழிவறைகள் இல்லாததால், பாரதத்தில் பல ஏழைப் பெண்கள் மற்றும் குழந்தைகள் அவதிப்படுகின்றனர். உண்மையைச் சொல்வதானால், கழிவறை வசதிகள் இல்லாததால், குறிப்பாக கிராமப்புறங்களில் பல பெண் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதை நிறுத்தி விடுகின்றனர். சர்வதேச தொண்டு நிறுவனத்தின் அறிக்கையொன்று, 56%-க்கும் அதிகமான பாரத குடிமக்களுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் இல்லை என்று கூறியுள்ளது.

பாரதத்தில் 24 கோடிக்கும் அதிகமான குடும்பங்கள் உள்ளன, அதில் சுமார் 10 கோடி குடும்பங்கள் தற்போதுவரை சமையல் எரிபொருளாக எல்பிஜி (LPG) கிடைக்காமல் உள்ளன. மேலும் சமையல் செய்வதற்கு முதன்மை ஆதாரமாக விறகு, நிலக்கரி, வரட்டி போன்றவற்றை நம்பியிருக்கின்றனர். இத்தகைய தூய்மையற்ற எரிபொருட்களில் இருந்து பெண்கள் சுவாசிக்கும் புகை என்பது ஒரு மணி நேரத்தில் 400 சிகரெட்டுகளை எரிப்பதனால் வெளியாகும் புகைக்குச் சமம்.

## இளைஞர்கள்

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, நமது மகத்தான நாடு முழு உலகிற்கும் இளைஞர்களை மேம்படுத்தும் மையமாகச் செயல்பட்டது. தக்ஷஸீலா, நாளந்தா, மிதிலா, தெல்ஹாரா, ஷரதா, விக்ரமஸீலா, வல்லபி மற்றும் சோமபுரா போன்ற பாரதத்தின் சிறந்த தொன்மையான பல்கலைக்கழகங்கள் உலகம் முழுவதும் இருந்து வந்து கல்வி பயிலும் இளைஞர்களை மேம்படுத்தும் மையங்களாகச் செயல்பட்டன.

இளைஞர்கள் நமது மகத்தான நாட்டின் வேர்கள் மற்றும் அவர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய உறுதியான செயல்பாடுகள் நமது நாட்டை கட்டியெழுப்ப பெரிய அளவில் பங்களித்துள்ளன. இளைஞர்களின் அடையாளச்சின்னமாக விளங்கும் சத்ரபதி சிவாஜி மகாராஜ், சுவாமி விவேகானந்தர், வீர் சாவர்க்கர், கேசவ் பாலிராம் ஹெட்கேவார், சுபாஷ் சந்திரபோஸ், மகாகவி பாரதியார், திருப்பூர் குமரன் போன்றோர் தங்கள் தன்னலமற்ற சேவைகளால் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக தங்கள் இளமைக்கால வாழ்க்கையைத் தியாகம் செய்தனர்.

பாரதத்தில் உள்ள இளையோர்கள் நமது மக்கள்தொகையில் மிகவும் ஆற்றல்மிக்க மற்றும் துடிப்பான பிரிவின் பிரதிநிதிகளாக உள்ளனர். பெரும்பாலான வளர்ந்த நாடுகள் தங்களது மக்கள்தொகையில், வேலை செய்யக் கூடியவர்களில் வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் ஆபத்தை எதிர்கொள்ளும் அதே வேளையில், நமது நாடு தனது மக்கள்தொகையில் உலகிலேயே மிகப்பெரிய எண்ணிக்கையில் இளையோர்களைக் கொண்டுள்ளது.

ஆனால், பாரதத்தின் திறமை வாய்ந்த இளைஞர் குழுவிற்கு வளர்ச்சிக்கான வாய்ப்பு இல்லை, சுய வேலை வாய்ப்புகள் இல்லை, திறன் மேம்பாடு இல்லை, திறமையான இளைஞர்களுக்கான தொடக்கநிலை ஆதரவுத் தளங்கள் இல்லை, விளையாட்டிலும் குறைந்த அளவிலான அங்கீகாரம் மற்றும் புதுமையாகச் சிந்திக்கும் மனங்களுக்கு போதிய ஆதரவின்மையே காணப்படுகிறது.

ஒட்டுமொத்தமாகச் சொல்வதென்றால், நல்லாட்சி இல்லாததால், பல ஆண்டுகளாக ஏழை மக்களின் வாழ்வில் பாதிப்பு ஏற்பட்டது. இதற்கு, ஒரு உடனடியான **மாற்றம்** தேவை - நாடு செழிக்க, மக்களுக்கு அதிகாரமும், திறன் மேம்பாடும் தேவையாக இருந்தன.

**முதல் முறையாக ஆட்சிப்பொறுப்பை ஏற்கும் முன் (2014) – வழங்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகள்**

2014-ல் திரு. நரேந்திர மோடி – நான் தனிப்பட்ட முறையில் 3 வாக்குறுதிகளை அளிப்பேன்.

- **கட்சியின் வாக்குறுதிகளை நிறைவேற்ற அனைத்து முயற்சிகளையும் நான் எடுப்பேன்.**
- **எனது தனிப்பட்ட லாபத்திற்காக நான் எதையும் செய்ய மாட்டேன்**
- **பகைமை உணர்வுடன் நான் செயல்பட மாட்டேன்**

2014-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையான 'சப்கா சாத், சப்கா விகாஸ்' - ஐ படித்தபோது ஆச்சரியமாக இருந்தது.

வாக்காளர்களையோ அல்லது சில குறிப்பிட்ட சமூகங்களையோ திருப்திப்படுத்த **இலவசங்கள் இல்லை.** அதில் குறிப்பிடப்பட்ட முன்முயற்சிகள் மற்றும் வாக்குறுதிகள் நாடு மற்றும் மக்களின் தேவைகளைப் புரிந்துகொள்வதற்கான ஒரு விரிவான அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகிறது.

இந்தப் புத்தகம், தேர்தல் அறிக்கையின் வாக்குறுதிகள் மற்றும் அதன்படி நிறைவேற்றப்பட்ட விஷயங்கள் குறித்து பகிர்ந்து கொள்கிறது.

# உடனடியான தேவைகள்

## வழங்கிய வாக்குறுதி

### விலைவாசி உயர்வு

- பணவீக்கத்தை கீழ்க்கண்ட பல்வகையான நடவடிக்கைகள் மூலம் கட்டுப்படுத்துவதே நமது உடனடிப் பணியாக இருக்கும்:
- பதுக்கல் மற்றும் கறுப்புச் சந்தையை தடுத்து நிறுத்த கடுமையான நடவடிக்கைகளையும் சிறப்பு நீதிமன்றங்களையும் ஏற்படுத்துதல்.
- விலை நிலைப்படுத்தல் நிதியை அமைத்தல்.

- அதிக செயல்திறனுக்காக கொள்முதல், சேமிப்பு மற்றும் விநியோகம் ஆகியவற்றில் இந்திய உணவுக் கழகத்தின் (FCI) செயல்பாடுகளை விரிவு செய்தல்
- நிகழ்நேரத் தரவுகளை குறிப்பாக விவசாயிகளுக்கு உற்பத்தி சார்ந்த தரவுகளைப் பரப்புவதற்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்
- விலைகள், இறக்குமதிகள், பங்குகள் மற்றும் உற்பத்திப் பொருட்களை எங்கும் கிடைக்கச் செய்தல்
- ஒற்றை ‘தேசிய வேளாண் சந்தையை உருவாக்குதல்.
- மக்களின் உணவுப் பழக்கவழக்கங்களுடன் தொடர்புடைய பகுதி சார்ந்த குறிப்பிட்ட பயிர்கள் மற்றும் காய்கறிகள் சாகுபடியை ஊக்குவித்தல் மற்றும் ஆதரித்தல்

## நிறைவேற்றிய வாக்குறுதி

2013-2014இல், பணவீக்கம் 6.4% அளவில் இருந்தது. இதனால் உணவு தானியங்கள் மற்றும் உணவுப் பொருட்களின் விலை மிகவும் உயர்ந்து காணப்பட்டது.

மோடி அரசு பணவீக்கத்தைக் குறைக்க பல உறுதியான நடவடிக்கைகளை எடுத்தது.

- 2019-இல் பணவீக்கம் 5 ஆண்டுகளில் 3.4% ஆக குறைந்திருந்தது. (2014-15 இல் பணவீக்கம் 5.9%; 2015-16 இல், 4.9%; 2016-17 இல், 4.5%; 2017-18 இல், 3.6% மற்றும் 2018-19 இல், 3.4 %
- 2015-16ஆம் ஆண்டில், மோடி அரசாங்கம் ஒரு விலை நிலைப்படுத்துதல் நிதியை (PSF) அமைத்தது, இது, விவசாய விளைபொருட்களை சந்தை விலையில் வாங்க பயன்படுகிறது.
- FCI மற்றும் பல மாநில அரசுகள் தங்களுடைய சொந்த ஆன்லைன் கொள்முதல் அமைப்புகளை உருவாக்கியுள்ளன, இது விவசாயிகளுக்கு வெளிப்படைத்தன்மை மற்றும் வசதி ஆகியவற்றைப் பதிவுசெய்தல் மற்றும் உண்மையான கொள்முதலைக் கண்காணிப்பதன் மூலம் கொண்டு வந்துள்ளது.

- eNAM (தேசிய ஆன்லைன் விவசாய சந்தை) 2016-இல் தொடங்கப்பட்டது. இது விவசாயிகளுக்கு அவர்களின் விளைபொருட்களை தரத்திற்கு ஏற்ற விலையுடன், நாடு தழுவிய சந்தையில் விற்பதற்கான வாய்ப்பை அவர்களுக்கு வழங்குகிறது. மேலும், நியாயமான விலையில் விளைபொருட்கள் கிடைக்கும் தளமாகவும் இது செயல்படுகிறது.
- 2018-ஆம் ஆண்டு “தேசிய தினை ஆண்டாக” அனுசரிக்கப்பட்டது.

# வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவு

## வழங்கிய வாக்குறுதி

பரந்த பொருளாதார மறுமலர்ச்சியின் கீழ், வேலை வாய்ப்பு உருவாக்கம் மற்றும் தொழில்முனைவோருக்கான வாய்ப்புகளுக்கு பாஜக அதிக முன்னுரிமை அளிக்கும். நாங்கள்:

- தொழிலாளர், தீவிர உற்பத்தி துறைகள் (அதாவது ஜவுளி, காலணிகள், மின்னணுவியல் அசெம்பிளி முதலியன மற்றும் சுற்றுலா போன்றவை) போன்ற உயர் தாக்கக் களங்களை செயல்திட்ட ரீதியாக உருவாக்குவோம்.
- நவீனமயமாக்கல் மற்றும் வலுவான கடன் மற்றும் சந்தை இணைப்புகள் மூலம், விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த தொழில்கள் மற்றும் சில்லறை வணிகத்தின் பாரம்பரிய வேலைவாய்ப்பு தளங்களை வலுப்படுத்துவோம்
- வேலை வாய்ப்புகளை உருவாக்கும் அதன் திறனுக்காக, உள்கட்டமைப்பு மற்றும் வீட்டு வசதிகளை மேம்படுத்துவோம்
- சுயதொழில் செய்ய நமது இளைஞர்களை ஊக்குவித்து தொழில் முனைவோர்களை வளர்த்தெடுத்தல் மற்றும் கடனை எளிதாக்குதல் ஆகியவற்றின் மூலம் அவர்களை வலுவூட்டுவோம்.
- பணி பயன்முறையில் பல்திறன் மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்குவதன் மூலம் வேலைவாய்ப்பு சிக்கலைத் தீர்த்து,

கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் வேலைவாய்ப்பை உருவாக்குதல் மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றில் கவனம் செலுத்துவோம்.

- தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, நமது வேலைவாய்ப்பு பரிமாற்ற மையங்களை தொழில் மையங்களாக மாற்றி, வெளிப்படைத்தன்மை கொண்ட பயனுள்ள முறையில் நமது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதோடு, அது தொடர்பான ஆலோசனை மற்றும் பயிற்சிகளையும் நாங்கள் வழங்குவோம்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு, பல்வேறு விரிவான திட்டங்களையும் முயற்சிகளையும் தொடங்கியுள்ளதன் மூலமாக, முக்கிய துறைகளுக்கு ஊக்கமளிக்கப்படுவதையும், அந்தந்த துறை அமைச்சகங்களுடன் தொடர்ந்து இணைந்து செயல்படுவதன் வாயிலாக ஆதரவு கிடைப்பதை உறுதிசெய்து, வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்காக பல சீர்திருத்தங்களைக் கொண்டுவந்துள்ளது. உற்பத்தித்திறன் மற்றும் தெரிவுநிலையை மேம்படுத்துவதற்கு தேவையான மாற்றங்களைக் கொண்டுவர, அரசு முக்கிய துறையின் தலைவர்கள்/தொழிற்சங்கங்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டது.

- ஃபோகஸ் மார்க்கெட் ஸ்கீம், மார்க்கெட் லிங்க்டு ஃபோகஸ் பிராடக்ட் ஸ்கீம் மற்றும் ஃபோகஸ் பிராடக்ட் ஸ்கீம், மெர்ச்சண்டைஸ் எக்ஸ்போர்ட்ஸ் ஃப்ரம் இந்தியா ஸ்கீம் (MEIS) போன்ற திட்டங்கள் உள்ளன. குறிப்பிட்ட தீம் அடிப்படையிலான சுற்றுலாவை முன்னிறுத்தும் ஸ்வதேஷ் தர்ஷன் திட்டம், புனித யாத்திரை புத்துயிர் மற்றும் ஆன்மீகம், பாரம்பரிய பெருக்க இயக்கம் (PRASHAD), சுற்றுலாவை மேம்படுத்தும் “இலக்கு வடகிழக்கு” ஆகிய திட்டங்கள் சுற்றுலாவை வளர்க்கின்றன.

பாரதத்தின் சுற்றுலா தரவரிசை 2014-இல் 65-வது இடத்திலிருந்து 2018-இல் 40-ஆவது இடத்திற்கு முன்னேறியது.

- தற்போதுள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS) நிதி ஒதுக்கீடு ரூ. 33,000 கோடி ரூபாயிலிருந்து (2013-14), ரூ. 55,000 கோடி ரூபாயாக (2018-19 இல்) உயர்த்தப்பட்டுள்ளது. அதிக உற்பத்தித்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் பண இழப்புகளைத் தடுக்க ஜியோ-டேக்கிங் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகத்தால் நடத்தப்படும் பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP), ஊரக வளர்ச்சித் துறையால் நடத்தப்படும் பண்டிட் தீன் தயாள் உபாத்யாயா கிராமின் கௌசல்யா யோஜனா (DDU-GKY) திட்டம் மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தால் தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா - தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DAY-NULM) ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
- டிஜிட்டல் போர்ட்டலை உள்ளடக்கியுள்ள தேசிய தொழில் சேவை (NCS) திட்டத்தையும் அரசாங்கம் செயல்படுத்தியுள்ளது. இது, வேலை தேடுபவர்கள் மற்றும் வேலை வழங்குபவர்களுக்கு வேலைப் பொருத்தத்திற்கான, விரைந்து செயல்படக்கூடிய, திறமையான மற்றும் எளிதில் கையாளக்கூடிய தேசிய அளவிலான ஆன்லைன் தளத்தை வழங்குகிறது, மேலும், இது தொழில் உள்ளடக்கத்தின் களஞ்சியத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது.
- கிராமப்புறங்களில் 1,77,524 கி.மீ-க்கும் அதிகமான சாலை கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன (2014-இல் ஒரு நாளைக்கு 69 கி.மீ. என்பதுடன் ஒப்பிடும்போது தற்போது ஒரு நாளைக்கு 134 கி.மீ.). அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ், கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள ஏழை மக்களுக்காக 1.5 கோடிக்கும் அதிகமான வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

- **பிரதான் மந்திரி முத்ரா யோஜனா (PMMY)** என்பது வங்கிகள், வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் (NBFCகள்) மற்றும் மைக்ரோ ஃபைனான்ஸ் நிறுவனங்கள் (MFIகள்) மூலம், விவசாயம் அல்லாத துறைகளில் உள்ள சிறு/நுண் வணிக நிறுவனங்களுக்கு, அவர்கள் தங்கள் வணிக நடவடிக்கைகளை உருவாக்க அல்லது விரிவு செய்ய பிணையில்லாக் கடன்களை வழங்கும் திட்டமாகும்.

பெண்கள், பட்டியல் சாதியினர் (எஸ்சி) மற்றும் பழங்குடியினர் (எஸ்டி) பிரிவைச் சேர்ந்தோர் மத்தியில் தொழில்முனைவோரை உருவாக்குவதற்காக, உற்பத்தி, சேவைகள் அல்லது வர்த்தகத் துறை மற்றும் விவசாயத்துடன் தொடர்புடைய செயல்பாடுகளில் பசுமைசார் நிறுவனத்தைத் தொடங்க அவர்களுக்கு உதவுவதற்காக, **ஸ்டாண்ட்-அப் இந்தியா** தொடங்கப்பட்டது. 10 லட்சத்தில் இருந்து 1 கோடி வரை வங்கிக் கடன் நீட்டிக்கப்பட்டுள்ளது. SC/ST மற்றும் பெண் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்காக 54,000 க்கும் மேற்பட்ட கடன்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன.

**ஸ்டார்ட்அப் இந்தியா** திட்டம், இந்தியாவில் ஸ்டார்ட்அப் கலாச்சாரத்தை வளர்ப்பதற்கும், புத்தொழில் மற்றும் தொழில்முனைவுக்கான வலுவான மற்றும் ஒருங்கிணைந்த சூழலை உருவாக்குவதற்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. நமது நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக, 15900-க்கும் மேற்பட்ட ஸ்டார்ட்அப்கள் இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

- இளைஞர்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்தும் வகையில், சுமார் 22 அமைச்சகங்கள்/துறைகள் பல்வேறு துறைகளில் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளன.
- தொழில்துறையின் தேவைகளுக்கு ஏற்ப இளைஞர்களின் திறன் மேம்பாட்டிற்காக “SANKALP” மற்றும் “Strive” போன்ற திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் நிறுவனங்களுக்கு “பிரதம மந்திரி ரோஜ்கர் ப்ரோட்சகன் யோஜனா” திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கப்படுகிறது.
- தேசிய தொழிற்பயிற்சி ஊக்குவிப்புத் திட்டத்தால் 5 லட்சத்திற்கும் அதிகமான இளைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

## ஊழல் ஒழிப்பு

### வழங்கப்பட்ட வாக்குறுதி

ஊழல் என்பது மோசமான நிர்வாகத்தின் வெளிப்பாடு. மேலும், ஆட்சியில் இருப்பவர்களின் கெட்ட எண்ணங்களையும் இது பிரதிபலிக்கிறது. காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் கீழ் எங்கும் பரவியிருந்த ஊழல்கள் அனைத்தும் ‘தேசிய நெருக்கடி’யாக மாறியுள்ளது.

ஊழலை ஒழிக்கும் ஒரு அமைப்பை உருவாக்குவோம். இதை நாம் கீழ்க்கண்ட வழிகளில் செய்வோம்:

- பொது விழிப்புணர்வு
- தொழில்நுட்பமயமாக்கப்பட்ட மின்-ஆளுகை: இது குடிமக்கள்-அரசு இடையே தனிப்பட்ட விருப்புரிமையை குறைக்கிறது.
- அமைப்பு அடிப்படையிலான, கொள்கை சார்ந்த நிர்வாகம் - அதை வெளிப்படைத்தன்மை கொண்டதாக ஆக்குதல்.
- வரி விதிப்பு முறையில் ஆய்ந்தறிதல் மற்றும் எளிமைப்படுத்தல் – தற்போது இந்த அமைப்புமுறை நேர்மையாக வரி செலுத்துபவர்களுக்கு வெறுப்பூட்டும் வகையில் உள்ளது.
- வரி விதிப்பு முறையின் அனைத்து நிலைகளிலும் செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளை எளிமைப்படுத்துதல் - குடிமக்கள், மற்றும் நிறுவனங்கள் மீது நம்பிக்கை வைத்தல்

## நிறைவேற்றிய வாக்குறுதி

நமது மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி ஊழலை ஒழிப்பது மட்டுமின்றி, நாட்டின் பணத்தை மிச்சப்படுத்தவும் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்தார்.

*முக்கிய திட்டங்கள் மற்றும் மோடி அரசாங்கத்தால் சேமிக்கப்பட்ட தொகை:*

| முக்கிய திட்டங்கள் | மோடி அரசாங்கத்தால் சேமிக்கப்பட்ட தொகை |
|---|---|
| நேரடி பயன் பரிமாற்றம் (DBT) | ரூ. 1,85,000 கோடி |
| திவால் சட்டம் (IBC) | ரூ 1,10,000 கோடி |
| போலி/ நகல் ரேஷன் கார்டுகளை ஒழித்தல் | ரூ.17,000 கோடி |
| மருத்துவச் செலவுகள் குறைப்பு | ரூ.16,000 கோடி |
| எல்இடி ஒளி விளக்குகள் | ரூ.50,000 கோடி |
| பினாமி சொத்து சட்டம் | ரூ.6,000 கோடி |

- நாட்டின் வளர்ச்சிக்கு ஊழலற்ற அமைப்பு மற்றும் சமூகத்தின் அவசியத்தைப் பற்றி எளிய மக்களுக்கு விழிப்புணர்வைக் கொண்டுவரும் முயற்சிக்கு பிரதமர் மோடியே தலைமை தாங்கினார்.
- நேரடி பலன் பரிமாற்றம் (DBT) முன்முயற்சியின் மூலம் அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் குடிமக்களுக்கு நேரடியாக நலத்திட்ட உதவிகளை வெளிப்படையான முறையில் வழங்குதல்.
- பொது கொள்முதலில் இ-டெண்டர் முறையை நடைமுறைப்படுத்தல்.

- மின் - ஆளுகை முறையினை அறிமுகம் செய்தல் மற்றும் அது தொடர்பான நடைமுறை மற்றும் அமைப்புகளை எளிமைப்படுத்துதல்.
- அரசாங்க மின் சந்தை (GeM) மூலம் அரசாங்கம் கொள்முதல் செய்வதை அறிமுகம் செய்தல்
- பிரதமர் மோடியின் கீழ், பாரத் 85%-உடன் உலகில் உள்ள அரசுகளிலேயே அதிக அளவு மக்களின் நம்பிக்கை பெற்ற அரசாக இருந்தது. (அமெரிக்கா 51%, ரஷ்யா 67%, ஜப்பான் 57%)

## கருப்புப் பணம்

### வழங்கிய வாக்குறுதி

ஊழலுக்கான வாய்ப்பைக் குறைப்பதன் மூலம், கறுப்புப் பண உற்பத்தியைக் குறைப்பதை உறுதி செய்வோம். வெளிநாட்டு வங்கிகள் மற்றும் வெளிநாட்டுக் கணக்குகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்புப் பணத்தைக் கண்டுபிடித்து திரும்பக் கொண்டுவரும் செயல்முறையைத் தொடங்க பாஜக உறுதிபூண்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக நாங்கள் ஒரு பணிக்குழுவை அமைப்போம் மற்றும் ஏற்கனவே உள்ள சட்டங்களில் திருத்தங்களை பரிந்துரைப்போம் அல்லது புதிய சட்டங்களை இயற்றுவோம். இந்தியாவிலிருந்து கொண்டு செல்லப்பட்ட கருப்புப் பணத்தை இந்தியாவுக்குத் திரும்பக் கொண்டுவருவதற்கான செயல்முறை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படும். கறுப்புப் பணம் குறித்த தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கு வசதியாக வெளிநாட்டு அரசுகளுடன் ஊக்கத்துடன் இணைந்து செயல்படுவோம்.

### நிறைவேற்றிய வாக்குறுதி

கறுப்புப் பணத்தைக் கட்டுப்படுத்தவும், பொருளாதாரக் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதை உறுதி செய்யவும் மோடி அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

- பணமதிப்பு நீக்கத்தின் வெற்றி
- பாரதத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு வெளிக்கொண்டு வரப்பட்ட கறுப்புப் பணம், பயங்கரவாதம் மற்றும் நக்சலிசத்திற்கு விழுந்த தீர்க்கமான அடி, 2.24 லட்சம் போலி நிறுவனங்கள் நீக்கம், வருமான வரி தாக்கல் விகிதம் அதிகரிப்பு, டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகள் கணிசமான ஊக்கத்தைப் பெறுதல், ஏழைகளுக்கு கடன் வசதி மற்றும் வேலைகள் அதிகரிப்பு, சிறு மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான மலிவான கடன்கள் மற்றும் நகராட்சிகளுக்கு வருவாய் அதிகரிப்பு
- மோடி அரசு, அதன் முதல் அமைச்சரவை கூட்டத்தின் முடிவாக, நீதிமன்றத்தால் கண்காணிக்கப்படும் சிறப்பு விசாரணைக் குழுவை (SIT) அமைத்தது. **அந்தக் குழு வெளிநாட்டுக் கணக்குகளில் உள்ள ரூ. 16,000 கோடி உட்பட ரூ. 70,000 கோடிக்கும் அதிகமான கறுப்புப் பணத்தைக் கண்டறிந்தது.**
- ஊழலுக்கு எதிரான போராட்டத்திற்கு சட்டப்பூர்வமான அங்கீகாரத்தை வழங்குவதற்காக, **கருப்புப் பணம் (வெளியிடப்படாத வெளிநாட்டு வருமானம் மற்றும் சொத்துகள்) மற்றும் வரி விதிப்புச் சட்டம் – 2015**, மோடி அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டது. ஏற்கனவே உள்ள 30% வரியுடன் சேர்த்து, வெளியிடப்படாத சொத்தின் மதிப்பில் 90% வரை அபராதம் விதிக்கவும், சில வழக்குகளில் கடுமையான சிறைத்தண்டனை விதிக்கவும் இந்த சட்டம் அனுமதிக்கிறது. இந்த கடுமையான அபராதங்கள் மற்றும் சிறைத்தண்டனைகள், கருப்புப் பணத்தை பதுக்கி வைப்பதில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு எதிராக ஒரு பயனுள்ள தடுப்பாகச் செயல்படுகின்றன.
- **மொரீஷியஸ், சிங்கப்பூர், சைப்ரஸ் போன்ற பல்வேறு நாடுகளுடன் இரட்டை வரி தவிர்ப்பு ஒப்பந்தத்தை (DTAA)** மோடி அரசாங்கம் வலுப்படுத்தியுள்ளது. ஒப்பந்த துஷ்பிரயோகம், வரி ஏய்ப்பு மற்றும் இந்தியர்கள் வரி புகலிட நாடுகள் வழியாக பணத்தை பதுக்கி இந்தியாவுக்கு மீண்டும் கொண்டுவரும் நிதி ஏய்ப்புகளைத்

தடுக்க அரசாங்கம் வரி ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்தது. இந்த திருத்தப்பட்ட வரி ஒப்பந்தங்கள் கறுப்புப் பணத்திற்கு எதிரான இந்தியாவின் போராட்டத்தில் மிகப்பெரிய வெற்றியாகக் கருதப்படுகிறது.

- வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்புப் பணத்திற்கு எதிராக பிரதமர் மோடியின் தலைமையில் அரசாங்கம் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்துள்ளது. **சுவிஸ் வங்கிகளில் உள்ள கடன்கள் மற்றும் வைப்புத்தொகைகள் மற்றும் வங்கி அல்லாத கடன்கள் மற்றும் வைப்புகளின் எண்ணிக்கையில் கணிசமான குறைவு** ஏற்பட்டுள்ளது.
- வெளிநாட்டுக் கணக்குகள் உள்ளிட்டவற்றையும் சேர்த்து கறுப்புப் பணம் வெளியேறுவதைத் தடுக்க மோடி அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்தியாவும் சுவிட்சர்லாந்தும் வரி விவகாரங்களில் தானியங்கி தகவல் பரிமாற்றத்தை (AEOI) அறிமுகப்படுத்துவதற்கான கூட்டுப் பிரகடனத்தில் கையெழுத்திட்டன. **2018-ஆம் ஆண்டுக்காக செப்டம்பர் 2019 முதல், மற்றும் அதற்கு அடுத்த ஆண்டுகளுக்கு தானியங்கி அடிப்படையில் சுவிட்சர்லாந்தில் வசிக்கும் இந்தியர்கள் வைத்திருக்கும் கணக்குகள் பற்றிய தகவல்களை இந்தியா பெறுவதை இது உறுதி செய்யும்.**
- நீண்ட காலமாக நிலுவையில் உள்ள **பினாமி பரிவர்த்தனைகள் (தடை) திருத்தச் சட்டம் – 2016**ஐ மோடி அரசாங்கம் வெற்றிகரமாக நிறைவேற்றியது. **பினாமி சொத்துகளைப் பறிமுதல் செய்யவும், பினாமிதாரர் மற்றும் ஆதாய உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து**, அவர்களுக்கு ஏழு ஆண்டுகள் வரை கடுங்காவல் சிறைத்தண்டனை மற்றும் சொத்தின் நியாயமான சந்தை மதிப்பில் 2 சதவீதம் வரை அபராதம் விதிக்கவும் இச்சட்டம் வழிசெய்கிறது. பினாமி சொத்துகள் தொடர்பாக விரைவான நடவடிக்கையை உறுதி செய்வதற்காக இந்தியா முழுவதும் 24 பிரத்யேக பினாமி தடை அலகுகள் (BPUs) அமைக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக

சுமார் 1,600 பரிவர்த்தனைகள் தற்காலிக இணைப்பின் ஒரு பகுதியாக இருந்தன, அதே நேரத்தில் இணைப்பின் கீழ் உள்ள சொத்துகளின் மதிப்பு **ரூ. 6,900 கோடியாகும்.**

- **தப்பியோடிய பொருளாதாரக் குற்றவாளிகள் சட்டம் - 2018** மோடி அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது, இது, **பொருளாதாரக் குற்றவாளிகளைத் தேடும் புலனாய்வு அமைப்புகளுக்கு அதிகாரம்** அளிக்கிறது. நாட்டை ஏமாற்றி, இந்திய நீதிமன்றங்களின் அதிகார வரம்பில் இருந்து தப்பிச் செல்பவர்களின் சொத்துகளை பறிமுதல் செய்ய சட்ட அமலாக்க முகமைகளை இச்சட்டம் அனுமதிக்கிறது. இது, குற்றம் சாட்டப்பட்டவர் இந்தியாவுக்குத் திரும்பவும், அவரது குற்றங்களுக்கான விசாரணையை எதிர்கொள்ளவும் கட்டாயப்படுத்துகிறது. மேலும், தப்பியோடிய பொருளாதாரக் குற்றவாளிகளால் உருவான நிதி இழப்புகளில் இருந்து அதிகபட்ச நிதி மீட்டெடுப்புக்கு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு உதவும். **கூடுதலாக, தப்பியோடிய பொருளாதாரக் குற்றவாளிகள் (தேடல் மற்றும் பறிமுதல் செய்வதற்கான நடைமுறை), விதிகள் - 2018, பொருளாதாரக் குற்றவாளிகளின் சொத்துகளை விரைவாகப் பற்றுகை செய்து பறிமுதல் செய்வதை உறுதி செய்கிறது.**
- **மோடி அரசு எடுத்த கருப்புப் பண ஒழிப்பு நடவடிக்கைகள். ரூ.1,30,000 கோடி வரையில் வெளியிடப்படாத வருமானத்தை வரி வரம்புக்குள் கொண்டு வந்துள்ளன.** பொதுப் பணத்தில் இருந்து பெறப்பட்ட கடன்கள் தொடர்பாக பெருநிறுவன பொறுப்புணர்வை அமல்படுத்துவதும் பொருளாதாரத்தை சுத்தம் செய்வதற்கான ஒரு முக்கிய வழியாகும்.
- சுதந்திரம் அடைந்ததில் இருந்து 2008 வரை, அதாவது 60 ஆண்டுகளில் வங்கிகள் ரூ. 18 லட்சம் கோடி அளவில் கடன்களை அளித்துள்ளன. ஆனால், 2008 முதல் 2014 வரை வெறும் 6 ஆண்டுகளில் காங்கிரஸ் அரசு இந்த எண்ணிக்கையை ரூ. 52 லட்சம் கோடியாக மாற்றியது. இது வங்கிகளுக்கு அதிக

எண்ணிக்கையிலான செயல்படா சொத்துகளை / வராக்கடன்களை (NPA) உருவாக்கியது; இந்த உண்மை UPA அரசாங்கத்தால் மறைக்கப்பட்டது.

- இந்த NPA-களைக் மோடி அரசு கண்டுபிடித்தது மட்டுமல்லாமல், திவால் சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் அவற்றைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தது. இதுவரை, வங்கிகள் ரூ. 3 லட்சம் கோடிக்கும் அதிகமான தொகையினை மீட்டெடுக்க அரசு உதவியுள்ளது.

## முடிவெடுத்தல் மற்றும் கொள்கை வகுப்பதில் செயல்படாத்தன்மை

### வழங்கிய வாக்குறுதி

வலுவான மன உறுதியுடனும், பொதுநலன் மீதான அர்ப்பணிப்புடனும் அரசு இயந்திரம் மீண்டும் செயல்பட வைக்கப்படும். சரியான முடிவுகளை எடுக்கவும், நவீன இந்தியாவைக் கட்டியெழுப்புவதற்கு அதன் ஆற்றலைப் பயன்படுத்தவும் அதிகார வர்க்கத்தை ஊக்குவிப்போம்.

### நிறைவேற்றிய வாக்குறுதி

முதல்வராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும்போதே பிரதமராகப் பொறுப்பேற்றவர் பிரதமர் மோடி மட்டுமே. எனவே, அவர் தன்னுடன் 13 ஆண்டுகள் (குஜராத் முதலமைச்சராக செயல்பட்ட) சிறந்த நிர்வாக அனுபவத்தை கொண்டு வருகிறார். அது நல்ல நிர்வாகத்தை வழங்கியது மற்றும் நாடு முழுவதும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது.

- மோடி பிரதமரான பிறகு செய்த முதல் காரியங்களில் ஒன்று, அனைத்து அரசுத் துறைகளின் 77 செயலாளர்களுடன் ஒரு கூட்டத்தை நடத்தியது ஆகும். கூட்டத்தில் அவர்களை அச்சமின்றியும் சுறுசுறுப்புடனும் பணியாற்ற அவர் ஊக்குவித்தார். இதைத் தொடர்ந்து ஒவ்வொரு துறை சார்பாகவும் நேரடியாக

பிரதமரிடம் விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன. கேள்விகளுக்கு பதிலளிக்க அதிகபட்சம் 2 வார கால அவகாசம் என்று அமைச்சரவை குறிப்புகளில் உள்ள விஷயம் கண்டிப்பாக கடைபிடிக்கப்பட்டது.

- பாரதத்தின் ‘செயல்படு கிழக்கு’ கொள்கையானது முழு வடகிழக்கு மாநிலங்களையும் சிறந்த முதலீடு மற்றும் உள்கட்டமைப்புடன், வளரும் பொருளாதாரம், விவசாயம், சுற்றுலா, சாலைகள், இரயில்வே மற்றும் விமான நிலையங்கள் ஆகிய பிரிவுகளில் கவனம் செலுத்தி, வடகிழக்கு மாநிலங்களில் மாற்றத்தை ஏற்படுத்தி, முழு வடகிழக்கு பிராந்தியத்தையும் பாரதத்தின் இதர பகுதிகளுடன் இணைக்கிறது.
- 1400+ வழக்கற்றுப் போன சட்டங்கள் ரத்து செய்யப்பட்டன.
- மோடி அரசு நாட்டின் மிகப்பெரிய வரி சீர்திருத்தமான ஜிஎஸ்டி (ஒரே நாடு ஒரு வரி)-ஐ அறிமுகப்படுத்தியது.
- எளிதாக வணிகம் செய்வதற்கான நாடுகளின் தரவரிசையில் பாரத் ஒரு புதிய வரலாற்று உயர்வை பதிவு செய்தது (தரவரிசையில் 2014-இல் 142-ஆவது இடத்திற்குப் பதிலாக 2018-இல் 77-வது இடம்)

# நம்பகத்தன்மை நெருக்கடி

## வழங்கிய வாக்குறுதி

அரசின் நம்பிக்கையையும் நம்பகத்தன்மையையும் மீட்டெடுக்க பாஜக பாடுபடும். ஆட்சி அமைப்பில் பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறல் சங்கிலித் தொடராக இருப்பதை உறுதி செய்வோம்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

கூட்டு நல்வாழ்வுக்காக ஒன்றிணைந்து செயல்படுவதில் நம்பிக்கை கொண்டுள்ள, தன்னம்பிக்கை மற்றும் சுய சார்புள்ள நாடாக பாரதம் உருவெடுத்துள்ளது. பிரதமர் திரு நரேந்திர மோடியின் ராஜதந்திரம்,

நம்பகத்தன்மை மற்றும் தலைமைப் பண்புகள், சர்வதேச அரங்கில் இந்தியாவின் பிம்பத்தை முடிவெடுக்கக் கூடிய இடத்திலுள்ள ஒரு நாடாக மாற்றியமைத்துள்ளது. பாரதம் இன்று உலக அளவில் தன்னை வலுவாக நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. நமது மகத்தான நாட்டின் அமைதியை விரும்பும் இயல்பு மற்றும் சுயமரியாதை உலகத்தால் அங்கீகரிக்கப்பட்டு மதிக்கப்படுகிறது.

- வழமைக்கு மாறான சிந்தனை, தைரியமான நோக்கம் மற்றும் ஆற்றல்மிக்க செயல்திறன், இது 'பாரத் வரலாற்றிற்கு' மறு உத்வேகம் அளித்தது. இந்தச் செயல்பாட்டின் ஊடாக, உலகளாவிய நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் காலநிலை மாற்றம் முதல், நாடு கடந்த பயங்கரவாதம் மற்றும் இணையப் பாதுகாப்பு வரையிலான பிரச்சனைகள் அனைத்திலும் உருவாக்கி வரும் விவாதங்களை வடிவமைப்பதில் இந்தியா ஒரு முக்கியப் பங்காளியாக தன்னை நிரூபித்தது.
- வழக்கங்களை தகர்த்தெறிதல், செயலில் ஈடுபடுதல், நடைமுறை – **(Path-breaking, Proactive, Pragmatic)** இந்த மூன்று 'P'-க்களும் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரத் அரசாங்கத்தின் ராஜதந்திர முன்முயற்சிகள் மற்றும் வெளிப்பாட்டை உள்ளடக்கியது.
- பாரத் ராஜதந்திரத்தில், அனைத்து P5 சக்திகளுடனும் பாரதத்தின் உறவுகளை புத்துயிர் பெறச் செய்ய, அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி விஜயம் செய்து, இந்த அனைத்து நாடுகளுடனும் பன்முக உறவுகளை முடுக்கி விடுவதற்கு வழி வகுத்தார். ஆப்பிரிக்கா, மேற்கு ஆசியா, மத்திய ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசியா உள்ளிட்ட உலகின் முக்கியமான பகுதிகளுடன் பாரதத்தின் பல தரப்பிலான ஈடுபாடு ஒரு புதிய சக்தியையும் நீண்ட காலப் நோக்கத்தையும் பெற்றது. அத்துடன் பரஸ்பரம் அதிகாரமளிக்கும் ஒத்துழைப்பிற்கான புதிய வாய்ப்புகளை அளித்தது.

- பாரதத்தின் உலகளாவிய போட்டிக் குறியீடு தரவரிசை 2014-இல் இருந்த 60 -ஆவது இடத்துடன் ஒப்பிடும்போது 2019-இல் 43-வது இடத்திற்கு உயர்த்தப்பட்டது.

# 2. கட்டமைப்பை வலுப்படுத்துதல்

## வழங்கிய வாக்குறுதி

## இந்திய அணி (Team India)

### மத்திய–மாநில உறவுகள்

கலந்தாலோசனையின் மூலம் மத்திய-மாநில உறவுகளை சமநிலையில் வைப்போம் மற்றும் இணக்கமான மத்திய-மாநில உறவுகளுக்கு பாடுபடுவோம்.

- நமது அரசாங்கம் மாநிலங்களின் விரைவான முன்னேற்றத்திற்கு உதவிகரமாகவும், வழிசெய்யும் இடத்திலும் இருக்கும். மாநிலங்களால் இயக்கப்படும் தேசிய வளர்ச்சியின் மாதிரியை நாங்கள் உருவாக்குவோம்.
- இந்திய அணி என்பது, டெல்லியில் அமர்ந்திருக்கும் பிரதமர் தலைமையிலான அணியோடு நின்று விடாமல், மாநில முதலமைச்சர்கள் மற்றும் பிற அதிகாரிகளையும் சம பங்காளிகளாக உள்ளடக்கிய ஒன்றாக இருக்கும்.
- நிதி ஒழுக்கத்தை வலியுறுத்தும் அதேநேரம் மாநிலங்களின் நிதி சுயாட்சி உறுதி செய்யப்படும்.
- மாநிலங்கள் சேர்ந்த குழுவிற்கு பொருந்தக்கூடிய வகையிலான தீர்வுகளைத் தேடும் நோக்கில், பொதுவான பிரச்சனைகள் மற்றும் அக்கறையுள்ளவர்களுடன் கூடிய 'மாநிலங்களின் பிராந்திய கவுன்சில்களை' உருவாக்குவோம்.
- பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள், மாநிலங்களுக்கு இடையேயான தகராறுகள் மற்றும் பிராந்தியங்களுக்கு

இடையிலான பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்கி சுற்றுலாவை மேம்படுத்துவதில் மாநிலங்களுக்கு இடையே ஒத்துழைப்பை ஊக்குவிப்போம்.

- மலைப்பாங்கான மற்றும் பாலைவனம் அமைந்துள்ள மாநிலங்களுக்கான சிறப்புத் தேவைகள் மற்றும் தனித்துவமான பிரச்சனைகளை நாங்கள் அங்கீகரிக்கிறோம். இந்த மாநிலங்களின் அரசாங்கங்களுடன் கலந்தாலோசித்து, மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் குறிப்பிட்ட மாநிலங்களுக்கான வளர்ச்சி முன்னுரிமைகள்/ மாதிரிகள் உருவாக்கப்படும்.
- யூனியன் பிரதேசங்களின் (UTs) தனித்துவமான அந்தஸ்தின் படி, அவை சிறப்பு கவனம் பெறும். யூனியன் பிரதேசங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தி வலுப்படுத்துவதில் கவனம் செலுத்துவோம். சுற்றுலா மேம்படுத்தப்படும்; பழங்குடியினர் நலன் மற்றும் அவர்களின் உரிமைகளில் முழு கவனம் செலுத்தப்படும்; மேலும், உள்கட்டமைப்பு மற்றும் கடலோரப் பகுதி மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- நமது தீவுப் பிரதேசங்களின் பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான எங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறோம்.
- 'தேசிய வளர்ச்சி கவுன்சில்' மற்றும் 'மாநிலங்களுக்கிடையிலான கவுன்சில்' போன்ற நலிந்து கிடக்கும் மன்றங்கள் புத்துயிர் பெற்று செயல்திறனுள்ள அமைப்புகளாக மாற்றப்படும்.
- வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்துவதில் மாநில அரசுகளை ஈடுபடுத்துதல்.
- தொழில், விவசாயம் மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றில் முதலீடுகள் மூலம் வளங்களைத் திரட்ட மாநிலங்களுக்கு உதவுதல்

## நிறைவேற்றிய வாக்குறுதி

முழுமையான வளர்ச்சியை அடைய, கூட்டுறவு மற்றும் கூட்டாட்சி முறையைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை,

முதலமைச்சராகப் பணியாற்றிய தனது வளமான அனுபவத்துடன் பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார். ஆட்சி சீர்திருத்தங்களுக்கு அரசு முக்கியத்துவம் தருவதன் மூலம், மத்திய-மாநில உறவுகளின் மிகவும் கூட்டுறவான வடிவத்தை உருவாக்குவதே இலக்காகும் என பிரதமர் மோடி ஒரு புதிய அணுகுமுறைக்கு உறுதியளித்தார். கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கும், கூட்டாக வரையறுக்கப்பட்ட தேசிய நலனை அடைவதற்கும் மாநில முதலமைச்சர்கள் மத்திய அரசுடன் இணைந்து 'இந்திய அணி'-ஆக செயல்பட ஊக்குவிக்கப்பட்டனர்.

- மாநிலங்களுக்கு அதிகாரம் அளிக்க, திட்டக் கமிஷன் அகற்றப்பட்டது மற்றும் மாநிலங்களுக்கு மேலும் அதிகாரம் அளிக்கவும் வலுப்படுத்தவும் NITI ஆயோக் உருவாக்கப்பட்டது. மாநிலங்களுடனான உண்மையான மற்றும் தொடர்ச்சியான கூட்டாண்மை மூலம் 'மத்திய அரசு – மாநிலம்' என்ற ஒரு வழிக்கொள்கையை மாற்றுவது என்பது கடந்த காலத்திலிருந்து ஒரு முக்கியமான பரிணாம மாற்றம் ஆகும்.
- பதினான்காவது நிதிக் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்தியதன் மூலம் மத்திய வரிவிதிப்பில் மாநிலங்களின் பங்கு 32 சதவீதத்தில் இருந்து 42 சதவீதமாக அதிகரித்தது.
- சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) அமலாக்கத்தின் மூலம் கிடைக்கும் வருவாயானது, பெரும்பாலான பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு 50:50 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே பகிர்ந்து கொள்ளப்பட்டது.
- மோடி அரசு மாநிலங்களுக்கு அதிக நிதிப் பொறுப்பை வழங்குவதன் மூலம் செலவழிக்கும் அதிகாரங்களை வழங்கியுள்ளது
- மத்திய அரசு வடிவமைத்த திட்டத்தை ஏற்குமாறு மாநிலங்களைக் கேட்பதற்குப் பதிலாக, முதலில் மாநிலங்களின் கருத்துகளைக் கேட்டு அதன்பின் கொள்கைகள் உருவாக்கப்பட்டன. மாநில அரசால் நடத்தப்படும் மின் விநியோக நிறுவனங்களுக்கான திருப்புமுனைத் திட்டமான 'உஜ்வால் டிஸ்காம் அஷ்யூரன்ஸ் யோஜனா' இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

- ஒரு புதுமையான முயற்சியாக, பிரதமர் மோடி தனது சீன பயணத்தில் இரண்டு மாநில முதல்வர்களுடன் சென்றார். அவர்கள் மாகாண தலைவர்கள் மன்றம் என்ற ஒரு முக்கிய முன்முயற்சியில் பங்கேற்றனர்.
- மாநிலங்களுக்கு, குறிப்பாக கிழக்கிந்தியாவின் நிலக்கரி வளம் மிக்க மாநிலங்களுக்கு ஒரு பெரிய ஊக்கமளிக்கும் வகையில், வெற்றிகரமான நிலக்கரி ஏலத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தின் பெரும்பகுதி ஒதுக்கப்படுவது அந்த மாநிலங்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.
- கவுன்சிலின் பரிசீலனைக்கான விஷயங்களை, தொடர்ச்சியான ஆலோசனை மற்றும் செயலாக்கத்திற்காக, மாநிலங்களுக்கு இடையேயான கவுன்சிலின் நிலைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

## நாட்டை ஒருங்கிணைத்தல் – அதன் பரந்த தன்மை மற்றும் குரல்கள்

### வழங்கிய வாக்குறுதி

நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழும் அனைத்து இந்தியர்களும் நாட்டின் முன்னேற்றத்தில் சமமான பங்கைக் கொண்டுள்ளனர், எனவே, முன்னேற்றத்தின் பலன்களை அவர்கள் அடைவது உறுதி செய்யப்பட வேண்டும்.

பிராந்திய அபிலாஷைகள்: சிறிய மாநிலங்கள் மூலம் அதிக அதிகாரப் பரவலாக்கத்திற்காக பாஜக எப்போதும் துணை நிற்கிறது.

**வடகிழக்கு**: மோசமான நிர்வாகம், ஊழல் மற்றும் பொது சேவைகளின் மோசமான விநியோகம் ஆகியவற்றால் இயற்கை வளம் நிறைந்த வடகிழக்கு மாநிலங்கள் வளர்ச்சியில் பின்தங்கியுள்ளன. வடகிழக்கு பிராந்திய அமைச்சகத்தை அமைப்பதன் மூலம், வடகிழக்கு வளர்ச்சி பிரச்சினையைத் தீர்க்க உறுதியான நடவடிக்கைகளை தேசிய ஜனநாயக கூட்டணி அரசு தொடங்கியுள்ளது. இப்பிராந்தியத்தின்

விரைவான அபிவிருத்திக்காக பரந்த திட்ட வரைவு மற்றும் கழிக்க முடியாத நிதி மூலம் இந்த அமைச்சகத்திற்கு அதிகாரம் அளிப்போம்.

பாஜக கீழ்க்கண்டவற்றைச் செய்யும்:

- இப்பிராந்தியத்திற்குள்ளும் நாட்டின் மற்ற பகுதிகளுக்கும் இணைப்பை மேம்படுத்துவதில் சிறப்பு கவனம் செலுத்துதல்.
- குறிப்பாக அருணாச்சலப்பிரதேசம் மற்றும் சிக்கிமில் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் பெரிய அளவிலான உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்தல்.
- அஸ்ஸாமில் வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் நதி நீர் மேலாண்மை பற்றிய பிரச்சனைக்கு தீர்வுகாணுதல்.
- சுற்றுலா மற்றும் தகவல் தொழில்நுட்பத் தொழில் போன்றவற்றில் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.
- வடகிழக்கு பிராந்தியத்தில் ஊடுருவல் மற்றும் சட்டவிரோதமாக குடியேறியவர்களின் பிரச்சினையை முன்னுரிமை அடிப்படையில் தீர்த்தல்.
- இது, தெளிவான கொள்கை வழிகாட்டுதல்களையும் அடி மட்டத்தில் பயனுள்ள கட்டுப்பாட்டையும் உள்ளடக்கியதாகும்.
- இந்தியா-பங்களாதேஷ் மற்றும் இந்தியா-மியான்மர் எல்லையில் நிலுவையில் உள்ள அனைத்து வேலியிடுதல் பணிகளையும் முடித்து, எல்லைப் பாதுகாப்பை அதிகரித்தல்.
- பல்வேறு கல்வி நிலையங்களில் வடகிழக்கு மாணவர்களுக்கான விடுதிகள் அமைப்பது உட்பட நாடு முழுவதும் கல்வி கற்கும் வடகிழக்கு மாணவர்களின் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.
- கிளர்ச்சிக் குழுக்களை உறுதியான முறையில் கையாளுதல்.
- **ஜம்மு மற்றும் காஷ்மீர்**: ஜம்மு-காஷ்மீர் இந்திய ஒன்றியத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தது, உள்ளது மற்றும் இருக்கும். இந்தியாவின் பிராந்திய ஒருமைப்பாடு மீற முடியாதது. ஜம்மு,

காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய மூன்று பகுதிகளிலும் சமமான மற்றும் விரைவான வளர்ச்சிக்கான செயல்பாடுகளை பாஜக தொடரும்.

- காஷ்மீரி பண்டிட்டுகள் முழு கண்ணியத்துடன், பாதுகாப்பு மற்றும் உறுதியான வாழ்வாதாரத்துடன் தங்கள் முன்னோர்களின் நிலத்திற்குத் திரும்புவது பாஜகவின் செயல் திட்டத்தில் முதன்மையானதாக இருக்கும்.
- பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் (POK) இருந்து வரும் அகதிகளின் நீண்டகால பிரச்சனைகள் தீர்க்கப்படும் மற்றும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்.
- அரசியலமைப்பின் 370-வது பிரிவின் மீதான தனது நிலைப்பாட்டை பாஜக மீண்டும் வலியுறுத்துகிறது, மேலும், இது குறித்து அனைத்து பங்குதாரர்களுடனும் விவாதிக்கும் மற்றும் அந்த சட்டப்பிரிவை ரத்து செய்வதில் மோடி அரசு உறுதியாக உள்ளது.
- நல்ல நிர்வாகம், சிறந்த உள்கட்டமைப்பு, கல்வி வாய்ப்புகள், சுகாதாரம் மற்றும் அதிக வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும், இது காஷ்மீர் பள்ளத்தாக்கில் சிறந்த வாழ்க்கைத் தரத்திற்கு வழிவகுக்கும்.

**சீமாந்திரா மற்றும் தெலுங்கானா**: சீமாந்திராவுக்கு முழு நீதி வழங்கவும், சீமாந்திரா மற்றும் தெலுங்கானாவின் வளர்ச்சி மற்றும் ஆட்சிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் பாஜக உறுதிபூண்டுள்ளது.

## நிறைவேற்றிய வாக்குறுதி

### வடகிழக்கு

தனது முதல் 5 ஆண்டுகளில் வடகிழக்கு மாநிலங்களுக்கு அதிகப் பயணம் மேற்கொண்ட முதல் பிரதமர் மோடி அவர்களே. உள்கட்டமைப்பு, திறன்கள், இணைப்பு, இளைஞர்கள் மேம்பாடு, விவசாயம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றில் வளர்ச்சியை மோடி விரும்பினார். பிரதமர் நரேந்திர மோடி இப்பகுதியில் உள்ள எட்டு

வடகிழக்கு மாநிலங்களை (அருணாச்சலப்பிரதேஷ், அசாம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, சிக்கிம் மற்றும் திரிபுரா.) செல்வத்திற்கான தெய்வமான லட்சுமியின் எட்டு வடிவங்களான 'அஷ்டலட்சுமி' என்று கருதினார். மோடி அரசு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் உள்கட்டமைப்பு மேம்பாட்டில் கவனம் செலுத்துகிறது.

வடக்கு-கிழக்கு பகுதிகளின் வளர்ச்சி, பாரதத்தின் 'செயல்படு கிழக்கு' கொள்கையின் இதயத் துடிப்பாக பார்க்கப்பட்டது.

- வர்த்தகம், கலாச்சாரம், மக்களிடையேயான தொடர்புகள் மற்றும் உள்கட்டமைப்பு மூலம் வடகிழக்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பான ஆசியான் (ASEAN) இடையே இணைப்பை வலுப்படுத்துதல். பாரத் - மியான்மர் - தாய்லாந்து முத்தரப்பு நெடுஞ்சாலை உருவாக்கம்.
- ஆசியாவில் உள்ள முக்கியமான துறைமுகங்களுக்கு சரக்குகளை கொண்டு செல்வதற்கான உள்நாட்டு நீர்வழிகள் (19 புதிய நீர்வழிகள்)
- வடகிழக்கு கவுன்சில், பிராந்தியத்தின் வளர்ச்சிக்காக வெறும் 3 ஆண்டுகளில் ரூ.2309 கோடிக்கு மேல் செலவிட்டுள்ளது
- திட்டங்களின் எண்ணிக்கை வெறும் 3 ஆண்டுகளில் 56-ல் இருந்து 138- ஆக அதிகரித்துள்ளது
- வடகிழக்கு மாநிலங்களுக்கான மின் பரிமாற்றம் மற்றும் விநியோக முறைகளுக்கான விரிவான திட்டம் (ரூ. 9865 கோடி மதிப்பீடு) மோடி அரசாங்கத்தின் முதலாவது ஆண்டில் அரசால் தொடங்கப்பட்டது.
- 16 நீர் மின்சக்தி திட்டங்கள், 694 மெகாவாட் மின் உற்பத்தி திறன் நிறுவுதல், 2540கி.மீ பரப்பு மற்றும் விநியோக பாதைகள் ஆகியவை அமைக்கப்பட்டன.
- 32,600 கோடி ரூபாய் முதலீட்டில் 3840 கிமீ தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்க, அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 3 ஆண்டுகளில் மட்டும்

ரூ.13,500 கோடி ரூபாய் செலவில் 1266 கிமீ நீளத்திற்கு தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

- உலகின் மிகப்பெரிய நதிக்கரை தீவான மஜூலியை பாதுகாக்க ரூ.207 கோடி ஒதுக்கப்பட்டது. வணிகம் மற்றும் சுற்றுலாவுக்கான வாய்ப்புகளை காட்சிப்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ‘இலக்கு வடகிழக்கு’ நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது
- வடகிழக்கின் வளமான ஜவுளி மரபுகளை மேம்படுத்துவதற்காக ஜவுளிக்கான முதல் வடகிழக்கு முதலீட்டாளர் உச்சிமாநாடு நடத்தப்பட்டது.
- அசாமின் தேசிய குடிமக்கள் பதிவேடு: உச்ச நீதிமன்றத்தின் கண்காணிப்போடு, 1951-ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன்முறையாக நடத்தப்பட்டு வரும் இந்தச் செயல்பாடு முடிவடையும் தருவாயில் உள்ளது. இது அசாமில் வசிக்கும் இந்திய குடிமக்களை ஆவணமற்ற புலம்பெயர்ந்தவர்களிடமிருந்து வேறுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- எல்லை வேலி நிறுவ திட்டமிடப்பட்ட நீளமான 3,326 கி.மீட்டரில், 2746.44 கி.மீ. பணிகள் நிறைவடைந்துள்ளது. எல்லைப் பகுதிகளில் கண்காணிப்பு நிலைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு, கூடுதல் படைகள் அனுப்பப்பட்டுள்ளன.
- அரசு, டெல்லி காவல்துறையில் வடகிழக்கு மாநில மக்களுக்கான உதவிக் குழுவைக் தொடங்கியிருக்கிறது. பெருநகரங்களில் வடகிழக்கு பிராந்திய மாணவர்களுக்கான விடுதிகள் நிறுவப்பட்டுள்ளன.
- நாகா ஒப்பந்தம் 2015-இல் கையெழுத்தானது. மோடி அரசு, ஆறு தசாப்தங்களாக நிலவி வந்த நாகா அரசியல் பிரச்சனை குறித்த பேச்சுவார்த்தையினை வெற்றிகரமாக முடித்தது. நாகா மக்களின் தனித்துவம், அவர்களின் கலாச்சாரம் மற்றும் மரபுகளுடன் ஒத்துப்போகும் அவர்களின் மேதைமையின் அடிப்படையில், இந்த ஒப்பந்தமானது நாகா மக்களை கண்ணியம், வாய்ப்பு மற்றும் சமத்துவம் கொண்ட வாழ்க்கையை நோக்கி முன்னேற்றும்.

## ஜம்மு மற்றும் காஷ்மீர் (J&K)

2014 முதல் பிரதமர் மோடியின் சிறப்பு கவனம், ஜம்மு மற்றும் காஷ்மீரின் நீண்ட கால முன்னேற்றம் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டை உறுதி செய்தது. ஜம்மு காஷ்மீரில் சாலைகள், பாலங்கள், சுரங்கப்பாதைகள், பதுங்கு குழிகள், அணைகள் மற்றும் எய்ம்ஸ் மருத்துவமனை, மருத்துவ மற்றும் பொறியியல் கல்லூரிகள் போன்ற கல்வி நிறுவனங்கள் அமைப்பதற்கு பல வளர்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டன. பிரதமர் மோடி, கடந்த ஐந்தாண்டுகளாக (2014-2019) வளர்ச்சியின் பலன்கள் அனைவருக்கும் சமமாக சென்றடைவதை உறுதிசெய்ய தொடர்ந்து உழைத்து வருகிறார். மேலும், தேர்தல் அறிக்கையின் 'சப்கா சத், சப்கா விகாஸ்' என்ற தாரக மந்திரத்துடன் தொடர்ந்து தவறாது பணியாற்றுகிறார்.

- 14 கிமீ நீளமுள்ள சோஜிலா சுரங்கப்பாதை (ரூ. 6800 கோடி மதிப்பீடு) - பாரதத்தின் மிக நீளமான சாலை சுரங்கப்பாதை மற்றும் ஆசியாவின் மிக நீளமான இரு வழி சுரங்கப்பாதை. இந்த சுரங்கப்பாதை ஸ்ரீநகர், கார்கில் மற்றும் லே இடையே அனைத்து காலநிலைகளிலும் செயல்படும் இணைப்பை வழங்கும். இது ஜோஜிலா கணவாய் பகுதியை கடக்க எடுக்கும் நேரத்தை தற்போதைய மூன்றரை மணி நேரத்திலிருந்து பதினைந்து நிமிடங்களாகக் குறைக்கும்.
- விஜயப்பூர் (ஜம்மு) மற்றும் அவந்திபோரா (ஸ்ரீநகர்) ஆகிய இடங்களில் உள்ள இரண்டு எய்ம்ஸ் மருத்துவமனைகள், மாநிலத்தில் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளையும், சுகாதாரக் கல்வி மற்றும் பயிற்சியையும் மாற்றியமைக்கிறது.
- லடாக் பல்கலைக்கழகம் - மாநிலத்தின் லடாக் பகுதியில் அமைக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகம்
- மத்திய அரசின் சௌபாக்யா திட்டத்தின் கீழ் ஜம்மு மற்றும் காஷ்மீரில் வீடுகளுக்கு 100 சதவீத மின்மயமாக்கல் செய்பணி

- கிஷ்த்வாரில் 624-மெகாவாட் கிரு நீர்மின்சக்தி திட்டம் & லடாக்கில் W Dah நீர்மின்சக்தி திட்டம்
- 330 மெகாவாட் கிஷன்கங்கா நீர்மின்சக்தி நிலையம், பாகுல் துல் மின்சக்தி திட்டம் & ஜம்மு, ஸ்ரீநகர் வட்டச்சாலை அமைக்கப்பட்டுள்ளது.
- காஷ்மீர் பண்டிட் சமூகத்தினர் மீண்டும் அங்கே திரும்புதல், மறுவாழ்வு மற்றும் மறுசீரமைப்பு ஆகிய பிரிவுகளில் அவர்களின் முக்கிய தேவைகளைப் புரிந்துகொள்வதற்காக பிரதமர் மோடி அவர்களுடன் பல்வேறு உரையாடல்களைத் தொடங்கினார். காஷ்மீர் பண்டிட்கள் பள்ளத்தாக்கில் உள்ள தங்கள் தாய்நிலத்திற்குள் பாதுகாப்பான, நிலையான பகுதியில் வாழ ஒரு வரைவுதிட்டத்தை தயார் செய்வதில் மோடி அரசு ஈடுபட்டுள்ளது.
- காஷ்மீர் பண்டிட் இனப்படுகொலையின் மூளையாகச் செயல்பட்ட பயங்கரவாதி யாசின் மாலிக்கை தேசிய விசாரணை ஆணையம் (NIA) கைது செய்தது.
- மோடி அரசாங்கம், ஜனவரி 2015-இல் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் (PoK) அகதிகளுக்கு என துணை ராணுவப் படைகளில் சேர்க்கைக்கான சிறப்பு ஆட்சேர்ப்பு இயக்கங்கள், மாநிலத்தில் சமமான வேலை வாய்ப்புகள், கேந்திரிய வித்யாலயாக்களில் அகதிகளின் குழந்தைகளுக்கு சேர்க்கை என்று சில நடவடிக்கைகளுக்கு ஒப்புதல் அளித்தது. மோடி அரசு. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் (PoK) மற்றும் கில்ஜித் – பால்டிஸ்தான் (Gilgit-Baltistan) ஆகியவை ஜம்மு காஷ்மீரின் ஒரு பகுதி என்று எப்போதும் கூறி வருகிறது.
- பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் (PoK) இருந்து இடம்பெயர்ந்து நமது நாட்டில் வசிக்கும் 36,384 குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்க, ரூ.2,000-கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டத்திற்கு மோடி அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

# சீமாந்திரா மற்றும் தெலுங்கானா

மோடி அரசு, சீமாந்திரா மற்றும் தெலுங்கானா முன்னேற்றத்திற்காக பல வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கியுள்ளது. இம்மாநிலங்களை வளர்ச்சியடையச் செய்ய பல்வேறு அமைச்சகங்களால் தொடர்ச்சியான கவனம் மற்றும் நிதி வழங்கப்பட்டது. இரு மாநிலங்களின் வளர்ச்சியிலும் பிரதமர் மோடி எப்போதும் சிறப்பு அக்கறையும் கவனமும் செலுத்தினார்.

## சீமாந்திரா

ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்புச் சட்டம் 2014-இன் கீழ், அதன் உறுதிமொழிகளை நிறைவேற்றும் போது, மோடி அரசு ஆந்திர வளர்ச்சித் திட்டங்களுக்கு சிறப்பு உதவித் தொகுப்புகளை நீட்டித்தது.

- ரூ. 10169.20 கோடி, ரூ. 20505.72 கோடி மற்றும் ரூ. 19698.01 கோடி, முறையே 2016-17, 2017-18 மற்றும் 2018-19 ஆம் ஆண்டுகளில் ஆந்திரப் பிரதேச மாநிலத்திற்கு பல்வேறு நிதிப் பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டது.
- போலவரம் பாசனத் திட்டத்தை தேசியத் திட்டமாக அறிவித்தது.
- இந்திய பெட்ரோலியம் மற்றும் எரிசக்தி நிறுவனம் விசாகப்பட்டினத்தில் நிறுவப்பட்டது.
- கர்னூலில் தேசிய தகவல் தொழில்நுட்ப நிறுவனம் நிறுவப்பட்டது.
- இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் திருப்பதியில் நிறுவப்பட்டுள்ளது.
- இந்திய மேலாண்மை நிறுவனம் விசாகப்பட்டினத்தில் நிறுவப்பட்டுள்ளது.
- அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் குண்டூரில் நிறுவப்பட்டது
- ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனம் நிறுவப்பட்டு வருகிறது

- விசாகப்பட்டினம் விமான நிலைய விரிவாக்கம் மற்றும் திருப்பதி விமான நிலையத்திற்கான புதிய முனையம்
- ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் தேசிய நெடுஞ்சாலைகளை அமைப்பதற்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தின் புதிய உத்தேச தலைநகருடன் ஹைதராபாத் மற்றும் பிராந்தியத்தில் உள்ள பிற நகரங்களுக்கு இடையே விரைவான ரயில் மற்றும் சாலை இணைப்பை ஏற்படுத்துவதற்காக ரயில்வே பல நடவடிக்கைகளை செயல்படுத்தியது.

## தெலுங்கானா

தெலுங்கானா மாநில வளர்ச்சியில் மோடி அரசு உறுதியாக உள்ளது. 13-வது நிதி ஆணையத்தின் கீழ் தெலுங்கானாவுக்கு ரூ.16,597 கோடி கிடைத்துள்ள நிலையில், இது 14-வது நிதிக்குழுவில் மோடி அரசின் கீழ் ரூ. 1,15,900 கோடி ரூபாயாக மாபெரும் உயர்வு கண்டுள்ளது.

30,000 கோடி மதிப்பிலான உள்கட்டமைப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

மோடி அரசு மத்திய வரிகளில் மாநிலங்களின் பங்கை வெளியிட்டது அதன்படி தெலங்கானாவுக்கு 2014-15ல் ₹9,745.4 கோடி, ₹12,350.72 கோடி (2015-16), ₹14,876.61 கோடி (2016-17), ₹16,420.06 கோடி (2017-18), ₹18,560.88 கோடி (2018-19) கிடைத்துள்ளது.

மானியங்களைப் பொறுத்தவரை, மோடி அரசு 2014-15ல் 13-ஆவது நிதி ஆணையம் மூலம் ₹2,128 கோடியும், ₹1,546 கோடி (2015-16), ₹1,991.84 கோடி (2016-17), ₹1,225.95 கோடி (2017-18), ₹1,806.13 கோடி (2018-19) வழங்கியுள்ளது.

# அதிகாரப் பரவலாக்கம் மற்றும் மக்கள் பங்கேற்பு

## வழங்கிய வாக்குறுதி

மாநிலங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் விரிவான அதிகாரப் பரவலாக்கத்திற்காக பாஜக ஆதரவளிக்கிறது. பரந்த **மக்கள் சக்தி**யின் ஒரு சேமிக்கப்பட்ட தொகுப்பு அதன் உண்மையான அர்த்தத்தில் இன்னும் சோதிக்கப்படவில்லை. பா.ஜ.க., மக்களை ஆட்சியாளர்களாகவும், ஏதுவாக்குனர்களாகவும் ஆட்சியில் ஈடுபடுத்துகிறது

- **மக்கள் பங்கேற்பு**: எங்கள் வளர்ச்சி செயல்முறை ‘ஜன் பகிதாரி‘ எனும் மக்கள் இயக்கமாக இருக்கும். மக்கள் வெறுமனே செயலற்ற பார்வையாளர்களாக இல்லாமல் வளர்ச்சியினைச் முன்னெடுப்பவர்களாக அவர்களை மாற்றுவோம்.
- **மக்கள் ஈடுபாடு**: செயலூக்கமுள்ள, மக்கள் சார்பான நல்லாட்சியின் மூலம், அரசாங்கமே நேரடியாக மக்களை குறிப்பாக, சமூகத்தின் பலவீனமான மற்றும் ஒதுக்கப்பட்ட பிரிவினரை சென்றடைவதை உறுதி செய்வோம்.
- நாங்கள் பொது தனியார் கூட்டாண்மை (PPP) மாதிரியை **மக்கள்-பொது-தனியார் கூட்டாண்மை (PPPP) மாதிரி**யாக மேலும் மேம்படுத்துவோம்.
- உள்ளூர் அளவில் சுயராஜ்யத்தை வலுப்படுத்த பாஜக உறுதிபூண்டுள்ளது, மேலும் **3 ‘F’-க்கள் - செயல்பாடுகள், நிர்வாகிகள் மற்றும் நிதி (Functions, Functionaries and Funds)** ஆகியவற்றின் விரிவான பகிர்வு மூலம் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்கு அதிகாரம் அளிப்போம்.
- சிறப்பாக செயல்படும் பஞ்சாயத்துகளுக்கு கூடுதல் மேம்பாட்டு மானியங்கள் வழங்கப்படும்.

- **கிராம சபை** என்னும் அமைப்பை வலுப்படுத்துதல், அவர்களின் உள்ளீடுகள் மற்றும் மேம்பாட்டு செயல்முறைக்கான முன்முயற்சிகளுக்கு மதிப்பளித்தல்.
- பல்வேறு தளங்கள் மூலம் **கொள்கை உருவாக்கம்** மற்றும் **மதிப்பீட்டில்** மக்களை தீவிரமாக ஈடுபடுத்துவோம்.
- முடிவெடுக்கும் செயல்முறைகளில் அனைத்து பங்குதாரர்களையும் உள்ளடக்கி, அரசாங்கத்தில் **வெளிப்படைத்தன்மையை** ஊக்குவிப்போம்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

**மக்கள் பங்கேற்பு (ஸ்வச் பாரத் மிஷன்)**

2019-ஆம் ஆண்டு மகாத்மா காந்தியின் 150-ஆவது பிறந்தநாளில் அவருக்கு இந்தியா செலுத்தும் சிறந்த அஞ்சலியாக "தூய்மை இந்தியா" இருக்கும் என்று புதுதில்லியில் உள்ள ராஜ்பாத்தில், ஸ்வச் பாரத் மிஷனைத் தொடங்கி வைத்த திரு. நரேந்திர மோடி கூறினார். அக்டோபர் 2, 2014 அன்று, ஸ்வச் பாரத் மிஷன் ஒரு தேசிய இயக்கமாக நாடு முழுவதும் தொடங்கப்பட்டது.

உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, ஸ்வச் பாரத் மிஷன் 3 லட்சம் குழந்தைகளைக் காப்பாற்றியிருக்கிறது.

## மக்கள் ஈடுபாடு

டிஜிட்டல் இந்தியா - இந்தியாவை டிஜிட்டல் அதிகாரம் பெற்ற சமூகம் மற்றும் அறிவுப் பொருளாதாரமாக மாற்றும் திட்டம். ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு முக்கிய பயன்பாடாக டிஜிட்டல் உள்கட்டமைப்பு, தேவைக்கேற்ப நிர்வாகம் மற்றும் சேவைகள் மற்றும் குடிமக்களுக்கு டிஜிட்டல் அதிகாரமளித்தல் ஆகிய மூன்று முக்கிய தொலைநோக்குப் பகுதிகளை மையமாகக் கொண்டது இந்தத் திட்டம்.

டிஜிட்டல் இந்தியா இயற்கையிலேயே மாற்றத்தை ஏற்படுத்துகிறது மற்றும் மத்திய அரசின் சேவைகளை மின்னணு முறையில் குடிமக்களுக்கு வெற்றிகரமாக வழங்கியுள்ளது.

## பலன்கள்

- ஐநா மின்-ஆளுகைக் குறியீடு, இந்தியாவை 2012-ல் இருந்து 28 இடங்கள் முன்னேறி 96-வது இடத்தில் வைத்துள்ளது; (2012-ல் 124-ஆவது இடம்)
- சாதாரண மக்களுக்கான மின்-ஆளுகை சேவைகள் நாளொன்றுக்கு 64.4 லட்சத்தில் (2013) இருந்து 9 கோடியாக (ஆகஸ்ட் 2018) அதிகரித்துள்ளது.
- 120 கோடி மக்களுக்கு (2013-இல் 61 கோடி) டிஜிட்டல் அடையாளமான ஆதார் வழங்கப்பட்டுள்ளது.
- டிஜிட்டல் நெட்வொர்க் இணைப்பு மூலம் 1,09,900 கிராம பஞ்சாயத்துகள் (மே 2018 வரை) கிராமப்புற மக்களை டிஜிட்டல் முறையில் மேம்படுத்துகிறது.
- ஒரு லட்சம் பொது சேவை மையங்கள் (CSC) - முக்கிய அரசாங்க சேவைகளை வழங்குவதற்கானதொரு மையம்; சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களில் டிஜிட்டல் தொழில்முனைவோரை உருவாக்கியது. CSC-இல் பணிபுரியும் 54,000 பெண்களுடன் 10 லட்சம் பணிகள் இதனால் உருவாக்கப்பட்டுள்ளன.
- கிராமங்களுக்கான டிஜிட்டல் எழுத்தறிவு - 6 கோடி கிராமப்புற மக்கள் 2 ஆண்டுகளில் டிஜிட்டல் அறிவைப் பெற இலக்கு நிர்ணயம்
- டிஜிட்டல் ஹெல்த் கேர்– பல்வேறு சுகாதார பராமரிப்பு சேவைகளின் பொருட்டு பொது மக்களுக்கு சேவை செய்ய 232 மருத்துவமனைகளை இ-மருத்துவமனைகளின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது. (இதுவரை 3.3 கோடி நோயாளிகள் சேவை பெற்றுள்ளனர்)

- எலக்ட்ரானிக்ஸ் சிஸ்டம் & டிசைன் தயாரிப்பில் திறன் மேம்பாடு (இதுவரை 2.8 லட்சம் மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்)
- 2.4 கோடி மூத்த குடிமக்கள் (ஜனவரி 2019) ஓய்வூதியம் பெறுவோர் டிஜிட்டல் வாழ்க்கைச் சான்றிதழ் மூலம் பயனடைந்தனர்; இதனால் ஓய்வூதியத் தொகையைப் பெற அவர்கள் நேரில் செல்வது தவிர்க்கப்பட்டது

## மக்கள்—பொது—தனியார் கூட்டாண்மை (PPPP) மாதிரி.

நாம் மக்களை கொள்கை உருவாக்கத்தின் ஒரு பகுதியாக ஆக்கி, அதை செயல்படுத்துவதில் பங்குதாரராக்கும் போது, மக்கள் அந்தத் திட்டத்தில் அவர்களின் உரிமையை ஏற்றுக்கொள்கிறார்கள், எனவே, திட்டத்தை வெற்றியடையச் செய்ய எந்த முயற்சியையும் செய்வார்கள்.

மக்களுக்கு அதிகாரம் அளித்து, அவர்களின் திறனை அரசாங்கத்தின் முயற்சிகளை வெற்றி பெறச் செய்ய பயன்படுத்துவதன் மூலம், PPP மாதிரியை, வளர்ச்சியை ஒரு வெகுஜன இயக்கமாக மாற்றுவதற்கு பிரதமர் மோடி பயன்படுத்தினார்.

வீட்டு வசதி, சுகாதாரம், கல்வி மற்றும் உள்கட்டமைப்பு போன்ற துறைகளில் மக்கள் பங்கேற்பு மற்றும் பொது கூட்டாண்மை போன்ற பிரதமர் மோடியின் புகழ்பெற்ற முன்முயற்சிகள், சுறுசுறுப்பான பிரதமர் மோடியின் தொலைநோக்கு பார்வையையும் தைரியத்தையும் தெரியச் செய்தது. அவர் செயலூக்கத்துடன்; மக்கள் சார்பு கொள்கைகளை வடிவமைத்தது மட்டுமல்லாமல், பொது சமூகம் மற்றும் மக்களுடன் கூட்டு சேர்ந்து நிர்வாக இயந்திரங்களுக்கு அதிகாரத்தை பரவலாக்கினார்.

## 3 'F'—க்கள் செயல்பாடுகள், நிர்வாகிகள் மற்றும் நிதிகள். (Functions, Functionaries and Funds)

2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, பாரதத்தின் கிட்டத்தட்ட 70% கிராமப் பகுதியாக உள்ளன. தேசிய அளவில் நிலையான

வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு கிராமங்களின் அடிமட்ட அளவில் -அதாவது பஞ்சாயத்து மட்டத்தில் நடவடிக்கைகள் தேவைப்படும்.

கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் முழுமையான வளர்ச்சிக்காகவும், தேசிய வளர்ச்சியை அடையவும், செயல்பாடுகள், நிர்வாகம் மற்றும் நிதி பயன்பாடு மாற்றப்பட வேண்டும் என்று பிரதமர் மோடி நம்பினார்.

பாரதம் வளர்ந்த நாடாக முன்னேற - நகரங்களுடன் கிராமப்புற இந்தியாவும் வளர்ச்சியடைந்து, திறன் மேம்பாடு, கல்வி மற்றும் தொழில்நுட்பத் திறன் ஆகியவற்றில் வலுப்பெறுவது அவசியம். எந்தவொரு நாட்டிற்கும் வெற்றிகரமான மற்றும் நல்ல நிர்வாக அமைப்பின் முதுகெலும்பாக இருப்பதால், பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்கு (PRIs) பிரதமர் மோடி அதிகாரம் அளித்தார்.

மோடி அரசு ரூ. 2015-2020–இல், பஞ்சாயத்துகளுக்கு ரூ.200,292.2 கோடிகள் (14-ஆவது நிதி ஆணையத்தின்படி) நிதி வழங்கியுள்ளது. இது, 13-ஆவது நிதிக் குழுவின் மானியத்தை விட மூன்று மடங்கு அதிகம்.

சன்சத் ஆதர்ஷ் கிராம் யோஜனா (SAGY) அக்டோபர் 2014-இல் தொடங்கப்பட்டது. அதன்படி, ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் ஒரு கிராம பஞ்சாயத்தை தத்தெடுத்துக் கொண்டு, உள்கட்டமைப்புக்கு இணையாக சமூக மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளித்து அதன் முழுமையான முன்னேற்றத்திற்கு வழிகாட்ட வேண்டும். கிராம மக்களை இணைத்து, அறிவியல் கருவிகளைப் பயன்படுத்தி, நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையில் கிராம மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படுகிறது.

SAGY கிராம பஞ்சாயத்து திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்க இந்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள்/துறைகளால் 21 திட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

# 3. அமைப்பை சீர்திருத்துதல்

## வழங்கிய வாக்குறுதி

### இந்தியா முதல்

இந்தியா ஒரே நாடு, ஒரே மக்கள், என்று பாஜக நம்புகிறது. இந்திய சமுதாயத்தில் பன்முகத்தன்மையின் முக்கியத்துவத்தையும், நாட்டிற்கு அது சேர்க்கும் வலிமையையும், துடிப்பையும் பாஜக அங்கீகரிக்கிறது. வேற்றுமையில் ஒற்றுமை என்ற கொள்கையில் கட்சி நம்பிக்கை கொண்டுள்ளது

### நிறைவேற்றிய வாக்குறுதி

ஆட்சிக்கு வந்த முதல் நாள் துவங்கி மோடி அரசு. எப்பொழுதும் ‘இந்தியா முதல்’ என்பதில் நம்பிக்கை வைத்து, செயல்படுத்தி வருகிறது. நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் அதிகாரம் அளிப்பதே மோடி அரசின் முக்கிய குறிக்கோள் என்பது குறித்த மக்களின் விழிப்புணர்வோடு, செயலாற்றக் கூடியவர்களாக மக்களை மாற்ற அரசு விரும்பியது. 2014-ஆம் ஆண்டு அடித்தளமிடப்பட்ட நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்தில் பிரதமர் மோடி உறுதியாக இருந்தார். நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் அதே சமயம், இந்த அரசு, வலுவான, பாதுகாப்பான, வளமான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய பாரதத்தை உருவாக்குவதற்கான மக்களின் அபிலாஷைகளை நனவாக்கும் நோக்கில் முன்னேறியது.

உலகிலேயே வேகமாக வளரும் பொருளாதாரமாக பாரதம் மாறியது. குறைந்த பணவீக்கம், கட்டுப்பாட்டில் உள்ள நிதிப் பற்றாக்குறை, அந்நியச் செலாவணி கையிருப்பு வளர்ச்சி மற்றும் மேக் இன் இந்தியாவின் தாக்கம் தெளிவாகத் தெரியும் வகையில் இருந்தது.

‘நாடே முதல்’ முயற்சிகள் பின்வரும் பிரிவுகளில் குறிப்பிடத்தக்க முடிவுகளை அளித்தன

- அனைவருக்கும் வளர்ச்சி
- புதிய பாரதத்திற்கான உள்கட்டமைப்பு
- விவசாயிகளை முதன்மைப்படுத்துதல்
- வளர்ச்சியை துரிதப்படுத்துதல்
- உருமாற்றத்தின் வேகம் & அளவு
- ஊழலை ஒழித்தல்
- யுவ/இளைஞர் சக்தியைப் பயன்படுத்துதல்
- புதிய பாரதத்தை காணும் உலகம்
- ஆரோக்கியமான பாரதத்தை உருவாக்குதல்

## அரசின் செயல்பாடுகளிலும், முடிவெடுக்கும் செயல்முறைகளிலும் வெளிப்படைத்தன்மையுடன் இருத்தல் மற்றும் அவற்றுக்கு பொறுப்பேற்று விளக்கம் அளிக்கும் நிர்வாகத்தை நடத்துதல்

### வழங்கிய வாக்குறுதி

- நிர்வாகச் சீர்திருத்தங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் அர்ப்பணிப்பை பாஜக வெளிப்படுத்தும். எனவே, பிரதமர் அலுவலகத்தின் (PMO) கீழ் உள்ள ஒரு பிரத்யேக அமைப்பின் மூலம் அவற்றைச் செயல்படுத்த நாங்கள் முன்மொழிகிறோம்.
- பின்வரும் குறிப்பிட்ட நடவடிக்கை தொடங்கப்படும்:
- அரசு பதிவேடுகள் டிஜிட்டல் மயமாக்கப்படும்: அரசு பதிவேடுகளை மக்கள் எளிதில் அணுகும் வகையில் டிஜிட்டல் மயமாக்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- செயல்திறன் மறு சீராய்வு மற்றும் தணிக்கைகள்: வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்வதற்காக அனைத்து அரசாங்க நலத்திட்டங்கள் மற்றும் பிற

திட்டங்களுக்கு செயல்திறன் மறு சீராய்வுகள், சமூக தணிக்கைகள் மற்றும் சுற்றுச்சூழல் தணிக்கைகள் கட்டாயமாக்கப்படும்.

- பல்வேறு ஆதார வளங்களில் இருந்து நிபுணத்துவம் பெறப்பட்டு ஒருங்கிணைக்கப்படும்: பொதுச் சேவைகளில் தொழில்துறை, கல்வித்துறை மற்றும் சமூகத்தின் நிபுணத்துவத்தை ஈடுபடுத்துவதற்கு அரசாங்கம் வெளிப்படைத்தன்மையை உருவாக்குவதற்கு ஈடுபாட்டுறுதியுடன் இருக்கும்.
- ஆளுகை மறுவரையறை செய்யப்படும்: சட்டங்கள், ஒழுங்குமுறைகள், நிர்வாக கட்டமைப்புகள் மற்றும் நடைமுறைகளில் உள்ள காலாவதியான கூறுகளை அகற்றுவதன் மூலம் அரசாங்கத்தை மறுவரையறை செய்வதே இதன் நோக்கம் ஆகும்.
- 'கர்தவ்ய பாவனா' உருவாக்குதல்: மக்களின் வாழ்க்கையும் உற்பத்தித்திறனும் பொதுச் சேவைகளின் தரம் மற்றும் செயல்திறனைப் பொறுத்து அமையும் என்பதை வலியுறுத்தும் வகையில், அரசு ஊழியர்களிடையே கடமையையும் பொறுப்புணர்வையும் ஏற்படுத்த 'கர்தவ்ய பாவனா' என்ற கருத்தாக்கம் அறிமுகப்படுத்தப்படும்.

எங்கள் ஆளுகை மாதிரியின் அடையாள முத்திரைகள்:

ஒட்டுமொத்தமாக, எங்கள் நிர்வாக மாதிரி பின்வரும் பண்புகளுடன் இருக்கும்:

- மக்கள் நலனை மையமாகக் கொண்டு செயல்படுதல்
- கொள்கையால் இயக்கப்படுதல்
- காலக்கெடுவுக்குள் நிறைவேற்றிக் கொடுத்தல்
- குறைந்தபட்ச அரசு அதிகாரம், அதிகபட்ச ஆளுகை

## நிறைவேற்றிய வாக்குறுதி

பலனளிப்புத்திறனுள்ள மற்றும் திறமையான நிர்வாகம்: எவர் ஒருவரும் பலனளிப்புத்திறனுள்ள மற்றும் திறமையான நிர்வாகத்தையும், காலக்கெடுவுக்குள் முடிவுகளையும் வழங்குவதற்கு, அவருக்கு அதில் மிகுந்த ஈடுபாட்டுறுதி, அர்ப்பணிப்பு, விருப்பம் ஆகியவை தேவை.

பொறுப்பேற்று விளக்கம் அளித்தல் மற்றும் வெளிப்படையான அரசாங்க மாதிரிக்கான மூலச் செயல்திட்டம்: ஆட்சியில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பை வலியுறுத்தும் வகையில், மோடி அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்தே "பொறுப்பேற்று விளக்கம் அளித்தல் மற்றும் வெளிப்படையான அரசாங்க மாதிரிக்கான" வலுவான மூலச் செயல்திட்டத்தை உருவாக்கியது.

டிஜிட்டல் இந்தியா திட்டம்: பாரதத்தை (இந்தியா) டிஜிட்டல் அதிகாரம் பெற்ற சமூகமாகவும், அறிவுப் பொருளாதாரமாகவும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 21 ஆம் நூற்றாண்டில் பாரதம் தனது குடிமக்களின் பேரார்வங்களை நிறைவேற்ற தீவிரமாகப் பாடுபட வேண்டும், அதற்காக அரசாங்கம் தனது சேவைகளை குடிமக்களுக்கு அணுகக்கூடியதாக மாற்றுவதில் கவனம் செலுத்துகிறது மற்றும் நேர்மறையான, நீடித்த தாக்கத்திற்கு பங்களிக்கிறது.

டிஜிட்டல் அதிகாரம் பெற்ற சமூகமாக உருமாற்றம்:

டிஜிட்டல் இந்தியா குடிமக்களுக்கு பின்வரும் டிஜிட்டல் அதிகாரமளிப்பை வழங்கியது.

- உலகளாவிய டிஜிட்டல் கல்வியறிவு:
- பாரதம் முழுவதும் உள்ள குடிமக்கள் டிஜிட்டல் கல்வி மற்றும் எழுத்தறிவுக்கான அணுகலை உறுதி செய்தல், டிஜிட்டல் திறன்களையும் அறிவையும் வளர்த்தல்.
- டிஜிட்டல் ஆதாரவளங்களின் உலகளாவிய அணுகல்:

- டிஜிட்டல் ஆதாரவளங்களை குடிமக்களுக்கு பரவலாகக் கிடைக்கச் செய்தல், உள்ளடக்கம் மற்றும் சமமான அணுகலை உறுதி செய்தல்.
- கிளவுட் (Cloud) அடிப்படையிலான அரசு ஆவணங்கள்/ சான்றிதழ்கள்: அரசு ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களை மக்கள் எளிதாக அணுகுவதற்காக கிளவுட்டில் சேமித்து வைத்தல், காகிதம் சார்ந்த ஆவணப்படுத்தல் பணிகளைக் குறைத்தல் மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல்.
- பாரத மொழிகளில் டிஜிட்டல் ஆதாரவளங்கள்/சேவைகள்:
- பாரதத்தின் மொழியியல் பன்முகத்தன்மையை நிறைவேற்ற உள்ளூர் மொழிகளில் டிஜிட்டல் உள்ளடக்கம் மற்றும் சேவைகளை வழங்குதல்.
- பங்கேற்பு நிர்வாகத்திற்கான கூட்டு டிஜிட்டல் தளங்கள்:
- நிர்வாகத்தில் குடிமக்கள் பங்கேற்பதை ஊக்குவிக்க டிஜிட்டல் தளங்களைப் பயன்படுத்துதல், கூட்டு அணுகுமுறையை ஊக்குவித்தல்.
- கிளவுட் மூலம் பெற உரிமை உள்ளவற்றின் பெயர்வுத்திறன்: தனிநபர்கள் தாங்கள் பெற உரிமை உள்ளவற்றை கிளவுட் மூலம் அணுக அனுமதித்தல், நெகிழ்வுத்தன்மை மற்றும் பயன்பாட்டின் எளிமையை மேம்படுத்துதல்.

டிஜிட்டல் அதிகாரம் பெற்ற சமூகமாக உருமாற்றம்: டிஜிட்டல் இந்தியா திட்டம் பாரதத்தை டிஜிட்டல் முறையில் அதிகாரம் பெற்ற சமூகமாகவும் அறிவுப் பொருளாதாரமாகவும் உருமாற்றிய பெருமைக்குரியது.

வழக்கற்றுப் போன சட்டங்களை நீக்குதல்: ஒரு குறிப்பிடத்தக்க அரசாங்க முயற்சியாக 1400க்கும் மேற்பட்ட வழக்கற்றுப் போன சட்டங்கள் அகற்றப்பட்டன. ஊழலற்ற சூழலை உருவாக்குவதும், சுமூகமான நிர்வாகத்தை உறுதி செய்வதும், பொது மக்களுக்கு உரிய நேரத்தில் சேவைகளை வழங்குவதும் இதன் இலக்கு ஆகும்.

# மின்—ஆளுகை: எளிதானது, வினைத்திறனுள்ளது மற்றும் பலனளிப்புத்திறனுள்ளது

## வழங்கிய வாக்குறுதி

பாரத், முழு உலகிற்கும் தகவல் தொழில்நுட்ப தலைநகரமாக திகழ்கிறது. ஆனால் நம் நாட்டிற்குள், தகவல் தொழில்நுட்பத்தில் இருந்து பெறப்பட்ட பலன்களை விநியோகிப்பதில் ஏற்றத்தாழ்வு உள்ளது. தகவல் தொழில்நுட்பத்தின் பலன்களை சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களுக்கு, குறிப்பாக சாதாரண ஆண்களையும் பெண்களையும் மையமாகக் கொண்டு அணுகுவதற்கான ஈடுபாட்டுறுதியை பாஜக வெளிப்படுத்துகிறது.

தகவல் தொழில்நுட்பமானது சாதாரண குடிமக்களின் வாழ்க்கையைத் தொடுவதை உறுதி செய்வதே இதன் இலக்காகும், இது பொது மக்களின் நல்வாழ்வுக்காக, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியையும் தொழில்நுட்பத்தையும் மேம்படுத்துவதற்கான ஈடுபாட்டுறுதியைக் குறிக்கிறது. பாஜக பின்வருவனவற்றில் கவனம் செலுத்தும்:

- அதிகரித்த பிராட்பேண்ட் ஊடுருவல்: ஒவ்வொரு கிராமத்திலும் பிராட்பேண்ட் பயன்படுத்துவதில் குறிப்பிட்ட முக்கியத்துவத்தைக் கொடுத்து, நாடு முழுவதும் அகன்ற அலைவரிசையின் ஊடுருவலையும் பயன்பாட்டையும் அதிகரிப்பதில் கவனம் செலுத்துதல்.
- மின் ஆளுகைக்கான தொழில்நுட்பம்: மின்-ஆளுகைக்கான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலமும், சமூக ஊடகங்கள் வாயிலாக மக்களுடன் செயலில் ஈடுபடுவதன் மூலமும் பங்கேற்பு நிர்வாகத்தை மேம்படுத்துதல், பலனளிப்புத்திறனுள்ள வகையில் பொதுமக்களின் குறைகளைத் தீர்க்கும் பொறிமுறையை நிறுவுதல்.

- வேலை உருவாக்கம் மற்றும் மலிவு விலையில் பயன்பாடு: கிராமப்புற மற்றும் பகுதியளவு நகர்ப்புறப் பகுதிகளில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வேலைகளை உருவாக்குதல்.
- தொழில்நுட்பம் சார்ந்த தயாரிப்புகளை மாணவர்களுக்கு மலிவு விலையில் உருவாக்குதல்.
- டிஜிட்டல் கற்றல் மற்றும் பயிற்சி: குழந்தைகளின் புத்தகச் சுமையைக் குறைக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல். டிஜிட்டல் கற்றல் மற்றும் பயிற்சியை விரிவாக ஊக்குவிப்பதன் மூலம் அனைத்து நிறுவனங்களையும் பள்ளிகளையும் படிப்படியாக மின்-இயக்கமாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தேசிய கிராமப்புற இன்டர்நெட் மற்றும் தொழில்நுட்ப செயல் இலக்கு: டெலிமெடிசின், மொபைல் ஹெல்த்கேர், விவசாயத்தில் நிகழ்நேரத் தகவல்கள், சுய உதவிக் குழுக்களுக்கான ஆதரவு, சில்லறை வர்த்தகம், SMEகள் மற்றும் கிராமப்புற தொழில்முனைவோருக்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த திட்டப்பணியைத் தொடங்குதல்.
- தேசிய மின் ஆளுகைத் திட்டம்: குஜராத்தில் உள்ள 'இ-கிராம், விஸ்வ கிராம்' போன்ற திட்டத்தை நாடு முழுவதும் செயல்படுத்துவதன் மூலம், ஒவ்வொரு அரசு அலுவலகத்தையும், மையத்தில் இருந்து பஞ்சாயத்துகள் வரை உள்ளடக்கிய தேசிய மின் ஆளுகைத் திட்டத்தைத் தொடங்குதல்.
- இந்திய மொழிகளில் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல்: 'இ-பாஷா' - இந்திய மொழிகளில் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான தேசிய செயல் இலக்கை ஊக்குவித்தல்.
- நலிவுற்ற பிரிவுகளைச் சேர்த்தல்: SC/ST, OBCகள் மற்றும் பிற நலிவடைந்த பிரிவினர் போன்ற சமூக ரீதியாக பின்தங்கிய குழுக்களை தகவல் தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் வளர்ச்சியின் வரம்பிற்குள் கொண்டு வருவதில் கவனம் செலுத்துதல்.

- பண்பாட்டுப் பாரம்பரிய பாதுகாப்பு: காப்பகங்கள் மற்றும் அருங்காட்சியகங்களை டிஜிட்டல் மயமாக்குதல் உட்பட இந்தியாவின் பண்பாட்டு மற்றும் கலையாற்றல் பாரம்பரியத்தைப் பாதுகாக்க தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்.
- 'பொதுவள' மற்றும் 'பொது செந்தர' மென்பொருளை ஊக்குவித்தல்.
- ஊழல் மற்றும் காலதாமதத்தை குறைக்க அனைத்து அரசு பணிகளையும் டிஜிட்டல் மயமாவதை கட்டாயப்படுத்தல்.
- டிஜிட்டல் நெடுஞ்சாலைகள் மற்றும் செயல்திறனுக்கான தொழில்நுட்பம்: நாட்டை ஒன்றிணைக்க அதிவேக டிஜிட்டல் நெடுஞ்சாலைகளை அமைத்தல்.
- உட்கட்டமைப்பில் பரிமாற்றம் மற்றும் விநியோக இழப்புகளைக் குறைக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்.
- தொழில்நுட்பத்தின் மூலம் நிதிசார் சேர்ப்பு: நிதிசார் சேர்ப்பை உறுதிப்படுத்த மொபைல் மற்றும் இ-வங்கியைப் பயன்படுத்துதல்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

நேரடிப் பலன்களுக்கான மின்-ஆளுகை மீதான நம்பிக்கை: இடைத்தரகர்கள் மூலம் ஊழலை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டு, ஏழை மற்றும் எளிய மக்களுக்கு அரசு சேவைகள் மற்றும் பலன்களை நேரடியாக வழங்குவதற்கான ஒரு சேனலாக மின் ஆளுகையை மோடி அரசு நம்புகிறது, பின்பற்றுகிறது மற்றும் வழங்குகிறது.

## மின்—ஆளுகையின் நன்மைகள்

- ஐநா மின் ஆளுகை குறியீட்டு தரவரிசை மேம்பாடு: இந்தியாவின் ஐநா மின் ஆளுகை குறியீட்டு தரவரிசை 2012 இல் 124 வது இடத்தில் இருந்து 2018 இல் 96 வது இடத்திற்கு முன்னேறியது.
- மின்-ஆளுகைச் சேவைகளின் அதிகரிப்பு: சாதாரண மக்களுக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் மின் ஆளுகைச் சேவைகளின்

எண்ணிக்கை, 2013 இல் 64.4 லட்சங்களில் இருந்து, ஆகஸ்ட் 2018 வரை நாளொன்றுக்கு 9 கோடிக்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.

- ஆதார் முழுத்தழுவு அளவு: ஆதார், டிஜிட்டல் அடையாளமாக செயல்பட்டு, நல்லாட்சிக்கு பங்களித்து, 120 கோடி பேரை (2013ல் 61 கோடி) உள்ளடக்கியது.
- கிராமப்புறங்களில் டிஜிட்டல் இணைப்பு: டிஜிட்டல் நெட்வொர்க் இணைப்பு மூலம் 1,09,900 கிராம பஞ்சாயத்துகளை இணைத்திருக்கிறது, கிராமப்புற மக்களை டிஜிட்டல் முறையில் மேம்படுத்துகிறது.
- பொதுச் சேவை மையங்கள் (CSCs): 2.92 லட்சம் CSCகள் நிறுவப்பட்டு, முக்கிய அரசு சேவைகளை வழங்குவதற்கான மையங்களாக செயல்படுகின்றன மற்றும் சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களில் டிஜிட்டல் தொழில்முனைவோரை உருவாக்குகின்றன.
- வேலை உருவாக்கம் மற்றும் பெண்கள் வேலைவாய்ப்பு: CSC கள் மூலம் 10 லட்சம் வேலைகளை உருவாக்கியது, 54,000 பெண்கள் பணியாற்றுகின்றனர்.
- டிஜிட்டல் கல்வியறிவு: இரண்டு ஆண்டுகளுக்குள் 6 கோடி கிராமப்புற மக்கள் டிஜிட்டல் அறிவைப் பெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- டிஜிட்டல் ஹெல்த் கேர்: இ-மருத்துவமனைகளின் கீழ் 232 மருத்துவமனைகளை இணைத்துள்ளது, ஆகஸ்ட் 2018 வரை 3.3 கோடி நோயாளிகளுக்கு சேவை செய்துள்ளது.
- பிராட்பேண்ட் மற்றும் இணைய இணைப்பு: பிராட்பேண்ட் இணைப்பு 6.1 கோடியில் இருந்து (2014) 41.2 கோடியாக உயர்ந்திருக்கிறது (2018),
- ஆப்டிகல் ஃபைபர் கேபிள் கவரேஜ் 7 லட்சம் கிமீ (2014) இல் இருந்து 14 லட்சம் கிமீ (2018) ஆகவும், இன்டர்நெட் கவரேஜ்

25.14 கோடியில் இருந்து (2014) 44.6 கோடியாகவும் (2018) அதிகரித்துள்ளது.

- உஜ்வல் டிஸ்காம் (DISCOM) அஷ்யூரன்ஸ் யோஜனா (உதய் / UDAY): பாரதத்தின் மின் சீர்திருத்தங்களில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்து, மாநில விநியோக நிறுவனங்களின் குறிப்பிடத்தகுந்த ஆக்கப்பூர்வமான முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது. நிதி மற்றும் செயல்பாட்டு மாற்றத்திற்காக இந்த திட்டத்தில் மொத்தம் 27 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் சேர்ந்துள்ளன.
- நிதி மற்றும் செயல்பாட்டில் குறிப்பிடத்தகுந்த ஆக்கப்பூர்வமான முன்னேற்றம்: உதய் திட்டம் 2018 ஆம் ஆண்டில் மாநில மின் விநியோக நிறுவனங்களுக்கு கிட்டத்தட்ட ரூ. 12,000 கோடியை மிச்சப்படுத்தியது.
- மின்சார ஏற்றுமதியாளர் நிலை: 2017 இல் நேபாளம், பங்களாதேஷ் மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளுக்கு சுமார் 5,798 மில்லியன் யூனிட்களை ஏற்றுமதி செய்து, மின்சார நிகர இறக்குமதியாளராக இருந்த பாரத் நிகர ஏற்றுமதியாளராக குறிப்பிடத்தகுந்த ஆக்கப்பூர்வ முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.

## நிறுவன சீர்திருத்தம் – நிர்வாகம், நீதித்துறை, காவல்துறை மற்றும் தேர்தல் சார்ந்த சீர்திருத்தங்கள்

### வழங்கிய வாக்குறுதி

### நிர்வாகம் சார்ந்த சீர்திருத்தம்

- நிர்வாகத்தில் பொறுப்பு: நிர்வாகமும் அதன் உறுப்பினர்களும் தங்களின் பணிகள் மற்றும் பணிப்பொறுப்புகளுக்கு உண்மையிலேயே பொறுப்பேற்று விளக்கம் அளித்தல். நிர்வாகத்தில் உள்ள தனிநபர்கள் தங்களின் செயல்களுக்கும்

செயல்திறனுக்கும் பொறுப்பானவர்கள் என்பதை உறுதிசெய்ய கடுமையான மதிப்பீட்டு செயல்முறை உறுதியளிக்கப்படுகிறது.

- செயல்திறனுக்கான அங்கீகாரம் மற்றும் ஆதரவு: நிர்வாக அமைப்பில் சிறந்து விளங்குவதை ஊக்குவிக்கும் ஒரு வழிமுறையாக நல்ல செயல்திறன் அங்கீகரிக்கப்பட்டு வெகுமதி அளிக்கப்படும். செயலாற்றாதவர்களுக்கு, உடனடி தண்டனை நடவடிக்கைகளைக் காட்டிலும், மேம்பாடு மற்றும் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த பரிந்துரைக்கப்பட்டு, மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளும், பயிற்சி ஆதரவும் வழங்கப்படும்.
- பகுத்தறிதல் மற்றும் ஒருங்கிணைப்பு: பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் அரசாங்க கருவிகளை பகுத்தறிந்து, ஒன்றுகூடுவதற்கான முயற்சிகள் இருக்கும். சேவை வழங்கலில் செயல்திறனையும், செயல்திறனை மேம்படுத்துவதிலும் பல்வேறு அரசு நிறுவனங்களை நெறிப்படுத்துவதும் ஒருங்கிணைப்பதும் இதன் நோக்கமாகும்.
- பல்வேறு ஆதாரவளங்களில் இருந்து நிபுணத்துவத்தைப் பெற்று ஒருங்கிணைத்தல்:
- தொழில்துறை, கல்வித்துறை மற்றும் சமூகத்தில் இருந்து நிபுணத்துவம் பெற்று ஒருங்கிணைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. முடிவெடுக்கும் மற்றும் ஆளுகை செயல்முறைகளில் பல்வேறு பின்னணிகள் மற்றும் நிபுணத்துவம் கொண்ட நபர்களை ஈடுபடுத்தும் நோக்கத்தை இது குறிக்கிறது.
- ஆளுகையில் இளைஞர்களின் ஈடுபாடு: குறிப்பாக இளைஞர்களின் சேவைகள், நிர்வாகத்திற்கு பங்களிக்கும் வகையில் பயன்படுத்தப்படும். பெல்லோஷிப் மற்றும் இன்டர்ன்ஷிப் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் தொடங்கப்படும், இது இளைஞர்களை அரசாங்க நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது மற்றும் கற்றல் மற்றும் பங்களிப்பிற்கான வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்குவதில் கவனம் செலுத்த பரிந்துரைக்கிறது.

## நிறைவேற்றிய வாக்குறுதி

மோடி அரசின் தலைமையில் ஊழலற்றதாகக் கருதப்படும் நிர்வாகம் வழிநடத்தப்படுகிறது. பொறுப்பேற்று விளக்கம் அளித்தல், பலனளிப்புத்திறனுள்ள நல்லாட்சியை வழங்குதல் ஆகியவற்றுக்காக பிரதமர் மோடியால் குறிப்பிட்ட கவனம் செலுத்தப்பட்டது.

- செயல்திறன் மதிப்பீட்டை ஆன்லைனில் தாக்கல் செய்தல்: நல்லாட்சிக்கான நடவடிக்கையாக, இந்திய நிர்வாக சேவை (ஐஏஎஸ்) அதிகாரிகளின் செயல்திறன் மதிப்பீட்டை ஆன்லைனில் தாக்கல் செய்வதை மோடி அரசு கட்டாயமாக்கியது. இந்த நடவடிக்கை, முக்கிய நிர்வாக அதிகாரிகளின் செயல்திறனை மதிப்பிடுவதில் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் வெளிப்படைத்தன்மையை நோக்கிய மாற்றத்தைக் குறிக்கிறது.
- மத்திய அரசு பணியாளர்கள் ஆன்லைன் செயலி: மத்திய அரசு ஊழியர்களின் ஆன்லைன் செயலியின் துவக்கமானது, அரசு ஊழியர்களை நிகழ்நேரத்தில் உயர் மட்டங்களில் நியமன அறிவிப்புகள் மற்றும் நியமனங்கள் மூலம் புதுப்பிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது அரசாங்கப் பணியாளர்களுக்குள் தகவல் தொடர்பு மற்றும் அணுகலை மேம்படுத்துகிறது.
- அரசிதழ்ப் பதிவு பெற்ற அலுவலர் மூலம் உறுதிமொழி மற்றும் சரிபார்ப்பு ரத்து: அரசிதழ்ப் பதிவுபெற்ற அலுவலர்களால் உறுதிமொழி மற்றும் சரிபார்ப்பு ரத்து செய்யப்பட்டு, சுய சான்றளிப்பு மூலம் மாற்றப்படுகிறது. இந்த மாற்றம் குடிமக்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கான நேரத்தையும் முயற்சிகளையும் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது, நிர்வாக செயல்முறைகளை ஒழுங்குபடுத்துகிறது.
- உதவிச் செயலாளர்களாக ஐஏஎஸ் அதிகாரிகள்: இந்திய நிர்வாகப் பணி (ஐஏஎஸ்) வரலாற்றில் முதன்முறையாக மூன்று மாத காலத்திற்கு மத்திய செயலகத்தில் புதிய பேட்ச் அதிகாரிகள் உதவிச்

செயலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த முயற்சி இளம் அதிகாரிகளுக்கு முக்கிய நிர்வாகப் பொறுப்புகளில் நடைமுறை வெளிப்பாடு மற்றும் அனுபவத்தை வழங்குகிறது.

- அரசு துறைகள் முழுவதும் வேலைவாய்ப்புகள்: தலையங்க எழுத்தாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், தரவு விஞ்ஞானிகள், மென்பொருள் உருவாக்குநர்கள், வீடியோ எடிட்டர்கள், சமூக ஊடக வல்லுநர்கள், கிராஃபிக் டிசைனர்கள், செயலி உருவாக்குநர்கள் போன்றவர்கள் உட்பட தனியார் துறையில் பணிபுரியும் வல்லுநர்களுக்கு அரசாங்கம் பல்வேறு அரசாங்கத் துறைகளில் வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளது. பல்வேறு துறைகளில் இருந்து நிபுணத்துவத்தை அரசு செயல்பாடுகளில் கொண்டு வருவதற்கான முயற்சியை இது குறிக்கிறது.

கே வி காமத் – முன்னாள் ஐசிஐசிஐ வங்கி மற்றும் இன்ஃபோசிஸ் – பிரிக்ஸ் வங்கித் தலைவர்

கிரிஸ் கோபாலகிருஷ்ணன் – முன்னாள் இன்ஃபோசிஸ் – டிஜிட்டல் இந்தியா

அரவிந்த் பனகரியா – கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பொருளாதார பேராசிரியர் – நிதி ஆயோக் துணைத் தலைவர்

- அப்ரண்டிஸ்ஷிப் பயிற்சிக்கான தேசிய திட்டம் தொடங்கப்பட்டது
- 2 ஆகஸ்ட் 2014 அன்று, கொள்கைகளை வகுத்தல், திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் கல்வித் துறையில் பல்வேறு முன்னெடுப்புகள் குறித்த புதிய முன்னோக்கைப் பெற இளம் திறமைகளை ஈடுபடுத்தி ஒரு சிறப்பு இன்டர்ன்ஷிப் திட்டத்தை மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் வகுத்தது.
- வெளியுறவு அமைச்சகம், நிதி அமைச்சகம், கார்ப்பரேட் விவகார அமைச்சகம் ஆகியவற்றில் இன்டர்ன்ஷிப் திட்டங்கள் நடைபெறுகின்றன.
- பெல்லோஷிப்களில் உயர்வு:

- மோடி அரசாங்கம் ஆராய்ச்சி கூட்டாளிகள் (RA), சீனியர் ரிசர்ச் ஃபெலோஸ் (SRF), மற்றும் ஜூனியர் ரிசர்ச் ஃபெலோஸ் (JRF) ஆகியோருக்கான பெல்லோஷிப்பை சுமார் 50% அதிகரித்துள்ளது. இந்த நடவடிக்கை பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி மற்றும் திறமைகளை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# நீதித்துறை சார்ந்த சீர்திருத்தம்

## வழங்கிய வாக்குறுதி

- நீதித்துறை சீர்திருத்தங்களுக்கு அதிக முன்னுரிமை: நீதித்துறை சீர்திருத்தங்கள், நீதிபதிகள் நியமனம், காலிப் பணியிடங்களை நிரப்புதல், புதிய நீதிமன்றங்களைத் திறப்பது மற்றும் நீதித்துறையின் பல்வேறு நிலைகளில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவாகத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை அமைப்பது போன்ற சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அதிக முன்னுரிமை அளித்தல்.
- நீதித்துறைக்கான செயல் இலக்கு பயன்முறை திட்டம்: நீதித்துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பவும், நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கவும் நீதித்துறைக்கான செயல் இலக்கு பயன்முறை திட்டப்பணியைத் தொடங்குதல்.
- தேசிய நீதி ஆணையம்: உயர் நீதித்துறையில் நீதிபதிகளை நியமிக்க தேசிய நீதித்துறை ஆணையம் அமைத்தல்.
- நீதிமன்றங்களுக்கான நவீனமயமாக்கல் நிதி: நீதிமன்றங்களின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காக அவற்றின் நவீனமயமாக்கலுக்கு ஒரு நிதியை உருவாக்குதல்.
- குற்றவியல் நீதி அமைப்பு சீர்திருத்தம்: முந்தைய அறிக்கைகளின் பரிந்துரைகளின் அடிப்படையில், நீதி வழங்குதலை எளிமைப்படுத்தவும், விரைவுபடுத்தவும், மேலும் திறம்படச் செய்யவும் குற்றவியல் நீதி அமைப்பைச் சீர்திருத்தவும்.
- நீதிமன்றங்களைக் கணினிமயமாக்கல்

- வலையமைப்பு: செயல்திறன் மற்றும் இணைப்பை மேம்படுத்த நாடு முழுவதும் நீதிமன்றங்களைக் கணினிமயமாக்கல் மற்றும் நெட்வொர்க்கிங் தொடங்குதல்.
- மாற்றுவழியில் தகராறு தீர்வு: லோக் அதாலத்கள் மற்றும் தீர்ப்பாயங்கள் மூலம் மாற்று தகராறு தீர்வு வழிமுறைகளை விரிவுபடுத்துதல்.
- தேசிய வழக்காடல் கொள்கை அமலாக்கம்: வழக்குகளின் சராசரி நிலுவை நேரத்தைக் குறைக்க தேசிய வழக்காடல் கொள்கையை எழுதப்பட்டுள்ளபடியும் அந்த எழுத்துகளுக்குள் பொதிந்துள்ள கோட்பாடுகளை முழுமையாக புரிந்துகொண்டும் செயல்படுத்துதல்.
- சட்டங்களின் மறு சீராய்வு மற்றும் செம்மைப்படுத்தல்: காலாவதியான சட்டங்களை அவ்வப்போது மறு சீராய்வு செய்து செம்மைப்படுத்துதல் அல்லது அகற்றுதல்.
- வழக்கறிஞர்களுக்கான தேசிய மின் நூலகம்: சட்ட ஆதாரங்களுக்கான அணுகலுடன் வழக்கறிஞர்களுக்கு அதிகாரம் அளிக்க ஒரு விரிவான தேசிய மின் நூலகத்தை அமைத்தல்.
- நீதித்துறையில் பாலின உள்ளடக்கம்: வழக்குரைஞர்கள் மற்றும் நீதிபதிகள் ஆகிய இரு பிரிவுகளிலும் பெண்களின் எண்ணிக்கையை அதிகரித்து, அதன் மூலம் நீதித்துறையில் பாலின இடைவெளியைக் குறைத்தல்.
- நடுவர் தீர்ப்பாயம் மற்றும் சட்ட செயல்முறை அவுட்சோர்சிங்கிற்கான உலகளாவிய மையம்: நடுவர் தீர்ப்பாயம் மற்றும் சட்ட செயல்முறை புறமூலாக்கத்திற்கான (அவுட்சோர்சிங்கிற்கான) உலகளாவிய மையமாக இந்தியாவை உருவாக்குதல்.
- சட்ட அமைப்பின் அணுகல்: ஒரே நேரத்தில் சட்ட அமைப்பைச் சீர்திருத்தம் செய்து சாமானியர்களுக்கு அணுகக்கூடியதாக மாற்றுதல்.

- சட்டத் தகவலுக்கான அணுகலைத் திறத்தல்: சட்டத் தகவல்களைத் திறந்ததாகவும், சுதந்திரமாக அணுகக்கூடியதாகவும் ஆக்குதல்.
- சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்: சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி, பள்ளிப் பாடத்திட்டத்தில் சட்டக் கல்வியை அறிமுகப்படுத்தி, சாமானியர்களும் தங்கள் உரிமைகள் மற்றும் கடமைகளைப் பற்றி அறிந்து கொள்ளச் செய்தல்

## நிறைவேற்றிய வாக்குறுதி

மோடி அரசு நீதித்துறை அமைப்பில் நிலைமாற்றத்தைக் கொண்டுவருவதற்கான ஈடுபாட்டுறுதி பாராட்டத்தக்கதாக இருக்கிறது. வெளிப்படையான செயல்முறை மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதன் மூலம் “அனைவருக்கும் நீதி” கொண்டு வர பல முயற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

- நீதிபதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு: உயர் நீதிமன்றங்களில் நீதிபதிகளின் எண்ணிக்கை 2014-ல் 906 ஆக இருந்தது, 2018-ல் 1079 ஆக உயர்ந்து நிலுவையில் உள்ள வழக்குகளுக்குத் தீர்வு காண உதவியது.
- நீதித்துறை உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல்: 2014 முதல் கூடுதல் நீதிமன்ற அரங்குகளில் 34% அதிகரிப்புடன் நீதித்துறை உள்கட்டமைப்பு பலப்படுத்தப்பட்டது.
- குறிப்பிட்ட குற்றங்களுக்கான விரைவு நீதிமன்றங்கள்: பட்டியல் சாதியினர் (SC), பட்டியல் பழங்குடியினர் (ST), பெண்கள் மற்றும் மூத்த குடிமக்களுக்கு எதிரான குற்றங்களை விரைவாக விசாரிக்கும் நோக்கில் பிரத்யேக ஃபாஸ்ட்ராக் நீதிமன்றங்கள் அறிமுகம். இத்தகைய நீதிமன்றங்களின் எண்ணிக்கை 2014 இல் 281 என்பதில் இருந்து 2018 இல் 727 ஆக அதிகரித்துள்ளது.
- டெலி-சட்டச் சேவைகள்: தொலை-சட்டச் சேவைகளை செயல்படுத்துதல், ஏழை மக்களுக்கு ஆன்லைனில் இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குதல். இந்த முயற்சியால் 6,000 பெண்கள்

உட்பட 18,900 தனிநபர்கள் மற்றும் SC, ST மற்றும் OBC சமூகங்களைச் சேர்ந்த 8,000 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

- வழக்கற்றுப் போன சட்டங்களை நீக்குதல்: 1428+ வழக்கற்றுப் போன சட்டங்களை மூன்றே ஆண்டுகளில் நீக்குதல் மற்றும் சட்டக் கட்டமைப்பை மேம்படுத்துதல்.
- லோக் அதாலத் (மக்கள் நீதிமன்றம்) வழக்குகள் தீர்வு அதிகரிப்பு: 2011-13ல் 66.06 லட்சமாக இருந்த லோக் அதாலத் வழக்குகளின் தீர்வு 2014-16ல் 1.36 கோடியாக அதிகரித்துள்ளது.
- தேசிய வழக்காடல் கொள்கை வரைவு: அரசாங்கத்தை ஒரு பொறுப்பான மற்றும் திறமையான வழக்குரைஞராக மாற்றுவதற்கான தேசிய வழக்காடல் கொள்கை வரைவை உருவாக்குதல்.
- மின் நீதிமன்றங்கள் (eCourts) செயல் இலக்கு இரண்டாம் கட்ட திட்டப்பணி: 1078 கோடி ரூபாய் முதலீட்டில் மின் நீதிமன்றங்கள் செயல் இலக்கு திட்டப்பணி இரண்டாம் கட்டத்தை (2015-19) செயல்படுத்துதல். 16,089 மாவட்ட மற்றும் துணை நீதிமன்றங்களின் கணினிமயமாக்கல் நிறைவு.
- தேசிய நீதித்துறை தரவு கட்டம் (NJDG): மாவட்ட மற்றும் துணை நீதிமன்றங்களுக்கான தேசிய நீதித்துறை தரவு கட்டத்தை (NJDG) உருவாக்குதல், நீதித்துறை நடவடிக்கைகள், முடிவுகள் மற்றும் வழக்குகள் மற்றும் உத்தரவுகளின் பரந்த களஞ்சியத்தை உள்ளடக்கிய ஆன்லைன் தளத்தை வழங்குதல். இந்த போர்ட்டலை https://ecourts.gov.in என்ற வலைதள முகவரியில் அணுகலாம்.
- தேசிய டிஜிட்டல் நூலகம்: 160க்கும் மேற்பட்ட ஆதாரவளங்களில் இருந்து 1.7 **கோடி உள்ளடக்கத்துடன்** தேசிய டிஜிட்டல் நூலகம் ஜூன் 2018 இல் (https://ecourts.gov.in/ecourts_home/) தொடங்கப்பட்டது. இந்த தளத்தில் 30 லட்சம் பதிவு செய்யப்பட்ட பயனர்கள் உள்ளனர்.

# காவல்துறை சார்ந்த சீர்திருத்தம்

## வழங்கிய வாக்குறுதி

வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்குத் தேவையான அதிகாரம், சுதந்திரம் மற்றும் ஆதாரவளங்களைக் கொண்டு மாநிலங்களுக்கு அதிகாரம் அளிக்க நாங்கள் அவர்களுடன் இணைந்து செயல்படுவோம்:

- காவல்துறைக்கான விரிவான உத்தி: இந்திய காவல்துறையை சர்வதேச தரத்திற்கு இணையாக உயர்த்த ஒரு விரிவான உத்தியை உருவாக்குதல்.
- பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு: காவல்துறையினரின் திறன் மற்றும் தொழில்முறையை மேம்படுத்த பயிற்சி மற்றும் திறனை மேம்படுத்துதல்.
- காவல்துறையை நவீனமயமாக்கல்: காவல்துறையின் செயல்பாடுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, சமீபத்திய தொழில்நுட்பத்துடன் நவீனப்படுத்துதல்.
- காவல் நிலையங்களின் வலையமைப்பு: புலனாய்வுப் பகிர்வு மற்றும் பயனுள்ள குற்றக் கட்டுப்பாட்டுக்காக நாடு முழுவதும் உள்ள காவல் நிலையங்களின் வலையமைப்பைத் தொடங்குதல்.
- விசாரணைகளை வலுப்படுத்துதல்: விசாரணைகளை விரைவாகவும், வெளிப்படையாகவும், நியாயமாகவும், தெளிவாகவும், தீர்க்கமாகவும், தவறு செய்பவர்களுக்குத் தடையாகவும், அப்பாவிகளுக்குப் பாதுகாப்புக் கவசமாகவும் செயல்பட விசாரணைகளை வலுப்படுத்துதல்.
- சிறை அமைப்பை நவீனமயமாக்கல்: பாதுகாப்பு, மனித உரிமைகள் மற்றும் சீர்திருத்த பரிமாணங்களை மேம்படுத்த தொழில்நுட்பம் மற்றும் உள்கட்டமைப்பைப் பயன்படுத்தி சிறை அமைப்பை நவீனப்படுத்துதல்.

- சைபர் கிரைம் தடுப்பு: டிஜிட்டல் குற்றங்களை தடுப்பது முக்கியத்துவம் பெற்றுவருவதை உணர்ந்து, சைபர் கிரைமைக் கண்காணிக்கவும், பின்தொடரவும் மற்றும் தடுக்கவும் காவல்துறைக்கு பயிற்சி அளித்து தொழில்நுட்ப ரீதியாக உதவுகிறது.
- கடலோர காவல்படை ஒத்துழைப்பு: கடலோரப் பாதுகாப்பில் ஒத்துழைப்பை வலியுறுத்தி, கடல் காவல் தொடர்பான பிரச்சனைகளைப் பற்றி விவாதிக்க கடலோர மாநிலங்களை ஒரு பொதுவான தளத்தில் கொண்டு வருதல்.
- காவலர் நலனுக்கு முக்கியத்துவம்: திறமையான சட்ட அமலாக்கத்தில் காவலர்களின் நல்வாழ்வின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, அவர்களின் பணி நிலைமைகள் மற்றும் நலன்களை மேம்படுத்துவதற்கு சிறப்பு முக்கியத்துவம் கொடுத்தல்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

உள்நாட்டுப் பாதுகாப்பு, எல்லை மேலாண்மை, மத்திய மாநில உறவுகள், யூனியன் பிரதேசங்களின் நிர்வாகம், மத்திய ஆயுத போலீஸ் படைகளின் மேலாண்மை, பேரிடர் மேலாண்மை போன்ற பல பொறுப்புகளை மோடி அரசு நிறைவேற்றுகிறது. ஒவ்வொருநாளும் மற்றும் ஒவ்வொரு மணிநேரமும் நமது மக்களைப் பாதுகாக்க நாட்டின் காவல்துறைக்கு அதிகாரம் அளிக்க பல முன்னெடுப்புகளும் திட்டங்களும் தொடங்கப்பட்டன.

- அவசர தொலைபேசி எண் ‘112’: அவசரகால பதில்வினை ஆதரவு அமைப்பின் (ERSS) கீழ், விரைவான மற்றும் ஒருங்கிணைந்த அவசரகால பதில்வினை சேவையை வழங்கும் ஒற்றை இலக்க அகில - இந்தியா அவசர தொலைபேசி எண்ணான ‘112’-ஐ அரசாங்கம் அறிமுகப்படுத்தியது.
- குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்பு & அமைப்புகள் (CCTNS): CCTNS என்ற ஆன்லைன் தளம் தொடங்கப்பட்டது, இது குடிமக்களுக்கும் காவல்துறையினருக்கும்

இடையே சுமூகமான தொடர்புகளை எளிதாக்குகிறது, குற்றம் தொடர்பான தகவல்களைக் கண்காணிப்பதையும் நிர்வாகத்தையும் மேம்படுத்துகிறது.

- பெண்கள் பாதுகாப்புக்கான வலைத்தளங்கள்: பெண்களின் பாதுகாப்பை வலுப்படுத்த இரண்டு தனித்தனி போர்டல்கள் அறிமுகம்: பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சைபர் கிரைம் தடுப்புக்கான CCPWC போர்டல் ஆட்சேபனைக்குரிய ஆன்லைன் உள்ளடக்கத்தை சரிபார்க்கிறது.
- பாலியல் குற்றங்களை (https://cybercrime.gov.in) கண்காணித்தல் மற்றும் விசாரணைக்கு உதவுவதற்காக பாலியல் குற்றவாளிகள் மீதான தேசிய தரவுத்தளம் (NDSO).
- சீரிய முயற்சிகளை அங்கீகரிக்க போலீஸ் பதக்கங்கள்: மத்திய ஆயுதக் காவல் படை (CAPF) பணியாளர்களின் அர்ப்பணிப்பு முயற்சிகளை அங்கீகரித்து, உயர் தர நிபுணத்துவத்தை ஊக்குவிப்பதற்காக ஐந்து காவல் பதக்கங்களை நிறுவுதல். - உள்துறை அமைச்சரின் சிறப்பு நடவடிக்கை பதக்கம், அந்தாரிக் சுரக்ஷா பதக்கம், ஆசாதரன் ஆஷூச்சன் பதக்கம் மற்றும் உத்கிரிஷ் & அதி-உட்கிரிஷ் சேவா பதக்கம்.
- காவல்துறை விசாரணையில் சிறந்து விளங்கியதற்காக மத்திய உள்துறை அமைச்சரின் பதக்கம்: மாநில/யூனியன் பிரதேச போலீஸ் மற்றும் மத்திய புலனாய்வு முகமைகளால் குற்ற விசாரணையில் உயர் தொழில்முறை தரத்தை மேம்படுத்துவதற்காக “காவல்துறை விசாரணையில் சிறந்து விளங்குவதற்கான மத்திய உள்துறை அமைச்சரின் பதக்கம்” மூலம் அங்கீகாரம்.
- தேசிய காவல்துறை நினைவுச்சின்னம்: பிரதமர் நரேந்திர மோடியால் தேசிய காவல்துறை நினைவிடம் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இந்த நினைவுச்சின்னம் அனைத்து மாநில/யூனியன் பிரதேச காவல் படைகள் மற்றும் மத்திய காவல் அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்துகிறது மற்றும் 1947 முதல் காவலர்களின் தியாகங்களை மதிக்கிறது. 1947 முதல், 34,844

காவல்துறை பணியாளர்கள் நாட்டிற்காக தம் இன்னுயிரை தியாகம் செய்துள்ளனர்.

- மின்-சிறைகள் திட்டம்: மின்-சிறைகள் திட்டப்பணியைச் செயல்படுத்துவதில் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு ஆதரவு, டிஜிட்டல்மயமாக்கல் மூலம் சிறை நிர்வாகத்தில் செயல்திறனை அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. கைதிகளின் நிலையை கண்காணிக்கவும், சிறை அமைப்பின் ஒட்டுமொத்த செயல்பாட்டை மேம்படுத்தவும் இந்த மின்னணு தளம் உதவுகிறது.
- கடலோர பாதுகாப்பு கொள்கை: ஒருங்கிணைந்த அணுகுமுறை (15,000 கி.மீ நீளமுள்ள நில எல்லை மற்றும் 7,516 கி.மீ நீளமுள்ள கடல் எல்லை, 1,3382 தீவுகள், 3,337 கடலோர கிராமங்கள், 11 முக்கிய துறைமுகங்கள், 241 முக்கியமற்ற துறைமுகங்கள் மற்றும் விண்வெளி, பாதுகாப்பு, அணுசக்தி, பெட்ரோலியம், கப்பல் போக்குவரத்து உள்ளிட்ட 135நிறுவனங்கள்) மூலம் நாட்டின் கடற்கரைகளைப் பாதுகாக்க அரசாங்கம் நன்கு ஒருங்கிணைந்த கடலோரப் பாதுகாப்புக் கொள்கையை பின்பற்றியுள்ளது.
- தேசிய கடலோர போலீஸ் அகாடமி: திறன்மிக்க கடலோரப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, ஒவ்வொரு ஆண்டும் 3,000 கடலோரக் காவலர்களுக்குப் பயிற்சி அளிக்க தேசிய கடலோரக் காவல் அகாடமியை அமைப்பதற்கு அரசு ஒப்புதல்.

## தேர்தல் சார்ந்த சீர்திருத்தம்

### வழங்கிய வாக்குறுதி

குற்றவாளிகள் தேர்தலில் போட்டியிடுவதை தடுக்க தேர்தல் சீர்திருத்தங்களைத் தொடங்க பாஜக ஈடுபாட்டுறுதியுடன் உள்ளது.

- ஒரே நேரத்தில் சட்டசபை மற்றும் மக்களவைத் தேர்தல்: சட்டமன்ற மற்றும் மக்களவைத் தேர்தல்களை ஒரே நேரத்தில் நாடெங்கிலும் நடத்தும் முறையை உருவாக்குதல்

- பெண் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கும், அவர்களுக்கு கல்வி கற்பிக்கவும் 'பேட்டி பச்சாவோ - பேட்டி பதாவோ' என்னும் ஒரு தேசிய பிரச்சார இயக்கம் தொடங்கப்படும். பெண் குழந்தைகளின் மீது குடும்பங்கள் மத்தியில் நேர்மறையான அணுகுமுறையை ஊக்குவிப்பதற்காக பாலிகா சம்ருத்தி, லட்லி லக்ஷ்மி மற்றும் சிரஞ்சீவி யோஜனா போன்ற கடந்தகால வெற்றிகரமான திட்டங்களின் சிறந்த நடைமுறைகளை உள்ளடக்கிய ஒரு விரிவான செயல் திட்டம் உருவாக்கப்படும்.
- கிராமப்புறங்களில் வசிப்போர், பட்டியல் வகுப்பினர், பழங்குடி வகுப்பினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு முக்கியத்துவம் அளித்து, குறிப்பாக ஊட்டச்சத்து மற்றும் மகப்பேறு ஆகிய துறைகளில் கவனம் செலுத்தும் வகையில், பெண்களின் சுகாதாரப் பாதுகாப்புக்கான திட்டம் செயல்படுத்தப்படும்.
- பயிற்சி மற்றும் திறன் கொண்ட பெண்களுக்கு அவர்களுக்காக மட்டும் செயல்படும் மகளிர் ஐடிஐகள் அமைக்கப்படுவதோடு, மற்ற ஐடிஐகளில் மகளிர் பிரிவுகள் அமைக்கப்படும்.
- பெண்கள் தொடர்பான சட்டங்கள், குறிப்பாக பாலியல் பலாத்காரம் தொடர்பான சட்டங்கள் கடுமையாக அமல்படுத்தப்படும்.
- பாலியல் பலாத்காரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான, நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்கான நிதியானது, அதனை வழங்குவதற்கான உரிய வழிமுறைகளை மத்திய அரசாங்கம் உருவாக்காததால், இதுவரை பயன்படுத்தப்படாமல் உள்ளது. பாஜக ஆட்சிக்கு வந்தவுடன் இதை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தும்.
- அமிலத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட பெண்களின் சிகிச்சை மற்றும் ஒப்பனை மறுசீரமைப்பு அறுவை சிகிச்சைகள் தொடர்பான மருத்துவச் செலவுகளைக் கவனித்துக்கொள்வதற்காக அரசாங்கம் அமிலத் தாக்குதலால் பாதிக்கப்பட்டோர் நல நிதியை உருவாக்கும்.

- காவல் நிலையங்கள் பெண்கள் எளிதில் அணுகும் வகையில் நட்புறவு கொண்டதாக மாற்றப்படுவதோடு, பல்வேறு நிலைகளில் காவல்துறையில் பெண்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.
- பெண்களின் பாதுகாப்பிற்காக தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்.
- பெண்களுக்கான அனைத்து மகளிர் மொபைல் வங்கியை அமைத்தல்.
- பெண்களுக்காக சிறப்பு திறன்கள் பயிற்சி மற்றும் தொழில் வளர்த்தெடுப்பு பூங்கா உருவாக்கம்.
- பெண்களுக்கான சிறப்பு வணிக வசதி மையம் அமைத்தல்.
- பெண்கள் / பணிபுரியும் பெண்களுக்கான தாங்கும் விடுதிகளின் தொகுப்பை விரிவுபடுத்தி மேம்படுத்துதல்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பிரத்யேக W-SME (பெண்களுக்கான சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்) தொகுப்பை அமைத்தல்.
- பணி நிலைமைகளை மதிப்பாய்வு செய்து அங்கன்வாடி பணியாளர்களின் ஊதியத்தை உயர்த்துதல்.
- பட்டியல் வகுப்பினர், பழங்குடி வகுப்பினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் குடிசைவாசிகள் ஆகியோரை மையமாகக் கொண்டு, பெண்களுக்கான சிறப்பு வயது வந்தோர் கல்வியறிவு முன்முயற்சி தொடங்கப்படும்.
- மகளிர் சுயஉதவி குழுக்களுக்கான கடன்கள் குறைந்த வட்டி விகிதத்தில் கிடைப்பதை உறுதி செய்தல்.
- வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பெண்கள், பழங்குடியினர் மற்றும் ஆதரவற்ற பெண்களை இலக்காகக் கொண்ட சிறப்பு திட்டங்கள்.
- பெண் சிசுக்கொலை, வரதட்சணை, குழந்தைத் திருமணம், கடத்தல், பாலியல் துன்புறுத்தல், பாலியல் பலாத்காரம் மற்றும்

குடும்ப வன்முறை ஆகியவற்றைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- ஒவ்வொரு வீட்டிலும் மின்சாரம், குழாய் நீர், சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் மற்றும் கழிவறைகளை வழங்குவதன் மூலம் கிராமப்புற இந்தியாவில் பெண்களின் வாழ்க்கைத்தரத்தை மாற்றுவோம்.

## வழங்கிய வாக்குறுதி

- 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, நமது மக்கள் தொகையில் 48.5% பெண்கள் உள்ளனர். பெண்கள் முன்னேற்றம் அடைந்தால், அந்த நாடும் முன்னேற்றம் காணும். குடும்பத்தை மட்டுமல்ல, நாட்டையும் உயர்த்துவதில் பெண்களின் பங்கு முக்கியமானது.
- மாண்புமிகு பிரதமர் மோடி, “பெண்களின் மேம்பாடு மற்றும் பெண்களை முன்னிறுத்திய வளர்ச்சி” அடிப்படையிலான நாட்டை மட்டுமே முன்னேற்ற முடியும் என்று நம்பினார். பெண்களுக்கு மேம்பாடு அளிக்கும் வகையில் பல பெண்கள் நலத்திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. வரலாற்றில் முதல்முறையாக, உலகில் பெண்களுக்கு மேம்பாடு அளிக்கும் வகையில் பல நலத்திட்டங்களை செயல்படுத்திய முதல் நாடு இந்தியா என்பது குறிப்பிடத்தக்கது.
- பெண்கள் (சேவைகளில் இடஒதுக்கீடு) மசோதா 2016 ராஜ்யசபாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது மத்திய அரசின் கீழ் உள்ள துறைகளில் பணியாற்றும் பெண்களுக்கு பதவிகள் மற்றும் நியமனங்களில் இட ஒதுக்கீடு வழங்குவதற்காக கொண்டுவரப்பட்டது. பெண்கள் இடஒதுக்கீடு மசோதாவை முறைப்படுத்துவது குறித்து பல விவாதங்கள் அரசால் தொடங்கப்பட்டன.
- பேட்டி பச்சோ, பேட்டி பாதோ (BBBP) திட்டம் பிரதமர் நரேந்திர மோடியால் ஜனவரி 22, 2015 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய கூறுகள், கருத்தரிப்புக்கு முந்தைய & பிறந்த குழந்தைக்கான நோயறிதல் முறைகள் (PC&PNDT)

சட்டம், பெண் குழந்தைகள் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் விவாதத்திற்கான பிரச்சாரம், மற்றும் பல துறை நடவடிக்கை ஆகியவற்றை உள்ளடக்கியது. பயிற்சி, உணர்வூட்டல், விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் நடைமுறையில் சமூகத்தை அணிதிரட்டுதல் ஆகியவற்றின் மூலம் மனநிலை மாற்றத்திற்கு வலுவான முக்கியத்துவம் அளிக்கப்படும். இத்திட்டம் ஆரம்பத்தில் 100 மாவட்டங்களில் தொடங்கப்பட்டு பின்னர் மொத்தமுள்ள 640 மாவட்டங்களுக்கும் (மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011-ன் படி) விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கு ரூ 208 கோடி ஒதுக்கப்பட்டது. (2015-2018 காலகட்டத்தில்)

- 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இறப்பு விகிதம் (பெண்கள்) 2014-இல் 45-ஆக இருந்து, 2018-இல் 36-ஆக குறைந்துள்ளது.
- முதல் மூன்றுமாத, குழந்தை பிறப்புக்கு முந்தைய பராமரிப்பு (ANC) பதிவு சதவீதம் 2014-15இல் 51%-ஆக இருந்து 2019-இல் 71%-ஆக முன்னேற்றம் கண்டுள்ளது.
- PM சுரக்ஷித் மாத்ரித்வா அபியான் (PMSMA) திட்டம் - தாய் மற்றும் குழந்தையின் நல்ல ஆரோக்கியத்தை உறுதி செய்வதற்காக தொடங்கப்பட்டது (14641-க்கும் மேற்பட்ட சுகாதார மையங்கள் மற்றும் 1.8 கோடி ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு இத்திட்டம் பயனளிக்கிறது).
- தடுப்பூசி போடப்பட்ட கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக இந்திரதனுஷ் திட்டம் தொடங்கப்பட்டது (87 லட்சத்திற்கும் அதிகமான கர்ப்பிணிப் பெண்கள் இதனால் பயனடைந்தனர்).
- மகப்பேறு நன்மைச் சட்டம் 2017 – பெண்களுக்கு ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு 26 வாரங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது - இது உலகில் உள்ள நாடுகளிலேயே மிக அதிகளவு என்பது குறிப்பிடத்தக்கது.

- போஷன் அபியான் – பலதரப்பட்ட இடையீட்டு நடவடிக்கைகள் மூலம் ஊட்டச்சத்து குறைபாட்டைச் சமாளிப்பதற்கான முதல் முயற்சி.
- அரசாங்கத்தால் இயற்றப்பட்ட கடுமையான சட்டங்கள் – 12 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளை பாலியல் பலாத்காரம் செய்பவர்களுக்கு மரண தண்டனை வழங்குதல். 16 வயதுக்குட்பட்ட சிறுமிகளை பலாத்காரம் செய்பவர்களுக்கு குறைந்தபட்ச தண்டனை 10 ஆண்டுகளில் இருந்து 20 ஆண்டுகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட/உயிர் பிழைத்த பெண்களுக்கான மற்றும் பிற குற்றங்களில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான இழப்பீடு வழங்குவதற்கான திட்டம் 2018-இல் தொடங்கப்பட்டது. இது பலாத்காரம், அமிலத் தாக்குதல், துன்புறுத்தல், குடும்ப வன்முறை போன்ற பெண்களுக்கு எதிரான பல குற்றங்களை உள்ளடக்கியது.
- 2015 மற்றும் 2016-க்கு இடையில் இந்தியாவில் போலீஸ் படையில் பெண்களின் பங்களிப்பு 15% -ஆக இருந்தது. இது தோராயமாக 1,23,000 என்ற எண்ணிக்கையிலிருந்து தற்போது 1,40,000-க்கும் அதிகமாக உள்ளது.
- பெண்களின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை உறுதிசெய்வதற்காக அரசாங்கம் ஹிம்மத் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- நிர்பயா நிதியின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட 26 திட்டங்களுக்கு ரூ.6700 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு.
- பாரதிய மகிளா வங்கி (BMB), 2014-இல் தொடங்கப்பட்டு, பின்னர் 1 ஏப்ரல் 2017 அன்று பாரத ஸ்டேட் வங்கியுடன் இணைக்கப்பட்டது.
- **ஸ்கில் இந்தியா மிஷன்:** மோடி அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட ஒரு மாபெரும் திறன் பயிற்சி திட்டமான இது 35.56 லட்சம்

பெண்களின் வாழ்க்கையை மாற்றியுள்ளது; சிறந்த மற்றும் பாதுகாப்பான வாழ்வாதாரத்திற்கு அவர்களை மேம்படுத்தியுள்ளது.

- 54-க்கும் மேற்பட்ட பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகளை அரசு திறந்துள்ளது மற்றும் 19,000 பணிபுரியும் பெண்கள் தங்குவதற்கு 190 விடுதிகளை கூடுதலாகச் சேர்க்க ஒப்புதல் அளித்துள்ளது.
- முத்ரா திட்டம் - 70% பயனாளிகள் பெண்களாவர். (10 கோடிக்கும் அதிகமானோர் பயன்பெற்றுள்ளனர்)
- மக்களவையில் ஆட்கடத்தல் தடுப்பு மசோதா நிறைவேற்றம் - பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு கடுமையான தண்டனைகள்.
- சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கையானது 52 லட்சம் குடும்பங்களை உள்ளடக்கிய 5 லட்சத்தில் (2014) இருந்து, 2.25 கோடி குடும்பங்களை உள்ளடக்கிய 20 லட்சம் சுயஉதவி குழுக்களாக வெறும் 4 ஆண்டுகளில் 5 மடங்கு அதிகரித்துள்ளது. (ராஷ்ட்ரிய கிராமின் அஜிவிகா மிஷன்).
- ஸ்வச் பாரத் மிஷன் - நாடு முழுவதும் 9.7 கோடிக்கும் அதிகமான கழிவறைகள் கட்டப்பட்டுள்ளன (சுகாதார பாதுகாப்பு 2014-இல் 38% இல் இருந்து 2019-இல் 98%-ஆக அதிகரித்துள்ளது)
- PM வீட்டுவசதித் திட்டம் (PMAY), இந்தத் திட்டத்தின் கீழ் வீடு ஒதுக்கீட்டில் பெண் பயனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.
- உஜ்ஜ்வாலா யோஜனா திட்டத்தின் கீழ் ஏழைப்பெண்களுக்கு 7 கோடிக்கும் அதிகமான இலவச எல்பிஜி இணைப்புகள் வழங்கப்பட்டன.
- 18,600 கிராமங்களுக்கு மின்சார வசதி வழங்கப்பட்டுள்ளது.

# கல்வி – பதிவு செய்தல் மற்றும் சிறந்து விளங்குதல்

## பள்ளிக்கல்வி

### வழங்கிய வாக்குறுதி

- NDA-வின் முதன்மைத் திட்டமான 'சர்வ சிக்ஷா அபியான்': இத்திட்டத்தின் செயல்திறன் தணிக்கை மற்றும் அதன் செயல்திறன் குறித்த நிகழ் நேரத் தகவலைப் பெறுவதற்கான வழிமுறைகள் அமைக்கப்படும்.
- இடைநிலைப் பள்ளிக் கல்வியை உலகளாவிய மயமாக்குதல் மற்றும் கிராமப்புற, பழங்குடியினர் மற்றும் அணுகுவதற்கு கடினமான பகுதிகளில் குறிப்பாக கவனம் செலுத்துவதன் வழியாக செயல்பாட்டுப் பள்ளி மூலம் திறன் மேம்பாடு தீவிரமாகச் செயல்படுத்தப்படும்.
- பெண்கள் பள்ளிக் கல்வியைத் தொடரவும், முழுமையாக நிறைவு செய்யவும் அனைத்து உதவிகளும் வழங்கப்படும்.
- குழந்தைகளின் கற்றல் சூழ்நிலைகளில் மேலும் பிளவுகளை உருவாக்க கூடிய ஒன்றாக 'டிஜிட்டல் வசதிகள் கிடைக்கும் தன்மை' அனுமதிக்கப்படாது.
- மாற்றுத்திறனாளி மாணவர்களுக்காக சிறப்பு கல்விமுறை உருவாக்கப்படும்.
- முன்னுரிமை அடிப்படையில், மதரஸாக்களுக்கான தேசிய நவீனமயமாக்கல் திட்டம் தொடங்கப்படும்.
- மதிய உணவுத் திட்டம், நிர்வாகம் மற்றும் விநியோகத்தின் அடிப்படையில் புத்துயிர் பெறும்.
- குழந்தைகளுக்கான புத்தகங்களை பள்ளிக்கு எடுத்துச் செல்லும் தினசரி சுமையை குறைப்பதற்கான வழிகளை நாங்கள் ஆராய்வோம், இது கல்விக்கான தொழில்நுட்பத்தை ஒரு

பணிமுறைத் திட்டமாக பயன்படுத்துவதையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

- பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் திறனை மேம்படுத்த தேசிய மின் நூலகத்தை நிறுவுதல்.
- பள்ளி செல்லும் குழந்தைகளின் கற்றல் சார்ந்த எல்லையை விரிவுபடுத்துவதற்காக பல நாடுகளைச் சேர்ந்த மாணவர் பரிமாற்றத் திட்டத்தைத் தொடங்குதல்.
- மாணவர்களின் ஆக்கப்பூர்வமான திறமைகள் அங்கீகரிக்கப்பட்டு ஊக்குவிக்கப்படும்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில், மாற்றத்தினைக் கொண்டுவரும் கல்வியின் திறனை பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்துகிறார். பிரதமர் மோடி நாட்டை அதன் இலக்குகளை நோக்கிச் செல்வதில் கல்வியின் முக்கியப் பங்கை எப்போதுமே எடுத்துரைத்து, பாரதத்தின் தலைவிதியை மாற்றியமைப்பதற்கான திறவுகோலாக கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். இதற்காக பல பணிகள் தொடங்கப்பட்டு, கல்வி முறையில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது. நாடு முழுவதும் உள்ள லட்சக்கணக்கான குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் வாழ்வில் அது நல்விளைவுகளை உருவாக்கியிருக்கிறது.

- சர்வ சிக்ஷா அபியானுக்காகத் தொடங்கப்பட்ட 'ஷாகுன்' என்ற இணைய தளம் - 'ஆன்லைன் கண்காணிப்பு' மூலம் மாநிலங்கள், பள்ளிகள் மற்றும் ஆசிரியர்கள் நிகழ்நேரத்தில் அந்த தளத்தில் உள்ளிடும் தகவல்களின் வழியாக அந்த திட்டத்தின் **முன்னேற்றத்தைப்** படம்பிடிக்கிறது. 'தகவல் களஞ்சியம்' என்பது, சிறந்த நடைமுறைகள், திட்ட அறிக்கைகள் பற்றிய ஆவணமாகும்.
- மோடி அரசாங்கம், பள்ளிக் கல்விக்கான ஒருங்கிணைந்த திட்டமான சமக்ரா சிக்ஷா – ஐ தொடங்கியது. இத்திட்டம் 2018-19 யுகேஜி முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

- “பேட்டிபச்சோபேட்டிபாதோதிட்டம்”2015-இல்தொடங்கப்பட்டது. இந்த திட்டம் குறைந்து வரும் குழந்தை பாலின விகிதம் (CSR) மற்றும் பெண் குழந்தைக்கான கல்வியைச் செயல்படுத்துதல் போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கானது.
- ஆண்டுக்கு 1000க்கும் மேற்பட்ட கல்வி உதவித்தொகைகள் வழங்கப்படும்.
- மோடி அரசு, மதரஸாக்கள்/சிறுபான்மையினருக்கு (SPEMM) கல்வி வழங்குவதற்கான ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றைக் கொண்டுவந்தது. இதற்காக ரூ 120 கோடி ஒதுக்கீடு (2016-17, 2017-18 ஆண்டுகளில்). செய்யப்பட்டு, இதன்மூலம் 32,000-க்கும் மேற்பட்ட மதரஸா ஆசிரியர்கள் பயனடைகிறார்கள்.
- குழந்தைகளுக்குதரமானஉணவுவழங்கப்படுவதையும்,திட்டத்தின் கீழ் நிதி முறையாகப் பயன்படுத்தப்படுவதையும் உறுதிசெய்ய மத்திய, மாநில மற்றும் மாவட்ட அளவில் விரிவான கண்காணிப்பு செயல்முறையை அரசாங்கம் நிறுவியுள்ளது.
- நாடுமுழுவதும்உள்ளமாநிலங்கள்மற்றும்யூனியன்பிரதேசங்களில், 1 மற்றும் 2-ம் வகுப்பு மாணவர்களுக்கு வீட்டுப்பாடம் இல்லை என்பது மற்றும் ஒவ்வொரு வகுப்பிற்கும் பள்ளிப் பைகளின் எடை வரம்பு ஆகியவை மோடி அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட புதிய உத்தரவுகளின் ஒரு பகுதியாகும்.
- தேசிய டிஜிட்டல் நூலகம் (NDL) 2018-இல் தொடங்கப்பட்டது (இங்கு 200+ மொழிகளுடன் கூடிய 1.9 கோடிக்கும் அதிகமான மின் - புத்தகங்கள் உள்ளன).
- “ராஷ்ட்ரிய யுவ சசக்திகரன் காரியக்ரம்” (RYSK) திட்டத்தின் கீழ், இளைஞர்களிடையே சர்வதேச கண்ணோட்டத்தை வளர்க்க, பல்வேறு நாடுகளுடன் சர்வதேச இளைஞர் பரிமாற்றத் திட்டங்களை அரசாங்கம் செயல்படுத்தியது.
- பள்ளிக் குழந்தைகள், புதுமையான முயற்சிகளில் ஈடுபடுவதற்கான மனநிலையை மேம்படுத்த அடல் டிங்கரிங்

ஆய்வகங்கள் தொடங்கப்பட்டன. இது, 5441 பள்ளிகளில் செயல்படுத்தப்படுகிறது.

## உயர்கல்வி மற்றும் தொழில்முறை கல்வி

### வழங்கிய வாக்குறுதி

- அர்ப்பணிப்பு மற்றும் செயல்திறன் மிக்க ஆசிரியர்களை தயார்படுத்தும் இலக்குடன், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் பணி புரியும் விதத்தை மாற்றியமைப்பதன் மூலம் ஆசிரியர்களின் முக்கிய பங்கை மேம்படுத்துதல்.
- தொழில்துறை (SME உட்பட), கல்வித்துறை மற்றும் சமூகம் ஆகியவற்றுக்கு இடையே நெருங்கிய தொடர்புக்கான ஒரு வழிமுறை நிறுவப்படும்.
- எதிர்காலத் தேவைகளைக் கண்டறிவதற்காக, தேவைகளை மதிப்பிடுவதற்கான பயிற்சிகள் பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்படும். மேலும், உயர்கல்விக்கான பொருத்தமான படிப்புகளை உருவாக்கவும், நாட்டின் பொருளாதாரத்தில் பங்களிக்கும் வளர்ந்த மற்றும் வளர்ந்து வரும் ஒவ்வொரு துறைக்கும் போதுமான மனிதவளம் இருப்பதை உறுதிசெய்ய இந்த பயிற்சிகள் பயன்படுத்தப்படும்.
- உயர்கல்வி நிறுவனங்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான வழிமுறைகளுடன் கூடிய தன்னாட்சி உரிமை வழங்குதல்.
- கல்வி மற்றும் ஆராய்ச்சியின் தரத்தை உயர்த்துவதன் மூலம் இந்தியப் பல்கலைக்கழகங்கள் சிறந்த உலகப் பல்கலைக் கழகங்களுக்கு இணையாக மாறி, உலகளாவிய வரிசையில் தங்களுக்குரிய இடத்தை பெறச் செய்தல்.
- பல்கலைக்கழக மானியக் குழு (UGC) மறுசீரமைக்கப்படும். மேலும், அது ஒரு மானிய விநியோக நிறுவனமாக இல்லாமல் உயர்கல்வி ஆணையமாக மாற்றப்படும்.

- நமது இளைஞர்கள் கல்வி பயிலும்போதே வருவாய் ஈட்ட வசதியாக, தொழிற்பயிற்சி சட்டத்தை நாங்கள் மறுபரிசீலனை செய்வோம்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களை (DIETs) வலுப்படுத்தவும், தரமான ஆசிரியர்களை இந்தியப் பள்ளிக் கல்வி அமைப்பில் கொண்டு வருவதற்கான நோக்கத்துடனும் 'பிரஷிக்ஷக்' - ஆசிரியர் கல்வி இணையதளம் தொடங்கப்பட்டது.
- தகுதியான ஆசிரியர்கள் கிடைத்தல், திறமையானவர்களை ஆசிரியர் தொழிலில் ஈர்ப்பது போன்ற பிரச்சனைகளைத் தீர்க்கும் வகையில் "பண்டிட் மதன் மோகன் மாளவியா தேசிய ஆசிரியர்கள் மற்றும் கற்பித்தல் மிஷன்" (PMMMNMTT) திட்டம் டிசம்பர், 2014-இல் தொடங்கப்பட்டது.
- கல்வி வலைப்பின்னல்களின் உலகளாவிய முன்முயற்சி (GIAN) - நாட்டின் உயர்கல்வியில் சிறந்த சர்வதேச அறிவு மற்றும் அனுபவத்தைப் பெற வேண்டி, இந்திய மாணவர்களும் ஆசிரியர்களும் உலகெங்கிலும் உள்ள சிறந்த கல்வி மற்றும் தொழில் வல்லுநர்களுடன் தொடர்புகொள்வதற்கு உதவும் வகையில் நவம்பர் 2015-இல் தொடங்கப்பட்டது.
- தேசிய கல்விக் கொள்கைக்கான (NEP) முன்வரைவை உருவாக்க தலைசிறந்த விஞ்ஞானி டாக்டர். கே. கஸ்தூரிரங்கன் தலைமையில், அரசாங்கம் ஒரு குழுவை அமைத்துள்ளது.
- நாடு முழுவதும் உள்ள 62 பல்கலைக்கழகங்கள் (5 மத்தியப் பல்கலைக்கழகங்கள், 21 மாநிலப் பல்கலைக்கழகங்கள், 34 நிகர்நிலை பல்கலைக்கழகங்கள் மற்றும் 2 தனியார் பல்கலைக்கழகங்கள்) மற்றும் 14 கல்லூரிகள் உட்பட 76 கல்வி நிறுவனங்களுக்கு அரசாங்கம் தன்னாட்சி வழங்கியது.
- இந்தியாவில் ஆராய்ச்சியை ஊக்குவிக்க IMPRINT இந்தியா, உச்சதர் அவிஷ்கர் யோஜனா (UAY), கல்வி வலைப்பின்னல்களின்

உலகளாவிய முன்முயற்சி (GIAN), அடிப்படை அறிவியலில் மாற்றம் மற்றும் மேம்பட்ட ஆராய்ச்சிக்கான திட்டம் (STARS), கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான திட்டம் (SPARC), சமூக அறிவியலில் தாக்கக் கொள்கை ஆராய்ச்சி (IMPRESS) போன்ற பல திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

- “பிரதமரின் ஆராய்ச்சி பெல்லோஷிப்” (PMRF) - தேசிய முன்னுரிமைகளில் கவனம் செலுத்துவதை நோக்கமாகக் கொண்டு, அதிநவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்ப களங்களில் ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக, இந்திய தொழில்நுட்பக் கழகம் (IITகள்) மற்றும் இந்திய அறிவியல் கழகம் (IISc) ஆகியவற்றின் முனைவர் (Ph.D.) படிப்புகளுக்கு நாட்டின் திறமையாளர்களை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- UGC சட்டத்தை ரத்து செய்து, இந்திய உயர்கல்வி ஆணையத்தை நிறுவுவதற்கான மசோதாவிற்கான 2018 வரைவுச் சட்டத்திற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.
- நிறுவனங்கள் தொழிற்பயிற்சித் திட்டங்களை விரைவாகவும், தொழில்துறைக்கு மிகவும் பயனுள்ளதாகவும் உண்டாக்கும் வகையில், தொழிற்பயிற்சியாளர்கள் (திருத்தம்) மசோதா 2014 அரசால் நிறைவேற்றப்பட்டது.

## தொழிற்பயிற்சி

### வழங்கிய வாக்குறுதி

- உழைக்கும் வர்க்கத்தினர் மற்றும் இல்லத்தரசிகள் தங்கள் அறிவு மற்றும் தகுதிகளை மேலும் மேம்படுத்துவதற்கு வசதியாக, பெரிய, திறந்தநிலை ஆன்லைன் படிப்புகள் (MOOC) மற்றும் மெய்நிகர் வகுப்பறைகள் அமைக்கப்படும்.
- சுயதொழில், பாரம்பரிய தொழில்கள், தொழில் முனைவோர் மற்றும் புத்தாக்கத்திற்கான களங்களில் புதிய அஞ்சல் வழி படிப்புகள்

தொடங்கப்படும், மேலும் இந்தப் படிப்புகள் பெண்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

- கல்வியின் நிலை மற்றும் அதற்குத் தேவையான சீர்திருத்தங்கள் குறித்து இரண்டு ஆண்டுகளில் அறிக்கை அளிக்கும் வகையில் தேசிய கல்வி ஆணையத்தை பாஜக அமைக்கும். அந்த அறிக்கையின் அடிப்படையில் பாஜக தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்தும்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- ''இளம் ஆர்வமுள்ள மனங்களுக்கான செயல்வழி கற்றல் வலைகள்'' (SWAYAM) திட்டம் 2016-இல் தொடங்கப்பட்டது, இது 1000-க்கும் மேற்பட்ட படிப்புகளுடன் கூடிய, பெரிய திறந்த ஆன்லைன் படிப்புகளுக்கான (MOOCs) ஒரு ஒருங்கிணைந்த தளம் மற்றும் இணையவாசலை வழங்குகிறது.
- UGC (ஆன்லைன் படிப்புகள்) விதிமுறைகள், 2018 உயர்கல்வித் துறையில் ஒரு முக்கிய சீர்திருத்தமாக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இதன்படி உயர்கல்வி நிறுவனங்கள் தங்களது வழக்கமான திட்டங்களுக்கேற்ப முழு அளவிலான ஆன்லைன் முறையில் சான்றிதழ், டிப்ளமோ மற்றும் பட்டப்படிப்பு திட்டங்களை வழங்க முடியும்.
- பிரபல விஞ்ஞானி டாக்டர். கே. கஸ்தூரிரங்கன் தலைமையில் தேசிய கல்விக் கொள்கை வரைவுக்கான குழுவை அரசாங்கம் அமைத்து, 2018-இல் அக்குழு அறிக்கையை சமர்ப்பித்தது.

# திறன்கள் — உற்பத்தித்திறன் மற்றும் வேலைவாய்ப்பில் கவனம் செலுத்துதல்

## வழங்கிய வாக்குறுதி

- திறன் மேப்பிங் - இந்தியாவுக்குத் தேவைப்படும் (பொறியாளர்கள், கட்டிடக் கலைஞர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள்,

வழக்கறிஞர்கள், கணக்காளர்கள், பிளம்பர்கள், தச்சர்கள், வெல்டர்கள், முதலியோர்) நமது தேசிய மனிதவள மேம்பாட்டை அறிவியல் பூர்வமாகத் திட்டமிட உதவும் செயல்பாடு நடைமுறைப்படுத்தப்படும்.

- ஒரு ‘தேசிய பன்னோக்கு திறன் செயல்திட்டத்தை’ தொடங்குதல்
- வேலை வாய்ப்பு திறன்களில் கவனம் செலுத்தி, மாலை நேரங்களில் குறுகிய கால படிப்புகளை நடத்துவோம்.
- தொழில்துறையுடன் இணைந்து பல்வேறு துறைகளில் சிறப்பு மையங்களையும் அமைப்போம்.
- தொழில்துறைக்கு தேவைப்படும் மனிதவளம் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, நாங்கள் தொழில்துறை, பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசினை ஒன்றிணைப்போம்
- தொழில் பயிற்சியை பெரிய அளவில் ஊக்குவிப்போம். முறையான கல்வி மற்றும் திறன் மேம்பாட்டிற்கு இடையேயுள்ள இடைவெளி நீக்கப்படும்; கல்விக்குச் சமமான தகுதிகளை தொழிற்கல்விக்கு வழங்குவதற்கான ஒரு வழிமுறை நிறுவப்படும்.
- வேலைவாய்ப்பிற்கு ஏற்றவாறு உருவாக்கப்படும், தொடர்ச்சியான கல்வியின் மூலம் திறன்களைப் புதுப்பிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் நிறுவனமயமான வழிமுறைகளை உருவாக்குவோம்.
- வெளிநாட்டு மொழிகள் பற்றிய தேசிய திட்டம் உட்பட வேலைவாய்ப்பை அதிகரிக்கத் தேவையான மென் திறன்களை வழங்குவதில் முக்கியத்துவம் கொடுப்போம்.
- நாட்டு மக்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு கணினி கல்வியறிவு அளிப்பதன் மூலம் டிஜிட்டல் அதிகாரமூட்டலுக்கான தேசிய திட்டத்தை தொடங்குதல்.
- சிறுவயதிலிருந்தே நமது இளைஞர்களின் திறமை மற்றும் திறனை கண்காணித்து மதிப்பிடுவோம்; அதனால் அவர்களை அதற்கேற்ப சீர்படுத்த முடியும்.

- மாணவர்களுக்கு இன்டர்ன்ஷிப் மற்றும் அப்ரண்டிஸ்ஷிப் முறையிலான பயிற்சிகள் மூலம் நிஜ உலக அனுபவத்தை ஊக்குவிக்கும் அதிக நடைமுறை மற்றும் ஆராய்ச்சி பயிற்சிக்கு நாங்கள் முக்கியத்துவம் கொடுப்போம்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

உலகளாவிய சவால்களைச் சமாளிக்கும்படியான திறன் மற்றும் நுட்பங்களை நமது இளைஞர்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் மோடி வலியுறுத்தினார். 20-ஆம் நூற்றாண்டில் பாரதத்தின் முதன்மையான தொழில்நுட்ப நிறுவனங்களான—ஐஐடிகள் (IITs) - உலகளவில் தங்களுக்கு ஒரு பெயரைப் பெற்றிருந்தது என்றால், 21-ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் ஐடிஐக்கள் (ITIs) (தொழில்துறை பயிற்சி நிறுவனங்கள்) தரமான திறமையான மனிதவளத்தை உருவாக்குவதற்கான உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்று அவர் கருதினார்.

உலகத்திற்கே திறமையான பணியாளர்களை வழங்கும் உலகின் மிகப்பெரிய நிறுவனமாக பாரதம் மாற முடியும் என்று நமது பிரதமர் நம்பினார். இதற்குத் தயாராகும் வகையில், பாரதத்தில் மட்டுமல்ல, உலக அளவிலும் மனிதவளத் தேவைகளை மேப்பிங் செய்வது அவசியம் என்று கருதினார்.

- திறன் பயிற்சி நடவடிக்கைகளின் அடிப்படையில், துறைகள் மற்றும் மாநிலங்களில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்த தேசிய திறன் மேம்பாட்டு இயக்கம் (NSDM) 2015-இல் பிரதமர் மோடியால் தொடங்கப்பட்டது.
- 633 வர்த்தகங்களில் பாரதம் முழுவதும் பயிற்சி வழங்குதலின் பொருட்டு 25000-க்கும் மேற்பட்ட பயிற்சி மையங்கள் திறக்கப்பட்டுள்ளன & 20 அமைச்சகங்கள் பதிவு செய்துள்ள இத்தகைய திறன் மேம்பாட்டுத் திட்டங்களில் 1 கோடி இளைஞர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

- பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY): இது 221-க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகளில் இலவசத் திறன்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட முதன்மைத் திட்டங்களில் ஒன்றாகும். (இத்திட்டத்தின் கீழ் 2 மாதங்கள் முதல் 6 மாதங்கள் வரை குறுகிய காலப் பயிற்சியை வழங்கப்படுகிறது)
- பிரதான் மந்திரி கௌஷல் கேந்திரா (PMKK): இது திறன் மேம்பாட்டுப் பயிற்சியை வழங்குவதற்கான தரப்படுத்தப்பட்ட உள்கட்டமைப்புடன் கூடிய "மாதிரி பயிற்சி மையத்தை" உருவாக்குவதற்கான ஒரு முயற்சியாகும். (அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 719 PMKK-கள் செயல்படுகின்றன)
- தேசிய தொழிற்பயிற்சி ஊக்குவிப்புத் திட்டம் (NAPS): இத்திட்டம் இளைஞர்களை தொழிற்பயிற்சியாளர்களாக ஈடுபடுத்துவதிலும், ஆயத்த பணியாளர்களை உருவாக்குவதற்கான வேலையில் திறன் பயிற்சி அளிப்பதிலும், தொழில்கள் மற்றும் வேலையளிப்போரின் ஈடுபாட்டை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டது. வேலை வழங்குபவரால் அளிக்கப்படும் உதவித்தொகையின் ஒரு பகுதியை அரசாங்கம் திருப்பிச் செலுத்துகிறது. (இத்திட்டத்தில் 4.8 லட்சத்திற்கும் அதிகமான விண்ணப்பதாரர்கள் உள்ளனர் & 74,000 நிறுவனங்கள் பதிவு செய்துள்ளன)
- தேசிய திறன் பயிற்சி நிறுவனம்: இந்த திட்டத்தின் கீழ், 18 மத்திய நிறுவனங்களின் நிறுவன வலைப்பின்னல் மூலம் வழக்கமான தொழிற்பயிற்சி திட்டங்கள் நடத்தப்படுகின்றன.
- சிறந்த வேலை வழங்குநர்களுடன் முன் கற்றல் அங்கீகரிப்பு (RPL):
- RPL-ஆனது முன் அனுபவம் உள்ளவர்கள் அல்லது முறைசாரா பயிற்சி பெற்றவர்களின் திறன்களை சான்றளிக்கிறது. 2016-முதல், நாடு முழுவதும் சுமார் 8 லட்சம் பேர் இதன்கீழ் பயனடைந்துள்ளனர்.
- வாழ்வாதார மேம்பாட்டிற்கான திறன் கையகப்படுத்தல் மற்றும் அறிவு விழிப்புணர்வு ("SANKALP") என்பது உலக வங்கியின் கடன் உதவியுடன் திறன் மேம்பாட்டு அமைச்சகத்தினால் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இது குறுகிய கால திறன்

பயிற்சியை தரம் மற்றும் அளவு சார்ந்து மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- திறன் இந்தியா திட்டத்தின் செயல்பாட்டினை அதிகரிக்க தனியார் துறையுடன் ஒப்பந்தங்கள் மற்றும் கூட்டாண்மைகள் செய்யப்பட்டுள்ளன. **நாஸ்காம், எஸ்ஏபி, ஐபிஎம், அடோப் (NASSCOM, SAP, IBM, Adobe)** போன்ற கார்ப்பரேட் **நிறுவனங்களுடனான** ஒத்துழைப்பு எதிர்கால வேலைத் தேவைகளுக்கு ஏற்ப பாடத்திட்டத்தை உருவாக்க உதவியது.

## சுகாதார சேவைகள் – அணுகலை அதிகரித்தல், தரத்தை மேம்படுத்துதல், செலவைக் குறைத்தல்

### வழங்கிய வாக்குறுதி

- இந்தியாவிற்கான சுகாதாரக் கொள்கை, கடைசியாக 2002-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. சிக்கலான சுகாதாரச் சவாலை எதிர்கொள்ள இந்தியாவிற்கு இப்போது ஒரு விரிவான சுகாதாரக் கொள்கை தேவைப்படுகிறது. புதிய சுகாதாரக் கொள்கைக்கான பணிகளை பாஜக தொடங்கும்.
- உலகளாவிய சுகாதார சேவையை அனைவருக்கும் வழங்குவதற்கான தெளிவான ஆணையுடன், 'தேசிய சுகாதார உறுதிப்படுத்தல் செயல்திட்டத்தை' தொடங்குதல். இது, அணுகக்கூடிய மற்றும் குறைந்த கட்டணத்தில் கிடைப்பது மட்டுமின்றி, பயனுள்ளதாகவும் இருக்கும், மேலும் சாமானியர்களுக்கான 'அவுட் ஆப் பாக்கெட்' (OOP) செலவினங்களை இது குறைக்கும்.
- கல்வி மற்றும் பயிற்சி - சுகாதாரப் பராமரிப்பில் பல்வேறு தொழில்சார் ஒழுங்குமுறை அமைப்புகளின் பங்கை மதிப்பாய்வு செய்து, சுகாதாரப் பாதுகாப்புக்காக ஒரு வலுவான ஒற்றை அமைப்பை அமைப்பது குறித்து பரிசீலித்தல்; சுகாதார

நிபுணர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படும்.

- அரசு மருத்துவமனைகளை நவீனப்படுத்துதல், உள்கட்டமைப்பு மற்றும் சமீபத்திய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மேம்படுத்துதல்.
- இந்தியாவை மனித வளத்தில் தன்னிறைவு அடையச் செய்ய, மருத்துவ மற்றும் துணை மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், ஒவ்வொரு மாநிலத்திலும் அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகம் (AIIMS) போன்ற கல்வி நிறுவனத்தை அமைத்தல்.
- யோகா மற்றும் ஆயுர்வேதம் ஆகியவை பண்டைய இந்திய நாகரிகத்தின் மூலம் மனிதகுலத்திற்கு கிடைத்த பரிசுகள்; யோகா மற்றும் ஆயுஷ் ஆகியவற்றை மேம்படுத்த பொது/அரசு முதலீட்டை அதிகரிப்போம். இந்திய மருத்துவ முறை (ISM) மற்றும் நவீன அறிவியல் மற்றும் ஆயுர்ஜெனோமிக்ஸ் ஆகியவற்றுக்கான ஒருங்கிணைந்த படிப்புகளை நாங்கள் தொடங்குவோம். ஆயுர்வேத மருத்துவத்தை தரப்படுத்தவும் உறுதிசெய்யவும், நிறுவனங்களை நிறுவி, தீவிரமான ஒரு திட்டத்தை நாங்கள் தொடங்குவோம்.
- குழந்தை ஆரோக்கியம் மற்றும் நோய்த்தடுப்பு ஆகியவற்றிலும் மற்றும் முன்கூட்டிய பராமரிப்பு மாதிரியிலும் கவனம் செலுத்தப்படும்.
- கிராமப்புற சுகாதாரப் பராமரிப்பு விநியோகத்தில் அக்கறை காட்டப்படும்.
- மூத்த குடிமக்களுக்கான சுகாதாரம், சிறப்பு கவனம் பெறும் பகுதியாக இருக்கும்.
- நாள்பட்ட நோய்களுக்கு அதிக முன்னுரிமை கொடுத்தல், மேலும் உடல் பருமன், நீரிழிவு, புற்றுநோய், இதயக் குழலிய நோய் (CVD) போன்ற நாட்பட்ட நோய்களுக்கான தீர்வுகளின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் முதலீடு செய்யப்படும்.

- சுகாதார பராமரிப்பு சேவை விநியோகத்திற்காக எங்கும் பரவி இருக்கும் அலைபேசிகளின் இயங்குதளம் பயன்படுத்தப்படும் மற்றும் தொலை மருத்துவம் மற்றும் அலைபேசி வழி சுகாதார பராமரிப்பு சேவையை விரிவுபடுத்துவதற்காக 'தேசிய மின்-சுகாதார ஆணையம் அமைக்கப்படும்.
- மூலிகைத் தாவரங்களின் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக மூலிகைச் செடிகள் வாரியத்தின் மீது சிறப்பு கவனம் செலுத்தப்படும்.
- பணி திட்ட முறையில் கிராமப்புற, SC, ST மற்றும் OBC-க்கு முக்கியத்துவம் அளிக்கும் மகளிர் சுகாதாரத்திற்கான திட்டத்தினை செயல்படுத்துதல்.
- ஊட்டச்சத்து குறைபாட்டை ஒழிப்பதற்கான பணிமுறை திட்டம்.
- தேசிய கொசு கட்டுப்பாட்டு பணிமுறை திட்டத்தை தொடங்குதல்.
- விழிப்புணர்வு பிரச்சாரத்தின் மூலம் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத இந்தியாவை உருவாக்குதல், அத்துடன், வீடுகளிலும், பள்ளிகளிலும் பொது இடங்களிலும் கழிவறைகள் உருவாக்க மக்களுக்கு உதவுதல்.
- நவீன, அறிவியல் அடிப்படையிலான கழிவுநீர் மற்றும் கழிவு மேலாண்மை அமைப்புகளை அமைத்தல்.
- சுகாதார மதிப்பாய்வு திட்டங்களை நாங்கள் அறிமுகப்படுத்துவோம், நமது நகரங்கள் மற்றும் சிற்றூர்களை 'சுகாதார அளவுகோலின்' அடிப்படையில் அளவிடுவது மற்றும் தரவரிசைப்படுத்துவது; மற்றும் சிறப்பாகச் செயல்படுவோருக்கு வெகுமதி வழங்குதல்.
- நல்ல குடிநீரை அனைவருக்கும் கிடைக்கச் செய்தல், இதனால் நீரால் பரவும் நோய்களின் பாதிப்பு குறைந்து, 'வயிற்றுப்போக்கு நோய் இல்லாத இந்தியா' என்ற பெயரை பெறச்செய்தல்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

குடிமக்களுக்கான மிக முக்கியமான தேவைகளில் ஒன்று அனைவருக்கும் குறைந்த கட்டணத்தில் கிடைக்கும் சுகாதார

சேவை ஆகும். பெரும்பான்மையான மக்களுக்கு, குறிப்பாக கிராமப்புறங்களில், இன்னும் அடிப்படை சுகாதாரப் பாதுகாப்பு சேவைகள் கிடைப்பதில்லை. ஒரு மதிப்பீட்டின்படி, மருத்துவச் சேவைக்காக செலவு செய்வதன் மூலம் 5 கோடிக்கும் அதிகமானோர் இந்தியாவில் வறுமையில் தள்ளப்பட்டுள்ளனர்; 3.8 கோடி பேர் மருந்துகளுக்கு செலவிடுவதனால் மட்டுமே வறுமைக் கோட்டிற்குக் கீழே செல்கின்றனர். “அனைவருக்கும் குறைந்த கட்டணத்தில் சுகாதார சேவை” கிடைப்பதை உறுதிசெய்ய நமது பிரதமர் மோடி பல நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தினார்.

- 2018-ஆம் ஆண்டில், பிரதமர் மோடி ஆயுஷ்மான் பாரத்-ஐத் தொடங்கினார் – இது, உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பை, குறிப்பாக கிராமப்புற மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களைச் சென்றடைவதற்கான மிகவும் விரிவான சுகாதாரப் பணிகளில் ஒன்றாகும்.
- நான்கு தூண்கள்: - உடல்நலம் மற்றும் ஆரோக்கிய மையம் (HWCs), பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (PM-JAY), ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷன், பிரதான் மந்திரி-ஆயுஷ்மான் பாரத் சுகாதார உள்கட்டமைப்பு மிஷன் ஆகிய நான்கும் சுகாதார சேவையின் நான்கு தூண்களாக உள்ளன.
- குடும்ப அளவு எதுவாக இருந்தாலும் 50 கோடி ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு (தீவிரமான நோய்களுக்கு) ரூ. 5 லட்சம் மதிப்புள்ள இலவச மருத்துவப் பாதுகாப்பு வழங்கப்படுகிறது.
- மருத்துவ சேவையோடு தொடர்புடைய மற்றும் சுகாதாரப் பாதுகாப்புத் தொழில்கள் மசோதா 2018 - சுகாதார நிபுணர்களின் கல்வி மற்றும் சேவைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் தரநிலைப்படுத்துதல் ஆகியவற்றிற்காக கொண்டுவரப்பட்டது. இந்திய அளவில் மற்றும் மற்றும் மாநிலங்களில், ‘தொடர்புடைய மற்றும் சுகாதார பராமரிப்பு கவுன்சில்’களை அமைத்தல். இதன்கீழ் 53 தொழில்கள் உட்பட 15 முக்கிய தொழில்முறை பிரிவுகள் அடங்கும்.

- AIIMS மருத்துவமனைகள் போன்ற 20 புதிய சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைகள் அமைக்கப்படும். 73 அரசு மருத்துவக் கல்லூரிகளின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. செயல்பாட்டில் உள்ள எய்ம்ஸ்களில் 1675 படுக்கைகள் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளன. 15,354 எம்பிபிஎஸ் இடங்களும், 12,646 முதுநிலை இடங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன.
- "பிரதான் மந்திரி ஸ்வஸ்திய சுரக்ஷா யோஜனா" (PMSSY) திட்டத்தின் கீழ் 21 AIIMS மருத்துவமனைகள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 2018-ஆம் ஆண்டு நிலவரப்படி நாட்டில் மொத்தம் 8 எய்ம்ஸ் நிறுவனங்கள் மட்டுமே செயல்பட்டன.
- 2014-ஆம் ஆண்டில், பிரதமர் மோடி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் யோகா தினத்தை கொண்டாட முன்மொழிந்தார், இது மூன்று மாதங்களுக்குள் ஐநா பொதுச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், 21 ஜூன் 2015 அன்று முதல் முறையாக சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது. இதனால், ஒரே யோகா நிகழ்வில் 35,985 பங்கேற்பாளர்கள் மற்றும் அதிகபட்ச தேசிய இனத்தவர்கள் (84) ஒரே பங்கேற்ற மிகப்பெரிய யோகா நிகழ்வு என இரண்டு கின்னஸ் உலக சாதனைகள் நிகழ்த்தப்பட்டன.
- இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணைய மசோதா, 2019 மற்றும் தேசிய ஹோமியோபதி மசோதா, 2019 ஆகியவை மாநிலங்களவையில் ஜனவரி 7, 2019 அன்று அறிமுகப்படுத்தப்பட்டன.
- செயலிழக்கச் செய்யப்பட்ட போலியோ தடுப்பூசி (IPV) 2015-இல் அறிமுகப்படுத்தப்பட்டது (6.4 கோடி குழந்தைகள் பயனடைந்தனர்).
- ரோட்டா வைரஸ் தடுப்பூசி மார்ச் 2016-இல் அறிமுகப்படுத்தப்பட்டது (2.6 கோடி குழந்தைகள் பயனடைந்தனர்).
- தட்டம்மை ரூபெல்லா (MR) தடுப்பூசி பிரச்சாரம் 2017-இல் தொடங்கப்பட்டது (13.04 கோடி குழந்தைகள் பயனடைந்தனர்).

- மாதவிடாய் சுகாதாரத் திட்டம்: கிராமப்புறங்களில் உள்ள இளம்பெண்களுக்காக செயல்படுத்தப்பட்டது. 2014 முதல் சானிட்டரி நாப்கின்கள் கொள்முதல் பரவலாக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக, 2018-19 ஆம் நிதியாண்டில், ரூ. 43 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- 'ராஷ்டிரிய வயோஸ்ரீ யோஜனா' (RVY) திட்டம் 2017-இல் தொடங்கப்பட்டது, வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பிரிவைச் சேர்ந்த மூத்த குடிமக்களுக்கு உடல் உதவிகள் மற்றும் வாழ்க்கை உதவி சாதனங்களை வழங்குவதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. (70,939 மூத்த குடிமக்கள் இதனால் பயனடைகிறார்கள்).
- மோடி அரசாங்கம், தேசிய சுகாதாரக் கொள்கை 2017-க்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தக் கொள்கையானது "இருதய நோய்கள், புற்றுநோய், நீரிழிவு அல்லது நாள்பட்ட சுவாச நோய்களால் ஏற்படும் முன்கூட்டிய இறப்பை 2025-ஆம் ஆண்டிற்குள் 25% குறைக்க" முயல்கிறது.
- தேசிய மின்னணு சுகாதார ஆணையம் (NeHA) அல்லது தேசிய டிஜிட்டல் சுகாதார ஆணையத்தை (NDHA) உருவாக்கி, அதனை சுகாதாரத் துறையில் டிஜிட்டல் சுகாதார இடையீட்டு நடவடிக்கைகளை பயன்படுத்துவதற்கான ஒழுங்குமுறை அமைப்பாக (DISHA) உருவாக்க, தேசிய சுகாதாரக் கொள்கை 2017, பரிந்துரைத்தது.
- பழங்குடியினரிடையே வாழ்வாதார மேம்பாட்டிற்காக மருத்துவ மற்றும் நறுமணத் தாவரங்களின் உற்பத்தி பொருள்களை மேம்படுத்த TRIFED (பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சகம்) மற்றும் தேசிய மருத்துவ தாவர வாரியம் (AYUSH அமைச்சகம்) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- பலதரப்பட்ட இடையீட்டு நடவடிக்கைகள் மூலம் ஊட்டச்சத்து குறைபாட்டைச் சரி செய்வதற்கான முதல் முயற்சியாக அரசாங்கம் 'போஷன் அபியான்' திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது.

ஒருங்கிணைப்பு, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் மற்றும் இலக்கு சார் அணுகுமுறை ஆகியவற்றின் மூலம் ஊட்டச்சத்து குறைபாட்டைக் குறைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு ரூ 2,122 கோடி நிதியுதவி (2017-18, 2018-19 காலகட்டங்களில்) அளிக்கப்பட்டது. இதன்மூலம் 10 கோடி மக்கள் பயனடைகின்றனர்.

- 2030-ஆம் ஆண்டிற்குள் மலேரியாவை ஒழிப்பதற்கான திட்டத்தை மோடி அரசு வெளியிட்டுள்ளது. மலேரியா ஒழிப்புக்கான தேசிய கட்டமைப்பு (NFME) 2016-2030 ஆவணம், பிப்ரவரி 11, 2016 அன்று தொடங்கப்பட்டது. அந்த இலக்கை அடைவதற்கான தொலைநோக்கு, பார்வை, பரந்த கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை இது வகுத்துள்ளது.
- திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத இந்தியாவை உருவாக்க ஸ்வச் பாரத் மிஷன் தொடங்கப்பட்டது (10 கோடிக்கும் அதிகமான கழிவறைகள் இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ளன).
- 2016-ஆம் ஆண்டில், கழிவு மேலாண்மை விதிகள், ஈரமான, உலர் மற்றும் அபாயகரமான கழிவுகளாகப் பிரித்தெடுக்கும் வகையில் திருத்தப்பட்டன. மின்-கழிவு மேலாண்மையும் இதில் அடங்கும்.
- ஸ்வச் பாரத் அபியானின் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக “ஸ்வச் சர்வேக்ஷன்” ஜனவரி 2016-இல் தொடங்கப்பட்டது.
- 2030-ஆம் ஆண்டிற்குள் கிராமப்புற மக்களுக்கு குழாய் நீர் விநியோகம் மற்றும் வீட்டிற்கு நீர் இணைப்புகளை வழங்குவதற்காக தேசிய கிராமப்புற குடிநீர் திட்டத்தை (NRDWP) அரசாங்கம் மறுசீரமைத்துள்ளது.

# பொருளாதார மறுமலர்ச்சி

## வழங்கிய வாக்குறுதி

- வளர்ச்சிப் பணிகள் மற்றும் சொத்து உருவாக்கத்திற்கான நிதி இருப்பில் சமரசம் செய்யாமல், நிதி ஒழுக்கம் கண்டிப்பாக செயல்படுத்தப்படும்.
- வளர்ச்சியின் இயந்திரங்களுக்கு மீண்டும் சக்தியூட்ட வளங்கள் திறமையாகவும் பலனளிக்கும் வகையிலும் ஒதுக்கீடு செய்யப்படும்.
- வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீடுகளுக்கான கொள்கை கட்டமைப்பு, எளிதாக இருக்கும் வகையில் மீண்டும் பரிசீலிக்கப்பட்டு உருவாக்கப்படும்.
- எளிதாகவும், அணுகும் வகையிலும் இருப்பதை மேம்படுத்த வங்கிச் சீர்திருத்தங்களை, அதற்கான பொறுப்புக்கூறல் தன்மையுடன் மேற்கொள்ளுதல்.
- முதலீடு மற்றும் வளர்ச்சியின் முக்கிய உந்துதலாக சேமிப்பை ஊக்குவித்தல்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நிதிப் பற்றாக்குறை 2014-இல் 4.5%-இல் இருந்து 2018-2019ஆம் ஆண்டில் 3.4%-ஆக குறைக்கப்பட்டுள்ளது. 2015-16 நிதியாண்டில் 18 லட்சம் கோடியாக இருந்த மொத்த செலவினம் 2018-19 நிதியாண்டில் 24 லட்சம் கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளதால், இது நிதி இருப்பில் சமரசம் செய்யாமல் பராமரிக்கப்படுகிறது.
- மோடி அரசாங்கம் 2014-19க்கு இடைப்பட்ட காலத்தில் ஒரு செயல்திறன்மிக்க அரசாங்கமாக தனிச்சிறப்புடன் செயல்பட்டது. புத்துயிர் பெற்ற மத்திய-மாநில இயக்கவியல், கூட்டுறவு கூட்டாட்சி, ஜிஎஸ்டி கவுன்சில் மற்றும் நிதி ஒழுங்குமுறைக்கு கடுமையான அர்ப்பணிப்பை அரசாங்கம் வழங்கியது. நிதி ஆயோக் அமைப்பால்

இதற்கு திட்டமிடப்பட்டு உதவி செய்யப்படும், “சீர்திருத்தம், செயல்திறன், மாற்றம்” என்ற கொள்கையினை நாடு முழுவதும் செயல்படுத்தி, பல பணிமுறை திட்டங்களின் வெற்றியின் மூலம் புதிய பாரதத்தை உருவாக்க முடியும்.

- GST உடன் வளர்ச்சி, எளிமை மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல் (GST வழிமுறை நுகர்வோருக்கு ஆண்டுக்கு 80,000 கோடி ரூபாய் நிவாரணம் அளிக்கிறது)
- வலுவான மேக்ரோ பொருளாதார அடிப்படைகள் பாரதத்தை வரையறுக்கின்றன (பணவீக்கம் 8.48% (2014-ஆம் ஆண்டில்)-லிருந்து 3.40% (2018-ஆம் ஆண்டில்)-ஆக குறைந்தது.
- வங்கிச் சீர்திருத்தங்கள் வளர்ச்சியின் அடுத்த அலையைத் தூண்டுகின்றன (திவால் சட்டம்: இது 2 ஆண்டுகளில் ரூ. 3 லட்சம் கோடி வாராக் கடன்களைத் தீர்க்க உதவியது).
- கடன் வளர்ச்சி மற்றும் வேலை உருவாக்கத்தை ஆதரிக்க, பொதுத்துறை வங்கிகளுக்கு ரூ. 2,60,000 கோடியினை மறுமூலதனமாக்கல் முறையில் வழங்குதல்.
- ‘சுகன்யா சம்ரித்தி யோஜனா’ திட்டம் 2015-இல் தொடங்கப்பட்டது. இது, தங்கள் பெண் குழந்தைகளுக்கான நிதியைச் சேமிக்கத் தொடங்க பெற்றோர்களை ஊக்குவிக்கிறது. (இதன்கீழ் தொடங்கப்பட்ட 1.2 கோடிக்கும் அதிகமான கணக்குகளில் ரூ. 25,979 கோடிக்கு மேல் டெபாசிட் செய்யப்பட்டுள்ளது)
- 2014-இல் தொடங்கப்பட்ட ‘பிரதான் மந்திரி ஜன்-தன் யோஜனா’ (PMJDY) திட்டம் குடிமக்களுக்கு நிதிச் சேவைகளை எளிதாக அணுக உதவுகிறது. (இதனால் 35 கோடி மக்கள் பயனடைந்தனர்)
- 2018-19 பட்ஜெட்டில் உள்நாட்டுச் சேமிப்பை அதிகரிப்பதற்கான சில நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டன. இதில் மூத்த குடிமக்களுக்கு வங்கிகளில் வைப்புத்தொகையின் மீதான வட்டி வருவாயில் விலக்கு அதிகரிப்பு, மூத்த குடிமக்களுக்கான உடல்நலக் காப்பீட்டு பிரீமியத்திற்கான அதிக வரம்பு ஆகியவை அடங்கும்.

# செயல்படாத சொத்துகள் (NPAகள்) / வராக்கடன்கள்

## வழங்கிய வாக்குறுதி

முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்காக வங்கி சாராத நிதி நிறுவனங்களுக்கு ஒரு வலுவான ஒழுங்குமுறை கட்டமைப்பு நிறுவப்படும்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

மோடி அரசால் கொண்டு வரப்பட்ட பல்வேறு சீர்திருத்தங்கள் மற்றும் செயல்திட்டங்களது அமலாக்கத்தின் வழியாக மொத்த வராக்கடனின் (NPAs) ஒரு சதவிகிதமாக நிதியாண்டின்போது பொதுத்துறை வங்கிகளால் வசூலிக்கப்பட்ட கடன் தொகையானது, நிதியாண்டு 2017-18-ன் தொடக்கத்தில் 11.33% ஆக இருந்தது, நிதியாண்டு 2018-19-ல் 13.52% ஆக அது முன்னேற்றமடைந்திருக்கிறது.

# வரி விதிப்பு

## வழங்கிய வாக்குறுதி

- எதிர்ப்புத்தன்மை அல்லாத மற்றும் உகந்த வரிச்சூழலை வழங்குவது.
- வரிக்கோட்பாடு நெறிமுறையை எளிதாக்குவது மற்றும் முறைப்படுத்துவது
- சர்ச்சை / பூசல் தீர்வு இயங்குமுறைகளை செப்பனிடுவது.
- ஜிஎஸ்டி – ஐ செயல்படுத்துவதில் மாநில அரசுகளின் கவலைகளை கருத்தில் கொண்டு அனைவரின் ஒத்திசைவையும், ஒத்துழைப்பையும் பெறுவது.
- உள்நாட்டிலேயே தொழில்நுட்ப உருவாக்கம் மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்காக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் செய்யப்படும் முதலீடுகளுக்கு வரி சலுகைகளை வழங்குவது.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி), 2017 ஜூலையில் அறிமுகம் செய்யப்பட்டது. பல மறைமுக வரிகளுக்குப் பதிலாக, ஒரேயொரு மறைமுக வரியைக் கொண்டதாக ஜிஎஸ்டி அதனை மாற்றியமைத்தது. ஆன்லைன் இணையவாசல்கள் வழியாக வரிகளை செலுத்துவதை அரசு மிக எளிதானதாக ஆக்கியிருக்கிறது (ஜிஎஸ்டி வழியாக 2019 ஜனவரி மாதம் வரை ரூ.17 இலட்சம் கோடி வசூலாகியிருக்கிறது; பல வளர்ச்சி திட்டங்களை நாடு செயல்படுத்துவதற்கு இது உதவியிருக்கிறது).
- வரி தொடர்பான சர்ச்சைகள் மற்றும் பூசல்களை குறைக்க பல்வேறு நடவடிக்கைகளை மோடி அரசு எடுத்திருக்கிறது. 2015-ம் ஆண்டில் மேல்முறையீடுகளை தாக்கல் செய்வதற்கான நிதிசார் வரம்புகள் ஒரு குறுகிய காலத்திற்கு அதிகரிக்கப்பட்டன. ரூ.15 இலட்சம் வரையிலான மதிப்பீட்டு வருவாய் வரை ஒற்றை உறுப்பினர் கொண்ட அமர்வின் உச்சவரம்பை அதிகரிக்க நிதி சட்டத்தின் வழியாக வருமான வரி சட்டத்தில் ஒரு திருத்தம் செய்யப்பட்டது. 2016-ம் ஆண்டில் நேரடி வரி சர்ச்சை / பூசல் தீர்வு திட்டம் அமலுக்கு வந்தது மற்றும் அதற்கு முந்தைய காலத்தின் வரி சர்ச்சைகளுக்குத் தீர்வுகாண 7 மாதங்கள் கால அவகாசத்தை இது வழங்கியது.
- ஜிஎஸ்டி வரி விதிப்பு முறையின் கீழ், அனைத்து மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் கொண்டு வரப்பட்டன.

# அந்நிய நேரடி முதலீடு

## வழங்கிய வாக்குறுதி

சிறிய மற்றும் நடுத்தர ரீடெய்லர்கள் & தொழில் நிறுவனங்கள் (SME), அவர்களது நலனை பாதுகாப்பதில் பிஜேபி பொறுப்புறுதி கொண்டிருக்கிறது. அந்நிய முதலீடுகளை நிர்வகிக்கின்ற FIPB (வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு வாரியம்) – ன் செயல்பாடு அதிக

திறமையானதாகவும் மற்றும் முதலீட்டாளருக்கு தோழமையானதாகவும் இருக்குமாறு ஆக்கப்படும்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- அந்நிய முதலீட்டு ஊக்குவிப்பு வாரியத்தின் செயல்பாட்டை முடித்து விடுவதற்கான ஒப்புதலை 2017 மே மாதத்தில் பாரதப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடியின் அரசு வழங்கியது. FIPB – ஐ கலைத்துவிட்டு, அதற்குப் பதிலாக அரசு ஒப்புதல் தேவைப்படுகின்ற அந்நிய நேரடி முதலீடுக்கான விண்ணப்பங்களை பரிசீலனை செய்வதற்கான அதிகாரத்தை அமைச்சகங்கள் மற்றும் துறைகளிடம் ஒப்படைப்பது இந்த முன்வரைவு யோசனையின் நோக்கமாக இருந்தது.
- ‘இந்தியாவில் தயாரிப்போம்’ (மேக் இன் இந்தியா), ‘ஸ்டார்ட்அப் இந்தியா’ போன்ற பல புதிய முன்னெடுப்புகள் பாரதத்தில் அந்நிய நேரடி முதலீட்டை அதிகரித்திருக்கின்றன. அந்நிய நேரடி முதலீட்டுத் தொகையானது, 2017-18 நிதியாண்டில் 64.37 பில்லியன் யுஎஸ் டாலராக வளர்ச்சி கண்டது; பாரதத்தின் அந்நியச் செலாவணி இருப்பு 422 பில்லியன் யுஎஸ் டாலராக அதிகரித்தது.

# உற்பத்தி திறன் மிக்க, அறிவியல் ரீதியிலான மற்றும் ஆதாயமளிக்கும் விவசாயம்

## வழங்கிய வாக்குறுதி

- மேலாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி துறையில் அரசின் முதலீட்டை அதிகரிப்பது.
- உற்பத்தி செலவை விட குறைந்தது 50% லாபத்தை உறுதி செய்வதன் வழியாக வேளாண்மையில் லாபமீட்டும் நிலையை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுப்பது, மலிவான விலையில் வித்துகள் / உரங்களை வழங்குவது மற்றும் கடன் வசதியை உறுதிசெய்வது; விவசாயத்திற்காக சமீபத்திய தொழில்நுட்பங்களையும், அதிக

விளைச்சல் தரும் வித்து வகையினங்களையும் அறிமுகம் செய்வது மற்றும் MGNREGA திட்டத்தை விவசாயத்தோடு இணைப்பது.

- 60 வயதுக்கு மேற்பட்ட விவசாயிகளுக்கும், சிறிய மற்றும் விளிம்புநிலை விவசாயிகளுக்கும் மற்றும் விவசாய கூலித் தொழிலாளிகளுக்கும் நலவாழ்வு திட்டங்களை உருவாக்கி வழங்குவது.
- குறைவான தண்ணீரை பயன்படுத்தும் நீர்ப்பாசன உத்திகளை அறிமுகம் செய்வது மற்றும் ஊக்குவிப்பது, நீர் ஆதாரவளத்தை பயனுள்ளவாறு சிறப்பாக பயன்படுத்துவது.
- மண் மதிப்பாய்வு அடிப்படையிலான பயிரிடல் திட்டத்தை அறிமுகம் செய்வது மற்றும் மண் பரிசோதனைக்காக நடமாடும் பரிசோதனையகங்களை நிறுவுவது.
- உணவு பதப்படுத்தல் தொழிலகங்களை நிறுவுவதை ஊக்குவிப்பது மற்றும் ஊக்கத்தொகை வழங்குவது, அதிக மதிப்புள்ள, ஏற்றுமதி தரம் கொண்ட வேக்குவம் பேக்கிங் செய்வதற்கான உணவு பதப்படுத்தல் தொழிலகங்கள் கொண்ட வேளாண் உணவு பதப்படுத்தல் கிளஸ்டர்களை நிறுவுவது.
- மசாலாப் பொருட்கள் (ஸ்பைசஸ்), தரம், உற்பத்தி திறன் மற்றும் வர்த்தகம் மீது சிறப்பு கவனம் செலுத்துதல்.
- ஆர்கானிக் (இயற்கை) விவசாயத்தையும் மற்றும் இயற்கை உரங்களையும் ஊக்குவிக்க "ஆர்கானிக் ஃபார்மிங் அண்டு ஃபெர்ட்டிலைஸர் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா" என்ற நிறுவனத்தை நிறுவுவது மற்றும் ஆர்கானிக் விளைபொருட்களை சந்தையாக்கல் செய்வதற்கு ஊக்கத்தொகைகளையும், ஆதரவையும் வழங்குவது.
- விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க, புவியியல் வரைபடத்தின் அடிப்படையில் மூலிகைப் பொருட்களுக்கான சுழற்சி முறை விவசாயத்தை அறிமுகப்படுத்துதல்.

- எதிர்பாராத இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் பயிர் இழப்பைக் கவனித்துக்கொள்ள பண்ணை காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துதல்.
- கிராமப்புற கடன் வசதிகளை வலுப்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்துதல்.
- தோட்டக்கலை, மலர் வளர்ப்பு, மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்பு போன்றவற்றை ஊக்குவித்தல் மற்றும் கிராமப்புற இந்தியாவிற்கான வேலைவாய்ப்பு மற்றும் வருமானத்தை உருவாக்குதல்.
- மீன் வளர்ப்பு மற்றும் நீர்வாழ் உயிரி வளர்ப்பை ஊக்குவித்தல். மீனவர் நலனுக்காக நடவடிக்கை எடுத்தல்.
- தொகுப்பு அடிப்படையிலான சேமிப்பு அமைப்புகளை உருவாக்குதல் (எ.கா. அரிசி தொகுப்பு, கோதுமை தொகுப்பு, காய்கறி - பழ தொகுப்பு, மசாலா தொகுப்பு).
- விரயங்களைக் குறைக்கவும், வருமானம் மற்றும் ஆபத்து பாதுகாப்பை அதிகரிக்கவும், நுகர்வோருக்கு உகந்த உழவர் சந்தை என்ற கருத்தாக்கத்தை அறிமுகப்படுத்துதல்.
- வேளாண் விளைபொருள் சந்தைக் குழு (APMC) சட்டத்தை சீர்திருத்துதல்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் விதை வளர்ப்பு ஆய்வகங்கள் உருவாக்குதல் மற்றும் வேளாண் பல்லுயிர்களைப் பாதுகாக்க மற்றும் அரிய உள்நாட்டு ரகங்களைக் கண்டறிந்து பாதுகாக்க, பிராந்திய வேளாண்மை கண்டுபிடிப்பு ஆய்வகங்களை அமைக்க மாநிலங்களுடன் இணைந்து பணியாற்றுதல்.
- பிராந்திய அளவில் விவசாயிகளுக்கான டிவி சேனல்களை அமைப்பதற்கான வாய்ப்புகளை ஆராய்தல்.
- கிராமப்புறங்களில் வறுமை ஒழிப்புக்கு அதிக முன்னுரிமை கொடுத்தல்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

பாரத மக்கள் தொகையில் 58% பேருக்கு விவசாயமே முதன்மையான வாழ்வாதாரம். விவசாயக் கணக்கெடுப்பின்படி, 2 ஹெக்டேருக்கும் குறைவான சிறிய மற்றும் குறு நில உடைமைகள் விவசாய நிலத்தின் மொத்த செயல்பாட்டு பரப்பளவில் 85% ஆக உள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரேசில் ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக உலகிலேயே அதிக விவசாய நிலம் பாரதத்தில்தான் உள்ளது.

ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த, உற்பத்தித்திறனை மேம்படுத்தவும், தொழில்நுட்ப அறிவு மற்றும் விவசாயத்தில் புதிய போக்குகளைப் பின்பற்றவும் விவசாயிகளுக்கு அதிகாரம் அளிப்பது மிகவும் முக்கியம். 2022-ஆம் ஆண்டிற்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கான பல முன்முயற்சிகள் மூலம் விவசாயிகளுக்கு அதிகாரமளித்த மோடி அரசாங்கம், எப்போதும் "விவசாயிகளுக்கு முதலிடம் கொடுப்பதில்" கவனம் செலுத்துகிறது. நீலப் புரட்சி மற்றும் பால் உற்பத்தி விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தது. 100% யூரியா கிடைப்பது விவசாயிகளுக்கு உற்பத்தித்திறனை அதிகரிக்க பெரிதும் உதவியது. மோடி அரசின் பல்வேறு தொழில்நுட்பம் சார்ந்த முயற்சிகள் விவசாயிகளின் வாழ்க்கையை பெரிதும் மாற்றியது.

- மோடி அரசால் விவசாயிகள் நலனுக்காக செய்யப்பட்ட வரலாற்று சாதனையான நிதி ஒதுக்கீடு. [ரூ. 1,21,082 கோடியிலிருந்து (2009-14 காலகட்டம்) ரூ. 2,11,694 கோடியாக (2014-19 காலகட்டம்] உயர்ந்தது.
- விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க, சொட்டு நீர் பாசனத் திட்டம், மண் ஆரோக்கிய அட்டை, தரமான விதைகள் மற்றும் ஊட்டச்சத்துக்கள், சேமிப்புக் கிடங்கு மற்றும் குளிர்பதனக் கிடங்குகளில் பெரிய முதலீடுகள், உணவு பதப்படுத்துதல், ஆன்லைன் தேசிய வேளாண் சந்தை, புதிய பயிர் மூலம் மதிப்பு

கூட்டல் ஊக்குவிப்பு, காப்பீட்டுத் திட்டம் உள்ளிட்ட பல முன்முயற்சிகள் தொடங்கப்பட்டன.

- அடல் பென்ஷன் யோஜனா, ஆயுஷ்மான் பாரத், பிரதமர் விபத்துக் காப்பீட்டுத் திட்டம் போன்ற திட்டங்கள் 60 வயதுக்கு மேற்பட்ட ஏழை விவசாயிகளுக்கு வாழ்க்கை மேம்பாட்டை அளித்தன.
- சொட்டு நீர் பாசன திட்டத்திற்கு ரூ. 50,000 கோடி முதலீடு செய்யப்பட்டது. (பிரதான் மந்திரி கிரிஷி சிஞ்சாய் யோஜனா)
- நுண்ணீர் பாசனத்தின் கீழ் 37 இலட்சம் ஹெக்டேர் நிலத்தில், பிரத்யேக நுண்ணீர் பாசன நிதியாக 5000 கோடி ரூபாய் ஒதுக்கீடு.
- மண் ஆரோக்கிய அட்டை திட்டம் - விவசாயிகளுக்கு இலவசமாக கிடைக்கும் இந்த திட்டமானது, மண் மாதிரி சேகரிப்பு, அதன் சோதனை, உற்பத்தி மற்றும் விவசாயிகளுக்கு மண் சுகாதார அட்டை விநியோகம் ஆகியவற்றை உள்ளடக்கியது. (18 கோடி விவசாயிகள் பயனடைந்துள்ளனர்)
- உணவு பதப்படுத்தும் துறையில் மொத்த உற்பத்தி ரூ. 2014-15ல் 9,34,272.19 கோடியாக இருந்தது, 2018-19ல் ரூ.12,76,995.11 கோடியாக அதிகரித்தது. உணவு பதப்படுத்தும் துறையில் ஈடுபட்டுள்ள பதிவு செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 2014-15ல் 17.73 லட்சத்தில் இருந்து 2018-19ல் 20.05 லட்சமாக அதிகரித்துள்ளது [விவசாய புள்ளியியல் மேம்பாடு (ASI) அறிக்கையின் படி)
- பிரதமர் மோடி, ‘உலக உணவு இந்தியா 2017’-ஐ தொடங்கி வைத்தார். உணவு பதப்படுத்துதல் துறையில் விருப்பமான முதலீட்டு இடமாக இந்தியா காட்சிப்படுத்தப்பட்டது. இந்நிகழ்வின் தொடக்க நாளில் ரூ.68,000 கோடி மதிப்பிலான 13 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.
- ‘பிரதான் மந்திரி கிசான் சம்பதா யோஜனா’ (PMKSY) 2017-இல் தொடங்கப்பட்டது. இது விவசாயத்திற்கு துணைபுரிவதற்கும், செயலாக்கத்தை நவீனப்படுத்துவதற்கும் மற்றும் விவசாயக்

கழிவுகளை குறைப்பதற்கும் ரூ.6000 கோடி பட்ஜெட்டில் தொடங்கப்பட்டது.

- 'பரம்பரகத் கிரிஷி விகாஸ் யோஜனா' (PKVY) திட்டமானது 2015-16 முதல், ரசாயனமற்ற இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதற்காக நாட்டிலேயே முதல் முறையாக செயல்படுத்தப்பட்டது.
- இத்திட்டத்தின் கீழ் 2 லட்சம் ஹெக்டேர் என்ற இலக்குக்கு எதிராக 2,37,820 ஹெக்டேர் பரப்பளவில் இயற்கை விவசாயம் செய்யப்படுகிறது மற்றும் 5,94, 550 விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தனர் (ரூ. 582 கோடி நிதி மாநிலங்களுக்கு விடுவிக்கப்பட்டது)
- ரூ.2400.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் 1 ஏப்ரல், 2017 முதல் மார்ச் 31, 2020 வரை தேசிய ஆயுஷ் மிஷனை (NAM) மத்திய நிதியுதவி திட்டமாகத் தொடர. மோடி அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- விவசாயம் அல்லாத நடவடிக்கைகளுக்கு ரூ. 10 லட்சம் வரை PM முத்ரா கடன்கள் வழங்கப்படுகின்றன, விவசாயத்துடன் தொடர்புடைய பால்பண்ணை, கோழிப்பண்ணை, தேனீ வளர்ப்பு போன்ற செயல்பாடுகளும் இதில் அடங்கும்.
- நீலப் புரட்சித் திட்டம் (மீன்வளர்ச்சியின் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் மேலாண்மை சார்ந்து) தொடங்கப்பட்டது (2015-16 காலகட்டம்) - மீனவர்கள், மீன் விவசாயிகள், தொழில்முனைவோர், கூட்டுறவு, சுய உதவிக் குழுக்கள் மற்றும் பெண்கள் உட்பட பிற தனியார் பெறுநர்கள் இதன் பயனாளிகள் ஆவர்.
- ஜூலை 2018 நிலவரப்படி, மாநிலங்களிடையே 100 வேளாண் பதப்படுத்தல் நிறுவனங்களுக்கான தொகுப்பு அமைவிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.
- பிரதமரின் தேசிய வேளாண் சந்தை (eNAM) - பாரதத்தில் விவசாயப் பொருட்களுக்கான ஆன்லைன் வர்த்தக தளமாக செயல்படுகிறது. சந்தை விவசாயிகள், வர்த்தகர்கள் மற்றும் வாங்குபவர்களுக்கு

வேளாண் விளைபொருட்களில் ஆன்லைன் வர்த்தகத்திற்கு உதவுகிறது. (மொத்தம் 585 சந்தைகள்)

- தற்போதுள்ள கிராமப்புற சந்தைகளை, கிராமிய வேளாண் சந்தைகளாக (GrAMs) தரம் உயர்த்தி அரசாங்கம், மேம்படுத்தியுள்ளது.
- விவசாய உற்பத்தி மற்றும் கால்நடை சந்தைப்படுத்தல் (மேம்பாடு மற்றும் வசதி) சட்டம் 2017, விவசாயிகளை நேரடியாக நுகர்வோருடன் இணைக்கிறது.
- 2 மத்திய விதைப்பரிசோதனை ஆய்வகங்கள் மற்றும் மரபணு மாற்றப்பட்ட உயிரினங்கள் மற்றும் உயிருள்ள மாற்றியமைக்கப்பட்ட உயிரினங்களைப் பரிசோதிப்பதற்கான 4 தேசிய மேம்பட்ட ஆய்வகங்கள் உட்பட, 130 அறிவிக்கப்பட்ட விதைப் பரிசோதனை ஆய்வகங்கள், நாட்டில் தற்போது செயல்படுகின்றன.
- DD விவசாயி (கிசான்) தொலைக்காட்சி சேனல் 2015-இல் தொடங்கப்பட்டது.

## தொழில் – நவீன, போட்டித்திறனுள்ள மற்றும் பணியாளர்கள், சமூகம் மீது அக்கறை செலுத்துகிற தொழில்துறைகள்

### வழங்கிய வாக்குறுதி

- சாதகமான வணிகச் சூழல்: இந்தியாவில் வணிகம் செய்வதற்கு சாதகமான மற்றும் தொழில் வளர்ச்சியை ஆதரிக்கும் சூழல் உருவாக்கப்படுவதை நாங்கள் உறுதி செய்வோம்.
- அதிகாரத்துவ தடங்கல்களை குறைத்தல்: சிக்கலான நிர்வாக நடைமுறைகளை களைதல், நடைமுறைகளை எளிமையாக்குதல் மற்றும் வணிக செயல்முறைகளை சீராக்க தடைகளை நீக்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவோம்.

- ஒற்றைச் சாளர அனுமதியளிப்பு அமைப்பு: ஹப் ஸ்போக் மாதிரியைப் பயன்படுத்தி, மத்திய மற்றும் மாநில அளவில் அனுமதி பெற ஒற்றைச் சாளர அமைப்பை நோக்கிச் செல்வதே எங்கள் இலக்கு ஆகும்.
- மெகாதிட்டங்களுக்கான ஒருங்கிணைப்பு: மெகாதிட்டங்களுக்கான அனுமதி அளிப்பு செயல்முறையில் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே நெருக்கமான ஒருங்கிணைப்பு மற்றும் கூட்டியக்கத்தை உறுதி செய்வோம்.
- வெளிப்படையான மற்றும் காலக்கெடுவுக்கான சுற்றுச்சூழல் அனுமதி அளிப்புகள்: சுற்றுச்சூழல் அனுமதி அளிப்புகள் குறித்து முடிவெடுத்தல் நடவடிக்கைகள் வெளிப்படையாகவும், காலக்கெடுவுக்கு உட்பட்டும் இருக்கும்.
- உலகத்தரம் வாய்ந்த முதலீடு மற்றும் தொழில்துறை பகுதிகள்: உற்பத்தி மையங்களாக செயல்பட உலக அளவில் போட்டி முதலீடு மற்றும் தொழில்துறை மண்டலங்களை அமைப்போம்.
- MSMEதுறைக்கானபணிக்குழு: குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் (MSME) துறையை மறுபரிசீலனை செய்ய மற்றும் புதுப்பிக்க ஒரு பணிக்குழுவை நிறுவுவோம். இது, நவீனமயமாக்கலுக்கான முறையான கடன் மற்றும் தொழில்நுட்பத்திற்கான சிறந்த அணுகலை வழங்கும்.
- தெளிவானமற்றும்வேகமானசுற்றுச்சூழல்சட்டங்கள்: குழப்பத்தைத் தவிர்க்கும் விதத்தில் சுற்றுச்சூழல் சட்டங்களை உருவாக்குவோம் மற்றும் தேவையற்ற தாமதங்கள் இன்றி முன்மொழிவுகளுக்கு உடனடி அனுமதி அளிப்பை உறுதி செய்வோம்.

## உற்பத்தித் துறை

- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான (R&D) – க்கான அரசின் செலவை அதிகரித்தல்: ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான பொதுச் செலவினங்களை அதிகரிப்பதற்கான பொறுப்புறுதி. உற்பத்தித் துறையில் புதுமை மற்றும் தொழில்நுட்ப

முன்னேற்றங்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது துறையின் போட்டித்தன்மைக்கு பங்களிக்கும்.

- தொழில் மூலம் R&D முதலீடுகளை ஊக்குவித்தல்: ஊக்கத்தொகைகளை வழங்குவதன் மூலம் தனியார் தொழில்துறையை R&D இல் முதலீடு செய்ய ஊக்கப்படுத்துவோம். இது புத்தாக்கத்தையும், தயாரிப்பு தரத்தையும், உற்பத்தித் துறையின் ஒட்டுமொத்த தொழில்நுட்ப திறன்களையும் மேம்படுத்த உதவும்.
- மென்பொருள் மற்றும் வன்பொருள் உற்பத்தி அலகுகளை அமைப்பதற்கு வசதி: மென்பொருள் மற்றும் வன்பொருள் உற்பத்தி அலகுகள் இரண்டையும் நிறுவுவதற்கு ஆதரவளிக்கும் சூழலை உருவாக்குவோம். இந்த முயற்சியானது நாட்டில் தொழில்நுட்பம் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தி திறன்களை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய நிறுவனங்களை உலக அளவில் முன்னேற்றம் காண ஊக்குவிப்போம்: உலகளவில் தங்கள் செயல்பாடுகளை விரிவுபடுத்துவதில் இந்திய நிறுவனங்களை ஊக்குவித்து, ஆதரிப்போம். சர்வதேச சந்தைகளை ஆராய்வதற்கும், உலக அரங்கில் போட்டியாளர்களாக மாறுவதற்கும் இந்திய வணிகங்களை ஊக்குவிப்பது இதில் அடங்கும்.
- இந்திய தொழில்முனைவோர் திறன் மீதான நம்பிக்கை: இந்திய வணிகத் தலைவர்கள், தொழில் முனைவோர்கள் உலகச் சந்தைகளில் வெற்றிகரமாகப் போட்டியிடும் திறன் உள்ளவர்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.
- எளிதான சுங்க அனுமதி மற்றும் விசாக்களுக்கான வர்த்தக வசதி: வணிக பயணத்திற்கான சுங்க அனுமதி மற்றும் விசா செயல்முறைகளை எளிதாக்குவதற்கு வர்த்தக வசதி நடவடிக்கைகளை அமைப்போம். இது அதிகாரத்துவ தடைகளை குறைத்து, தடங்கலற்ற சர்வதேச வர்த்தகம் மற்றும் வணிக தொடர்புகளை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- அரசு-தொழில்துறை பேச்சுவார்த்தை: அரசாங்கத்திற்கும் தொழில்துறைக்கும் இடையே வழக்கமான தொடர்பு மற்றும் பேச்சுவார்த்தைக்கான தளத்தை நிறுவுவோம். உற்பத்தித் துறையைப் பாதிக்கும் கொள்கைகளில் தொடர்ந்து விவாதிப்பதற்கும்,கவலைகளைத்தீர்ப்பதற்கும்,ஒத்துழைப்பதற்கும் இந்த வழிமுறை வாய்ப்பளிக்கும்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

நமது நாட்டிற்கு திறன், திறமை மற்றும் உள்ளார்ந்த ஆற்றல் இருந்தாலும், பாரதத்தில் உற்பத்தி செய்வதற்கும் பாரதத்தை உலகளாவிய உற்பத்தி மையமாக மாற்றுவதற்கும் ஒரு வலுவான மாற்றம் தேவைப்பட்டது. மேக் இன் இந்தியா இயக்கம்: பிரதமர் மோடியால் தொடங்கப்பட்ட இந்த இயக்கமானது, முதலீட்டை ஈர்ப்பது, புதுமைகளை வளர்ப்பது, திறன் மேம்பாட்டை மேம்படுத்துவது, அறிவுசார் சொத்துரிமையைப் பாதுகாப்பது மற்றும் உலகத் தரம் வாய்ந்த உற்பத்தி உள்கட்டமைப்பை உருவாக்கி இந்தியாவை உலகளாவிய உற்பத்தி மையமாக நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

MSMEகளுக்கான முக்கிய முன்னெடுப்புகள்: நாடு முழுவதும் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (எம்எஸ்எம்இ) வளர்ச்சி, விரிவாக்கம் மற்றும் வசதிகளை ஆதரிக்கும் 12 முக்கிய முன்னெடுப்புகளுக்கு பொறுப்புறுதி.

- வணிகம் செய்வதற்கான எளிதான தரவரிசை: இந்தியாவிற்கான உலக வங்கியின் எளிதாக தொழில் தொடங்கும் தரவரிசையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம், 2014 இல் 142 வது இடத்தில் இருந்து 2018 இல் 77 வது இடத்திற்கு இந்தியா முன்னேறியது. 2014 ஆம் ஆண்டில் இருந்த 6 வது இடத்துடன் ஒப்பிடும்போது தெற்காசிய நாடுகளில் வணிகம் செய்வதை எளிதாக்குவதில் பாரத் முதலிடத்தில் தற்போது உள்ளது.
- ஒழுங்குமுறைகளை நெறிப்படுத்துதல்: ஒழுங்குமுறைகளை ஒழுங்குபடுத்துதல், அதிகாரத்துவ தடைகளைக் குறைத்தல் மற்றும்

ஊழல் மற்றும் வரி ஏய்ப்பை எதிர்த்துப் போராடி வெல்வதற்கான முயற்சிகளை மோடி அரசு எடுத்துள்ளது.

- உலக வங்கியின் டூயிங் பிசினஸ் 2019 அறிக்கை: உலக வங்கியின் "உலக வங்கியின் வணிகம் செய்தல் 2019" அறிக்கையின் அடிப்படையில், உலக வங்கியால் கண்காணிக்கப்படும் 11 பிரிவுகளிலும் பாரத் நடைமுறைகளை எளிதாக்கியுள்ளது.
- நல்லாட்சிக்கு முக்கியத்துவம்: "குறைந்தபட்ச அரசாங்கம் மற்றும் அதிகபட்ச ஆளுகை" என்ற தொலைநோக்குடன் நல்லாட்சியின் முக்கியத்துவத்தை பிரதமர் மோடி எப்போதும் வலியுறுத்தியுள்ளார். 372 குறிப்பிட்ட வணிக சீர்திருத்த நடவடிக்கைகள் மாநிலங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டன.
- உலகளாவிய போட்டித்தன்மை மற்றும் FDI: 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் கிரீன்ஃபீல்டு அன்னிய நேரடி முதலீட்டில் (FDI) உலகின் முதல் இடத்தைப் பிடித்தது இந்தியாவின் சாதனையாகும். உலகப் பொருளாதார மன்றத்தின் உலகளாவிய போட்டிக் குறியீட்டில் 2014-15 ஆம் ஆண்டில் 71 வது இடத்தில் இருந்து 40 வது இடத்திற்கு நம் நாடு முன்னேறியது.
- "பரிவேஷ்" – சுற்றுச்சூழல், வனம், வனவிலங்கு மற்றும் CRZ அனுமதி அளிப்புகளுக்கான சுற்றுச்சூழல் ஒற்றை சாளர மையம் பிரதமர் மோடியால் 2018 இல் தொடங்கப்பட்டது.
- தொழில்துறை வரையறை மண்டல திட்டம்: தொழில்துறை வரையறுத்த மண்டலம் திட்டத்தின் கீழ் உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு, இணைப்பு மற்றும் புதிய கிரீன்ஃபீல்ட் ஸ்மார்ட் நகரங்களை உருவாக்குதல். இதில், டெல்லி - மும்பை தொழில்துறை வரையறுத்த மண்டலம் (DMIC) திட்டம் குறிப்பிடத்தக்கது.
- தொழில்துறை வரையறுத்த மண்டலத் திட்டங்களின் விரிவாக்கம்: பிற நான்கு தொழில்துறை வரையறுத்த மண்டலத் திட்டங்களுக்கான திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள்: அமிர்தசரஸ் - கொல்கத்தா தொழில்துறை தாழ்வாரம் (AKIC), சென்னை - பெங்களூரு தொழில்துறை தாழ்வாரம் (CBIC), பெங்களூரு -

மும்பை பொருளாதார தாழ்வாரம் (BMEC), மற்றும் கொல்கத்தாவில் இருந்து சென்னை வரையிலான கிழக்கு கடற்கரை பொருளாதார காரிடார் (ECEC) ஆகியவை தொடங்கப்பட்டுள்ளன.

- சட்டமன்ற மற்றும் ஒழுங்குமுறை சீர்திருத்தங்கள், ஸ்டார்ட்அப்களுக்கான ஆதரவு மற்றும் MSMEகளுக்கான குறைந்த வரி விகிதங்கள், விரைவான சுற்றுச்சூழல் அனுமதி அளிப்புகள், செயல்முறையை 600 நாட்களில் இருந்து 140 நாட்களாக குறைக்கிறது.

## உற்பத்தித் துறை

- IMPRINT திட்டம்: மோடி அரசு 2014 ஆம் ஆண்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஆராய்ச்சி கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப (IMPRINT) திட்டத்தையும், 2015 ஆம் ஆண்டில் உச்சதார் அவிஷ்கர் யோஜனா (UAY) திட்டத்தையும் தொடங்கியது.
- இத்திட்டம் உயர்கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சியில் கவனம் செலுத்துகிறது, இதன் மூலம் 2016-17 முதல் மூன்று ஆண்டுகளுக்கு ரூ.487.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 'உச்சதர் அவிஷ்கர் யோஜனா' (UAY): 2015 இல் தொடங்கப்பட்டது, UAY ஆனது தொழில்துறை சார்ந்த, விளைவு சார்ந்த ஆராய்ச்சி திட்டங்களை ஊக்குவிக்கிறது. இது ரூ. 2016-17 முதல் இரண்டு ஆண்டுகளுக்கு 475.00 கோடி செலவினத்தைக் கொண்டுள்ளது.
- **எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தி கிளஸ்டர்கள் (EMC) திட்டம்**: 2017 இல் 5 ஆண்டுகள் காலத்திற்கு அறிவிக்கப்பட்டது (அக்டோபர், 2022 வரை), அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கான நிதியை வழங்குவதற்கு EMC திட்டம் உள்ளது. இது, 15 மாநிலங்களில் 20 கிரீன்ஃபீல்ட் இஎம்சி மற்றும் 3 பொது வசதி மையங்களின் ஒப்புதலை உள்ளடக்கியது. அரசு மானிய உதவி உட்பட மொத்தத்தில் 3898 கோடி ரூபாய். நாடு முழுவதும் 15 மாநிலங்களில் 1577 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- **மொபைல் உற்பத்தி தொழிலகங்கள் வளர்ச்சி:** மொபைல் உற்பத்தி தொழிலகங்கள் 2014 இல் 2 இல் இருந்து 2019 இல் 268 ஆக கணிசமாக அதிகரித்துள்ளது.
- **மேக் இன் இந்தியா இயக்கம்:** செப்டம்பர் 25, 2014 அன்று, பிரதமர் மோடியால் தொடங்கப்பட்ட, “மேக் இன் இந்தியா” இயக்கம், இந்தியாவை உற்பத்திக்கான மையமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டது மற்றும் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்றாக பாரத் முன்னேறுவதற்கு பங்களித்துள்ளது.
- **உலகளாவிய எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தியில் பங்கு:** உலகளாவிய எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தியில் இந்தியாவின் பங்கு 2012 இல் 1.3% இல் இருந்து 2018 இல் 3.0% ஆக அதிகரித்துள்ளது.
- **வர்த்தகத்தை எளிதாக்குவதற்கான ஒற்றைச் சாளர இடைமுகம் (SWIFT):** ஏப்ரல் 2016 இல் மத்திய கலால் மற்றும் சுங்க வாரியத்தால் தொடங்கப்பட்டது, SWIFT ஆனது ஏற்றுமதியாளர்களுக்கு பொதுவான மின்னணு அறிவிக்கையை தாக்கல் செய்ய உதவுகிறது, இது வர்த்தக செயல்முறையை ஒழுங்குபடுத்துகிறது.
- **அங்கீகாரம் பெற்ற வாடிக்கையாளர் திட்டம் (ACP) மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார ஆபரேட்டர் (AEO):** ஏசிபி மற்றும் ஏஇஓ ஆகிய இரண்டு எளிதாக்கும் திட்டங்களும், ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கு வசதி மற்றும் நன்மைகளை வழங்குவதற்காக ஒருங்கிணைந்த மூன்று அடுக்கு **AEO** திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.
- **சுங்க அனுமதியளிப்பு வசதிகள்:** 24X7 சுங்க அனுமதி வசதி 19 துறைமுகங்கள் மற்றும் 17 விமான சரக்கு வளாகங்களில் கிடைக்கிறது. ஏற்றுமதி/இறக்குமதி செயல்முறைக்கு தேவையான ஆவணங்களின் எண்ணிக்கையை அரசாங்கம் குறைத்துள்ளது.
- **டிஜிட்டல் இந்தியா திட்டம்:** ஆகஸ்ட் 2014 இல் தொடங்கப்பட்ட டிஜிட்டல் இந்தியா திட்டம், இந்தியாவை டிஜிட்டல் முறையில் அதிகாரம் பெற்ற சமூகம் மற்றும் அறிவுப் பொருளாதாரமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# கூட்டுறவுத் துறை, கைவினைப்பொருட்கள், கைவினைஞர்கள்

## வழங்கிய வாக்குறுதி

- சட்டங்களின் மறு சீராய்வு மற்றும் திருத்தம்: கூட்டுறவுத் துறை தொடர்பான தற்போதைய சட்டங்களை மறு சீராய்வு செய்வதாகவும், குறைபாடுகள் மற்றும் முரண்பாடுகளை நிவர்த்தி செய்ய பல மாநில கூட்டுறவுச் சட்டத்தில் திருத்தம் செய்வதாகவும் அரசாங்கம் உறுதியளித்தது.
- சந்தை இணைப்புகள்: தேசிய மற்றும் சர்வதேச அளவில் கூட்டுறவுத் துறைக்கான சந்தை இணைப்புகளை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டது. கூட்டுறவுகளின் செயல்வரம்பை அதிகரிக்க பரந்த சந்தைகளுடன் இணைக்கும் முயற்சிகளை இது நெறிப்படுத்துகிறது.
- கடன் மற்றும் தகவலுக்கான அணுகல்: கூட்டுறவுத் துறையில் உள்ள நிறுவனங்களுக்கு கடன், தகவல் மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்கான அணுகலை வழங்குவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது நிதி உள்ளடக்கம் மற்றும் திறன் மேம்பாட்டில் கவனம் செலுத்துவதை நெறிப்படுத்துகிறது.
- பிராண்டிங், பேக்கேஜிங் மற்றும் தொழில்நுட்பம் போன்ற வழிகள் மூலம் மதிப்பு கூட்டல் செயல்பாடுகள் ஊக்குவிக்கப்படும்.
- கொல்லர்கள், நெசவாளர்கள், தச்சர்கள், முடி திருத்துநர்கள், காலணி கைவினைஞர்கள் மற்றும் குயவர்கள் போன்ற கைவினைஞர்களுக்கான வணிக வாய்ப்புகளை திறன்களை மேம்படுத்துவதற்கு திட்டங்கள் தீட்டப்படும்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- பல மாநில கூட்டுறவு சங்க விதிகளின் திருத்தம்: 2016 ஆம் ஆண்டு சட்டத்தின் 124வது பிரிவின் கீழ் பல மாநில கூட்டுறவு

சங்க விதிகளை அரசாங்கம் **திருத்தியது**. இது கூட்டுறவுத் துறையில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கான உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

- 'அண்டர் பெஹ்சான்' முன்னெடுப்பு: கைவினைக் கலைஞர்களுக்கு ஆதார் அடிப்படையிலான அடையாள அட்டைகளை பதிவு செய்து வழங்குவதற்காக 2016 ஆம் ஆண்டு 'அண்டர் பெஹ்சான்' திட்டம் தொடங்கப்பட்டது. சுமார் 17.83 லட்சம் பயனாளிகளுடன், கைவினைஞர்களுக்கான நன்மைகளுக்கான அணுகலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது இந்த முன்னெடுப்புத் திட்டம்.
- மெகா கிளஸ்டர்களை நிறுவுதல்: பரேலி, லக்னோ, கட்ச் மற்றும் ஜம்மு & காஷ்மீர் போன்ற இடங்களில் புதிய மெகா கிளஸ்டர்கள் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுக்கள் கைவினைப் பொருட்களின் வளர்ச்சிக்கு ஆதரவாக நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றன. ஒவ்வொரு கிளஸ்டர்களுக்குமான செலவீடு 28.5 கோடி மற்றும் ஜம்மு & காஷ்மீரில் தலா ரூ. 20.00 கோடி ரூபாய் ஆகும்
- கைவினைப் பொருட்கள் மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டங்கள்: ஜார்க்கண்ட், உத்தரகண்ட், கேரளா, மத்தியப் பிரதேஷ், தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, பீகார், வாரணாசி (உத்தரப்பிரதேஷ்) ஆகியவற்றில் 1,58,805 கைவினைஞர்கள் பயனடையும் வகையில் ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கைவினைப்பொருட்களை மேம்படுத்துவதற்காக சிறப்பு திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்படுத்தல்: வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக 756 நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன, இதற்காக ரூ. 53.33 கோடி செலவிடப்பட்டது மற்றும் 29570 கைவினைஞர்கள் பயனடைந்தனர்.

- சந்தைப்படுத்தல் ஆதரவு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு: சந்தைப்படுத்தல் ஆதரவு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன, கணிசமான முதலீடுகள் கைவினைஞர்களுக்கு பயனளிக்கும் மற்றும் துறையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. 58526 கைவினைஞர்கள் பயனடையும் வகையில் ரூ 87.61 கோடி செலவிலான 788 நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு: 17550 கைவினைஞர்கள் பயனடையும் வகையில் ரூ 23.39 கோடி செலவிலான 702 நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.
- கைவினைஞர்களுக்கு நேரடிப் பயன் மற்றும் உள்கட்டமைப்பு ஆதரவு: 478089 கைவினைஞர்கள் பயனடையும் வகையில் ரூ 58.40 கோடி செலவிலான திட்டம் மேற்கொள்ளப்பட்டது.
- உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப ஆதரவு: உள்கட்டமைப்பு ஆதரவை வழங்க ரூ 98.76 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- விரிவான கைவினைப்பொருட்கள் கிளஸ்டர் மேம்பாடு (மெகா கிளஸ்டர்): கணிசமான எண்ணிக்கையிலான கைவினைஞர்கள் பயன்பெறும் வகையில், விரிவான கைவினைப் பொருட்கள் கிளஸ்டர் மேம்பாட்டிற்கு 226.65 கோடிகள் அனுமதிக்கப்பட்டன. 71915 கைவினைஞர்கள் பயனடைகிறார்கள்.

# சேவைகள் – தரம் மற்றும் வினைத்திறனால் இயக்கப்படுகிறது

## வணிகம் மற்றும் வர்த்தகம்

### வழங்கிய வாக்குறுதி

- ஜீரோ டிஃபெக்ட் (பூஜ்ய குறைபாடு திட்டம்) தயாரிப்புகளில் கவனம் செலுத்துவோம்: நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின்

தரத்தை வலியுறுத்தி, குறைபாடு இல்லாத பொருட்களை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்துவதாக அரசாங்கம் உறுதியளித்தது.

- உலகத்தரம் வாய்ந்த துறைமுகங்களின் வளர்ச்சி: கடல்சார் வர்த்தகத்தை மேம்படுத்த உலகத் தரம் வாய்ந்த துறைமுகங்களை உருவாக்குவதற்கும், அவற்றை வலுவான சாலை மற்றும் ரயில் உள்கட்டமைப்புடன் இணைப்பதற்கும் பொறுப்புறுதி.
- **விமான சரக்கு வசதிகளை மேம்படுத்துதல்:** நாடு முழுவதும் விமான சரக்கு வசதிகளை மேம்படுத்தும் வாக்குறுதி, திறமையான தளவாடங்கள் மற்றும் போக்குவரத்தில் கவனம் செலுத்த பரிந்துரைக்கிறது.
- **நடப்புக் கணக்குப் பற்றாக்குறையைக் குறைத்தல் (CAD):** ஏற்றுமதிக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலமும், இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதன் மூலமும் நடப்புக் கணக்குப் பற்றாக்குறையைக் குறைக்க தீவிர நடவடிக்கைகள். பொருட்களுக்கு மதிப்புக் கூட்டல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. சரக்கு மற்றும் சேவை வரி (GST) அமலாக்கம்:
- சரக்கு மற்றும் சேவை வரியை (ஜிஎஸ்டி) பொருத்தமான காலக்கெடுவுக்குள் செயல்படுத்த மாநில அரசுகளுடன் இணைந்து பணியாற்றுவதற்கான அர்ப்பணிப்பு மற்றும் அதன் வெற்றிகரமான செயல்பாட்டிற்கு வலுவான தகவல் தொழில்நுட்ப நெட்வொர்க் அமைப்பை நிறுவுவோம்.
- அறிவுசார் சொத்துரிமைகள் (IPRகள்) மற்றும் காப்புரிமைகள் மீதான முக்கியத்துவம்: அறிவுசார் சொத்துரிமைகள் (IPRs) மற்றும் காப்புரிமைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதற்கான தனது விருப்பத்தை அரசாங்கம் வெளிப்படுத்தியது, இது புத்தாக்கத்திற்கான உந்துதலையும் அறிவுசார் சொத்துகளைப் பாதுகாப்பதையும் குறிக்கிறது.
- சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் சிறு வணிகர்களின் நலன்களைப் பாதுகாத்தல்: சில்லறை விற்பனையாளர்கள், சிறு வணிகர்கள் மற்றும் விற்பனையாளர்களின் நலன்களைப் பாதுகாக்க

தேவையான நடவடிக்கைகளை எடுப்பதில் உறுதி. கூடுதலாக, போட்டித்திறனை மேம்படுத்துவதற்கான நவீனமயமாக்கல் நுட்பங்கள் மற்றும் வழிமுறைகளை அவர்களுக்கு வழங்குதல்.

- உரிமம் வழங்கும் நடைமுறைகளை எளிதாக்குதல்: சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SMEs) தங்கள் தொழில்களைத் தொடங்க பல உரிமங்களைப் பெறுவதில் தடைகள் இல்லாததை உறுதிப்படுத்த அரசு ஈடுபாட்டுறுதியுடன் உள்ளது. சிறு வணிகர்கள் துன்பப்படுவதைத் தடுக்க நெறிப்படுத்தப்பட்ட அமைப்பை உருவாக்கப்பட்ட உறுதியளிக்கப்பட்டது.
- நிறுவனக் கடன் எளிதாகக் கிடைக்கும்: வணிகங்களுக்கு, குறிப்பாக SME களை ஆதரிக்க நிறுவன கடன் எளிதாக கிடைப்பதை உறுதி செய்வோம்.
- காலாவதியான சட்டங்களின் மறு சீராய்வு: ஒழுங்குமுறை சிக்கல்களைக் குறைப்பதற்காக வழக்கற்றுப் போன மற்றும் பல சட்டங்களை மறு சீராய்வு செய்வதற்கும் எளிமைப்படுத்துவதற்கும் உறுதியேற்பு.
- தொலைத்தொடர்புத் துறையில் தர மேம்பாடு: நாட்டில் தொலைத்தொடர்பு புரட்சிக்கான அங்கீகாரம் மற்றும் குரல், தரவு சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு மற்றும் திறனை முழுமையாகப் பயன்படுத்துவோம் என்ற உறுதிமொழி.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- **ZED திட்டம் (பூஜ்ய குறைபாட்டுத் திட்டம்):** 2016 இல் MSMEகளுக்கு (குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள்) அறிமுகப்படுத்தப்பட்டது. பூஜ்யக் குறைபாடுகள் மற்றும் குறைந்தபட்ச சுற்றுச்சூழல் தாக்கம் கொண்ட தயாரிப்புகளை தயாரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த சான்றிதழுக்காக கிட்டத்தட்ட 23,948 வணிக நிறுவனங்கள் பதிவு செய்துள்ளன.

- **சாகர்மாலா திட்டம்:** 8 லட்சம் கோடி முதலீட்டில் 500 திட்டங்களை உள்ளடக்கியது. துறைமுகங்களை மேம்படுத்துதல் மற்றும் கடல்சார் வர்த்தகத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. 4 ஆண்டுகளில் 106 புதிய நீர்வழிச்சாலைகளை உருவாக்கியது, முந்தைய 30 ஆண்டுகளில் இது 5 ஆக இருந்தது.
- AAI கார்கோ லாஜிஸ்டிக்ஸ் அண்ட் அலைட் சர்வீசஸ் கம்பெனி லிமிடெட் (AAICLAS): இந்திய விமான நிலைய ஆணையத்தின் துணை நிறுவனமாக 11 ஆகஸ்ட் 2016 இல் உருவாக்கப்பட்டு, இந்திய விமான நிலைய ஆணையத்தின் 100% துணை நிறுவனமாக இணைக்கப்பட்டது. இந்தியா முழுவதும் 20 சர்வதேச மற்றும் 31 உள்நாட்டு விமான சரக்கு டெர்மினல்கள் மற்றும் 1 கூரியர் வசதியை இயக்குகிறது.
- **திருத்தி அமைக்கப்பட்ட வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை:** உலகளாவிய வர்த்தக விதிகளை ஆதரிப்பதில் கவனம் செலுத்துகிறது. ஜிஎஸ்டியின் கீழ் சீரான வரி விகிதங்கள் ஏற்றுமதியாளர்களுக்கு தளவாடச் செலவுகளைச் சேமிக்கின்றன.
- **சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி):** “ஒரே நாடு ஒரே வரி” என்று அழைக்கப்படும் ஒரு ஒருங்கிணைந்த வரி அமைப்பு. கூடுதல் வரிகளை நீக்கி, வரி வசூலை திறம்படச் செய்து ஊழலைக் குறைக்கிறது. மாநிலங்களுக்கு இடையேயான சரக்குகளின் எளிதான இயக்கத்தைக் கொண்டுவருகிறது
- **தேசிய அறிவுசார் சொத்து உரிமைகள் (IPR) கொள்கை 2016:** இந்தியாவில் படைப்பாற்றல் மற்றும் புதுமைகளை ஊக்குவிப்பதற்காக “படைப்புத்திறனுள்ள இந்தியா; புதுமையான இந்தியா” என்ற குறிக்கோளுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- **MSME களுக்கான 59 நிமிட கடன் போர்டல்:** சிறு வணிகங்களுக்கான கடன் வசதியை எளிதாக அணுகும் வகையில் இது தொடங்கப்பட்டது.

- கடன்கள் 59 நிமிடங்களுக்குள் அனுமதிக்கப்படுவதை உறுதி செய்கிறது. CPSEகள் மூலம் MSME களில் இருந்து 25% கொள்முதல் கட்டாயம்: CPSEகள் (மத்திய பொதுத்துறை நிறுவனங்கள்) சிறு வணிகங்களை ஆதரிக்கும் MSMEக்களிடம் இருந்து குறைந்தபட்சம் 25% கொள்முதல் செய்ய வேண்டும் என்ற நிபந்தனை.
- **பிரதான் மந்திரி முத்ரா யோஜனா (PMMY) திட்டம்:** சிறு மற்றும் குறு வணிக நிறுவனங்களுக்கு நிதிக் கடன் வழங்க 2015 இல் தொடங்கப்பட்டது. 6 லட்சம் கோடிக்கு மேல் நிதிக் கடன் விநியோகிக்கப்பட்டுள்ளது.
- **1500க்கும் மேற்பட்ட வழக்கற்றுப் போன சட்டங்களை நீக்குதல்:** சட்ட செயல்முறைகளை எளிமைப்படுத்த, காலாவதியான மற்றும் தேவையற்ற சட்டங்களை (1500 க்கும் மேற்பட்டவை) அரசாங்கம் அகற்றியது.
- **தேசிய டிஜிட்டல் தகவல் தொடர்பு கொள்கை-2018 (NDCP-2018):** 2018 இல் பிரதமர் மோடியால் அங்கீகரிக்கப்பட்டது. தொலைத்தொடர்புத் துறையில் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட மற்றும் பயன்பாடு சார்ந்த கொள்கைகளில் கவனம் செலுத்துகிறது. 5G, IoT, M2M போன்ற புதிய தொழில்நுட்பங்களுடன் துறையை நிர்வகிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சுற்றுலா – உணரப்படாத அல்லது கண்டுபிடிக்கப்படாத சாத்தியங்கள் மற்றும் வாய்ப்புகள்

### வழங்கிய வாக்குறுதி

- டூரிஸ்ட் சர்க்யூட்களுக்கான (குறிப்பிட்ட புவியியல் பகுதியில் உள்ள பல்வேறு சுற்றுலா இடங்களை இணைக்கும் பாதை அல்லது பயணம்) செயல் இலக்கு பயன்முறை திட்டப்பணி:
- இந்த உயர் கவனம் செலுத்தும் திட்டத்தை தொடங்குவதாக அரசு உறுதியளித்தது. குறிப்பிட்ட கருப்பொருள்களுடன் 50 சுற்றுலா

சுற்றுகளை உருவாக்குவதே இதன் இலக்கு ஆகும். தொல்லியல் மற்றும் பாரம்பரியம், பண்பாடு மற்றும் ஆன்மீகம், இமயமலை, பாலைவனம், கடலோரப் பகுதிகளை, மருத்துவம் (ஆயுர்வேதம் மற்றும் நவீன மருத்துவம்) போன்றவை இதில் அடங்கும். எளிய கட்டண மற்றும் கருப்பொருள் சுற்றுலாக்கள்: சுற்றுலா சுற்றுகள் பட்ஜெட்டுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சுற்றும் ஒரு குறிப்பிட்ட கருப்பொருளை மையமாகக் கொண்டது; பயணிகளுக்கு தனித்துவமான அனுபவத்தை வழங்குகிறது.

- உள்கட்டமைப்பு மற்றும் வேலைவாய்ப்பை அதிகரித்தல்: இந்த சுற்றுலா சுற்றுகளை உருவாக்குவது மேம்பட்ட உள்கட்டமைப்புக்கு வழிவகுக்கும். இது ஒவ்வொரு சுற்று வட்டாரத்திலும் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- ஸ்வதேஷ் தர்ஷன் திட்டம் தொடக்கம்: பிரதமர் மோடி அரசு முயற்சியாக ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.
- ஐந்து ஆரம்ப சுற்றுகள்: இத்திட்டம் ஆரம்பத்தில் ஐந்து கருப்பொருள் சுற்றுகளை உள்ளடக்கியது: இமயமலை, வடகிழக்கு, கிருஷ்ணா, புத்த சமய மற்றும் கடற்கரை சுற்றுகள். சுற்றுகளின் விரிவாக்கம் (2015-2017): அடுத்தடுத்த ஆண்டுகளில் (2015-2017), பாலைவனம், பழங்குடியினர், சுற்றுச்சூழல், வனவிலங்கு, கிராமப்புறம், ஆன்மீகம், ராமாயணம், பாரம்பரியம், தீர்த்தங்கர் மற்றும் சூஃபி போன்ற 10 கருப்பொருள் சுற்றுகளை உள்ளடக்கியதாக திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.
- கருப்பொருள் சுற்றுகள்: இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு சுற்றுலா அனுபவங்களை வழங்குவதற்காக குறிப்பிட்ட கருப்பொருள்கள் அல்லது ஈர்ப்பு வகைகளைச் சுற்றி இந்த சுற்றுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

# தொழிலாளர் ஆட்பலம் – நமது வளர்ச்சியின் தூண்

## வழங்கிய வாக்குறுதி

- **அமைப்புசாரா துறை தொழிலாளர்களுக்கான அடையாள அட்டைகள்:** அமைப்புசாரா துறையில் உள்ள தொழிலாளர்களுக்கு தரமான சுகாதாரம் மற்றும் கல்வி சேவைகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் அவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதாக அரசு உறுதியளித்தது. அவர்களின் திறன்களை மேம்படுத்த பயிற்சி திட்டங்களும் வழங்கப்படும்.
- **தொழிலாளர்களுக்கான நிதிச் சேவைகள்:** தொழிலாளர்களுக்கு நவீன நிதிச் சேவைகளை வழங்குவதே குறிக்கோள், அவர்களின் நலனுக்காக ஒரு பிரத்யேக தொழிலாளர் வங்கி நிறுவப்படும்.
- **காலாவதியான தொழிலாளர் சட்டங்களின் மறு சீராய்வு:** காலாவதியான, சிக்கலான மற்றும் முரண்பாடான தொழிலாளர் சட்டங்களை மறு சீராய்வு செய்யவும், புதுப்பிக்கவும் தொழிலாளர் நலனில் ஆழ்ந்த அக்கறையும், உரிமையும் உள்ள பல்வேறு தரப்பினர்களையும் ஒன்றிணைக்க அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.
- **மேம்படுத்தப்பட்ட ஓய்வூதியம் மற்றும் சுகாதார காப்பீடு:** பாதுகாப்பு வலைகளை வலுப்படுத்துதல், குறிப்பாக ஓய்வூதியம் மற்றும் உடல்நலக் காப்பீடு, பல்வேறு வகை தொழிலாளர்களை உள்ளடக்கும் திட்டங்களில் அடங்கும்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- **அமைப்புசாரா தொழிலாளர் அடையாள எண் (UWIN):** அமைப்புசாரா துறை ஊழியர்களுக்கு ஆதார் அடிப்படையிலான அடையாள எண்களை வழங்க அரசாங்கம் 402.7 கோடி செலவில் UWIN ஐ அறிமுகப்படுத்தியது. இந்த முயற்சி, 2017-18 மற்றும் 2018-19 ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டது, பிசிக்கல் ஸ்மார்ட் கார்டுகளை வழங்காமல் அடையாளத்தை ஒழுங்குபடுத்துவதை இது நோக்கமாகக் கொண்டது.

- **ஜன்தன் திட்டம்:** இந்த முன்னெடுப்பு தொழிலாளர்களை பூஜ்யக் கையிருப்பு வங்கிக் கணக்குகளைத் திறக்க ஊக்குவித்து, அவர்களுக்கு நவீன நிதிச் சேவைகளுக்கான அணுகலை வழங்குகிறது. முதன் முறையாக பொருளாதார ரீதியாக பின்தங்கிய பின்னணியில் இருந்து சுமார் 35.75 கோடி ஏழை மக்கள் இந்த திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.
- **வழக்கற்றுப் போன சட்டங்களை நீக்குதல்:** பல்வேறு துறைகளில் உள்ள 1500க்கும் மேற்பட்ட காலாவதியான சட்டங்களை அரசாங்கம் நீக்கியது; ஒழுங்குமுறைகளை எளிதாக்கியது மற்றும் செயல்திறனை மேம்படுத்தியது.
- அடல் பென்ஷன் யோஜனா (APY): 2015 இல் தொடங்கப்பட்டது, APY அமைப்பு சாரா துறையில் உள்ள மக்களை இலக்காகக் கொண்டு, அவர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தை வழங்குகிறது. இந்தத்திட்டத்தின் மூலம் சுமார் 1.5 கோடி பேர் பயனடைந்துள்ளனர்.
- பிரதமர் ஜன் ஆரோக்கிய யோஜனா: 2018 இல் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டம், பொருளாதாரத்தில் பின்தங்கிய 50 கோடி நபர்களுக்கு ஆண்டுதோறும் ரூ. 5 லட்சம் வரை இலவச மருத்துவக் காப்பீட்டை வழங்குகிறது. இந்த முயற்சியின் மூலம் சுமார் 28 லட்சம் பேர் விரிவான சுகாதார சேவைகளைப் பெற்றுள்ளனர்.

## வீட்டுவசதி – இனி கனவல்ல நிஜமே!

### வழங்கிய வாக்குறுதி

- அனைவருக்கும் வீட்டு வசதி என்ற இலக்கை நோக்கி முன்னேற, நமது அனைத்து வளங்களுக்கும் முன்னுரிமை கொடுத்து செயல்படுதல்.
- நகர்ப்புறங்களில் நிலத்தை ஆதாரமாகவும் மற்றும் கிராமப்புறங்களில் அதிகரித்து வரும் குறைந்த பயிற்சி கொண்ட

தொழிலாளர்களுக்கான தேவையையும் பயன்படுத்திக் கொள்ளுதல்.

- இந்த திட்டத்தின் விடுபட்ட பகுதிகளைச் சேர்க்கும் அதே வேளையில், ஏற்கனவே உள்ள இதுதொடர்பான பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து மேம்படுத்தும் வகையில், திட்டத்தை புதுமையான முறையில் கட்டமைத்தல்.
- பொருத்தமான கொள்கை இடையீட்டு நடவடிக்கைகள் மற்றும் எளிதாக கடன் கிடைக்கும் தன்மை மற்றும் வட்டி மானியத் திட்டங்கள் மூலம் ஒட்டுமொத்த வீட்டுவசதித் துறையையும் ஒரே நேரத்தில் ஊக்குவித்தல்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- **பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (அனைவருக்கும் வீடு) –** நகர்ப்புற பிரிவு (PMAY-U) & கிராமப்புற பிரிவு (PMAY-G), பிரதமர் மோடியின் முதன்மையான செயல்திட்டப் பணி 2015-2016-இல் தொடங்கப்பட்டது. இத்திட்டம், 2022-ஆம் ஆண்டிற்குள் தகுதியுள்ள அனைத்து நகர்ப்புற குடும்பங்களுக்கும் கிராமப்புற வீடுகளுக்கும் மண்குடிசை அல்லாத உறுதியான வீட்டை உறுதி செய்வதன் மூலம், குடிசைவாசிகள் உட்பட பொருளாதார ரீதியில் நலிவடைந்த பிரிவினர் (EWS)/ குறைந்த வருமானம் கொண்ட பிரிவினர் (LIG) மற்றும் மத்திய தர வருமானம் கொண்ட பிரிவினர் (MIG) ஆகியோரின் நகர்ப்புற வீட்டுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து வருகிறது.
- அனுமதிக்கப்பட்ட வீடுகளின் கட்டுமானத்தை விரைவுபடுத்த, அதிக எண்ணிகையிலான வீடுகளை குறைந்தநேரத்தில் கட்டுவதற்கென்று 24 புதிய தொழில்நுட்பங்களை அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளது.
- **மலிவு விலை வீடுகள் நிதியம்** (AHF), **தேசிய வீட்டுவசதி வங்கி**யில் (NHB) நிறுவப்பட்டது

- வீட்டுவசதித் துறையில் **ரூ.3.6 லட்சம் கோடி** அளவிலான பெரிய முதலீடு, தூண்டப்பட்ட விளைவின் உதவியுடன் கட்டுமானம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் அதிக வேலைவாய்ப்புகளை வழங்குகிறது மற்றும் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குப் பங்களிக்கிறது.
- அரசாங்கத்தால், சர்வதேச வீட்டுவசதி தொழில்நுட்ப சவால் - இந்தியா (GHTC-India) திட்டம் தொடங்கப்பட்டது. இது வீட்டு கட்டுமானத் துறைக்காக உலகெங்கிலும் இருந்து நிலையான, சுற்றுச்சூழலுக்கு இணக்கமான மற்றும் பேரழிவை எதிர்க்கும் திறன் கொண்ட புதுமையான கட்டுமான தொழில்நுட்பங்களின் தொகுப்பு ஒன்றை அடையாளம் கண்டு பிரதானப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## போது உள்கட்டமைப்பு – சிறந்ததை விடச் சிறந்தது

### வழங்கிய வாக்குறுதி

- சரக்கு வழித்தடங்கள் மற்றும் அதற்கு உதவும் வகையில் அமைந்த தொழில்துறை தாழ்வாரங்களின் (காரிடார்களின்) பணிகள் துரிதப்படுத்தப்படும். இதன் மூலம் மக்கள் மற்றும் சரக்குகளின் வேகமான இயக்கம் சாத்தியமாகும்.
- வடகிழக்கு மற்றும் ஜம்மு காஷ்மீர் போன்ற தொலைதூர மாநிலங்கள் உலகத்தரம் வாய்ந்த நெடுஞ்சாலைகள் மற்றும் ரயில் பாதைகள் மூலம் இந்தியாவின் மற்ற பகுதிகளுடன் இணைக்கப்படும்.
- தேசிய நெடுஞ்சாலை கட்டுமானத் திட்டங்கள், குறிப்பாக எல்லைப்புற மற்றும் கடற்கரையோர நெடுஞ்சாலைகள் துரிதப்படுத்தப்படும்.
- ஒவ்வொரு கிராமமும் அனைத்து காலநிலைகளிலும் தாக்குப்பிடிக்கும் வகையிலான சாலைகள் மூலம் இணைக்கப்படும்.
- தற்போதுள்ள மற்றும் செயல்படும் நிலையில் உள்ள விமான நிலையங்களை நவீனமயமாக்குவோம், மேலும் குறிப்பாக சிறிய

நகரங்கள் மற்றும் அனைத்து சுற்றுலாப் பகுதிகளையும் இணைக்கும் வகையில் புதிய விமான நிலையங்களை உருவாக்குவோம். கூடுதலாக, நாட்டின் பல்வேறு தொலைதூர மற்றும் உள்ளூர் இடங்களுக்கு உள்நாட்டு விமான போக்குவரத்துக்கான சாத்தியம் உள்ள இடங்களைக் கண்டறிவோம். இத்தகைய விமான தளங்கள் உருவாக்கப்படுவதன் மூலம் குறைந்த கட்டணத்தில் நாட்டிற்குள்ளேயே விமானப் பயணம் சாத்தியமாகும்.

- இந்தியா நீண்ட கடற்கரைகளை தன்னகத்தே கொண்டுள்ளதால், துறைமுகங்களை முன்வைத்ததொரு வளர்ச்சியின் பொருளாதார மாதிரியை நாங்கள் உருவாக்குவோம்.
- இருக்கும் துறைமுகங்களை நவீனமயமாக்கும் அதேசமயம், புதிய துறைமுகங்களையும் நாங்கள் உருவாக்குவோம். இப்படியாக எங்கள் சாகர் மாலா திட்டத்தை ஒன்றிணைப்போம்.
- தனியார் துறை வளங்கள் மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொள்ள பொது – தனியார் கூட்டாண்மை ஊக்குவிக்கப்படும். அதற்காக ஒரு நிறுவன கட்டமைப்பு உருவாக்கப்படும்; அதே நேரத்தில் இதனை ஒழுங்கு செய்பவர்களுக்கு அதிக சுயாட்சி மற்றும் பொறுப்புக்கூறல் வழங்கப்படும்.

## அடுத்த தலைமுறை உள்கட்டமைப்பு

- வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு எரிவாயு வழங்க எரிவாயு வினியோக கட்டமைப்புகளை அமைத்தல்.
- தேசிய ஆப்டிகல்-ஃபைபர் நெட்வொர்க்கை கிராம அளவில் அமைத்தல்; மற்றும் பொது இடங்களில் Wi-Fi மண்டலங்களை உருவாக்குதல்.
- நமது மேம்பட்ட செயற்கைக்கோள் தொழில்நுட்பம் மற்றும் நிபுணத்துவத்தை வளர்ச்சிக்காகப் பயன்படுத்துதல்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- மோடி அரசாங்கம், 1,504 கிமீ நீளமுள்ள மேற்கத்திய அர்ப்பணிக்கப்பட்ட சரக்கு வழித்தடத்தை (DFC) முதுகெலும்பாக வைத்து, டெல்லி - மும்பை தொழில்துறை வழித்தடத்தை ஒரு உலகளாவிய உற்பத்தி மற்றும் முதலீட்டு இடமாக உருவாக்கி வருகிறது. இந்த வழித்தடத்தில், குஜராத், ஹரியானா, மத்தியப் பிரதேஷ், மகாராஷ்டிரா, ராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேஷ் ஆகிய ஆறு மாநிலங்களில், வளர்ச்சிக்கான முதலீட்டுப் பகுதிகள் மற்றும் தொழில்துறை பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- வடகிழக்கு மாநிலங்கள், பாரதத்தின் மற்ற பகுதிகளுடன் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. மற்றும் அதன் முழு ரயில் வலையமைப்பும் அகலப்பாதையாக மாற்றப்பட்டுள்ளது. மேகாலயா, திரிபுரா மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்கள் முதல் முறையாக பாரதத்தின் ரயில் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன.
- பாரதத்தின் மிக நீளமான சாலை சுரங்கப்பாதை (ஜம்முவில் உள்ள செனானி நஷ்ரி சுரங்கப்பாதை) & அஸ்ஸாமில் உள்ள பிரம்மபுத்திரா நதியின் மீது நீளமான தோலா-சாடியா பாலம் பணிகள் நிறைவடைந்து நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- பாரத்மாலா திட்டம் (சாலைகள் மேம்பாடு) மூலம் நெடுஞ்சாலை துறையை விரிவுபடுத்த ரூ.5,35,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலைகள் கட்டுமானத்தின் வேகம் ஒரு நாளைக்கு 12 கிமீ (2013-ஆம் ஆண்டில்) என்பதில் இருந்து ஒரு நாளைக்கு 27 கிமீ (2017-ஆம் ஆண்டில்) ஆக அதிகரித்தது. தேசிய நெடுஞ்சாலை 92,851 கிமீ (2014-ஆம் ஆண்டில்)-இல் இருந்து 1,31,328 கிமீ (2017-ஆம் ஆண்டில்)-ஆக விரிவாக்கப்பட்டது.
- பிரதமர் கிராம சாலைகள் திட்டத்தின் (பிரதான் மந்திரி கிராம் சடக் யோஜனா) கீழ், 1.56 லட்சம் கிமீ கிராமப்புற சாலைகள் 2014 முதல் அமைக்கப்பட்டுள்ளன. கிராமப்புற சாலை இணைப்பு 56%

(2014-ஆம் ஆண்டில்)-லிருந்து 97% (2018-ஆம் ஆண்டில்)-ஆக அதிகரித்துள்ளது.

- தேசிய சிவில் விமானப் போக்குவரத்துக் கொள்கை 2016, விமானப் போக்குவரத்துத் துறையை மாற்றியமைத்திருக்கிறது. மாநில அரசுகள், இந்திய விமான நிலையங்கள் ஆணையம் (AAI) மற்றும் சிவில் என்கிளேவ்களின் சேவை இல்லாத/ குறைவாக சேவை வழங்கப்படும் 50 விமான நிலையங்கள்/விமானத் தளங்கள் ஆகியவற்றை புதுப்பிக்கும் திட்டத்துக்கு பிரதமர் மோடி ஒப்புதல் அளித்தார். UDAN திட்டம் 40 விமான நிலையங்களின் மேம்பாட்டை உள்ளடக்கியது.
- சாகர்மாலா திட்டத்தின் கீழ், 415 திட்டங்கள், தோராயமாக ரூ.8 லட்சம் கோடி மதிப்பீட்டில், துறைமுக நவீனமயமாக்கல் மற்றும் புதிய துறைமுக மேம்பாடு, துறைமுக இணைப்பு மேம்பாடு, துறைமுகத்துடன் இணைக்கப்பட்ட தொழில்மயமாக்கல் மற்றும் கடலோர சமூக மேம்பாடு ஆகிய பிரிவுகளில், 2015 முதல் 2035 வரை பல்வேறு கட்டங்களாக செயல்படுத்தும் வகையில் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- சாகர்மாலா திட்டத்தின் செயல்படுத்தல், தனியார்/தனியார் – பொது-கூட்டாண்மை (PPP) முறையில் மேற்கொள்ளப்படும்.

## அடுத்த தலைமுறை உள்கட்டமைப்பு

- தேசிய எரிவாயு கட்டமைப்பு (பிரதான் மந்திரி உர்ஜா கங்கா): எரிவாயு அடிப்படையிலான பொருளாதாரம் மற்றும் எரிசக்தி தொகுப்பில் எரிவாயுவின் பங்கை 15%-ஆக உயர்த்த, மோடி அரசாங்கம் கூடுதலாக 15,000 கிமீ எரிவாயு குழாய் வலையமைப்பை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. (8 கோடி ஏழை பெண்களுக்கு பிரதமர் உஜ்வாலா திட்டத்தின் கீழ் இலவச எல்பிஜி இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது).
- நாட்டில் உள்ள இயற்கை எரிவாயு கட்டமைப்பு மேற்கு, வடக்கு மற்றும் தென்கிழக்கு எரிவாயு சந்தைகளை முக்கிய எரிவாயு

ஆதாரங்களுடன் இணைக்கிறது. நாட்டின் கிழக்குப் பகுதியில் சுத்தமான எரிசக்தியை வழங்குவதற்கான உறுதிமொழியாக, அரசு மூலதன மானியமாக ரூ. 5,176 கோடி ஒதுக்கியுள்ளது.

- 1,19,122 கிராம பஞ்சாயத்துகள் ஆப்டிகல் ஃபைபர் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. தேசிய டிஜிட்டல் தகவல் தொடர்புக் கொள்கை 2018-ன் கீழ், பாரத்நெட் நிறுவிய உள்கட்டமைப்பைப் பயன்படுத்துவதற்குவசதியாகஅனைத்துகிராமபஞ்சாயத்துகளிலும் வைஃபை ஹாட் ஸ்பாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- ஆளுகை மற்றும் பொது நிர்வாகத்திற்கு விண்வெளித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், விண்வெளித் துறையானது அரசுத் துறைகளுடன் செயலூக்கத்துடன் பணியாற்றுவதற்காக இஸ்ரோவில் நிபுணர் பணிக்குழுக்களைஉருவாக்கப்பட்டன;"ஆட்சிமற்றும்மேம்பாட்டில் விண்வெளித் தொழில்நுட்பத்தை திறம்படப் பயன்படுத்துதல்" என்ற கூட்டுச் செயல்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

## போக்குவரத்து

### வழங்கிய வாக்குறுதி

- போக்குவரத்துக்காக தனிப்பட்ட வாகனங்களைச் சார்ந்திருப்பதைக் குறைக்கும் வகையில் ஒரு பொதுப் போக்குவரத்து அமைப்பு உருவாக்கப்படும். அது போக்குவரத்திற்கான செலவு, பயண நேரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஆகியவற்றைக் குறைக்கும்.
- சாலைகள், ரயில்வே மற்றும் நீர்வழிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு ஒருங்கிணைந்த பொதுப் போக்குவரத்து திட்டம் தொடங்கப்படும்.
- பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்துக்காக நீர்வழிகளை உருவாக்குதல்.
- சரக்குகளை வேகமாக ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டுசெல்ல, தேசிய தளவாட வலையமைப்பை உருவாக்குதல்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- மெட்ரோ ரயில் வலைப்பின்னல் 2014-இல் 5 நகரங்களில் இருந்து தற்போது 18 நகரங்களுக்கு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. சாலைப் பாதுகாப்பு, செயல்திறன் மற்றும் சாலைப் பயனாளர்களின் வசதியை மேம்படுத்தும் அதே வேளையில், கார்பன் தடத்தைக் குறைப்பதில் கவனம் செலுத்தி, நாட்டின் பொதுப் போக்குவரத்து அமைப்பைச் சீரமைக்க 'லண்டனுக்கான போக்குவரத்து' (TFL) அமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- பாரத்மாலா & சாகர்மாலா திட்டங்கள் ஒட்டுமொத்த சாலை மற்றும் நீர்வழி இணைப்புக்காகத் தொடங்கப்பட்டது.
- 2014-ம் ஆண்டுக்குப் பிறகு, 106 புதிய நீர்வழிகள் சேர்க்கப்பட்டன (கடந்த 30 ஆண்டுகளில் 5 தேசிய நீர்வழிகள் மட்டுமே இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது).
- மூன்று நாள்கள் நிகழ்வாக இந்திய ஒருங்கிணைந்த போக்குவரத்து மற்றும் தளவாட உச்சிமாநாடு அரசாங்கத்தால் நடத்தப்பட்டது. இதில், சுமார் ரூ. 2 லட்சம் கோடி மதிப்பிலான 34 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

# ரயில்வே

## வழங்கிய வாக்குறுதி

- பெரு நகரங்களிலிருந்து வெகுதூரம் தள்ளி அமைந்துள்ள பகுதிகள் செயல்திட்ட அடிப்படையிலான புதிய ரயில் வலைப்பின்னல்கள் மூலம் துறைமுகங்களுடன் இணைக்கப்படும்.
- விவசாயத்திற்கான ரயில் வலைப்பின்னல் நிறுவப்படும் - பால் மற்றும் காய்கறிகள் போன்ற விரைவில் அழியக்கூடிய விவசாய பொருட்களின் குறிப்பிட்ட தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட ரயில் வேகன்கள் மற்றும் உப்பை

கொண்டு செல்வதற்கான குறைந்த எடை கொண்ட வேகன்கள் அறிமுகப்படுத்தப்படும்.

- யாத்திரை ரயில் உள்ளிட்ட சுற்றுலா ரயில் அறிமுகம்.
- ரயில்வே நவீனமயமாக்கல், அதிநவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்.
- பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்தல் மற்றும் நீண்ட காலமாக மாற்றத்தை எதிர்நோக்கியுள்ள நலிவடைந்த ரயில்வே உள்கட்டமைப்புகளில் முதலீடு செய்தல், கடுமையான விதிமுறைகள் மற்றும் எச்சரிக்கை அமைப்புகள் உருவாக்கம்.
- அனைத்து ரயில் நிலையங்களையும் தேவையான உள்கட்டமைப்பு மற்றும் பொதுப் பயன்பாடுகளுடன் நவீனப்படுத்தி தயார் செய்தல்
- அனைத்து ஆளில்லா ரயில் கிராஸிங்குகளையும் படிப்படியாக பணியாளர்கள் கொண்ட கிராஸிங்குகளாக மாற்றுதல்.
- உள்நாட்டு ரயில்வே, ரயில் பெட்டி வடிவமைப்பு மற்றும் சிக்னல்களுக்கான ஆராய்ச்சி & மேம்பாடு வேலைகளைத் தொடங்குதல்.
- அதிவேக ரயில் வலைப்பின்னலின் (புல்லட் ரயில்) வைர நாற்கரத் திட்டத்தை நாங்கள் தொடங்குவோம்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- சாகர்மாலா திட்டம் 89 திட்டங்களை நிறைவு செய்துள்ளது. அதே நேரத்தில் ரூ. 4.32 லட்சம் கோடி மதிப்புடைய 443 திட்டங்கள் செயல்படுத்தல் மற்றும் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களில் உள்ளது. இந்திய துறைமுக ரயில் நிறுவனம் லிமிடெட் (IPRCL), 9 பெரிய துறைமுகங்களில் 32 பணிகளை (செலவு: ரூ. 18,253 கோடி) எடுத்து அதில் 8 பணிகள் (ரூ. 175 கோடி மதிப்பு) வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளன. கூடுதலாக, 23 ரயில் இணைப்புத் திட்டங்கள் (ரூ. 24,877 கோடி மதிப்பீட்டில்) சாகர்மாலாவின் கீழ் அடையாளம்

காணப்பட்டவை ரயில்வே அமைச்சகத்தால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

- பார்சல் சரக்கு விரைவு ரயில் (PCET) 2018-இல் செயல்படத் தொடங்கியது. இது வடகிழக்கு பிராந்தியத்தை, நாட்டின் மேற்கு கடற்கரையுடன் இணைக்கிறது. இந்த ரயிலானது, விவசாயிகள் தங்கள் தயாரிப்புகளான தேயிலை, கொட்டைப் பாக்கு, அன்னாசி, சணல், தோட்டக்கலை பொருட்கள், மூங்கில் சாமான்கள் போன்றவற்றை மும்பை, பெங்களூரு, நாக்பூர், புனே ஆகிய இடங்களில் உள்ள சில்லறை சந்தைகளில் விற்க உதவுகிறது.
- **விஸ்டாடோம் கோச்சுகள் & மலை ரயில்வே**: எல்லா காலநிலைகளிலும் பயணிக்க ஏற்ற கண்ணாடி மேற்கூரை கொண்ட இந்த ரயில் பெட்டிகளில், சுற்றுலாப் பயணிகள் பயணம் செய்யும் போது பரந்த காட்சி அனுபவத்தை வழங்க கூரை வழி பார்வை பகுதி உட்பட மேம்படுத்தப்பட்ட அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. டிசம்பர் 2018 - ல், ரயில்வே தனது வரலாற்றில் முதன்முறையாக இந்திய ரயில்வே பாரம்பரிய பிரிவு (IRHC) - 2018 தொடங்கப்படுவதை அறிவித்தது.
- நவீன **தீன் தயாள் ரயில் பெட்டிகள்** உற்பத்தி (1100க்கும் மேற்பட்ட தீன் தயாள் ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன) மற்றும் மணிக்கு 200 கிமீ வேகத்தில் செல்லும் திறன் கொண்ட அதி நவீன தேஜஸ் ரயில்கள் அறிமுகம்.
- **மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு**: பாதுகாப்பு மேம்பாடுகளுக்கான தொழில்நுட்ப சேர்க்கைகள் - ஸ்மார்ட் கோச், ஓடும் ரயில்களின் ஆன்-லைன் கண்காணிப்பு (OMRS), LHB-க்கு முழுவதுமாக மாறுதல், லெவல் கிராஸிங்குகளை நீக்குதல், இரயில் பாதை பராமரிப்பில் புதிய முயற்சிகள் செய்தல்
- இரயில் நிலையங்களை அழகுபடுத்தும் முன்முயற்சியின் கீழ் மண்டல இரயில்வே முழுவதும் உள்ள 65-க்கும் மேற்பட்ட நிலையங்கள் உள்ளூர் கலை வடிவம், ஓவியப் பாணி, உள்ளூர் கருப்பொருள்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி

அழகுபடுத்தப்பட்டுள்ளன. அனைத்து ரயில் நிலையங்களிலும் 100% LED விளக்குகள் கொண்ட அமைவிடங்களாக இரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

- அகலப்பாதை வழித்தடங்களில் உள்ள அனைத்து 8948 ஆளில்லா லெவல் கிராசிங்குகளும் அகற்றப்பட்டன (இலக்கை விட 2 ஆண்டுகள் முன்னதாகவே திட்டம் நிறைவு).
- ஆராய்ச்சி & மேம்பாடு (R&D): ஆராய்ச்சி வடிவமைப்புகள் மற்றும் தரநிலைகள் அமைப்பின் (RDSO) விற்பனையாளர் பதிவு செயல்முறையை ஒழுங்குபடுத்துதல், பிற ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்களுடன் (ஐஐடிகள்)இணைந்து செயல்படுதல்.
- பாரதத்தின் முதல் புல்லட் ரயில் திட்டம்: மும்பை - அகமதாபாத் அதிவேக ரயில் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது.

## தண்ணீர் – எல்லா வீடுகளுக்கும், பண்ணைகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் சென்றடையச் செய்தல்

### வழங்கிய வாக்குறுதி

- ‘ஹர் கெத் கோ பானி’ என்ற முழக்கத்துடன் ‘பிரதான் மந்திரி கிராம் சிஞ்சாயீ யோஜனா’ தொடங்கப்படும். விவசாயிகள் பருவமழையை நம்பியிருப்பதைக் குறைப்பதற்காக பல்முனை ‘நீர் உத்தி’யை தொடங்குவோம். நீண்டகாலமாக நிலுவையில் உள்ள நீர்ப்பாசனத் திட்டங்களை முன்னுரிமையில் நிறைவேற்றி பாசன நிலப்பரப்பை அதிகரிக்கச் செய்வோம்.
- நிலத்தடி நீரைச் சார்ந்திருப்பதைக் குறைக்க மழை நீரைப் பயன்படுத்தி நிலத்தடி நீரை வளப்படுத்துவோம்.
- நீர் சேமிப்பு, மறுசுழற்சி மற்றும் மழை நீர் சேகரிப்பு மற்றும் திறன்மிக்க பயன்பாடு ஆகியவற்றை ஊக்குவிப்போம்.
- நதிகள் மாசுபடுவதைத் தடுக்க கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

- கடலோர நகரங்களில் குடிநீர் விநியோகத்திற்கான உப்புநீரை நன்னீராக்கும் சுத்திகரிப்பு ஆலைகள் நிறுவப்படும்.
- சாத்தியக்கூறு ஆய்வுகளின் அடிப்படையில் நதிகளை இணைத்தல்.
- நச்சு இரசாயனங்கள், குறிப்பாக ஆர்சனிக் மற்றும் புளோரைடுகளை அகற்ற நிலத்தடி நீரை ஆய்வு செய்தல்.
- தண்ணீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் குடிநீர் விநியோக கட்டமைப்பை ஊக்குவித்தல்.
- பரவலாக்கப்பட்ட தேவையின் பேரில் செய்யப்படும் மற்றும் உள்ளூர் சமூகத்தால் நிர்வகிக்கப்படும் நீர் வள மேலாண்மை, நீர் வழங்கல் மற்றும் சுற்றுச்சூழல் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துதல்.
- அனைத்து வீடுகளுக்கும் குழாய் நீர் வசதி.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- சொட்டு நீர் பாசனத் திட்டத்தில் (PMKSY) ரூ. 50,000 கோடி முதலீடு, 37 லட்சம் ஹெக்டேருக்கும் அதிகமான நிலங்களில் நுண்ணீர் பாசனத் திட்டம் (2015-16 ஆம் ஆண்டில்).
- மத்திய நிலத்தடி நீர் வாரியம் (CGWB) 2018-ஆம் ஆண்டில், மகாராஷ்டிரா மாநிலத்தின் உஸ்மானாபாத் மாவட்டம், ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் ஒய்எஸ்ஆர் கடப்பா மாவட்டம் மற்றும் தெலங்கானாவின் ஜங்கான் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களில் செயற்கை முறை சக்தியேற்றல் பணிகளை மேற்கொண்டது.
- மேற்பரப்பு சிறு நீர்ப்பாசனம் (SMI) மற்றும் நீர்நிலைகள் பழுது, புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு (RRR) திட்டத்தின் கீழ் (2017 & 2018 ஆண்டுகளில் மாநிலங்களுக்கு ரூ. 101 கோடி நிதி விடுவிப்பு) ஒதுக்கீடு.

- 'நமாமி கங்கே' திட்டத்தின் கீழ், கழிவுநீர் உள்கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்காக மொத்தம் ரூ.24,672 கோடி மதிப்பிலான 254 திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 3076 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் (MLD) கொண்ட புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (STPகள்) உருவாக்கம், ஏற்கனவே உள்ள STP-களில் 887 MLD-களை மறுசீரமைக்க 131 திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- ஒடிசாவின் கடலோர மாவட்டமான கஞ்சத்தில் கடல்நீரை உப்புநீக்கி நன்னீராக்கும் ஆலை கட்டப்பட்டு வருகிறது. மற்றொரு ஆலை சென்னை - கல்பாக்கத்தில் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ளது.
- நதிகளை இணைப்பது குறித்த சாத்தியக்கூறு ஆய்வுகளை நடத்துவதற்காக டிசம்பர் 2015-இல் நீர்வள மேம்பாட்டுக்கான தேசிய முன்னோக்குத் திட்டம் தொடங்கப்பட்டது. மார்ச் 2018-க்குள், 30 இணைப்புகள் சாத்தியமானவை என அடையாளம் காணப்பட்டன
- நாட்டில் நிலத்தடி நீர் மற்றும் மேற்பரப்பு நீர் சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றிய உறுதியான மற்றும் நம்பகமான தரவுத்தளத்தை உருவாக்க, அரசு சிறு நீர்ப்பாசன (MI) பரப்பு கணக்கெடுப்பை நடத்துகிறது.
- உலக நீர் கவுன்சில் (WWC) 2017-ஆம் ஆண்டுக்கான அறிக்கையின் படி, கடந்த 5 ஆண்டுகளில் நாட்டில் குடிநீர் தரம் மேம்பட்டுள்ளது
- தேசிய நீர்நிலை மேலாண்மை (NAQUIM): நிலத்தடி நீர் மேலாண்மை மற்றும் மேம்பாட்டில் மாநிலங்களின் திறனை உயர்த்தும் நோக்கத்துடன், நிலத்தடி நீரை தன்னகத்தே கொண்டுள்ள பரப்புகளின் வரைபடத்தினை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- நீடித்த குழாய் நீர் விநியோகத்தை அதிகரிக்கும் இலக்கை அடைய, தேசிய கிராமப்புற குடிநீர் திட்டம் (NRDWP) அரசால் மறுசீரமைக்கப்பட்டது.

# ஆற்றல் – அதிகமாக உருவாக்குதல், பகுத்தறிவுடன் பயன்படுத்துதல், வீணாவதைக் குறைத்தல்

## வழங்கிய வாக்குறுதி

- பொறுப்பான மற்றும் விரிவான 'தேசிய எரிசக்திக் கொள்கை' உருவாக்கப்படும்.
- ஆற்றல் உள்கட்டமைப்பு, மனித வள மேம்பாடு மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படும்.
- எண்ணெய், எரிவாயு, நீர் ஆற்றல், கடல், காற்று, நிலக்கரி மற்றும் அணுசக்தி ஆகியவற்றின் திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்
- எரிசக்தி ஆதாரங்கள், எரிசக்தி பாதுகாப்புக்கு ஆற்றல் திறன் மற்றும் பாதுகாப்பு முக்கியமானது என்று பாஜக கருதுகிறது.
- தற்போது பயன்படுத்தப்படாத நிலையில் உள்ள நீரை பயன்படுத்த சிறிய நீர் மின் உற்பத்தி திட்டங்களை அமைத்தல். உள்ளூர் மக்கள் ஆதரவுடன், மக்களை அங்கிருந்து வெளியேற்றாமல் சிறிய திட்டங்களை அமைத்தல்.
- தேவை மற்றும் விநியோக இடைவெளியைக் குறைக்க, உள்நாட்டு நிலக்கரி வள ஆய்வு மற்றும் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டில் எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வுகளும் துரிதப்படுத்தப்படும். இது இறக்குமதிக்கு ஆகும் செலவைக் குறைக்கவும் உதவும்.
- இந்தியாவின் ஆற்றல் கலவையின் ஒரு முக்கிய அங்கமாக புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களுக்கு உந்துதலை அளித்தல்.
- தேசிய சோலார் செயல்திட்டத்தினை விரிவுபடுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல்

## நிறைவேற்றிய வாக்குறுதி

- புதிய எரிசக்திக் கொள்கையின் நான்கு முக்கிய நோக்கங்களாக மலிவு விலையில் கிடைக்கச் செய்தல், மேம்படுத்தப்பட்ட ஆற்றல் பாதுகாப்பு மற்றும் சுதந்திரம், அதிக நிலைத்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவை இருக்கும். இந்தக் கொள்கையை நிதி ஆயோக் வெவ்வேறு பங்குதாரர்களுடன் விவாதித்தது. (2016-ஆம் ஆண்டு).
- பாரதத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் மின்சாரம் வழங்க 2017-இல் சௌபாக்யா திட்டம் அறிவிக்கப்பட்டது (2.62 கோடி வீடுகள் இதுவரை மின்மயமாக்கப்பட்டுள்ளது). ஆற்றல் உள்கட்டமைப்பை அமைப்பதும் இதில் அடங்கும்.
- 2015-ஆம் ஆண்டில் தேசிய கடல் காற்று ஆற்றல் கொள்கை அறிவிக்கப்பட்டது. நிதி ஆயோக் தேசிய எரிசக்தி கொள்கையின் வரைவை 2017-இல் வெளியிட்டது. அரசாங்கம் 2015-இல் அணு ஆற்றல் சட்டத்தை திருத்தியது.
- காற்றிலிருந்து 34.98 ஜிகாவாட், சூரிய சக்தியிலிருந்து 24.33 ஜிகாவாட், சிறிய நீர் மின்சக்தியிலிருந்து 4.5 ஜிகாவாட் மற்றும் உயிர் எரிபொருளில் இருந்து 9.54 ஜிகாவாட் என அனைத்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்தும் அக்டோபர் 2018 நிலவரப்படி நாட்டில் மொத்தம் 73.35 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன் நிறுவப்பட்டுள்ளது.
- 4 ஆண்டுகளில் (2014-18 காலகட்டத்தில்) நிலக்கரி உற்பத்தியில் 105 மெட்ரிக் டன் அதிகரிப்பு. 89 நிலக்கரிச் சுரங்கங்கள் வெளிப்படையாக ஏலம் விடப்பட்டு, சுரங்கம் அமைந்துள்ள மாநிலங்களுக்கு 100% வருவாயுடன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.
- 121 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட, சர்வதேச சூரிய மின்சக்தி கூட்டமைப்பு (ISA) பிரதமர் மோடி மற்றும் பிரான்ஸ் அதிபரால் நவம்பர் 30, 2015 அன்று கூட்டாகத் தொடங்கப்பட்டது.

- காற்று மற்றும் சூரிய வளங்கள், பரிமாற்ற உள்கட்டமைப்பு மற்றும் நிலம் ஆகியவற்றின் உகந்த மற்றும் திறமையான பயன்பாட்டிற்காக, பெரிய கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட காற்று-சூரிய சக்திகளின் PV கலப்பின அமைப்பை மேம்படுத்துவதற்கான கட்டமைப்பை வழங்குவதற்காக, மே 14, 2018 அன்று தேசிய காற்று-சூரிய கலப்பினக் கொள்கைக்கு அரசு அங்கீகாரம் அளித்தது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் – கண்டுபிடிப்புகளில் இந்தியா முன்னணி

## வழங்கிய வாக்குறுதி

- நமது பாரம்பரிய அறிவுத் தொகுப்போடு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் திறன்களைப் பயன்படுத்தி வறுமையை ஒழிப்பதில் நேரடியான மற்றும் நீடித்த முயற்சியை மேற்கொள்ளுதல்.
- பொருளாதாரம் மற்றும் சமூகத்திற்கு பொருத்தமான பகுதிகளில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல்.
- தேசிய வளர்ச்சி மற்றும் பாதுகாப்பின் இலக்குகளை அடைவதற்கு சர்வதேச அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் அதை நமது சர்வதேச உறவுகளின் முக்கிய அங்கமாக மாற்றுதல்.
- அறிவியல் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை தங்களது தொழிலாக எடுத்துக்கொள்ள இளைஞர்களை ஊக்குவிக்கும் திட்டங்கள் மற்றும் வாய்ப்புகளை உருவாக்குதல்.
- அடிப்படை அறிவியல் ஆராய்ச்சியில் பணிச்சூழல் மற்றும் தொழில்முறை வாய்ப்புகளை வழங்குதல்.
- நானோ தொழில்நுட்பம், பொருள்வகை அறிவியல், தோரியம் தொழில்நுட்பம் மற்றும் மூளை ஆராய்ச்சி ஆகிய துறைகளில் அறிவியல் ஆராய்ச்சியில் உலகத் தரம் வாய்ந்த, பிராந்திய மையங்களை உருவாக்குதல்.

- பன்னாட்டு மற்றும் பல்வேறு துறைகளுக்கு இடையேயான கூட்டு ஆராய்ச்சிக்கான உகந்த சூழல் அமைப்பை உருவாக்கி, அறிவுசார் சொத்துரிமை அமைப்பை நிறுவுதல்.
- தொழில் மற்றும் அறிவியல் ஆராய்ச்சி இடையே ஒருங்கமைவை எட்டுதல்.
- ஒரு விரிவான தேசிய புத்தாக்க அமைப்பை உருவாக்குவதன் மூலம் புதுமையான செயல்பாடுகளை ஊக்குவித்தல்.
- நமது நீண்ட மற்றும் செழுமையான பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்ட உள்நாட்டு அறிவு மேலும் மேம்படுத்தப்பட்டு, செல்வம் மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான நோக்கத்திற்காக அதை பயன்படுத்துதல்.
- அறிவியலை பிரபலப்படுத்தும் திட்டங்களை விரிவாக மேம்படுத்துதல்.
- அறிவியலின் பயன்பாட்டில் கவனம் செலுத்த இடைநிலைக் கல்வியில் மாற்றங்களைக் கொண்டு வருதல்
- முன்கணிப்பு அறிவியலுக்கான துறைகள் முழுவதும் பிக் டேட்டாவின் தாக்கத்தை ஆய்வு செய்வதற்காக, பிக் டேட்டா மற்றும் பகுப்பாய்வு நிறுவனத்தை அமைத்தல்.
- வெப்பமண்டல நோய்களை ஒழிக்க ஆராய்ச்சி செய்தல்.
- கிராமப்புற வளர்ச்சிக்கான தொழில்நுட்ப நிறுவனங்களை அமைத்தல்.
- இமாலயன் தொழில்நுட்பத்திற்கென்று அர்ப்பணிக்கப்பட்ட மத்திய பல்கலைக்கழகத்தை நிறுவுதல்.
- மருந்துகள், தொழில்துறை மற்றும் விவசாயத்தில் அணு அறிவியலின் ஆராய்ச்சி மற்றும் பயன்பாட்டை ஊக்குவித்தல்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- மோடி அரசால் இந்திய தொழில்நுட்ப நிறுவனங்கள் (IIT), தேசிய தொழில்நுட்ப நிறுவனங்கள் (NIT) மற்றும் இந்திய அறிவியல்

கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் (IISER) உள்ளிட்ட உயர் கல்வி நிறுவனங்களை இணைக்கும் நோக்கத்துடன் 'உன்னத் பாரத் அபியான்' என்ற திட்டம் தொடங்கப்பட்டது.

- இளம் விஞ்ஞானிகள், அறிவியல் செயல்பாடுகளில் ஈடுபட/ ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள ஊக்குவிக்கும் நோக்கத்தில் பல திட்டங்களை அரசு தொடங்கியது. [எ.கா: ஊக்கமூட்டும் ஆராய்ச்சிக்கான அறிவியல் நோக்கத்தில் புத்தாக்கம் (Innovation in Science Pursuit for Inspired Research-INSPIRE)]
- மொத்தம் ஐந்து ஆண்டுகளுக்கு ரூ. 3660 கோடி செலவில், இடைநிலை சைபர்-பிசிகல் சிஸ்டம்ஸ் (NM-ICPS) செயலாக்கத்திற்கான தேசிய செயல்திட்டத்தை தொடங்க அரசு ஒப்புதல் அளித்தது.
- சிறப்பான ஆராய்ச்சிக்கான ஆசிரியர் அசோசியேட்ஷிப் (TARE), வெளிநாட்டு வருகை முனைவர் பெல்லோஷிப் (OVDF) போன்ற நிதியுதவிகள் வழங்கல்.
- முதலாவது ஆசியா - இந்தியா இன்னோடெக் உச்சிமாநாடு 2018-இல் பாரதத்தால் நடத்தப்பட்டது.
- புத்தாக்கங்களை மேம்படுத்துவதற்கும், பயன்படுத்துவதற்குமான தேசிய முன்முயற்சி (NIDHI) 2016 – இது நாடு முழுவதும் உள்ள புத்தாக்க உந்துதல் சார்ந்த நிறுவனங்களை மேம்படுத்துவதற்கும், விரைவுபடுத்துவதற்கும் ஒரு விரிவான கட்டமைப்பை வழங்கும் பல்வேறு கூறுகளை உள்ளடக்கியது.
- மே 2016-இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய அறிவுசார் சொத்து உரிமைகள் (IPR) கொள்கை 2016, நாட்டில் IPR-களின் எதிர்கால வளர்ச்சிக்கு வழிகாட்டும் தொலைநோக்கு ஆவணமாக உள்ளது.
- பாரத் – இங்கிலாந்து இடையேயான அறிவியல் மற்றும் புத்தாக்கக் கொள்கை 2018, செயற்கை நுண்ணறிவு (AI), டிஜிட்டல் பொருளாதாரம், சுகாதாரத் தொழில்நுட்பங்கள், இணையப்

பாதுகாப்பு ஆகியவற்றின் திறனை உணர்ந்து, உலகளாவிய சவால்களைச் சமாளிக்க ஒத்துழைப்பை மேம்படுத்துகிறது.

- அறிவியல் ஆராய்ச்சி உள்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வலைப்பின்னல்கள் (SRIMAN) என்னும் ஒரு வரைவு கொள்கை ஆவணம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் அரசாங்கத்தால் ஏற்கனவே உருவாக்கப்பட்டது.
- நிணநீர் ஃபைலேரியாசிஸ் (ஹாதிபான்) மற்றும் உள்ளுறுப்பு லீஷ்மேனியாசிஸ் (கலா-அசார்) போன்ற புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களை (NTDகள்) ஒழிக்க பாரதம் தீவிரமாக செயல்பட்டு வருகிறது
- ஐஐடி கௌஹாத்தியில் வேளாண் மற்றும் கிராமப்புற தொழில்நுட்பப் பள்ளி 2016-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- அணுசக்தித் துறையானது உணவு மற்றும் விவசாயத் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நிதிநிலை அறிக்கையில் இந்த துறைக்கான நிதி ஒதுக்கீடு ரூ.7700 கோடியுடன் (2014-ஆம் ஆண்டு) ஒப்பிடும்போது தற்போது ரூ.16595 கோடியாக (2018-19) அதிகரிக்கப்பட்டுள்ளது.

## தாவரங்கள், விலங்கினங்கள் மற்றும் சுற்றுச்சூழல் – நமது எதிர்காலத்தை பாதுகாத்தல்

### வழங்கிய வாக்குறுதி

- குறிப்பாக, நகரங்களில் மாசு அளவைக் குறைக்கும் வகையில் தூய்மையான எரிபொருட்கள் ஊக்குவிக்கப்படும்.
- செயல் ஊக்கத்துடன் கூடிய ‘கார்பன் கிரெடிட்’ என்ற கருத்தாக்கம் ஊக்குவிக்கப்படும்.
- திட்டங்களின் சுற்றுச்சூழல் தணிக்கை மற்றும் நகரங்கள் மற்றும் குடியிருப்புகளின் மாசு அட்டவணைப்படுத்தல் நடத்தப்படும்.
- அறிவியல் அடிப்படையிலான செயல்பாடுகள் ஊக்குவிக்கப்படும்.

- தற்போதுள்ள காடுகள் மற்றும் வனவிலங்கு காப்பகங்களைப் பாதுகாப்பதுடன், நாட்டின் தரிசு நிலங்கள் சமூகக் காடுகளாகப் பயன்படுத்தப்படும்.
- பசுமை கட்டிடங்கள் மற்றும் ஆற்றல் திறன் கொண்ட பணியிடங்களுக்கான வழிகாட்டுதல்கள் கொள்கை உருவாக்கப்படும்.
- சுற்றுச்சூழல் தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி (R&D) மற்றும் மனித வள மேம்பாடு ஊக்குவிக்கப்படும்.
- வன உயிரினங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பிற்கான முழுமையான வழிமுறைகளை அமைக்கப்படும்.
- இலக்குசார் திட்டங்களின் மூலம், மறு காடு வளர்ப்பு, வேளாண் காடுகள் மற்றும் சமூக காடுகள வளர்ப்பு ஆகியவற்றில் குடிமக்களின் பங்கேற்பு ஊக்குவிக்கப்படும்.
- புத்தாக்க அடிப்படையில் குப்பை அகற்றல் மற்றும் கழிவு மேலாண்மை நடைமுறைகளை, குறிப்பாக மறுசுழற்சி நுட்பங்களை ஊக்குவித்தல் மற்றும் ஊக்கத்தொகை வழங்கல்.

## இமயமலை

- ஒருங்கிணைந்த கொள்கை உருவாக்கம் மற்றும் மாநிலங்கள் மற்றும் துறைகளில் திறன் மேம்பாடு ஆகியவற்றில் அரசுகளுக்கிடையேயான ஒரு தனித்துவமான திட்டமாக ‘இமயமலை குறித்த தேசிய செயல் திட்டம்’ தொடங்கப்படுதல்.
- ‘இமயமலை நிலைத்தன்மை நிதி’ என்ற நிதி உருவாக்கப்படும்.
- வட இந்தியாவில் உள்ள பெரும்பாலான ஆறுகள் உருவாகக் காரணமாக இருக்கும் இமயமலைப் பனிப்பாறைகள் உருகுவதைத் தடுக்க வடிவமைக்கப்பட்ட திட்டங்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படும்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- உயிரி எரிபொருள் மீதான தேசியக் கொள்கை 2018-க்கு பிரதமர் மோடி ஒப்புதல் அளித்துள்ளார். இந்தக் கொள்கை உயிரி எரிபொருளை "அடிப்படை உயிரி எரிபொருள்கள்" என வகைப்படுத்துகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், 2025-ஆம் ஆண்டுக்குள் பெட்ரோலில் 20% எத்தனாலை கலப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.
- மின்சாரம்/ஹைப்ரிட் வாகனங்களை (xEVs) பாரதத்தில் ஏற்றுக்கொள்வதை ஊக்குவிக்க 2015-ஆம் ஆண்டில் விரைவான ஏற்றுக்கொள்ளல் மற்றும் மின்சாரம்/ஹைப்ரிட் வாகன உற்பத்தி திட்டம் (FAME India) 895 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொண்டுவரப்பட்டது.
- அரசு தேசிய தூய்மை மேம்பாட்டு செயல்முறை ஆணையத்தின் (http://www.ncdmaindia.gov.in) புதிய இணையதளம் தொடங்கப்பட்டது. 'கார்பன் கிரெடிட்'களை ஈட்டும் இந்தியாவின் முதல் வெகுஜன விரைவுப் போக்குவரத்து திட்டமாக (MRTS) இருக்கும் தில்லி மெட்ரோவானது, ஆண்டுதோறும் சுமார் 0.57 மில்லியன் டன்கள் கார்பன் டை ஆக்சைட் வெளியீட்டை (CO2 e) குறைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.
- 2018-ஆம் ஆண்டில், பல முக்கியமான இருதரப்பு மற்றும் பலதரப்பு சந்திப்புகள் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த பேச்சுவார்த்தைகள் காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பில் [UNFCCC (COP-24)] உள்ள நாடுகளின் 24-வது மாநாட்டிற்கு முன்னதாக நடத்தப்பட்டன.
- காலநிலை மாற்றத்திற்கான தேசிய ஏற்றுக்கொள்ளல் நிதியத்தின் (**NAFCC**) கீழ், 27 திட்டங்கள் (ஒரு பிராந்திய திட்டம் உட்பட) ரூ. 673.63 கோடி மொத்த மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளன.
- "பிரதான் மந்திரி க்ரிஷி சிஞ்சாய் யோஜனா" -ன். (WDC-PMKSY) நீர்நிலை மேம்பாட்டுக் கூறுகளின் கீழ் உள்ள திட்டங்கள்,

முக்கியமாக சாகுபடி நிலங்களின் மானாவாரி பகுதிகளை மற்றும் தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்காக மதிப்பீடு செய்கின்றன.

- 2016-ஆம் ஆண்டு 'மாதிரி கட்டிடங்களுக்கான சட்ட விதிகளை' அரசாங்கம் வெளியிட்டது. இது பசுமைக் கட்டிடங்களுக்கான பல்வேறு விதிமுறைகளை பரிந்துரைக்கிறது. 2017-இல் ஆற்றல் திறன் கொண்ட கட்டிடங்களின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்திற்கான வழிகாட்டுதல்களை, எரிசக்தி திறன் பணியகம் (BEE) வெளியிட்டது.
- **காற்று மற்றும் நீரின் நிகழ்நேர தரக் கண்காணிப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு திட்டங்கள் (2018)** - இந்த ஆராய்ச்சித் திட்டங்கள் இந்தியாவின் முன்னணி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களான ஐஐடிகள் மற்றும் ஐஐஎஸ்சி ஆனது, டியூக் பல்கலைக்கழகம், தெற்கு கலிபோர்னியா பல்கலைக்கழகம், மிச்சிகன் மாநில பல்கலைக்கழகம், ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகம் போன்ற அமெரிக்காவின் சிறந்த நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் திட்டங்களாகும்.
- **வனவிலங்கு பாதுகாப்பு** – இந்த திட்டத்திற்கான மொத்த செலவில் மத்திய அரசின் பங்காக ரூ.1731.72 கோடி செலவிடப்பட்டது. (புலிகள் திட்டத்திற்கு ரூ. 1143 கோடி, வனவிலங்கு வாழ்விடங்களை மேம்படுத்த ரூ. 496.50 கோடி மற்றும் யானைகள் திட்டத்திற்கு ரூ.92.22 கோடி)
- பசுமை நற்செய்கைகள் - குடிமக்களின் பங்கேற்பின் மூலம் நாட்டில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், நல்ல வாழ்க்கையை மேம்படுத்தவும் அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட சமூக இயக்கம் ஆகும்.
- **பசுமை திறன் மேம்பாட்டு திட்டம்** (GSDP): இதன்கீழ் 2018-இல் 30 க்கும் மேற்பட்ட திறன் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.
- ஒரு லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் (ULBs) சாக்கடை

மற்றும் மலக்கிடங்கு கழிவு மேலாண்மை மற்றும் பாதுகாப்பான குடிநீரை அனைவருக்கும் வழங்குவதை நோக்கமாகக் கொண்ட, புத்துணர்ச்சி மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் இயக்கம் (AMRUT) ஜூன் 25, 2015 அன்று 500 நகரங்களில் மோடி அரசால் தொடங்கப்பட்டது

## இமயமலை

- இமயமலை ஆய்வுகளுக்கான தேசிய செயல்திட்டம் (NMHS), சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் 2015- இல் தொடங்கப்பட்டது.
- இமயமலை சார்ந்த பல்வேறு பகுதிகளின் மேம்பாடு மற்றும் பாதுகாக்கும் நோக்கத்திற்கான பெரிய மற்றும் நடுத்தர திட்டங்களுக்காக ரூ.85 கோடிக்கும் அதிகமான மானியம் வழங்கப்பட்டது. (https://nmhs.org)
- இந்திய இமயமலைப் பகுதியில் உள்ள பனிப்பாறைகள் உருகுவது தொடர்பான ஆய்வுகள் மற்றும் தரவுகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. 'ஹிமான்ஷ்' என்ற அதிநவீன கள ஆய்வு நிலையம் இமயமலையின் சந்திரா படுகையில் நிறுவப்பட்டு, கள பரிசோதனை மற்றும் பனிப்பாறைகளுக்கான பயணங்களை மேற்கொள்வதற்காக 2016 முதல் செயல்பட்டு வருகிறது.

## இயற்கை மற்றும் தேசிய வளங்கள் – தேவைப்படும்போது பயன்படுத்தல், தேவையான இடங்களில் பாதுகாத்தல்

### வழங்கிய வாக்குறுதி

- முக்கியமான இயற்கை வளங்களில் தேசியக் கொள்கைகளை உருவாக்குவோம்.

- இந்த வளங்களைப் பயன்படுத்துவதன் தொடர்பான வழிமுறைகளை மாநில அரசுகளுடன் பகிர்ந்து கொள்வோம்.
- மின்-ஏலம் உள்ளிட்ட திறமையான வழிமுறைகள் மூலம் வழிமுறைகள் பயன்படுத்தப்படும்.
- தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இயற்கை வளங்களை ஆவணப்படுத்துதல், ஆய்வு மற்றும் மேலாண்மை மேற்கொள்ளப்படும்.
- சந்தைப்படுத்தலுக்கு மட்டுமல்லாது அனைத்து வளங்களிலும் மதிப்பு கூட்டல் ஊக்குவிக்கப்படும்

## நிறைவேற்றிய வாக்குறுதி

- நிலக்கரிச் சுரங்கங்களை ஒதுக்கீடு செய்வதற்காக 2015-இல் நிலக்கரிச் சுரங்கங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) மசோதாவை அரசாங்கம் நிறைவேற்றியது.
- 2017-இல் நிலக்கரி தொகுதிகள் ஒதுக்கீடு விதிகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தில் சேர்க்கப்பட்டது. கனிம ஏல விதிகள் 2015-இல் சுரங்க அமைச்சகம் நவம்பர் 2017-இல் திருத்தம் செய்துள்ளது.
- 89 நிலக்கரிச் சுரங்கங்கள் வெளிப்படையாக ஏலம் விடப்பட்டு நிலக்கரி சுரங்கங்கள் அமைந்துள்ள மாநிலங்களுக்கு 100% வருவாயுடன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.
- இந்தியாவின் புவியியல் ஆய்வு மையம் (GSI) நாட்டின் பல்வேறு பகுதிகளில் 194 கனிம ஆய்வுத் திட்டங்களை மேற்கொண்டது. ரிசோர்ஸ்சாட்-2A, வள ஆய்வுக்கான சக்திவாய்ந்த இமேஜிங் அமைப்பு, 2016-இல் ISRO-வால் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.
- 2018-ஆம் ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தன்று நடைபெற்ற நிறுவனங்களுக்கானதொரு முழுமையான அமர்வில், ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்தல் தொடர்பாக

ஆறு முக்கிய நிறுவனங்களைச் சேர்ந்த தலைமை நிர்வாக அதிகாரிகளின் ஆதரவு உறுதி செய்யப்பட்டது.

## இந்திய குடிமக்களை பாதுகாத்தல் – தீவிரவாதம் மற்றும் குற்றங்களை ஒழிக்க கடும் நடவடிக்கை

### வழங்கிய வாக்குறுதி

### உள்நாட்டுப் பாதுகாப்பு

- காங்கிரஸால் சிதைக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு செயல்முறையைப் புதுப்பிக்கவும், தேசிய விசாரணை ஆணையத்தின் (NIA) பங்கை வலுப்படுத்தவும், பயங்கரவாதம் தொடர்பான வழக்குகளை விரைவாகவும் நியாயமாகவும் விசாரிக்க ஒரு அமைப்பு ஏற்படுத்தப்படும்.
- அனைத்து துறை சார்ந்த மதிப்பீடுகளின் மையமாக இருக்குமாறு தேசிய பாதுகாப்பு கவுன்சில் சீரமைக்கப்படும். இது நிகழ்நேர உளவுத்துறை நுண்ணறிவுப் பரவலுக்கு பொறுப்பாக இருக்கும். டிஜிட்டல் மற்றும் சைபர் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.
- புலனாய்வுத் துறையை நவீனமயமாக்குவதன் மூலம் புலனாய்வு சேகரிப்பு முறையை முழுமையாக சீரமைக்கப்படும்.
- அந்தந்த மாநில காவல் படைகளை நவீன தொழில்நுட்பத்துடன் மேம்படுத்த, மாநில அரசுகளுக்கு அனைத்து உதவிகளும் வழங்கப்படும். இது, ஒரு பணிமுறை அணுகுமுறையில் செயல்படுத்தப்படும்.
- சமூக பாதுகாப்பு, தற்காப்பு மற்றும் பேரிடர் மேலாண்மைக்கான குடிமக்கள் குழுக்களை உருவாக்கும் பொருட்டு, குடிமைத் தற்காப்பு மற்றும் ஊர்க்காவல் படையினரின் செயல்முறையானது வலுப்படுத்தப்பட்டு, விரிவுபடுத்தப்படும்.

- கல்லூரி மற்றும் பல்கலைக்கழக அளவில் தேசிய மாணவர் படை (NCC) பயிற்சியை ஊக்குவித்தல் மற்றும் வலுப்படுத்துதல்.
- மாவோயிஸ்டுகளின் கிளர்ச்சியால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள, மாநில அரசுகளின் ஆலோசனை மற்றும் பங்கேற்புடன் ஒரு தேசிய திட்டம் உருவாக்கப்படும். கிளர்ச்சிக் குழுக்களுடனான பேச்சுகள் நிபந்தனைக்குட்பட்டதாகவும், அரசியலமைப்பின் கட்டமைப்பிற்கு உட்பட்டதாகவும் இருக்கும்.
- வடகிழக்கு மற்றும் பிற மாநிலங்களில் இருந்து புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் சமூகங்களின் பாதுகாப்பிற்காக உறுதியான உடனடி நடவடிக்கைகளை எடுக்கப்படும்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- பிற நாடுகளுடன் பயங்கரவாத எதிர்ப்பு/பாதுகாப்பு விஷயங்களில் கூட்டுப் பணிக்குழுக்களை (JWGs) அமைப்பதற்கான நடவடிக்கைகளை பாரத் எடுத்துள்ளது. மற்ற நாடுகளுடன் பரஸ்பர சட்ட உதவி (MLATs) தொடர்பான இருதரப்பு ஒப்பந்தங்களும் கையெழுத்திடப்பட்டுள்ளன. 2017- ஆம் ஆண்டில், உள்துறை அமைச்சகத்தில் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் தீவிரவாத எதிர்ப்பு பிரிவு மற்றும் சைபர் மற்றும் தகவல் பாதுகாப்பு பிரிவு ஆகியவை உருவாக்கப்பட்டன. 2014 முதல் 9 சிறப்பு NIA நீதிமன்றங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- 2015-ஆம் ஆண்டில், உளவு நிறுவனங்களுக்கு இடையே உளவுத்துறை சேகரிப்பை ஒருங்கிணைக்கவும் தேசிய பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை கையாளவும் தேசிய சைபர் ஒருங்கிணைப்பு மையம் (NCCC) உருவாக்க அரசாங்கத்தால் அனுமதி வழங்கப்பட்டது. NCCC -இன் முதல் கட்டம் 2017 முதல் செயல்படத் தொடங்கியது. தகவல் பாதுகாப்பு கல்வி மற்றும் விழிப்புணர்வு தளம், கணினி அவசர பதில்வினைக் குழு – இந்தியா (cert-in), போலீஸ் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணியகத்தின் பயிற்சிப் பிரிவு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சைபர்

கிரைம் தடுப்பு திட்டம், சிபிஐ போன்ற பல்வேறு துறைகள் மற்றும் திட்டங்கள் மூலம் சைபர் தடயவியல் குறித்த பயிற்சி அமர்வுகளை அரசு நடத்தி வருகிறது.

- நாடு முழுவதும் காவல்துறையை நவீனப்படுத்த ரூ.18000 கோடிக்கு மேல் அனுமதிக்கப்பட்டுள்ளது. குற்றம் மற்றும் குற்றவியல் வலைப்பின்னல் மற்றும் அமைப்புகள் (CCTNS) கொள்கை நவம்பர் 2018-இல் தேசிய அளவில் வெளியிடப்பட்டது.
- 2014-ஆம் ஆண்டு சமூக பாதுகாப்புக்காக ரூ.290 கோடியில் 'பேரிடர் அபாயத்தைக் குறைப்பதில் சிவில் பாதுகாப்பை மைய நீரோட்டத்திற்கு கொண்டுவரும் திட்டத்தை' அரசு தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ் வரும் கிராமப்புற மாவட்டங்களின் எண்ணிக்கை 100-ல் இருந்து 240 மாவட்டங்களாக அதிகரிக்கும்.
- அரசு, NCC பயிற்சி உத்தரவுகளை அவ்வப்போது புதுப்பிக்கிறது. 2018-19 ஆண்டு அறிக்கையின்படி, மொத்தம் பதிவு செய்யப்பட்ட 13,29,202 கேடட்களின் எண்ணிக்கையில், பெண் கேடட்களின் எண்ணிக்கை 4,23,464 ஆக இருந்தது. இது மொத்த பதிவு செய்யப்பட்ட கேடட்களில் 31.8% ஆகும்.
- இடதுசாரி தீவிரவாத (LWE) சம்பவங்கள் 60% குறைந்துள்ளது. 44 மாவட்டங்களில் நக்சலிஸம் மற்றும் இடதுசாரி வன்முறை ஒழிக்கப்பட்டது. நக்சல்-மாவோயிஸ்ட் சித்தாந்தத்தால் பாதிக்கப்பட்ட பல இளைஞர்கள் சரணடைந்து மைய நீரோட்டத்தில் இணைந்தனர்.
- நாட்டின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த நபர்களின் கவலைகளைத் தீர்ப்பதற்காக 2014-இல் பேஸ் பருவா குழு அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டது. இந்த குழுவின் பரிந்துரைகள் ஏற்கப்பட்டு, நடைமுறைப்படுத்துவதற்கான பல்வேறு கட்டங்களில் தற்போது உள்ளன.

# வெளிப்புற பாதுகாப்பு – அதன் எல்லை, அழகு மற்றும் பரிசு

## வழங்கிய வாக்குறுதி

- பாதுகாப்பு உபகரணங்கள், ஆதரவு சேவைகள், நிறுவன சீர்திருத்தங்கள் மற்றும் அது தொடர்புடைய பிற விஷயங்கள் தொடர்பான சீர்திருத்தங்களின் சிக்கலைத் தீர்த்தல்.
- பாதுகாப்புப் படைகளில் கமிஷன்டு மற்றும் நான்-கமிஷன்டு அதிகாரிகளின் பற்றாக்குறையை முன்னுரிமை அடிப்படையில், குறிப்பிட்ட காலத்திற்குள் நிவர்த்தி செய்தல்.
- ‘ஒரு பதவி, ஒரு ஓய்வூதியம்’ திட்டத்தை அமல்படுத்துதல்.
- நமது வீரர்களின் வீரத்தை அங்கீகரித்து கௌரவிக்க ஒரு போர் நினைவுச்சின்னத்தை உருவாக்குதல்.
- குறுகியகால சர்வீஸ் கமிஷனை (SSC) மிகவும் ஈர்ப்புள்ளதாக மாற்ற நடவடிக்கை எடுத்தல்.
- தேசிய கடல்சார் ஆணையத்தை அமைத்தல்; இது சிறந்த உள்கட்டமைப்புடன் கூடியதாகவும், கடலோர பாதுகாப்பில் கவனம் செலுத்துவதாகவும் அமையும்.
- உள்நாட்டு பாதுகாப்பு தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல் மற்றும் தற்காப்பு கொள்முதல்களை விரைவாகக் கண்காணிப்பது போன்ற குறிக்கோள்களுடன் ஆயுதப் படைகள் நவீனப்படுத்தப்படும் மற்றும் பாதுகாப்புத் துறையில் ஆராய்ச்சி & வளர்ச்சி (R&D) அதிகரிக்கப்படும்.
- எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை உறுதியான கரத்துடன் ஒடுக்குதல்.
- எல்லை நிர்வாகத்தை மதிப்பாய்வு செய்து மேம்படுத்தல்; சட்டவிரோத குடியேற்றத்தை தடுக்க தண்டனை நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்படும்.

- மனிதவள பற்றாக்குறையை சமாளிக்க பாதுகாப்பு துறைக்கென நான்கு பிரத்யேக பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படும்.
- முன்னாள் படைவீரர் பங்களிப்பு சுகாதாரத் திட்டத்தை (ECHS) சீர்திருத்துதல் மற்றும் முன்னாள் படைவீரர்களை மீண்டும் பணியமர்த்துதல் உள்ளிட்ட படைவீரர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய படைவீரர் ஆணையத்தை நியமித்தல்.
- பாதுகாப்பு அமைச்சகத்தின் முடிவெடுக்கும் செயல்பாட்டில் ஆயுதப்படைகளின் அதிக பங்களிப்பை உறுதி செய்தல்.
- ஆயுதப்படை தீர்ப்பாயங்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை செயல்படுத்துதல் மற்றும் அரசாங்கத்தின் மேல்முறையீடுகளைக் குறைத்தல்.
- படைவீரர்கள், அவர்கள் பணிபுரியும் இடத்திலிருந்து பதிவு செய்து தேர்தலில் வாக்களிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்தல்.
- கன்டோன்மென்ட் மற்றும் பிற இடங்களில் பாதுகாப்பு துறைக்கு சொந்தமான நிலத்தை டிஜிட்டல் மயமாக்கும் செயல்முறையைத் தொடங்குதல்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- 2016-ஆம் ஆண்டில், பாதுகாப்பு உபகரணங்கள், தளங்கள் மற்றும் அமைப்புகளின் உள்நாட்டு வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் உற்பத்தி மூலம் அரசாங்கத்தின் ‘மேக் இன் இந்தியா’ முன்முயற்சியை மேம்படுத்துவதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துவதில் கவனம் செலுத்தி, பாதுகாப்பு கொள்முதல் நடைமுறைகள் திருத்தப்பட்டன.
- மோடி அரசு, ஆயுதப்படைகளின் வேலைவாய்ப்புகள் குறித்து இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த, நிலையான நற்பெயர் பரப்புரைத் திட்டம், தொழில் கண்காட்சிகள் மற்றும் கண்காட்சிகளில் பங்கேற்பது மற்றும் விளம்பரப் பிரச்சாரம் ஆகியவற்றை உள்ளடக்கிய பல முயற்சிகளை எடுத்தது.

ஆயுதப்படைகளின் பணிகளை கவர்ச்சிகரமானதாக மாற்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

- 2018-இல், மோடி அரசு 01.07.2014 முதல் பாதுகாப்புப் படைப் பணியாளர்களுக்கு ‘ஒரே பதவி ஒரே ஓய்வூதிய’ திட்டத்தை (OROP) அமல்படுத்தியது. 30.09.2017 நிலவரப்படி (01.05.2018 வரை தகவல் தொகுக்கப்பட்டுள்ளது), 20,60,220 பாதுகாப்புப் படை ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.10,795.40 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.
- 25 பிப்ரவரி 2019 அன்று, இந்தியா கேட்டில் உள்ள தேசிய போர் நினைவகத்தை பிரதமர் மோடி திறந்து வைத்தார்.
- இந்திய விமானப் படை (IAF) சமீபத்தில் ஐந்தாண்டு காலத்திற்கு சோதனை அடிப்படையில் பெண்களை போர் விமான சேவையில் ஈடுபடுத்தும் குறுகியகால சேவை ஆணையம் (SSC) திட்டத்தை திருத்தியுள்ளது. 2016-ஆம் ஆண்டு முதல் மூன்று பெண் அதிகாரிகள் கொண்ட குழு போர் விமானங்களை இயக்குவதற்கான பணியில் நியமிக்கப்பட்டனர்.
- பாரதத்தின் கடல்சார் மண்டலத்தில் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்வதோடு கூடுதலாக, இந்திய கடல் படை (ICG) கப்பல்கள் மற்றும் விமானங்கள் கடலோர மாநிலங்களின் கடல்சார் கண்காணிப்பை மேற்கொள்வதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. சாகர்மாலா திட்டம் பல கடலோர மற்றும் கடல்சார் மேம்பாட்டுத் திட்டங்களை வழங்கியது.
- உள்நாட்டு உற்பத்தித் திறனை (போர்க் கப்பல்கள், பாதுகாப்பு விமானங்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை உருவாக்குதல்) அதிகரிப்பதை உறுதி செய்வதற்காக, பாதுகாப்பு கொள்முதல் நடைமுறையில் (DPP) அரசாங்கம் பல திருத்தங்களை அறிமுகப்படுத்தியது. ஆயுதப்படைகளின் தலைமை தளபதி கட்டளையின் கீழ், பாதுகாப்பு சைபர் ஏஜென்சி, பாதுகாப்பு விண்வெளி ஏஜென்சி மற்றும் சிறப்பு செயல்பாட்டு பிரிவு ஆகிய மூன்று புதிய ராணுவ ஏஜென்சிகள் உருவாக்கப்பட்டன.

5 பில்லியன் டாலர் மதிப்பில் S400 ஏவுகணைகளை வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் ரஷ்யாவுடன் மோடி அரசு கையெழுத்திட்டது.

- எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு "பூஜ்ஜிய சகிப்புத்தன்மை கொள்கையை" அரசாங்கம் பின்பற்றுகிறது
- நவீன தொழில்நுட்பத்துடன் நமது நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்க விரிவான ஒருங்கிணைந்த எல்லை மேலாண்மை அமைப்புகளை (CIBMS) செயல்படுத்துதல்.
- பாரதத்தின் மத்திய பல்கலைக்கழகத்தை தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது.
- முன்னாள் ராணுவ வீரர்களுக்கான தேசிய ஆணையத்தை அமைப்பதற்காக, முன்னாள் ராணுவ வீரர்களுக்கான தேசிய ஆணைய மசோதா 2015, வரைவு நிலையில் தயார் செய்யப்பட்டுள்ளது.
- ஜனவரி 2018-இல் ECHS உடன் 85 மருத்துவ வசதிகளை இணைப்பதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டன.
- படைகளின் வருவாய் கொள்முதலில் ஈடுபடும் முடிவெடுக்கும் செயல்முறையை விரைவுபடுத்துவதற்காக, மூன்று பாதுகாப்பு படைகளின் துணைத் தலைவர்களின் நிதிசார் முடிவெடுக்கும் அதிகாரங்களை அரசாங்கம் உயர்த்தியிருக்கிறது.
- 2018-இல் ஜம்முவில் ஆயுதப்படை தீர்ப்பாயத்தின் (AFT) புதிய அமர்வை ராணுவம் தொடங்கியது.
- 2016-இல் அரசு, தேர்தல் நடத்தை விதிகள், 1961 இல் திருத்தம் செய்து, ஆயுதப்படைகளில் பணிபுரியும் வாக்காளர்கள் இ-அஞ்சல் வாக்குச்சீட்டு மூலம் தேர்தலில் வாக்களிக்க முடியும் என்பதை உறுதி செய்தது.
- பாதுகாப்பு எஸ்டேட் அதிகாரிகள் (DEO) மற்றும் கண்டோன்மென்ட் வாரியங்களால் பராமரிக்கப்படும் பொது

நிலப் பதிவேடு (GLR) மற்றும் இராணுவ நிலப் பதிவேடு (MLR) ஆகியவற்றில் உள்ள நிலப் பதிவேடுகளின் கணினிமயமாக்கல் பணி ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளது. DEO-கள் மற்றும் கன்டோன்மென்ட் போர்டுகளின்-கோப்புகளில் உள்ள நிலப் பதிவேடுகளை அட்டவணைப்படுத்துதல், ஸ்கேன் செய்தல் மற்றும் டிஜிட்டல் மயமாக்குதல் ஆகியவற்றுக்கான திட்டத்தை பாதுகாப்பு எஸ்டேட்டுகளுக்கான பொது இயக்குநர் செயல்படுத்தி வருகிறார்.

# பாதுகாப்பு உற்பத்தி

## வழங்கிய வாக்குறுதி

- பாதுகாப்பு உற்பத்தியில் தொழில்நுட்ப பரிமாற்றம் அதிக அளவில் ஊக்குவிக்கப்படும்.
- பாதுகாப்புத் துறையின் வளர்ச்சியைத் தடுக்கும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்போம்.
- போட்டிச் சூழலில், உள்நாட்டுப் பயன்பாடு மற்றும் ஏற்றுமதி ஆகிய இரண்டிற்கும், ராணுவ வன்பொருள் மற்றும் தளங்களின் வடிவமைப்பு மற்றும் உற்பத்தியில் பெரிய பங்கைப் பெற உள்நாட்டுத் தொழில்துறையை ஊக்குவிப்போம்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- அரசால் நவம்பர் 27, 2018 அன்று 'மிஷன் ரக்ஷா ஞான சக்தி' திட்டம் தொடங்கப்பட்டது. இதன் பின்னணியில் உள்ள முக்கிய யோசனை என்னவென்றால், வெளிநாட்டு ஆதாரங்களில் இருந்து தொழில்நுட்பத்தை இந்தியாவிற்கு மாற்றும் (ToT) கலாச்சாரத்திலிருந்து பாரதத்தில் அறிவுசார் சொத்துகளை உருவாக்கி, பாதுகாப்பு துறையில் தன்னிறைவு இலக்கை அடைய வேண்டும் என்பதாகும்.

- மேக் இன் இந்தியாவை மேம்படுத்துவதற்காக பல்வேறு உள்நாட்டுத் தொழில் நிறுவனங்களுடன் ரூ.1.1 லட்சம் கோடி மதிப்பிலான 128 பாதுகாப்பு ஒப்பந்தங்களில் அரசு கையெழுத்திட்டது.

## சுயாதீன செயல்பாடான அணுசக்தி செயல்திட்டம்

### வழங்கிய வாக்குறுதி

- இந்தியாவின் அணுசக்திக் கோட்பாட்டை விரிவாகப் பரிசீலித்து, தற்போதைய காலச் சூழலுக்குப் பொருத்தமானதாக மாற்ற, அதைத் திருத்தவும், புதுப்பிக்கவும் செய்வோம்.
- மாறிவரும் உலகளாவிய சூழ்நிலைகளுடன் ஒத்துப்போகும் வகையிலான, நம்பகமான குறைந்தபட்ச தடுப்பு நிலையை பராமரிப்போம்.
- இந்தியாவின் உள்நாட்டு தோரியம் தொழில்நுட்ப திட்டத்தில் முதலீடு செய்வோம்.

### நிறைவேற்றிய வாக்குறுதி

- 2015-இல், இந்திய அணுசக்தி கழகம் (NPCIL) இந்திய பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்களுடன் கூட்டு முயற்சி நிறுவனங்களை உருவாக்குவதற்கு ஏதுவாக, அணுசக்திச் சட்டம் 1962 - ஐ அரசாங்கம் திருத்தியது.
- சிவில் மற்றும் இராணுவ நோக்கங்களுக்காக, குறிப்பாக பாரதத்தின் எரிசக்தித் துறையில் அணுசக்தி முக்கிய பங்களிப்பாக இருப்பதால், வெளிநாட்டு அழுத்தம் மற்றும் செல்வாக்கு ஆகியவற்றால் கட்டுப்படுத்தப்படாத இருமுனை சுயாதீன அணுசக்தி திட்டத்தை அரசாங்கம் பின்பற்றுகிறது.
- டிசம்பர் 2016-இல், தோரியம் பயன்பாட்டிற்கான 300 மெகாவாட் அதிநவீன கன நீர் உலையை நிறுவுவதற்காக தாராபூர் மகாராஷ்டிரா அமைவிடத்திற்கு (TMS) அரசு கொள்கை ரீதியான ஒப்புதலை வழங்கியது. தோரியம் அடிப்படையிலான

அணுஉலைகளில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.292 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு உறவுகள் – நாட்டின் நலனுக்கே முன்னுரிமை; உலகளாவிய சகோதரத்துவம்

### வழங்கிய வாக்குறுதி

- தேசிய நலன்களை முன்னிறுத்தி, பரஸ்பர நன்மை மற்றும் ஒன்றோடொன்று இணைந்த உறவுகளின் கோட்பாட்டின் மூலம் மற்ற நாடுகளுடனான உறவானது யதார்த்த உணர்வுடன் பேணப்படும்.
- பயங்கரவாதம் மற்றும் புவி வெப்பமடைதல் போன்ற விஷயங்களில் ஒரே மாதிரியான சர்வதேசக் கருத்தை நாங்கள் வென்றெடுப்போம்.
- பெரும் வல்லரசு நலன்களால் வழிநடத்தப்படுவதற்குப் பதிலாக, அண்டை நாடுகளிலும் அதற்கு அப்பாலும் உள்ள நாடுகளுடன் சுயமாகச் செயல்படுவோம்.
- தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு (SAARC) மற்றும் தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு (ASEAN) போன்ற பிராந்திய மன்றங்களை வலுப்படுத்தும் நோக்கில் செயல்படுவோம்.
- BRICS, G20. IBSA, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) மற்றும் ASEM போன்ற உலகளாவிய அமைப்புகளுடன் நமது உரையாடல், ஈடுபாடு மற்றும் ஒத்துழைப்பைத் தொடர்வோம்.
- நமது செய்தி உலகிற்கு எடுத்துச் செல்லப்படுவதையும், நமது மகத்தான நாடு ஒட்டுமொத்தமாகத் தகுந்த முறையில் பிரதிநிதி த்துவப்படுத்தப்படுவதையும் உறுதிசெய்து, நமது வெளிநாட்டு தூதர்களின் தொகுப்பை விரிவுபடுத்தி, மேம்படுத்துவோம்.
- வெளிநாடு வாழ் இந்தியர்கள், இந்திய வம்சாவழியினர் மற்றும் வெளிநாட்டில் குடியேறிய தொழில் வல்லுநர்கள் ஆகியோர்

நமது தேசிய நலன்கள் மற்றும் விவகாரங்களை உலகளவில் வெளிப்படுத்தும் பிரதிநிதிகளாக கருதப்படுவர்.

- மதத்தின் பெயரால் துன்புறுத்தப்பட்ட இந்துக்களுக்கு இந்தியா ஒரு இயற்கையான தாய் வீடாக இருக்கும், மேலும், இங்கு அடைக்கலம் கோருவதற்கும், பெறுவதற்கும் அவர்கள் வரவேற்கப்படுவார்கள்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- பிரதமர் மோடி, உலக நாடுகளுடன் உறவுகளின் தொடர்ச்சி மற்றும் புதிய உறவுகளை வளர்த்தெடுத்தல் இரண்டிற்குமிடையே சிறந்த சமநிலையைப் பேணுகிறார். அத்துடன், 'பாரத் முதன்மை' என்ற அடிப்படைக் கருப்பொருளைக் கொண்ட, செயலூக்கமான, லட்சியமான மற்றும் புதுமையான இந்த ராஜதந்திர முயற்சியை எடுத்து வருகிறார். நடுத்தர மற்றும் நீண்ட கால உறவுகளைப் பேணுவதில் செயல்திட்ட அடிப்படையிலான முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர் நிரூபித்துள்ளார்.
- பாரத், தனது பல்வேறு 23 கூட்டாளி நாடுகளுடன் பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பான கூட்டுப் பணிக்குழுக்கள் (JWG-CT) மூலம் கட்டமைக்கப்பட்ட ஆலோசனைகளை தொடர்ந்து நடத்தியது. COP21 பாரிஸ் 2015-இல் பாரத் ஒரு முன்னணி பங்கு வகித்தது.
- 'கிழக்கே செயல்படுதல்' மற்றும் 'மேற்கு நோக்கில்' என்ற ராஜதந்திர கொள்கை பாரதத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் தேசிய அறிவு வலையமைப்பின் பலன்களை ஒத்த எண்ணம் கொண்ட சார்க் நாடுகளுடன் பகிர்ந்துகொள்வதில் பாரத் உறுதியுடன் உள்ளது (எகா: தெற்காசியா செயற்கைக்கோள், தெற்காசிய பல்கலைக்கழகம், பேரிடர் மேலாண்மை உள்ளிட்டவற்றில்).
- பொருளாதாரம் மற்றும் நிதி ஒத்துழைப்பு, உலகளாவிய பொருளாதார நிர்வாகம் மற்றும் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் பாரதத்தின் வலுவான வெளியுறவுக்

கொள்கையை BRICS, G20.IBSA, SCO மற்றும் ASEM ஆகிய அமைப்புகளுடன் சேர்ந்து மோடி வழிநடத்தினார்.

- பொருளாதார ராஜதந்திரப் பிரிவு நாட்டின் வெளியுறவுக் கொள்கையின் பொருளாதார அம்சங்களில் கவனம் செலுத்துகிறது. இது, 2018-19 நிதியாண்டில் பல முயற்சிகளை மேற்கொண்டது. வெளியுறவுத்துறை அமைச்சகம் (MEA), மத்திய அரசு அமைச்சகங்கள்/துறைகள், மாநில அரசுகள், வணிக அமைப்புகள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள தூதரகங்கள்/அதிகாரிகள் இடையே அதிக ஒருங்கிணைப்பை உறுதி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
- புலம்பெயர் மக்களை நோக்கிய அரசாங்கத்தின் முன்முயற்சிகள் இரு முனைகள் கொண்டவை. ஒன்று, NRI-கள் மற்றும் இந்திய வெளிநாட்டு குடிமக்களுக்கு (OCI) தூதரக சேவைகள், பாதுகாப்பு மற்றும் அவர்களைச் சென்றடைதல் முயற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது; இரண்டாவதாக, பரோபகார உதவிகள், அறிவு பரிமாற்றம், புதுமை சார்ந்த விஷயங்களில் முதலீடுகள் மற்றும் பிற வளர்ச்சித் திட்டங்களில் உதவி ஆகியவற்றின் மூலம் இந்தியாவின் வளர்ச்சிக்கு பங்களிக்க புலம்பெயர்ந்தோரை ஊக்குவிக்கும் கொள்கைகளை உருவாக்குதல் ஆகியவையாகும்.
- ஜூலை 2016-இல் இந்திய நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய குடியுரிமை திருத்த மசோதாவானது, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் வங்காளநாட்டில் மதரீதியான துன்புறுத்தலில் இருந்து தப்பி வந்த இந்துக்களுக்கு இந்தியாவில் குடியுரிமைக்கான நடைமுறையினை எளிதாக்குகிறது.

# கலாச்சார பாரம்பரியம்

## ராமர் கோவில்

### வழங்கிய வாக்குறுதி

அயோத்தியில் அரசியலமைப்பின் கட்டமைப்பிற்கு உட்பட்டு ராமர் கோவில் கட்டுவதற்கு வசதியாக அனைத்து சாத்தியக்கூறுகளையும் ஆராய்வதற்கான தனது நிலைப்பாட்டை பாஜக மீண்டும் வலியுறுத்துகிறது.

### நிறைவேற்றிய வாக்குறுதி

மோடி அரசு நமது அரசியல் சாசனத்தில் உறுதியாக நம்பிக்கை வைத்து, ராமர் கோயில் கட்டுவதற்கான சட்டக் கட்டமைப்பைத் தொடர்ந்து பின்பற்றி வந்தது. அதன் பின்தொடர் நிகழ்வாக உச்ச நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, கட்டி முடிக்கப்பட்ட ராமர் கோவிலின் 'பிரான பிரதிஷ்டா' நிகழ்வானது, 22/01/2024 அன்று அயோத்தியில் பிரதமர் மோடி முன்னிலையில் வெகு சிறப்பாகவும் பிரமாண்டமாகவும் நடைபெற்றது.

## ராமர் பாலம்

### வழங்கிய வாக்குறுதி

ராமர் பாலமானது, நமது கலாச்சார பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகும், மேலும் அதன் பரந்த தோரியம் இருப்பு காரணமாக செயல்திட்ட முக்கியத்துவம் வாய்ந்தது. 'சேது சமுத்திர கால்வாய்' திட்டத்தில் எந்த முடிவையும் எடுக்கும்போது இந்த உண்மைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

### நிறைவேற்றிய வாக்குறுதி

மோடி அரசு, ராமர் சேதுவை சேதப்படுத்த மாட்டோம் என்று உச்ச நீதிமன்றத்தில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்துள்ளது, சேதுசமுத்திர கப்பல் கால்வாய் திட்டத்தின் முந்தைய வழிக்கு மாற்றாக வேறொரு வழிக்கான சாத்தியத்தை ஆராய விரும்புகிறது.

## கங்கை

### வழங்கிய வாக்குறுதி

கங்கை நதி இந்தியாவின் நம்பிக்கையின் சின்னம். நாடு முழுவதும் 'நதிகளைத் தூய்மைப்படுத்தும் திட்டம்' மக்கள் பங்கேற்புடன் தொடங்கப்படும்.

### நிறைவேற்றிய வாக்குறுதி

'நமாமி கங்கா' திட்டத்தின் கீழ் 25,500 கோடி ரூபாய் மதிப்பிலான 254 திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 3076 MLD திறன் கொண்ட புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (STPகள்) அமைக்கும் 131 திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## பசு மற்றும் கன்றுகள்

### வழங்கிய வாக்குறுதி

- பசுவையும் அதன் கன்றுகளையும் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் தேவையான சட்ட கட்டமைப்பு உருவாக்கப்படும்.
- உள்நாட்டு கால்நடை இனங்களை மேம்படுத்துவதற்கான திட்டத்தை செயல்படுத்த தேசிய கால்நடை மேம்பாட்டு வாரியம் அமைக்கப்படும்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- 2014-இல், 'ராஷ்டிரிய கோகுல் மிஷன்' என்ற திட்டமானது உள்நாட்டு பசு இனங்களின் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு, பசுக்களின் எண்ணிக்கையின் மரபணு தரமுயர்த்தல் மற்றும் பால் உற்பத்தியை அதிகரித்தல் ஆகியவற்றிற்காகத் தொடங்கப்பட்டது.

# பாரம்பரிய அமைவிடங்கள்

## வழங்கிய வாக்குறுதி

- அனைத்து தேசிய பாரம்பரிய ஸ்தலங்களின் பராமரிப்பு & மறுசீரமைப்பு மற்றும் எந்த வடிவத்திலும் அவை அழிக்கப்படுவதைத் தடுப்பதற்குத் தேவையான நிதி ஆதாரங்களை நாங்கள் வழங்குவோம்.
- காப்பகங்கள் மற்றும் தொல்லியல் மற்றும் அருங்காட்சியக பதிவுகளின் டிஜிட்டல் மயமாக்கல் தொடங்கப்படும்.
- அனைத்து மதங்களின் புனித யாத்திரை மையங்களை அழகுபடுத்துதல், உள்கட்டமைப்பு மற்றும் வசதிகளை மேம்படுத்துவதற்கு என ஒரு தேசிய திட்டப்பணி தொடங்கப்படும்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- பிரசாத் திட்டம், சுற்றுலா தலங்களில் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் அழகுபடுத்துவதற்காக மத்திய நிதி உதவியை வழங்குகிறது. 15 மாநிலங்களில் 727.16 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 24 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- அருங்காட்சியகங்களை 3D டிஜிட்டல் மயமாக்கும் முன்னோடி திட்டம் ஒன்று, அவற்றை மற்றொரு நிலைக்கு கொண்டு செல்ல தொடங்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் நிறைவேறியதும் அருங்காட்சியக அனுபவத்தில் இது ஒரு முன்னோடி முயற்சியாக இருக்கும்.

- பாரத் தனது ஏழு சொத்துகள்/தளங்களை யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய பட்டியலில் பதிவு செய்ய முடிந்தது மற்றும் 29 கலாச்சாரம் சார்ந்த, 07 இயற்கை சார்ந்த மற்றும் 01 கலப்பு தளங்களுடன் ஒட்டுமொத்தமாக 37 உலக பாரம்பரிய கல்வெட்டுகளைக் கொண்டுள்ளது. ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்தில் (ASPAC) உள்ள உலக பாரம்பரிய சொத்துகளின் எண்ணிக்கையில் சீனாவிற்கு அடுத்தபடியாக பாரத் இரண்டாவது இடத்தில் உள்ளது. உலக அளவில் ஒட்டுமொத்தமாக ஆறாவது இடத்தில் உள்ளது.

## மொழிகள்

### வழங்கிய வாக்குறுதி

இந்திய மொழிகளை ஊக்குவிக்கவும், அனைத்து இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை எடுக்கவும், அதனால் அவை அறிவு சமுதாயத்தை உருவாக்குவதற்கான சக்திவாய்ந்த வாகனமாக மாறும்படியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### நிறைவேற்றிய வாக்குறுதி

பிரதமர் மோடி நமது பாரதத்தின் பல மொழிகளை உலகளாவிய மன்றம் முழுவதும் ஊக்குவித்தார் மற்றும் வளர்ந்த நாடுகளுடன் நமது பிராந்திய மொழிகளின் மதிப்பை வெளிப்படுத்தும் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செயல்படுத்தினார்.

## பொது சிவில் சட்டம்

### வழங்கிய வாக்குறுதி

உலகம் முழுவதிலுமுள்ள சிறந்த சட்ட மரபுகளை வரைவு செய்து, அவற்றைக் கொண்டு நவீன காலத்துடன் ஒத்திசைந்திருக்கும் படியாக உருவாக்கப்பட்ட, நாடு முழுமைக்கும் பொருந்தும்படியான ஒரே

மாதிரியான சிவில் சட்டத்திற்கான எங்கள் நிலைப்பாட்டை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்..

## நிறைவேற்றிய வாக்குறுதி

ஜூலை 2016-இல், நாடுமுழுவதும் ஒரே மாதிரியான சிவில் சட்டத்தைக் கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்ய சட்ட ஆணையக் குழுவை அரசாங்கம் கேட்டுக் கொண்டது.

# சுருக்கத்தொகுப்பு (மோடி அரசு – முதல் முறை (2014-2019) – மாற்றத்திற்கான அடித்தளம் வரப்பட்டது)

2013 - ஆம் ஆண்டிற்கு நமது நினைவை பின்னோக்கி அழைத்துச் செல்வோம்;

- பாரதம் “ஊழலின் தலைநகரம்” என்று அழைக்கப்பட்டது.
- 7 கோடி ஏழைப் பெண்கள் எல்.பி.ஜி எரிவாயு இல்லாமல் அவதிப்பட்டனர்.
- 10 கோடி ஏழை மக்களுக்கு கழிப்பறை வசதி இல்லை.
- 35 கோடி ஏழை மக்களுக்கு வங்கிக் கணக்கு கிடையாது.
- 19 கோடி ஏழைகளுக்கு காப்பீடுக்கான வசதியில்லை (உயிர் & விபத்து தொடர்பான காப்பீடு).
- 20 கோடி ஏழை விவசாயிகள். தங்கள் விவசாய நிலத்தின் மண் மற்றும் அதன் ஆரோக்கியம் குறித்து அறிய இயலாத நிலை.
- 14 கோடி ஏழை விவசாயிகள் பயிர் காப்பீடு பெற முடியவில்லை.
- ஏழை மக்களுக்கான அரசு மானியப் பணமான ரூ.90,000 கோடி கொள்ளையடிக்கப்பட்டது.
- 18,600-க்கும் அதிகமான கிராமங்களுக்கு மின்சார வசதி இல்லை.
- 1,76,000 கிமீ நீள கிராம சாலைகள் அமைக்கப்படவில்லை

- 24 லட்சம் முன்னாள் படைவீரர்கள் & 6 லட்சம் போர் விதவைகள் ஒரே பதவி ஒரே ஓய்வூதியம் (OROP) திட்டப்பலனைப் பெற முடியவில்லை.
- 2.5 கோடி ஓய்வூதியதாரர்கள் ஓய்வூதியப் பணத்தைப் பெற அலுவலகத்திற்கு அலைய வேண்டிய பரிதாப நிலை இருந்தது.
- 18 கோடி மக்களால், திறமை இருந்தும் சிறு தொழில் தொடங்க முடியவில்லை.
- 1.2 கோடி கர்ப்பிணிப் பெண்களுக்கு சரியான சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள் கிடைக்கவில்லை.
- 3 லட்சம் போலி நிறுவனங்கள் செயல்பட்டு வந்தன.

எனவே, 2013-இல் இருந்த அதே வளர்ச்சி வேகத்துடன் நமது நாடு வளர்ச்சி அடைந்திருக்குமானால், மேலே குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடை பாரதத்திற்கு இன்னும் 60 ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கும்.

மே 2014-இல் நேர்மையான பிரதமரான திரு. நரேந்திர மோடி அவர்கள் நாட்டிற்கு ஒரு வரமாகக் கிடைத்ததால், பாரதம் வேகமாக முன்னேறியது. சாதனை வேகத்தில் நடந்த பிரதமர் மோடியின் 5 ஆண்டுகால **நல்லாட்சி**, மேற்கூறிய சவால்களை வெறும் 60 மாதங்களிலேயே சாதனைகளாக மாற்றியிருக்கிறது.

*“எந்தவொரு சமூகத்திற்கோ அல்லது பிரிவினருக்கோ அல்ல; முழு தேசத்துக்கான சேவைகளுக்கு நாங்கள் உறுதியளிக்கிறோம். நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் நம் ரத்தத்தின் ரத்தமும், சதையின் சதையும்தான். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தாங்கள் பாரத மாதாவின் குழந்தைகள் என்ற பெருமையை அளிக்கும் வரை நாங்கள் ஓயமாட்டோம்.”*

*– பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா*

பண்டிட் தீன்தயாள் உபாத்யாயாவின் ஒவ்வொரு வார்த்தையும் நமது மாண்புமிகு பிரதமர் மோடியின் தலைமையில் நிஜமாகிவிட்டது.

நல்லாட்சி என்பது, எந்த ஒரு ஜனநாயக அரசின் அடையாளம். முதல் நாளிலிருந்தே நல்லாட்சிக்கு மோடி அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

உதாரணமாக, எந்த ஒரு மத்திய அரசின் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும், நாட்டின் கடைக்கோடியில் இருப்பவர்களுக்கும் மேம்பாடு அளிப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது. ஏழைகளின் கரங்களை வலுப்படுத்தி, அவர்களை வளர்ச்சியின் பிரதான நீரோட்டத்திற்கு கொண்டு வருவது மோடி அரசின் முயற்சியாகும்.

பிரதமர் மோடியின் முதல் பதவிக்கால (2014-2019) நல்லாட்சி, ஏழைகளின் மேம்பாடு, விவசாயிகளுக்கு முன்னுரிமை, பெண்களுக்கு அதிகாரமளித்தல், இளைஞர்களின் மீதான கவனம், வலுவான வெளிநாட்டு உறவுகள், ஊழலை ஒழித்தல், சுகாதாரத் துறையை மாற்றியமைத்தல் போன்றவற்றில் முதன்முறையாக முழுமையான வளர்ச்சியை எட்டி வரலாற்றுச் சாதனையாக மாற்றியிருக்கிறது.

பின்வரும் பிரிவு, பிரதமர் மோடியால் நிறைவேற்றப்பட்ட வரலாறு படைக்கும் விதத்திலான மாற்றத்தை எடுத்துக் காட்டுகிறது.

## உருமாற்றத்தின் வேகம் மற்றும் அளவு

### ரயில்வே துறை வளர்ச்சியில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கான வேக அளவு மற்றும் பாதுகாப்பு

- ரயில் விபத்துகள் 118 (2013-ஆம் ஆண்டில்) -இல் இருந்து 46 (2018-ஆம் ஆண்டில்)- ஆக குறைக்கப்பட்டது
- ரயில் பாதை புதுப்பித்தலில் 50% அதிகரிப்பு
- அகலப்பாதை வழித்தடங்கள் 7600 கிமீ (2009-14 காலகட்டத்தில்) உடன் ஒப்பிடும்போது 9528 கிமீ (2014 -2018 காலகட்டத்தில்)

- பாரத் ரயில்வேயின் அகலப்பாதை வழித்தடங்களில் 100% மின்மயமாக்கல் (ஆண்டுக்கு ரூ. 13,510 கோடி எரிபொருள் சேமிப்பு)

## எக்ஸ்பிரஸ் வேகத்தில் பாரதத்தை இணைக்கும் சாதனை

- கிராமங்கள் முழுவதும் கிராமப்புற சாலை இணைப்பு 56% (2014-ஆம் ஆண்டில்) -லிருந்து 97% (2018-ஆம் ஆண்டில்) ஆக அதிகரித்துள்ளது
- நெடுஞ்சாலைகள் கட்டுமான வேகம் 12 கிமீ/நாள் (2013-ஆம் ஆண்டில்) –என்பதில் இருந்து 27 கிமீ/நாள் (2017-ஆம் ஆண்டில்) -ஆக அதிகரித்தது
- கிராமப்புற வீடுகளில் கட்டடப்பட்ட கழிப்பறைகளின் எண்ணிக்கை 6.5 கோடியிலிருந்து (1947-2014 காலகட்டம்) 9.91 கோடியாக (2014-2018 காலகட்டம்) அதிகரித்துள்ளது.
- ஆப்டிகல் ஃபைபர் மூலம் இணைக்கப்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை 59 (2011-2014 காலகட்டம்) –லிருந்து 1.21 லட்சம் (2014-2018 காலகட்டம்) -ஆக அதிகரித்துள்ளது.
- கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் 1.8 கோடி வீடுகள் கட்டடப்பட்டுள்ளன

## தொலைத்தொடர்பு துறையில் முன்னெப்போதும் இல்லாத அளவு மாற்றம்

- பிராட்பேண்ட் இணைப்புகள் 61 மில்லியனிலிருந்து (2014-ஆம் ஆண்டில்,) 412 மில்லியனாக (2018-ஆம் ஆண்டில்) அதிகரித்தன
- ‘இணைய வசதிகள் கிடைக்கும் நபர்களின் எண்ணிக்கை 251 மில்லியனில் இருந்து (2014-ஆம் ஆண்டில்), 446 மில்லியனாக (2018-ஆம் ஆண்டில்) அதிகரித்துள்ளது

- வெறும் 3 ஆண்டுகளில் அந்நிய நேரடி முதலீடு (FDI) 5 மடங்கு அதிகரிப்பு (2015-இல் $1.3 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மற்றும் 2017 -இல் $6.2 பில்லியன் அமெரிக்க டாலர்கள்)

# புதிய பாரதத்திற்கான உள்கட்டமைப்பு

## புதிய பாரதத்திற்கான அடுத்த தலைமுறை உள்கட்டமைப்பு

- பாரத்மாலா திட்டத்தின் முதல் கட்டம் – 5.35 லட்சம் கோடி மதிப்பீட்டில் நெடுஞ்சாலைத் துறையை பன்முனை மாதிரி ஒருங்கிணைப்புடன் விரிவுபடுத்துகிறது
- பாதுகாப்பான சாலைகளுக்கான சேது பர்தம் திட்டம் - அனைத்து தேசிய நெடுஞ்சாலைகளையும் ரயில்வே லெவல் கிராஸிங்குகள் இல்லாத ஒன்றாக ஆக்குகிறது
- பாரதத்தின் நீளமான சாலை சுரங்கப்பாதை (ஜம்மு) & நீளமான பாலம் (அஸ்ஸாம்) அமைக்கப்பட்டது.

## சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் மலிவான எரிபொருளுக்கான உந்துதல்

- 129 மாவட்டங்களில் நகர எரிவாயு விநியோக (CGD) திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது
- 2 கோடி குழாய் இயற்கை எரிவாயு (PNG) இணைப்புகள் & 4600 அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) நிலையங்கள் 70% மக்கள்தொகையை சென்றடையும் வகையில் நிறுவப்படும்
- 96 நகரங்களில் CGD திட்டங்களால் 46.5 லட்சம் குடும்பங்கள் மற்றும் 32 லட்சம் CNG வாகனங்கள் பயனடைந்தன.

## உள்நாட்டு நீர்வழிகளைப் பயன்படுத்துதல்

- தேசிய நீர்வழிகள் 5 (2014-க்கு முன் வரை)-லிருந்து 106 ஆக (2014 முதல்) அதிகரிப்பு

- கங்கை நதியில் பாரதத்தின் முதல் உள்நாட்டு நீர்வழி முனையம் திறக்கப்பட்டது
- தேசிய நீர்வழிகளில் கட்டத் திட்டமிடப்பட்ட நான்கு பன்னோக்கு மாதிரி முனையங்களில் முதல் முனையம் கட்டி முடிக்கப்பட்டது.
- கடந்த 4 ஆண்டுகளில் முக்கிய துறைமுகங்களில் பணிகளை முடிக்க எடுத்துக் கொள்ளும் சராசரி நேரம் குறைப்பு (2014-இல் 94 மணிநேரம் மற்றும் 2017-இல் 64 மணிநேரம்)

## விவசாயிகளுக்கு முதலிடம்

### பட்ஜெட் ஒதுக்கீடு மற்றும் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல்

- ரூ 1,21,082 கோடி (2009-14 காலகட்டம்)-ஆக இருந்தது, தற்போது ரூ 2,11,694 கோடியாக அதிகரிப்பு (2014-19 காலகட்டம்)
- சிறு தொழிலகங்களை அமைக்க தேசிய மூங்கில் திட்டத்தின் கீழ் ரூ 1,290 கோடி ஒதுக்கீடு
- விவசாய சந்தை உள்கட்டமை நிதியமைப்பிற்கு ரூ.2,000 கோடி நிதி ஒதுக்கீடு.
- அபாயங்களைக் குறைக்க குறைந்த கட்டணத்தில் புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டம் அறிமுகம்
- ஒவ்வொருவயலுக்கும்மண்ணின்ஆரோக்கியத்தின்அடிப்படையில் தரமான விதைகள் மற்றும் ஊட்டச்சத்துக்கள் வழங்கப்படுகின்றன.

### புதிய உச்சத்தைத் தோட்ட விவசாய உற்பத்தி மற்றும் கொள்முதல் (2018–19 காலகட்டம்)

- உற்பத்தி அளவு: உணவு தானியங்கள் (283.37 மெட்ரிக் டன்), அரிசி (115.63 மெட்ரிக் டன்), பருப்பு வகைகள் (23.22 மெட்ரிக் டன்)

- கரும்பு (400.37 மெட்ரிக் டன்), தோட்டக்கலை பொருட்கள் (314.87 மெட்ரிக் டன்), தானியங்கள் (43.33 மெட்ரிக் டன்)
- விவசாயிகளிடமிருந்து 64 லட்சம் மெட்ரிக் டன் பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் விதைகள் குறைந்தபட்ச ஆதரவு விலையில் (MSP) வாங்கப்பட்டன. (2014-18 காலகட்டம்)
- பருப்பு வகைகளின் எதிர்பாரா தேவைகளை எதிர்கொள்ள இருப்பு அளவு 1.5 லட்சம் டன்னிலிருந்து 20 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.

## துரித வளர்ச்சி

### வணிகத்தை மேம்படுத்தும் ஜிஎஸ்டி & எளிதாகும் வாழ்க்கை

- நுகர்வோர்களுக்கு ஆண்டுக்கு 80,000 கோடி ரூபாய் நிவாரணத்தை ஜிஎஸ்டி வழங்குகிறது.
- 57.5 லட்சத்திற்கும் அதிகமான புதிய வரி செலுத்துவோர் ஜிஎஸ்டி அமலாக்கத்திற்குப் பிறகு பதிவுசெய்துள்ளனர் (நவம்பர் 2018 வரை)
- ரூ.91,149 கோடிக்கும் அதிகமான தொகை, ஜிஎஸ்டி ஆல் திரும்ப வழங்கப்பட்டன.
- சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டதன் மூலம் போக்குவரத்து நேரம் கணிசமாக குறைந்திருக்கிறது.

### தைரியமான சீர்திருத்தங்கள்: அடுத்த வளர்ச்சி அலைக்கு எடுத்துச்செல்லும்.

- வரலாற்றுச் சிறப்புமிக்க திவால் சட்டம், கடனாளிகளிடமிருந்து ரூ. 3 லட்சம் கோடியை வங்கிகள் மீட்டெடுக்க வழிவகுத்தது.
- வீடு வாங்குபவர்களின் கனவுகளும், உரிமைகளும் ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறைச் சட்டத்தினால் பாதுகாக்கப்படுகின்றன

- வெளிப்படையான வள ஒதுக்கீடு முறையில் 89 நிலக்கரிச் சுரங்கங்கள் ஒதுக்கீடு.
- தொழிலாளர்கள் நலனை மேம்படுத்தும் ஊதியம் வழங்குதல் (திருத்தம்) சட்டம் 2017.

## வணிகம் செய்வதை எளிதாக்குதல் & சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSMEகள்)

- தரவரிசையில் சாதனை படைக்கும் முன்னேற்றம் [கட்டுமான அனுமதிகள் வழங்கலில் தரவரிசையில் 184 (2014-ஆம் ஆண்டில்) -லிருந்து 52 (2018-ஆம் ஆண்டில்) -ஆக உயர்வு.
- மின்சாரத்தைப் பெறுவதில் தரவரிசையில் (2014-இல் 137 என்பதிலிருந்து 2018-இல் 24 ஆக முன்னேற்றம்), எல்லைகளைக் கடந்த வர்த்தகத்தில் தரவரிசையில் [2014-ஆம் ஆண்டில் 216 – லிருந்து) (2018-ஆம் ஆண்டில்) 80 ஆக முன்னேற்றம்]
- MSME-களின் வளர்ச்சிக்கான 12 புதிய முயற்சிகள் (எளிதான கடன், பரந்துவிரிந்த சந்தைகள், சிறந்த தொழில்நுட்பம்)
- 50 கோடியில் இருந்து 250 கோடி வரை வருடாந்திர வருவாய் கொண்ட நிறுவனங்களுக்கு கார்ப்பரேட் வரி விகிதம் 25% ஆக குறைக்கப்பட்டது

# பெண்கள் நலனில் முன்னேற்றம்

## குழந்தைப்பிறப்பை எதிர்நோக்கியிருக்கும் தாய்மார்களின் நல்வாழ்வை எளிதாக்குதல்

- 1.8 கோடிக்கும் அதிகமான பிறப்புக்கு முந்தைய பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன (ஜூன் 2018)
- அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் 14,641-க்கும் மேற்பட்ட சுகாதார பராமரிப்பு வசதிகள்

- 87 லட்சத்திற்கும் அதிகமான ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது
- ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு 26 வாரங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது (உலக நாடுகளிலேயே அதிக கால அளவுகளில் ஒன்று)
- கர்ப்பிணிகளுக்கு ரூ.6000 ரொக்க ஊக்கத்தொகை

## பெண்கள் மேம்பாடு முதல் பெண்கள் தலைமையிலான வளர்ச்சி வரை

- அடையாளம் காணப்பட்ட 104 மாவட்டங்களில் பிறப்பு பாலின விகிதம் மேம்படுத்தப்பட்டுள்ளது
- பெண் குழந்தைகள் கல்விக்காக பல உதவித்தொகைகள் & மேல்நிலைப் பள்ளிகளில் பெண்களின் சேர்க்கை அதிகரிப்பு
- முத்ரா & ஸ்டாண்டப் இந்தியா திட்டங்களால் 9 கோடிக்கும் அதிகமான பெண்கள் பயனடைந்தனர்
- 8 கோடி ஏழைப் பெண்கள் எல்பிஜி இணைப்புகளைப் பெற்றனர்
- 27 லட்சம் பெண்கள் பயன்பெறும் வகையில் அங்கன்வாடி பணியாளர்களுக்கான மதிப்பூதியத்தை உயர்த்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

## பெண்களுக்கான சமூக அதிகாரமளிப்பை ஊக்குவித்தல்

- முஸ்லிம் பெண்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு வகையில் மக்களவையில் முத்தலாக் மசோதா நிறைவேற்றப்பட்டது
- முஸ்லீம் பெண்கள் இப்போது ஆண் பாதுகாவலர் இல்லாமல் ஹஜ் பயணம் செய்யலாம்
- 10.5 கோடிக்கு மேல் கட்டப்பட்டுள்ள கழிவறைகள் - பெண்களின் கண்ணியத்தை உறுதி செய்யும்
- 12 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளை பலாத்காரம் செய்பவர்களுக்கு மரண தண்டனை

# சமூக நீதிக்கான அர்ப்பணிப்பு

## மாற்றுத் திறனாளிகளின் முழுமையான வளர்ச்சி

- அரசாங்க வேலைவாய்ப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கான இட ஒதுக்கீடு 3%-லிருந்து 4%-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- சுமார் 12 லட்சம் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.700 கோடி மதிப்பிலான நிதி உதவிகள் மற்றும் உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ஆட்டிசம், பெருமூளை வாதம் மற்றும் பல்வேறு குறைபாடுகள் உள்ளவர்களுக்கு ரூ.1 லட்சம் சுகாதார காப்பீடு
- அனைத்து 34 சர்வதேச மற்றும் 48 உள்நாட்டு விமான நிலையங்கள், 644 ரயில் நிலையங்கள் என அனைத்திலும் மாற்றுத் திறனாளிகள் அணுகக்கூடிய வகையில் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன

## சமூக உள்ளடக்கத்தின் மூலம் அபிலாஷைகளை நிறைவேற்றுதல்

- SC/ST சட்டத்தில் வலுவான திருத்தங்கள்
- பஞ்சதீர்த்: பாபாசாகேப் அம்பேத்கரின் வாழ்க்கையுடன் தொடர்புடைய 5 இடங்களை மேம்படுத்தி அவருக்கு அஞ்சலி செலுத்துதல்
- SC/ST சமூகங்கள் நலனுக்காக ரூ 1,26,887 கோடி பட்ஜெட் ஒதுக்கீடு (2019-ஆம் ஆண்டில்). இது வரலாற்றுச் சிறப்புமிக்க ஒதுக்கீட்டு அளவாகும்.
- 5.7 கோடிக்கும் அதிகமான மாணவர்கள் (2014-18 காலகட்டத்தில்) ரூபாய் 15,918 கோடி மதிப்பிலான கல்வி உதவித்தொகையுடன் பயனடைந்தனர்

## கல்வி மூலம் அதிகாரமளித்தல்

- பள்ளிக்கு வந்துசெல்லும் மாணவர்களுக்கான உதவித்தொகை ரூ.150-லிருந்து ரூ.225 ஆகவும், விடுதிகளில் தங்கி கல்வி பயில்வோருக்கு ரூ.350-லிருந்து ரூ.525 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.
- SC & OBC மாணவர்களுக்கு இலவச பயிற்சி (வருமானத் தகுதி 4.5 லட்சத்தில் இருந்து 6 லட்சமாக உயர்த்தப்பட்டது)
- OBC-களுக்கான ப்ரீ-மெட்ரிக் உதவித்தொகை வழங்குதலுக்கு, உதவித்தொகை விகிதம் கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## ஆரோக்கிய பாரதத்தை உருவாக்குதல்

## குறைந்த கட்டணத்தில் தரமான சுகாதார சேவையை உறுதி செய்தல்

- 1387 மருந்துகள் விலைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதால், ஆண்டுக்கு ரூ. 5,066 கோடி சேமிப்பு
- மலிவு விலையில் மருந்துகள் கிடைக்க பிரதமர் ஜனௌஷதி கேந்திராக்கள் (5479 கடைகள்)
- இதய சிகிச்சைக்கு பயன்படும் கார்டியாக் ஸ்டென்ட்களின் விலை 85% குறைப்பு. மற்றும் மூட்டுமாற்று சிகிச்சையில் பயன்படும் முழங்கால் உள்வைப்புகள் 69% விலை குறைக்கப்பட்டது
- ஆயுஷ்மான் பாரத் - உலகின் மிகப்பெரிய சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் (50 கோடி மக்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் வரை)
- ஏழைகளுக்கான இலவச டயாலிசிஸ் மற்றும் அனைத்து நோயாளிகளுக்குமான மானியச் சேவைகள் (பாரதம் முழுவதும் 647 டயாலிசிஸ் மையங்கள்)

## நோயை நீக்குதல், ஒரு நேரத்தில் ஒரு டோஸ் மருந்து

- மே 2015-இல் தாய்வழியாக வரக்கூடிய மற்றும் பிறந்த குழந்தை டெட்டனஸ் நோய் நீக்கத்தை பாரத் உறுதிப்படுத்தியது. (உலகளாவிய இலக்கான டிசம்பர் 2015-க்கு முன்னரே)
- இந்திரதனுஷ் திட்டம் - 551 மாவட்டங்களில், தடுப்பூசி போடப்பட்ட 3.39 கோடி குழந்தைகளை உள்ளடக்கியது
- மருந்து உணர்திறன் காசநோய்க்கான சிகிச்சை 4,00,000 நேரடியாக கவனிக்கப்படும் சிகிச்சை மையங்கள் (DOT) மூலம் வழங்கப்படுகிறது
- செயலிழக்கச் செய்யப்பட்ட போலியோ தடுப்பூசி (IPV) 2015-இல் அறிமுகப்படுத்தப்பட்டது, இதுவரை குழந்தைகளுக்கு 6.4 கோடி டோஸ் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

## ஆரோக்கியமான பாரதத்திற்கான கொள்கை

- 15 வருட இடைவெளிக்குப் பிறகு தேசிய சுகாதாரக் கொள்கை 2017-இல் உருவாக்கப்பட்டது
- மனநலப் பாதுகாப்புச் சட்டம் - மனநலப் பராமரிப்பில் சமத்துவம் மற்றும் சரியான நடைமுறையை வலுப்படுத்துகிறது
- மருத்துவ சிகிச்சையோடு தொடர்புடைய துணை சேவைகள் வழங்கும் நிபுணர்கள் சட்டம் 2018 (இதன்மூலம் 8 முதல் 9 லட்சம் சுகாதார நிபுணர்கள் பயனடைகிறார்கள்)

# இளைஞர் சக்தியைப் பயன்படுத்துதல்

## விளையாட்டு மற்றும் விளையாட்டில் நேர்மைத்தன்மை

- திறமையான வீரர்களுக்கு 8 ஆண்டுகள் வரை ஆண்டிற்கு ரூ.5 லட்சம் என்ற அளவில் நிதி உதவி
- முதல் கேலோ இந்தியா பள்ளிகளுக்கான போட்டிகள் ஜனவரி 2018-இல் தொடங்கப்பட்டது (இதில் 3507 வீரர்கள் பங்கேற்றனர்)

- மணிப்பூரில் தேசிய விளையாட்டு பல்கலைக்கழகம் அமைப்பு
- ஆஸ்திரேலியாவில் 2018-இல் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பாரத் வரலாற்று சிறப்புமிக்க வகையில் 66 பதக்கங்களை வென்றது.

## கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மாற்றம் கொண்டு வருதல்

- எண்ணற்ற பல்கலைக்கழகங்கள், 7 ஐஐடிகள், 7 ஐஐஎம்கள், 14 ஐஐஐடிகள், 2 ஐஐஎஸ்இஆர்கள், 1 என்ஐடி, 103 கேவிகள், 4 என்ஐடிகள், 14 எய்ம்ஸ்கள் & 62 நவோதயா வித்யாலயாக்கள் நிறுவப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளன.
- தரமான கல்வி நிறுவனங்களுக்கு சுயாட்சி வழங்குவதன் மூலம் கல்வியில் பெரும் சீர்திருத்தம்
- வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான மும்முனை கொண்ட நீண்ட அணுகுமுறை (பொதுத்துறை, தனியார் துறை மற்றும் சுய வேலைவாய்ப்பு)

## திறன் மேம்பாடு & பயிற்சி

- இளைஞர்களிடையே திறன்களை மேம்படுத்தும் வகையில் பிரதமர் திறன் மேம்பாட்டுத் திட்டம் (PMKVY) தொடங்கப்பட்டது
- 633 வர்த்தகப் பிரிவுகளில் 25000 மையங்களில் பயிற்சி மற்றும் 1 கோடிக்கும் அதிகமான இளைஞர்கள் இதில் பயிற்சி பெற்றனர்
- அடல் புதுமை நோக்கிலான செயல்திட்டம் – 8878 பள்ளிகளில் அடல் டிங்கரிங் ஆய்வகங்கள் துவக்கம்
- பழங்குடியினர் பகுதிகளில் கல்வி உள்கட்டமைப்பை அதிகரிக்க, 463 ஏக்லவ்யா மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிகள்

# ஊழலை ஒழித்தல்

## வழக்குகளை விரைவாக தீர்ப்பதற்கான தீர்ப்பாயங்கள்

- பினாமி சொத்து பரிவர்த்தனை சட்டம் - மேல்முறையீட்டு தீர்ப்பாயம் அமைத்தல் மற்றும் தீர்ப்பளிக்கும் அதிகாரி நியமனம்
- பினாமி சொத்து பரிவர்த்தனை சட்டத்தில் ரூ. 50,000 கோடி பறிமுதல் செய்யப்பட்டது
- தப்பியோடிய பொருளாதார குற்றவாளிகள் மசோதா சட்டம் - பொருளாதார குற்றவாளிகளின் சொத்துகளை பறிமுதல் செய்ய சட்ட அமலாக்கத் துறைகளுக்கு அதிகாரம் அளிக்கிறது

## ஊழலைக் கட்டுப்படுத்த சட்டங்களை செயல்படுத்துதல்

- நிலக்கரிச் சுரங்கங்கள் மற்றும் தொலைத்தொடர்பு அலைக்கற்றையின் வெளிப்படையான ஏலம் புதிய அளவுகோலை அமைத்துள்ளது
- கெசட்டட் அந்தஸ்து அல்லாத பதவிகளுக்கு இனி நேர்காணல் இல்லை - தகுதி அடிப்படையிலான வேட்பாளர்கள் வெற்றி பெறுவர்
- திட்டங்களுக்கான சுற்றுச்சூழல் ஒப்புதலுக்கான நேரம் 600 நாட்களில் இருந்து 180 நாட்களாக குறைப்பு
- மொரிஷியஸ், சைப்ரஸ் மற்றும் சிங்கப்பூர் ஆகியவற்றுடன் இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம்
- சுவிட்சர்லாந்துடன் நிகழ்நேர தகவல் பகிர்வு ஒப்பந்தம்

## வெளிப்படைத்தன்மையை அதிகரிக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்

- 437 திட்டங்களுக்காக ரூ.7.66 லட்சம் கோடி நேரடியாக பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டது.

- ஆதாருக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் - 1 கோடிக்கும் அதிகமான வருமான வரி செலுத்துவோர் விபரங்களில் ஆதார் இணைப்பு
- வெளிப்படையான பொது கொள்முதலுக்கான GEM ஆன்லைன் தளம் - 25% சேமிப்புடன் ரூ. 33,050 கோடி மதிப்புள்ள 20 லட்சம் பரிவர்த்தனைகள்

# புதிய பாரதத்தைப் பார்க்கும் உலகம்

## உலகளாவிய வளர்ச்சி இயந்திரமாக மாறிவரும் பாரத்

- பாரத் உலகின் மிக வேகமாக வளரும் பெரிய பொருளாதாரமாக மாறி வருகிறது
- அனைத்து முதலீட்டு நிறுவனங்கள் மற்றும் மேக்ரோ பொருளாதார குறிகாட்டிகள் ஆகியவற்றில் பாரத் உயர்வாக மதிப்பிடப்பட்டுள்ளது
- பாரதத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2013 முதல் 2017 வரையிலான காலகட்டத்தில் 31% அதிகரித்தது. அதே சமயம் உலகளாவிய GDP 4% அதிகரித்துள்ளது

## புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டை நோக்கி உலகை வழிநடத்தும் இந்தியா

- உலகளாவிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவல் திறனில் பாரதத்தின் நிலை (காற்றாலை சக்தியில் 4வது இடம், சூரிய சக்தியில் 5வது இடம், புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் 5வது இடம்)
- வெறும் 4 ஆண்டுகளில் 40 பில்லியன் அமெரிக்க டாலருக்கும் அதிகமான பசுமை ஆற்றல் திறன் உருவாக்கம்
- நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன் 35 GW (2014-ஆம் ஆண்டில்) -லிருந்து 80 GW (2019-ஆம் ஆண்டில்)- ஆக அதிகரித்துள்ளது.

## காலநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்தை வழிநடத்தும் பாரத்

- பாரிஸில் நடந்த COP21-இல் பாரத் ஒரு முன்னணி பங்கு வகித்தது
- பாரத் 2018-இல் சர்வதேச சூரிய சக்திக் கூட்டமைப்பை (ISA) தொடங்க முன்முயற்சி எடுத்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் (121 நாடுகள் பங்குபெற்றது) ISA அங்கத்துவத்தை வழங்குவதற்கான தீர்மானத்தை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது.

# மோடி அரசு – இரண்டாவது பதவிக்காலம் (2019-2024) – நிறைவேற்றப்பட்ட வளர்ச்சிப் பணிகள்

பாரதத்திற்கு வலுவான மாற்றம்: 2014 முதல் 2019 வரை பிரதமராக நரேந்திர மோடியின் முதலாவது பதவிக் காலத்தில், இந்தியாவின் பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் சமூக நலன் ஆகியவற்றின் பல்வேறு அம்சங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் மற்றும் முன்னேற்றங்கள் செய்யப்பட்டன. நரேந்திர மோடி பாரதத்திற்காக ஒரு வலுவான மாற்றத்தை வழங்கினார்.

- பலவீனமான ஐந்து அம்சங்களிலிருந்து பாரதத்தை வெளியே கொண்டுவருதல்: "பலவீனமான ஐந்து" என்ற சொல், நிதி நெருக்கடிகளால் பாதிக்கப்படக்கூடியதாகக் கருதப்படும் இந்தியா உட்பட வளர்ந்து வரும் சந்தைப் பொருளாதாரங்களின் குழுவைக் குறிக்கிறது. மோடியின் அரசாங்கம் இந்தியாவின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், அதை இந்த குழுவில் இருந்து அகற்றவும் பாடுபட்டது.
- பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவது: பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடவும், பாதுகாப்பு அச்சுறுத்தல்களில் இருந்து நாட்டைப் பாதுகாப்பாக மாற்றவும் அரசாங்கம் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்தது.
- விவசாயிகள் மற்றும் ஏழைகளுக்கு புத்துயிர் அளித்தல்: விவசாயிகள் மற்றும் வறுமையில் வாடும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும்

முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அவர்களை பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மேம்படுத்தும் நோக்கத்தில் மேற்கொள்ளப்பட்டது.

- சவால்களை வாய்ப்புகளாக மாற்றுதல்: சவால்களுக்கு பயப்படுவதற்குப் பதிலாக, அரசாங்கம் அவற்றை வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான வாய்ப்புகளாக அணுகி, நாடு எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்கு புதுமையான தீர்வுகளைக் கண்டது.

மோடி அரசாங்கம் நேர்மறையான வருவிளைவுகளைக் கொடுக்கும் என்கிற மிகுந்த எதிர்பார்ப்புடனும் உறுதியான நம்பிக்கையுடனும் அவரின் 2வது பதவிக்காலத்தை நாடு வலுவாக ஆதரித்தது. பாரத மக்களால் “மிகப்பெரிய எதிர்பார்ப்புகளுடன்” இந்த மாபெரும் ஆணை வழங்கப்பட்டது.

## தேசத்தின் எதிர்பார்ப்புகள்

மோடி அரசின் இரண்டாவது பதவிக்காலம் துணிச்சலான சீர்திருத்தங்களைக் கொண்டுவரும் மற்றும் உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நடவடிக்கைகள் முதலீடுகளை அதிகரிக்கும், பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்ற நம்பிக்கை அதிகமாக இருந்தது.

தொடர்ச்சியான சீர்திருத்தங்கள் மற்றும் வலுப்படுத்தும் முயற்சிகள்:

குறிப்பாக தொழில்முனைவு மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு போன்ற துறைகளில், தற்போதைய சீர்திருத்தங்கள் மற்றும் ஏற்கனவே உள்ள முயற்சிகளை வலுப்படுத்துவதற்கான அதிக நம்பிக்கையுடன் மோடி அரசாங்கத்தின் இரண்டாவது ஆட்சியை மக்கள் வரவேற்றனர்.

- மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகளைத் தொடர்ந்து வலுப்படுத்துவதற்கும், அவற்றின் வளர்ச்சி செயற்பாட்டுத் திட்டத்தை அதிகரிப்பதற்கும், அதன் மூலம் தொழில்முனைவோர்

சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டை விரைவுபடுத்துவதற்கும் அரசு முயற்சிக்கும் என்று நம்பினர்

- மாற்றும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்: பொருளாதார வளர்ச்சி, சமூக மேம்பாடு மற்றும் இளைஞர்களின் வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதற்காக மேம்பட்ட தொழில்நுட்பங்களை அரசாங்கம் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.
- ஸ்டார்ட்-அப்கள் மற்றும் ஃபின்-டெக் சுற்றுச்சூழல் அமைப்புக்கான ஆதரவு:
- ஸ்டார்ட்-அப்கள் மற்றும் நிதி தொழில்நுட்ப வளர்ச்சி, டிஜிட்டல் இந்தியா போன்ற திட்டங்களின் வெற்றிகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் நிதி உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது.
- டிஜிட்டல் இந்தியா திட்டம் பல நன்மைகளை கொண்டு வந்துள்ளது.
- இது டிஜிட்டல் பொருளாதாரத்தில் வளர்ச்சியை உந்தியது மற்றும் நிதி தொழில்நுட்பத்தின் (fin-tech) விரிவாக்கத்தை எளிதாக்கியுள்ளது.
- டிஜிட்டல் இந்தியா 2.0 இன் கீழ் அதிக முன்னெடுப்புகள் முக்கியத்துவம் பெறும்.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் மத்திய சட்டம், பொறியியல், அறிவியல் மற்றும் மேலாண்மை நிறுவனங்களில் இடங்களின் எண்ணிக்கையை குறைந்தது 50% அதிகரித்தல்.
- உயர்கல்விக்கான முக்கிய ஆதாரமாக ஆன்லைன் கற்றலுக்கு முக்கியத்துவம் அளித்தல்.
- இசை மற்றும் நடனம் போன்ற நுண்கலைகளை மையமாகக் கொண்டு கலை, கலாச்சாரம் மற்றும் இசை பல்கலைக்கழகத்தை அமைத்தல்; விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா பல்கலைக்கழகம் மற்றும் ஒரு போலீஸ் பல்கலைக்கழகம் ஆகியவற்றை அமைத்தல்.
- ஒழுங்குமுறை மாற்றத்தை உறுதிப்படுத்த சட்டத்தில் தேவையான மாற்றங்களைச் செய்தல்.
- 2024-க்குள் மேலும் 50 உயர்தர சிறப்பு நிறுவனங்களை உருவாக்குதல்.
- உலகின் சிறந்த 500 நிறுவனங்களில் தரவரிசையில் இடம்பெற அதிக எண்ணிக்கையில் உயர்கல்வி நிறுவனங்களை ஊக்குவித்தல்.
- வெளிநாட்டு மாணவர்களை இந்திய கல்வி நிறுவனங்களில் அதிக அளவில் படிக்கக் கொண்டுவர, 'இந்தியாவில் படிப்பதற்காக' என்ற ஒரு திட்டத்தை ஊக்குவித்தல்.
- நமது அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் ஒத்துழைக்க தொழில்துறையை ஊக்குவித்தல்
- மாணவர்களுக்கு இலவசமாக முன்னணி இதழ்களை கிடைக்கச் செய்தல்.
- திறன் மேம்பாடு - 'மீள் திறன் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான தேசியக் கொள்கையை' உருவாக்குதல்

## நிறைவேற்றிய வாக்குறுதி

- 2014-இல் 723 -இல் ஆக இருந்த பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை, 2023-இல் 1,113-ஆக நம நாட்டில் உயர்ந்துள்ளது (கடந்த 9 ஆண்டுகளில் 5,298 கல்லூரிகள் கட்டப்பட்டுள்ளன)
- 43% பல்கலைக்கழகங்களும் 61.4% கல்லூரிகளும் கிராமப்புறங்களில் அமைந்துள்ளன. கடந்த 9 ஆண்டுகளில் 7 ஐஐடிகள் மற்றும் 7 ஐஐஎம்கள் நிறுவப்பட்டுள்ளன.
- நிஷ்தா - "பள்ளித் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்களின் முழுமையான முன்னேற்றத்திற்கான தேசிய முன்முயற்சி" என்பது ஒரு ஒருங்கிணைந்த ஆன்லைன் ஆசிரியர் பயிற்சித் திட்டமாகும், இது ஆகஸ்ட் 2019-இல் தொடங்கப்பட்டது (இதுவரை 69,715 பேர் பதிவு செய்துள்ளனர்).
- DIKSHA- ஒரு நாடு, பள்ளிக் கல்விக்கான ஒரே டிஜிட்டல் தளம் (6,068 QR குறியீட்டு-ஆற்றல் பெற்ற பாடப்புத்தகங்கள், 361 தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (NCERT) பாடப்புத்தகங்கள், 3,07,475 லட்சம் மின் உள்ளடக்கங்கள் உட்பட).
- தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020-இன் ஒரு பகுதியாக, புதுச்சேரி தேசிய தொழில்நுட்ப பல்கலைகழகத்தில் கர்நாடக இசை (வாய்பாட்டு) பாடநெறியாகச் சேர்க்கப்பட்டுள்ளது.
- பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையில், இந்திய அரசு நாடு முழுவதும் தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகத்தின் வலையமைப்பை நிறுவுகிறது.
- தேசிய பாதுகாப்பின் முன்னோடியாகத் திகழும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமான, ராஷ்ட்ரிய ரக்ஷா பல்கலைக்கழகம் மற்றும் பாரத் காவல் பல்கலைக்கழகம், 2020-இல் நிறுவப்பட்டது.
- 34 ஆண்டுகளுக்குப் பிறகு மாற்றியமைக்கப்பட்ட புதிய தேசிய கல்விக் கொள்கையின் (NEP-2020) கீழ், பள்ளிக் கல்வியின்

தற்போதுள்ள 10+2 முறையானது 5+3+3+4 என்ற அமைப்பில் மாற்றியமைக்கப்படும்.

- சிறப்புத் தரநிலை கழகங்களின் (IoEகள்) எண்ணிக்கையை தற்போதுள்ள 20-ல் இருந்து 50-ஆக உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது.
- கடந்த ஆண்டை விட ஏழு அதிகம் என்ற அளவில் 41 இந்தியப் பல்கலைக்கழகங்கள், QS உலகப் பல்கலைக்கழக தரவரிசை 2023-இல் இடம் பெற்றுள்ளன. அதில், இந்திய அறிவியல் கழகம் (IISc) பெங்களூர் 155-வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்தியாவில் கல்வித் திட்டம் - ஒரு மையப்படுத்தப்பட்ட ஆன்லைன் போர்ட்டல், இதில் வெளிநாட்டு மாணவர்கள் 160-க்கும் மேற்பட்ட இந்திய உயர் கல்வி நிறுவனங்களான ஐஐடிகள், என்ஐடிகள், ஐஐஎஸ்சி போன்றவற்றுக்கு விண்ணப்பிக்கலாம், இது பல துறைகளில் 2600-க்கும் மேற்பட்ட பலதரப்பட்ட படிப்புகளை வழங்குகிறது. 136-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் தற்போது பாரதத்தில் உயர்கல்வியைத் தொடர்கின்றனர்.
- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிப் பிரிவில் ஆராய்ச்சி & வளர்ச்சி குறித்த கருத்தாக்கத்தை விதைக்கவும், வளர்க்கவும் மற்றும் அளவிடவும் மற்றும் குவாண்டம் தொழில்நுட்பத்தில் (QT) ஒரு துடிப்பான மற்றும் புதுமையான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்கவும், எட்டு ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ.6,003.65 கோடி செலவில் "தேசிய குவாண்டம் மிஷன் (NQM)" தொடங்கப்பட்டது.
- தேசிய சூப்பர் கம்ப்யூட்டிங் மிஷன் (NSM) - பணியின் கீழ், நாடு முழுவதும் 28 அமைப்புகள் துவங்கப்பட்டுள்ளன.
- குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கான தேசிய டிஜிட்டல் நூலகம் முன்மொழியப்பட்டது.
- இந்திய திறன்கள் நிறுவனமானது, ஐஐடி கான்பூர், ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிகல் லிமிடெட் மற்றும் விமானப் பணியாளர்கள் ஆய்வு

இயக்குநரகம் (DASI) ஆகிய மூன்று முக்கிய கூட்டாண்மைகளுடன் உருவாக்கப்பட்டது

- திறன் இந்தியா முன்முயற்சி (PMKVY) மற்றும் திறன் மையம் முன்முயற்சி (SHI) ஆகிய இரண்டும் தொழில்துறை பயிற்சி நிறுவனத்தில் (ITI) தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கான திறன்/மறு-திறன் படிப்புகளாகச் செயல்படுகின்றன. இவற்றில் சுமார் 700 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

# பெண்களுக்கு அதிகாரமளித்தல்

## பெண்கள் தலைமையிலான வளர்ச்சி

### வழங்கிய வாக்குறுதி

- ‘பேட்டி பச்சாவோ, பேட்டி பதாவோ’ திட்டத்தை முன்னிலைப்படுத்துவதை தொடர்தல்
- கிராமப்புற பெண் தொழில்முனைவோர், சுய உதவிக்குழுக்கள் மற்றும் பெண் விவசாயிகளுக்கு கடன் கிடைப்பதை உறுதி செய்தல்
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் பெண் பணியாளர்களின் பங்கேற்பு விகிதத்தை அதிகரித்தல்
- குறைந்தபட்சம் 50% பெண் ஊழியர்களைக் கொண்ட MSME-களில் இருந்து 10% அரசு கொள்முதல் செய்வதை உறுதிசெய்தல்.
- க்ரீச் திட்டத்தை வலுப்படுத்துதல் – 2022-க்குள் குழந்தை பராமரிப்பு வசதிகளின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகரிக்கப்படுவதை உறுதிசெய்தல்.

### நிறைவேற்றிய வாக்குறுதி

- “பேட்டி பச்சோ, பேட்டி பதாவோ” திட்டத்தை அரசாங்கம் தொடர்ந்தது & அதற்கான செலவு ரூ.246 கோடி (2019-2022 காலகட்டம்).

- 24.11.2023 நிலவரப்படி, PM முத்ரா யோஜனா (PMMY) திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட மொத்த ரூ.44.46 கோடி கடன்களில், ரூ.30.64 கோடி (69%) பெண்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஸ்டாண்ட்-அப் இந்தியாவின் (SUPI) கீழ், அனுமதிக்கப்பட்ட ரூ.2.09 லட்சம் கடன்களில், ரூ.1.77 லட்சம் (84%) பெண் தொழில்முனைவோருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், சுமார் 9 கோடி பெண்கள், சுமார் 83 லட்சம் மகளிர் சுயஉதவி குழுக்களுடன் (SHGகள்) இணைக்கப்பட்டுள்ளனர்.
- பெண்கள் நடத்தும் கூட்டுறவு இயக்கங்களை மேம்படுத்த தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகம் குறிப்பிடத்தக்க பங்காற்றுகிறது
- காலமுறை தொழிலாளர் எண்ணிக்கை அறிக்கை 2022-23, 9 அக்டோபர் 2023 அன்று அரசால் வெளியிடப்பட்டது, இது நாட்டில் பெண் தொழிலாளர்களின் பங்கேற்பு விகிதம் 2023-இல் 4.2 சதவீத புள்ளிகள் அதிகரித்து 37% ஆக இருப்பதை சுட்டிக்காட்டுகிறது.
- மகளிர் கடனுக்காக 85% வரை உத்தரவாதக் கவரேஜுடன், CGTMSE மூலம் குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு ரூ. 5 கோடி வரை பிணையில்லா கடன் உத்தரவாதத் திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது (01.04.2023 முதல் இத்திட்டம் அமலில் உள்ளது). பெண்களுக்குச் சொந்தமான MSE-களுக்கு ரூ.65,209 கோடிக்கான 15.10 லட்சம் கடன் உத்தரவாதங்கள் நீட்டிக்கப்பட்டுள்ளன.
- அரசாங்கம் 17,000 கல்விக்கூடங்களை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, அவற்றில் 5,222 இன்றுவரை அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 31.10.2023 நிலவரப்படி, மோடி அரசாங்கத்தின் உதவியுடன் 2,412 குழந்தை பராமரிப்பு மையங்கள் (க்ரீச்கள்) செயல்படுகின்றன

# சம உரிமைகளை உறுதி செய்தல்

## வழங்கிய வாக்குறுதி

- முத்தலாக் மற்றும் நிக்காஹ் ஹலாலா போன்ற நடைமுறைகளை தடை செய்வதற்கும் அகற்றுவதற்கும் சட்ட மசோதாக்களை உருவாக்குதல்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் முத்தலாக் சட்டத்திற்கு எதிரான மசோதா சட்டமாக்கப்பட்ட, 1 ஆகஸ்ட் 2019 ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நாள் ஆகும். அதன் பிறகு முத்தலாக் வழக்குகளில் சுமார் 82 சதவீதம் சரிவு ஏற்பட்டுள்ளது

# பெண்களுக்கு கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்தல்

## வழங்கிய வாக்குறுதி

- அனைத்து பெண்களுக்கும் குறைந்த விலையில் பிரசவத்திற்கான சுகாதார சேவைகள் கிடைப்பதில் கவனம் செலுத்துதல்
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஊட்டச்சத்து குறைபாட்டை குறைந்தது 10% குறைத்தல்
- குழந்தை பிறப்பு மற்றும் மாதவிடாய் சுகாதார சேவைகள் போன்றவை இந்தியா முழுவதும் உள்ள அனைத்துப் பெண்களுக்கும் எளிதாக கிடைப்பதை உறுதி செய்தல்
- அனைத்து அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் ஆஷா பணியாளர்களையும் பயன்படுத்தி ஆயுஷ்மான் பாரத் திட்ட பயன்பாட்டை அதிகரித்தல்
- பெண்களின் பாதுகாப்புக்கு அதிக முக்கியத்துவம் அளித்தல்

- பாலின உணர்திறன் படிப்புகளை அனைத்து கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டம் மற்றும் பொது அலுவலகங்களின் பயிற்சித் தொகுதிகளில் இன்றியமையாத பகுதியாக ஆக்குதல்
- நமது தியாகிகளின் விதவைகளுக்கு திறன் பயிற்சி அளித்தல் மற்றும் சமூக பாதுகாப்பு செயல்முறையை வலுப்படுத்துதல்

## நிறைவேற்றிய வாக்குறுதி

- ஜனனி சுரக்ஷா யோஜனா (JSY)-மருத்துவமனையில் பிரசவம் பார்த்துக்கொள்வதை ஊக்குவிக்கும் மற்றும் நிபந்தனையாக்கும் பணப் பரிமாற்றத் திட்டம்.
- ஜனனி சிசு சுரக்ஷா காரியக்ராம் (JSSK), பொது சுகாதார நிறுவனங்களில் ஒவ்வொரு கர்ப்பிணிப் பெண்ணுக்கும் இலவச பிரசவம் (சிசேரியன் உட்பட) இலவச போக்குவரத்து வசதி, நோய் கண்டறிதல், மருந்துகள், பிற நுகர்பொருட்கள், உணவு மற்றும் இரத்தம் ஆகியவற்றை வழங்குகிறது.
- பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா (PMMVY) 2.0 - இரண்டாவது பெண் குழந்தை பிறப்பிற்குப் பிறகு ஒரே தவணையில் ₹6,000 ஊக்கத்தொகை வழங்கப்படும். 3.11 கோடிக்கும் அதிகமான பயனாளிகளுக்கு மொத்தமாக ரூ. 14,103 கோடிகளுக்கு மேல் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- பிரதான் மந்திரி சுரக்ஷித் மாத்ரித்வா அபியான் (PMSMA): ஒவ்வொரு மாதமும் 9-வது நாளில் கர்ப்பிணிப் பெண்களுக்கு பிரசவத்திற்கு முந்தைய தரமான பராமரிப்பு சேவைகளை இலவசமாக வழங்குகிறது. (3.94 கர்ப்பிணிப் பெண்கள் பயனாளிகள் & 19,215 வசதிகள்)
- பிரதான் மந்திரி பாரதிய ஜனௌஷதி பரியோஜனா (PMBJP) திட்டத்தின் கீழ், அரசாங்கம் ஜன் ஔஷதி சுவிதா சானிடரி நாப்கின்களை, பேடு ஒன்றுக்கு ரூ. 1/- விலையில், 10000-க்கும் மேற்பட்ட ஜன் ஔஷதி கேந்திராக்கள் மூலம் விற்பனை செய்கிறது. திட்டத்தின் தொடக்கத்தில் இருந்து, 30 நவம்பர் 2023 வரை, 47.87

கோடிக்கும் அதிகமான ஜன் ஔஷதி சுவிதா சானிடரி பேட்கள், ஜன் ஔஷதி கேந்திராக்களில் விற்கப்பட்டுள்ளன.

- நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில், துணை சுகாதார மையங்கள் (SHCs) மற்றும் கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களை (PHCs) மேம்படுத்துவதன் மூலம் 1,50,000 உடல்நலம் மற்றும் ஆரோக்கிய மையங்கள் (AB-HWCs) [இப்போது ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர் என மறுபெயரிடப்பட்டுள்ளது] உருவாக்கப்பட்டுள்ளது.
- நாட்டில் பெண்களின் பத்திரத் தன்மை மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்த நிர்பயா நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. 2023-24 நிதியாண்டில் நிர்பயா நிதியின் கீழ் ரூ.200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (NCERT) பள்ளி பாடத்திட்டத்தில் பாலின உணர்வை ஊக்குவிக்கும் வகையில் பாடத்திட்டங்கள் மற்றும் பாடப்புத்தகங்களை உருவாக்கியுள்ளது.
- முன்னாள் படைவீரர்களின் (ESM) விதவைகளுக்கான தொழில் பயிற்சி உதவித்தொகை ரூ. 20,000/-இல் இருந்து ரூ. 50,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. (ஒரு முறை மட்டுமே இது வழங்கப்படும்)
- பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம், எல்பிஜி விநியோகஸ்தர் மற்றும் பெட்ரோல்/டீசல் சில்லறை விற்பனை நிலையங்களுக்கான ஒதுக்கீட்டில், 8%-ஐ, விதவைகள், போரில் இறந்த ஆயுதப்படைகளின் குடும்பங்களைச் சார்ந்தவர்கள் உள்ளிட்ட பாதுகாப்புப் பணியாளர்களுக்காக ஒதுக்கியுள்ளது.

## பெண்களுக்கு கண்ணியமான வாழ்க்கையை உறுதிசெய்தல்

### வழங்கிய வாக்குறுதி

- நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டசபைகள் இரண்டிலும் 33% இடஒதுக்கீட்டை பரிந்துரைக்கும் அரசியலமைப்பு திருத்தத்தை நிறைவேற்றுவோம்.

### நிறைவேற்றிய வாக்குறுதி

- மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீட்டை முன்மொழியும் 2023 இன் 128வது திருத்த மசோதா, 2023 செப்டம்பரில் மக்களவை மற்றும் மாநிலங்களவையில் ஒருமனதாக ஒப்புதல் பெற்றது.

# அனைத்தையும் உள்ளடக்கிய மேம்பாடு

## அனைவருக்கும் சமநீதி

### வழங்கிய வாக்குறுதி

- பட்டியல் சாதிகள், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான அரசியலமைப்பு விதிகளின் நன்மைகள் கிடைக்கப்படுவதை உறுதி செய்வோம்.

### நிறைவேற்றிய வாக்குறுதி

- பிரதமர் மோடியால் சட்டப்பிரிவு 370 நீக்கப்பட்டதன் மூலம் மலைவாழ் சமூகத்தினர், தாழ்த்தப்பட்ட சாதியினர், பட்டியல் பழங்குடியினர், பெண்கள் மற்றும் மூத்த குடிமக்களுக்கு இடஒதுக்கீடு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

# "சப்கா விகாஸ்" முன்னெடுப்பை மேம்படுத்துதல்

## வழங்கிய வாக்குறுதி

- பழங்குடியினர் சமூகத்தினருக்கான ஏக்லவ்யா மாதிரி குடியிருப்புப் பள்ளி (EMRS) உறுதிசெய்யப்படும்.
- ஒவ்வொரு வனவாசிகளின் உரிமைகளும் முழுமையாகப் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வோம்.
- நாட்டின் பழங்குடியினர் பகுதிகளில் 50,000 'வான் தன் விகாஸ் கேந்திரா' நிறுவப்படும். இதன் மூலம், முதன்மை செயலாக்கம் மற்றும் வன உற்பத்தியின் மதிப்பு கூட்டல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படும்.
- மேலதிகமாக, சஃபாய் கரம்சாரிகளுக்கு ஒரு வலுவான தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் உறுதி செய்யப்படும்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- தற்போது 401 EMRS பள்ளிகளில் 120,000 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். 59,255 ஆண் மாணவர்களுடன் ஒப்பிடுகையில் 60,815 பெண் மாணவர்களே பெரும்பான்மையாக உள்ளனர். மாணவர்களின் கல்வி அனுபவத்தை மேம்படுத்த EMRS 38,000 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மற்றும் துணை ஊழியர்கள் ஆட்சேர்க்கப்படுவார்கள்.
- பிரதமர் அண்மையில் பிரதம மந்திரி ஜன்ஜாதி ஆதிவாசி நியாய மகா அபியான் (PM JANMAN)திட்டத்தை தொடங்கி வைத்தார், குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடியின குழுக்களின் (PVTGs) விரிவான மேம்பாட்டுக்காக ஏறத்தாழ 24,000 கோடி ரூபாய் கணிசமான பட்ஜெட் ஒதுக்கப்பட்டது.
- • வனத்தில் வசிக்கும் பட்டியல் பழங்குடியினர் மற்றும் பிற பாரம்பரிய வனவாசிகளுக்கு வன உரிமைகளை அங்கீகரித்து நிறுவுவதற்காக, 2006 (FRA என்றும் அழைக்கப்படுகிறது)

பட்டியல் பழங்குடியினர் மற்றும் பிற பாரம்பரிய வனவாசிகள் (வன உரிமைகளை அங்கீகரித்தல்) சட்டம், 2006 ஐ நாடாளுமன்றம் இயற்றியது.

- • மே 2014 வரை, 23,578 சமூகங்களுக்கு சமூக உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும், 2014 முதல் ஜூன் 2023 வரை, நாடு முழுவதும் உள்ள 86,621 சமூகங்கள் இந்த உரிமைகளைப் பெற்றுள்ளன.
- 50,000 வான் தன் சுய உதவிக் குழுக்களை (SHGs) 3,000 வான் தன் விகாஸ் கேந்திரா கிளஸ்டர்களாக (VDVKCs) ஒன்றிணைக்க அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளது. இரண்டு ஆண்டுகளுக்குள், அவர்கள் 52,976 வான் தன் சுய உதவிக் குழுக்களை 3,110 VDVKC களில் இணைத்து, நாடு முழுவதும் உள்ள 27 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 9.27 லட்சம் பயனாளிகளுக்கு உதவி பெற வழிவகுத்தது.
- கையால் துப்புரவு செய்யும் துப்புரவாளர்களாக பணியமர்த்தப்படுவதைத் தடைசெய்வது மற்றும் அவர்களின் மறுவாழ்வுக்கான சட்டம் டிசம்பர் 6, 2013 முதல் நடைமுறைக்கு வந்தது. NSKFDC இன் கீழ் ஸ்வச்தா உத்யமி யோஜனா திட்டத்தின் ஒரு பகுதியாக, சஃபாய் கரம்சாரிகள், கையால் துப்புரவு செய்யும் துப்புரவாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு சலுகைக் கடன்கள் வழங்கப்படுகின்றன.
- கையால் துப்புரவு செய்யும் துப்புரவாளர்களின் மறுவாழ்வுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டமும் (SRMS) - ஒரு முறை பண உதவியாக ஒரு குடும்பத்திற்கு ரூ. 40,000 வழங்கப்படுகிறது. இது, அடையாளம் காணப்பட்ட மற்றும் தகுதியுள்ள 58,098 கையால் துப்புரவு செய்யும் துப்புரவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

# ஏழைகளின் நலனை உறுதி செய்தல்

## வழங்கிய வாக்குறுதி

- அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கையை ஒற்றை இலக்க சதவீதமாகக் குறைப்போம்.
- தற்காலிக கட்டிடங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு 2022க்குள் நிரந்தர, உறுதியான வீடுகளை வழங்குவோம்.
- ‘சப்கா சாத்-சப்கா விகாஸ்’ என்ற எங்களின் உள்ளடக்கிய பொன்மொழிக்கு இணங்க, இந்தக் குடும்பங்களுக்கு, மானிய விலையில் உள்ள சர்க்கரையை மாதத்திற்கு தலா ஒரு கிலோ 13 ரூபாய்க்கு வழங்குவதன் மூலம் எங்கள் உதவியை மேலும் விரிவுபடுத்துவோம்.
- ஐந்து கிலோமீட்டர் சுற்றளவில் உள்ள வங்கி வசதிகளை ஒவ்வொரு இந்தியனும் அணுகுவதை உறுதி செய்வோம்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- ஐந்து ஆண்டுகளில், 13.5 கோடி இந்தியர்கள் பல பரிமாண வறுமையைக் கடக்க முடிந்தது. 2015-16 மற்றும் 2019-21 க்கு இடையில் 24.85% இல் இருந்து 14.96% ஆகக் குறைந்துள்ள பல பரிமாண ஏழைகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க குறைவு காணப்படுகிறது.
- வறுமையின் மிக விரைவான குறைவு கிராமப்புறங்களில் பதிவு செய்யப்பட்டது, அங்கு விகிதங்கள் 32.59% இல் இருந்து 19.28% ஆக சரிந்தன.
- பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா-நகர்ப்புற (PMAY-U) திட்டத்தின் கீழ், 118.90 லட்சம் வீடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- இந்த அனுமதிக்கப்பட்ட வீடுகளில் 113 லட்சம் வீடுகளின் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு, 75.31 லட்சம் வீடுகள்

இறுதி செய்யப்பட்டு, பெறுநர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில், 45.43 லட்சம் வீடுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டு, 39.63 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- பிரதம மந்திரி கரீப் கல்யாண் அன்ன யோஜனா (PMGKAY) கீழ், 81.35 கோடி NFSA பயனாளிகளுக்கு 2024 ஜனவரி 1 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு உணவு தானியங்கள் இலவசம். ரூ. 27.50/கிலோ அதிகபட்ச சில்லறை விலையில் 'பாரத்' ஆட்டா விற்பனையை மோடி அரசு தொடங்கியது.
- தொடக்கத்தில் இருந்து 50 கோடிக்கும் அதிகமான பயனாளிகள் PMJDY இன் கீழ் வங்கிக்கணக்கைக் கொண்டுள்ளனர்
- PMJDY கணக்குகள் மார்ச் 2015 இல் 14.72 கோடியில் இருந்து 16-08-2023 நிலவரப்படி 3.4 மடங்கு அதிகரித்து 50.09 கோடியாக உயர்ந்துள்ளது. ஜன்-தன் கணக்கு வைத்திருப்பவர்களில் ஏறத்தாழ 56% பெண்கள், மேலும் 67% ஜன்-தன் கணக்குகள் கிராமப்புற மற்றும் பகுதியளவு நகர்ப்புறங்களில் அமைந்துள்ளன.

## லட்சிய நடுத்தர வர்க்கத்தின் தேவைகளில் கவனம் செலுத்துதல்

### வழங்கிய வாக்குறுதி

- நமது நடுத்தர வருமானம் கொண்ட குடும்பங்களின் நிதித் திறன்களையும் வாங்கும் திறனையும் மேம்படுத்த வரிச் சலுகைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பலன்களை மேலும் திருத்துவோம்.
- நமது லட்சிய நடுத்தர வர்க்க மக்கள்தொகைக்கு கல்வி வாய்ப்புகள், வேலை வாய்ப்புகள் மற்றும் பொருத்தமான நகர்ப்புற உள்கட்டமைப்பு ஆகியவற்றிற்கு போதுமான அணுகல் இருப்பதை உறுதி செய்வோம்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- யூனியன் பட்ஜெட் 2023 குறைந்தபட்ச வரி விதிக்கக்கூடிய வருமானத்தை முந்தைய ரூ.2,50,000 ல் இருந்து ரூ.3,00,000 ஆக உயர்த்தியது.
- பிரதமர் மோடியின் நிர்வாகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட வரிச் சீர்திருத்தங்களால் பாரதத்தின் நடுத்தர வருவாய் பிரிவினர் குறிப்பிடத்தக்க பலன்களைப் பெற்றுள்ளனர். முந்தைய 15.4% இல் இருந்து தற்போதைய 11.4% ஆகக் குறைக்கப்பட்ட GST விகிதங்கள் போன்ற இந்த நிதிச் சீரமைப்புகள், 2017 இல் செயல்படுத்தப்பட்டதில் இருந்து 18 லட்சம் கோடிக்கும் அதிகமான சேமிப்பு உபரியை எளிதாக்கியுள்ளன.
- மலிவு விலையில் சுகாதார சேவையை நோக்கிய முன்னெடுப்பில், ஜனவுஷதி கேந்திராக்களில் கிடைக்கும் விலையில்லா மருந்துகளின் மூலம் 20,000 கோடி சேமிப்பு உறுதி செய்யப்பட்டது.
- கல்வித்துறையில், 353 புதிய பல்கலைக்கழகங்களை நிறுவியதோடு, இந்திய தொழில்நுட்பக் கழகங்கள் மற்றும் இந்திய மேலாண்மை நிறுவனங்கள் ஒவ்வொன்றும் ஏழு புதிய நிறுவனங்களை நிறுவுவதன் மூலம் முன்னேற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது.
- மருத்துவக் கல்லூரிகள் மற்றும் அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகங்களின் (AIIMS) எண்ணிக்கை 2014 மற்றும் 2023 க்கு இடையில் முறையே 387ல் இருந்து 660 ஆகவும், 7ல் இருந்து 23 ஆகவும் கணிசமான அளவில் அதிகரித்துள்ளது. அதே நேரத்தில், முதுகலை இடங்களின் எண்ணிக்கை 31,185 இல் இருந்து 65,335 ஆகவும், MBBS இடங்கள் 51,348 இல் இருந்து 1,01,043 ஆகவும் உயர்ந்துள்ளன.
- ஒரு லட்சம் ஸ்டார்ட்அப்களின் இயக்கத்தின் மூலம் ஒன்பது லட்சம் பதவிகள் உருவாக்கப்பட்டு, நடுத்தர வர்க்கத்தினருக்கு கூடுதல் வேலைவாய்ப்பாக அமைந்தது.

- 2004 முதல் 2014 வரையிலான பத்தாண்டுகளில் 13 லட்சமாக இருந்த அனுமதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 2014 மற்றும் 2022 க்கு இடையில் 1.2 கோடியாக உயர்ந்துள்ளது.
- 2014 இல் 26% நடுத்தர வர்க்க மக்கள்தொகையுடன் ஒப்பிடுகையில், கடந்த 2023 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 31% ஆக அதிகரித்துள்ளது.
- பிரதமர் மோடியின் தலைமையின் கீழ், பாரதத்தின் தனிநபர் வருமானம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டது, 2014-15 நிதியாண்டில் ரூ. 86,647 ல் இருந்து தற்போதைய ரூ. 1,72,000 ஆக இரு மடங்காக உயர்ந்துள்ளது.
- 2014 நிதியாண்டில் 28.6% ஆக இருந்த மொத்த சுகாதார வரவுசெலவுத் திட்டத்தில் அரசாங்க சுகாதார செலவினங்களின் சதவீதம் 2019 நிதியாண்டில் 40.6% ஆக அதிகரித்துள்ளது.
- மேலும், நாட்டிற்கு தற்போது உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட, பகுதியளவு அதிவேக 35 வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்கள், நாடு முழுவதும் 70 சேவைகளை வழங்குகின்றன. மேலதிகமாக, ஆறு வந்தே பாரத் ரயில்கள் விரைவில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது, இதன் விளைவாக மொத்தம் 82 சேவைகள் வழங்கப்படும். இந்த ரயில்கள் 247 மாவட்டங்களை உள்ளடக்கியது

## புவியியல் சமத்துவத்திற்கான ஈடுபாட்டுறுதி

### வழங்கிய வாக்குறுதி

- தேசத்தின் முன்னேற்றம் மற்றும் வளமான வளர்ச்சியில் கிழக்கு பாரதத்தின் சமமான பங்களிப்பை எளிதாக்குவதை உறுதிசெய்வோம்.

### நிறைவேற்றிய வாக்குறுதி

- 2022-23 நிதியாண்டு முதல் 2025-26 வரையிலான காலப்பகுதிக்கு ₹8139.50 கோடி ஒதுக்கீட்டில் வடகிழக்கு சிறப்பு

உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (NESIDS) தொடர்ச்சி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- 2022-23 நிதியாண்டு முதல் 2025-26 வரையிலான காலப்பகுதிக்கு NEC இன் திட்டங்களின் தொடர்ச்சியை அரசாங்கம் அனுமதித்துள்ளது, மொத்த பட்ஜெட் ஒதுக்கீடு ₹3202.7 கோடி ஆகும்.
- 100% மத்திய நிதியுதவியுடன், வடகிழக்கு பிராந்தியத்திற்கான பிரதமரின் மேம்பாட்டு முன்னெடுப்பு (PM-DevINE) என்ற புதிய மத்தியத் துறை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. • 2022-23 நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் மொத்தம் ₹6,600 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- 55 துறைகள் மற்றும் அமைச்சகங்களில் உள்ள 112 வெவ்வேறு திட்டங்களின் தரவுகளை இப்போது அணுகக்கூடிய தரவு பகுப்பாய்வு டாஷ்போர்டை அரசாங்கம் தொடங்கியுள்ளது.
- வடகிழக்கு இடர்மிகு புத்தொழில் நிதியம் (NEVF) கணிசமான எண்ணிக்கையிலான 67 ஸ்டார்ட்அப்களுக்கு முதலீட்டு ஆதரவை வழங்கி, பிராந்தியத்தில் ஒரு மாறும் ஸ்டார்ட்அப் சூழலை செயல்திட்ட ரீதியாக வளர்த்துள்ளது.
- வடகிழக்கு பிராந்தியத்தில் (NER) தொழில் முனைவோர் சூழல் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை அடைந்துள்ளது.
- இது, 4500 க்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட ஸ்டார்ட்அப்கள் மற்றும் 25 தீவிரமாக செயல்படும் இன்குபேட்டர்களால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

## சிறுபான்மையினருக்கான கண்ணியத்துடன் மேம்பாடு

### வழங்கிய வாக்குறுதி

- முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், ஜைனர்கள் மற்றும் பார்சிகள் உட்பட அனைத்து சிறுபான்மை குழுக்களின்

அதிகாரமளித்தல் மற்றும் கண்ணியமான மேம்பாட்டுக்காக நாங்கள் ஈடுபாட்டுறுதியுடன் உள்ளோம்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- பிரதம மந்திரி விரசத் கா சம்வர்தன் (PM VIKAS) திட்டத்தின் கீழ், 9,63,448 பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- பிரதம மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம் (PMJVK) சமூகத்தின் சொத்துக்களாகக் கருதப்படும் உள்கட்டமைப்பு திட்டங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- தேசிய சிறுபான்மையினர் மேம்பாட்டு மற்றும் நிதி கழகம் (NMDFC) ரூ. 8,300 கோடிகள், 22.5 லட்சத்திற்கும் அதிகமான பயனாளிகளை உள்ளடக்கியது, இதில் 85% க்கும் அதிகமான பெறுநர்கள் பெண்கள் ஆவர்.
- 2023 ஆம் ஆண்டின் ஹஜ் யாத்திரையைப் பொறுத்தவரை, முதன்முறையாக,'லேடி வித்தவுட் மெஹ்ரம் (LWM)' என்ற திட்டத்தின் கீழ் ஒற்றைப் பெண்கள் விண்ணப்பிக்க அனுமதிக்கப்பட்டனர். இதன் மூலம் 4000 க்கும் மேற்பட்ட பெண்கள் பயனடைந்தனர்.
- ஆகஸ்ட் 1, 2019 அன்று, பாரத நாடாளுமன்ற வரலாற்றில் "முத்தலாக்"க்கு எதிரான சட்டம் ஒரு வரலாற்று நிகழ்வாக இயற்றப்பட்டது. இந்தச் சட்ட நடைமுறைக்குப் பிறகு, "முத்தலாக்" வழக்குகளில் ஏறத்தாழ 82 சதவிகிதம் கணிசமான அளவு குறைந்துள்ளது.
- மேலதிகமாக, திறன் மேம்பாட்டுப் பிரிவின் கீழ், 1251 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இது சிறுபான்மையினத்தைச் சேர்ந்த 98,240 பெண்கள் பயன்பெற உதவியுள்ளது.

# முதியோர்களுக்கு பராமரிப்பு வழங்குதல்

## வழங்கிய வாக்குறுதி

- ராஷ்ட்ரிய வயோஸ்ரீ யோஜனாவை (RVY) மேம்படுத்தி, உதவிகள் மற்றும் உதவி சாதனங்கள் தேவைப்படும் ஏழை முதியோர் குடிமக்கள் சரியான நேரத்தில் மற்றும் ஒழுங்கான முறையில் அவற்றைப் பெறுவதை உறுதி செய்வோம்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- ராஷ்ட்ரிய வயோஸ்ரீ யோஜனா (RVY) கீழ் ரூ. 24,649.98 லட்சம் மதிப்பில் மொத்தம் 12,24,645 சாதனங்கள், 265 முகாம்களில் 2,99,942 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

# மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல்

## வழங்கிய வாக்குறுதி

- சுகம்யா பாரத் திட்டப்பணியை முன்னெடுப்பதற்கு, நகர்ப்புறங்கள் மற்றும் பொது உள்கட்டமைப்புகளுக்கான வழக்கமான அணுகல் தணிக்கைகள் மற்றும் மதிப்பீடுகளை செயல்படுத்துவது கட்டாயமாகும்.
- பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.
- ஆரம்பக் கட்டத்தில் குறைபாடுகள் கண்டறியப்படுவதை உறுதிசெய்ய அங்கன்வாடி மற்றும் புகுமுகப் பள்ளி அமைப்பு வலுப்படுத்தப்படும்.
- மாற்றுத்திறனாளிகளின் நிலையான வைப்புகளுக்கு உயர்ந்த வட்டி விகிதங்கள் வழங்கப்படும்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- இயக்கத்திற்கு விரிவான சட்டப்பூர்வ பாதுகாப்பையும் அணுகுவதற்கான உரிமையையும் வழங்கும் முன்னெடுப்பில், மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் (RPwD) சட்டம், 2016 ஐ அரசாங்கம் அறிவித்தது. இந்தச் சட்டம் ஏப்ரல் 2017 இல் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- விமானப் போக்குவரத்தைப் பொறுத்தவரை, அனைத்து 35 சர்வதேச மற்றும் 69 உள்நாட்டு விமான நிலையங்களில் 55 அணுகல் அம்சங்கள் பொருத்தப்பட்டுள்ளன. ரயில்வே துறையில், அனைத்து 709 A1, A, மற்றும் B வகை ரயில் நிலையங்களும் முழுமையாக அணுகக்கூடியதாக மாற்றப்பட்டுள்ளன.
- பொதுப் போக்குவரத்தைப் பொறுத்தவரை, 62 அரசுப் போக்குவரத்து நிறுவனங்களுக்குச் சொந்தமான மொத்தம் 1,45,747 இயக்கப் பேருந்துகளில், 42,348 பேருந்துகள் ஓரளவு அணுகக்கூடியதாக உள்ளன (மொத்தத்தில் 29.05%), 8,695 பேருந்துகள் முழுமையாக அணுகக்கூடியவை (5.96%).
- பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா (நகர்ப்புறம்) திட்டத்தின் கீழ், 63,000 மாற்றுத்திறனாளிகள் (திவ்யாங்) பயனடைந்தனர்.
- கணிசமான எண்ணிக்கையில் 157.35 கோடி குழந்தைகள் தகுதிகாண் பரிசோதனைக்கு உட்பட்டுள்ளனர், இதன் விளைவாக 10.11 கோடி குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட சுகாதார நிலைமைகளுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலும், 4.73 கோடி குழந்தைகளுக்கு இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை பராமரிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- நாடு முழுவதும், 367 மாவட்ட ஆரம்ப இடையீட்டு நடவடிக்கை மையங்கள் (DEIC) நிறுவப்பட்டு, திறம்பட செயல்பட்டு வருகின்றன.

- NDFDC கடனின் விதிகளின் கீழ் திவ்யங்ஜன் கடன் வாங்குபவர்களுக்கான வட்டி விகிதத்தில் 1% தள்ளுபடியை அரசாங்கம் அறிவித்துள்ளது.

# கோர்கா விவகாரத்தில் அரசியல் தீர்வு

## வழங்கிய வாக்குறுதி

- பாரத கோர்காவின் விடுபட்ட பதினொரு துணைப் பழங்குடியினரை பட்டியல் பழங்குடியினராக அங்கீகரிப்போம்.
- சிக்கிம் சட்டப் பேரவையில் லிம்பூ மற்றும் தமாங் பழங்குடியினருக்கான இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவோம்.
- டார்ஜிலிங் ஹில்ஸ், சிலிகுரி டெராய் மற்றும் டோர்ஸ் பகுதிகளில் நிலவும் பிரச்சினைகளுக்கு நீண்ட கால அரசியல் தீர்வுக்கான வளர்ச்சியை ஊக்குவிப்போம்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- அரசாங்கம் தற்போது ஒரு முடிவை எடுப்பதற்கு முன் சட்ட மற்றும் அதிகாரத்துவ முன்நிபந்தனைகள் இரண்டையும் மதிப்பிடும் பணியில் ஈடுபட்டுள்ளது.
- சிக்கிம் சட்டப் பேரவைக்குள் லிம்பூ மற்றும் தமாங் சமூகங்களுக்கான இட ஒதுக்கீடு தொடர்பான முன்மொழிவு பாரத அரசாங்கத்தின் ஆய்வின் கீழ் உள்ளது.
- அக்டோபர் 12, 2021 அன்று, பிரதமர் மோடி தலைமையிலான அரசாங்கம் டார்ஜிலிங் ஹில்ஸ், டெர்ராய் மற்றும் டோர்ஸ் பிராந்தியத்தின் கோர்க்கா சமூகம் மற்றும் மேற்கு வங்காள அரசாங்கத்தின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய முத்தரப்பு பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியது.

# தொழிலாளர்களின் நலனை உறுதி செய்தல்

## வழங்கிய வாக்குறுதி

- தேசிய குறைந்தபட்ச ஊதியம் 42% அதிகரித்துள்ளது. அடுத்த ஐந்தாண்டுகளுக்கான எங்கள் செயல்திட்டமானது, அனைத்துத் தொழிலாளர்களுக்கும் கண்ணியமான வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்வதற்காக இந்தத் திசையின் தொடர்ச்சியை பராமரிப்போம்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- பாரத அரசு 2021 இல் ஒரு நிபுணர் குழுவைக் கூட்டியுள்ளது, இது தொழில்நுட்ப உள்ளீடுகள் மற்றும் குறைந்தபட்ச ஊதியங்கள் மற்றும் தேசியத் தர ஊதியங்களை நிறுவுவது தொடர்பான பரிந்துரைகளை வழங்குவதற்காக பணிபுரிகிறது. மேலும், நாடு முழுவதும் உள்ள அனைத்து சிறு கடைக்காரர்களுக்கும் பயனளிக்கும் வகையில் ஓய்வூதியத் திட்டத்தை இது நிறுவியுள்ளது.

# அனைத்து சிறு கடைக்காரர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

## வழங்கிய வாக்குறுதி

- பிரதம மந்திரி ஷ்ரம் யோகி மான்தன் திட்டத்தை அனைத்து சிறிய அளவிலான கடைக்காரர்களையும் உள்ளடக்கியதாக விரிவுபடுத்துவோம்

## நிறைவேற்றிய வாக்குறுதி

- வர்த்தகர்கள் மற்றும் சுயதொழில் செய்பவர்களுக்கான தேசிய ஓய்வூதியத் திட்டம் (பிரதம மந்திரி லகு வணிகி மான்-தன் யோஜனா) என்பது கடைக்காரர்கள், சில்லறை வணிகர்கள் மற்றும் சுயதொழில் செய்பவர்களுக்கு வழங்கும் ஒரு ஓய்வூதிய ஏற்பாடாகும். இது, 18-

40 வயது வரம்பில் உள்ளவர்களுக்கு மாதாந்திர குறைந்தபட்ச ஓய்வூதியமாக ரூ. 3000 ஐ வழங்குகிறது.

- இந்த மத்திய துறை திட்டம் தன்னார்வ பங்களிப்புகளை அடிப்படையாகக் கொண்டது.
- மூன்று கோடிக்கும் அதிகமான சிறு கடைக்காரர்கள் மற்றும் வியாபாரிகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையில், 2019 ஜூலை 22 ஆம் தேதியில் இத்திட்டம் நடைமுறைக்கு வந்தது.

# கைவினைஞர்களின் நலனை உறுதி செய்தல்

## வழங்கிய வாக்குறுதி

- தற்போதைய அரசாங்கம் 'பிரதம மந்திரி கலாநிதி யோஜனா' என பெயரிடப்பட்ட ஒரு விரிவான முன்னோடி திட்டத்தை நிறுவ முன்மொழிகிறது.
- முன்மொழிவின் பின்னணியில் உள்ள நோக்கம் நெகிழ்வான மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட நிதி உதவியை வழங்குவதாகும், குறிப்பாக பாரம்பரிய கலைகளின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- முன்மொழியப்பட்ட திட்டமானது ஆரம்ப தவணையாக ரூ.1 லட்சத்திற்கும், அடுத்த தவணையாக மேலதிகமாக ரூ.2 லட்சத்திற்கும் கடன் ஆதரவை வழங்குகிறது.
- குறிப்பிடத்தக்க வகையில், இந்தத் தொகைகளுக்கு ஒப்பீட்டளவில் குறைந்த வட்டி விகிதமான 5% வசூலிக்கப்படும், இதனால் பயனாளிகளுக்கு இந்தத் திட்டம் இன்னும் சாதகமாக இருக்கும்.
- மேலும், 'பிரதம மந்திரி கலாநிதி யோஜனா' திட்டமானது பல்வேறு வழிகளில் பயனாளிகளுக்கு ஆதரவளிப்பதற்கு பல முனைகளில் ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.
- அவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான திறன் மேம்பாடு இதில் அடங்கும்; சிறந்த உற்பத்தித்திறனுக்காக கைவினைஞர்கள்

தங்கள் கருவிகளை மேம்படுத்த உதவும் கருவித்தொகுப்பு ஊக்கத்தொகை; பணமில்லா பரிவர்த்தனைகளை ஊக்குவிக்க டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கான ஊக்கத்தொகை; அத்துடன் அவர்களின் தயாரிப்புகளை திறம்பட விற்பனை செய்வதற்கு சந்தைப்படுத்தல் ஆதரவை வழங்கும்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- பிரதமர் மோடி தலைமையிலான பாரத அரசு, ஆகஸ்ட் 2023 இல் 'பிஎம் விஸ்வகர்மா' என்ற புதிய திட்டத்தை தொடங்க அனுமதி அளித்துள்ளது.
- இந்த திட்டம் பாரதத்தின் கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் வசிக்கும் பாரம்பரிய கைவினைஞர்கள் மற்றும் பாரம்பரிய மற்றும் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தும் கைவினைஞர்களுக்கு உதவி வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது ரூ. 13,000 கோடி நிதி ஒதுக்கீட்டைக் கொண்டுள்ளது மற்றும் தொடக்கத்தில் PM விஸ்வகர்மா திட்ட கட்டமைப்பின் கீழ் 18 பாரம்பரிய வர்த்தகங்களை நிவர்த்தி செய்யும்.

# நம் பிள்ளைகளைப் பாதுகாத்தல்

## வழங்கிய வாக்குறுதி

- பாரத் முழுவதிலும் உள்ள குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களின் ஆய்வு மற்றும் கண்காணிப்பு மற்றும் வலுவான தரநிலைகளை நிறுவுவதை சீராக்க ஒரு விரிவான குழந்தை பாதுகாப்பு கட்டமைப்பு முன்மொழியப்படும்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015 செயல்படுத்தப்பட்டுள்ளது.

- இந்தச் சட்டம், கவனிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டது. மேலும், இது குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின் (CCIs) செயல்பாட்டைக் கண்காணிப்பதை கட்டாயமாக்குகிறது.
- விதிகளின்படி, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளின் நிறுவனம் சாராத பராமரிப்புக்காக ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ.4000 நிதியுதவித் தொகை கிடைக்கும்.
- மேலும் பராமரிப்பு மானியமாக குழந்தை பராமரிப்பு நிறுவனத்தில் வசிக்கும் குழந்தைகளுக்கு மாதம் ஒன்றுக்கு 3000 ரூபாய் ஒதுக்கப்படுகிறது.

# திருநங்கைகளுக்கு அதிகாரம் அளித்தல்

## வழங்கிய வாக்குறுதி

- திருநங்கை இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டு வழிகளை உறுதி செய்வோம்

## நிறைவேற்றிய வாக்குறுதி

- ஸ்மைல் (SMILE) - வாழ்வாதாரம் மற்றும் நிறுவனங்களுக்கான விளிம்புநிலை தனிநபர்களுக்கான ஆதரவு - என்ற தலைப்பில் 2022 பிப்ரவரியில் அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டது.
- இதன் முதன்மை நோக்கம் திருநங்கைகள் மற்றும் வாழ்வாதாரத்திற்காக பிச்சை எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டவர்களின் நலன் தேவைகளை நிறைவேற்றுவதாகும்.
- துணைத் திட்டம் - திருநங்கைகளின் நலனுக்கான விரிவான மறுவாழ்வு என்ற துணைத் திட்டம் இந்த முன்னெடுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- இந்த துணைத் திட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள உத்திகள், திருநங்கைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்குதல், திறன்

மேம்பாட்டுத் திட்டங்கள், தங்குமிடங்கள் அமைப்பதன் மூலம் வீட்டுவசதி, கூட்டு சுகாதாரம், திருநங்கைகள் பாதுகாப்புப் பிரிவை உருவாக்குதல் மற்றும் இ-சேவைகளை வழங்குதல் ஆகியவை அடங்கும்.

# பண்பாட்டுப் பாரம்பரியம்

## ராமர் கோவில்

### வழங்கிய வாக்குறுதி

- அயோத்தியில் ராமர் கோவில் கட்டும் பணியை விரைவுபடுத்துவதற்கான சாத்தியமான அனைத்து வழிகளையும் அரசியலமைப்பின் கட்டுப்பாடுகளுக்குள் தேடுவதற்கு ஈடுபாட்டுறுதியுடன் உள்ளோம்.

### நிறைவேற்றிய வாக்குறுதி

- நவம்பர் 9, 2019 அன்று, அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கான வழியை வழங்கும் ஒரு முக்கிய தீர்ப்பை உச்ச நீதிமன்றம் ஒருமனதாக வழங்கியது. புதிதாகக் கட்டப்பட்ட கோவிலில் ராம் லல்லா சிலையின் குடமுழுக்கு விழா ஜனவரி 22, 2024 அன்று சிறப்பாக நடைபெற்றது.

## பாரதிய நம்பிக்கை மற்றும் பண்பாட்டைப் பாதுகாத்தல்

### வழங்கிய வாக்குறுதி

- பண்பாட்டு, மத மற்றும் ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து பாரம்பரிய தளங்களையும் பாதுகாத்து மேம்படுத்தும் நோக்கத்துடன் தற்போதுள்ள பிரசாத் (PRASAD) திட்டத்தை விரிவுபடுத்துவோம்.

### நிறைவேற்றிய வாக்குறுதி

- ‘யாத்திரை புத்துயிர் மற்றும் ஆன்மீக பாரம்பரிய மேம்பாட்டு இயக்கி’ (PRASHAD) மற்றும் ‘ஸ்வதேஷ் தர்ஷன்’ (SD) திட்டங்கள் மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகங்களுக்கு நிதி உதவி வழங்குகின்றன.
- பிரதமர் மோடி தலைமையிலான நிர்வாகம், பிரசாத் திட்டத்தின் கீழ் 46 திட்டங்களுக்கும், மதத் தலங்கள் உட்பட நாடு முழுவதும் ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ் 76 திட்டங்களுக்கும் அனுமதி அளித்துள்ளது.

## பாரதிய மொழியியல் பண்பாட்டைப் புத்துயிர் அளித்து பாதுகாத்தல்

### வழங்கிய வாக்குறுதி

- பாரதத்தில் உள்ள அனைத்து எழுதப்பட்ட மற்றும் பேசப்படும் மொழிகள் மற்றும் பேச்சுவழக்குகளின் நிலையை ஆய்வு செய்யும் நோக்கத்திற்காக ஒரு தேசிய பணிக்குழு அமைக்கப்படுவதை உறுதிசெய்வோம். பாதிக்கப்படக்கூடிய அல்லது அழிந்து வரும் பேச்சுவழக்குகள் மற்றும் மொழிகளுக்கு புத்துயிர் அளித்து மேம்படுத்துவோம்.
- சமஸ்கிருதத்தை மேம்படுத்துவது குறித்து திட்டமிடப்படும், மேலும் இந்த மொழி கற்பித்தல் பள்ளி மட்டத்தில் விரிவுபடுத்தப்பட்டு பிரபலப்படுத்த திட்டமிடப்படும். ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அறிஞர்களுக்கு 100 பாணினி பெல்லோஷிப்கள் வழங்கப்படும்.

### நிறைவேற்றிய வாக்குறுதி

- அழிந்து வரும் மொழிகள் உட்பட அனைத்து பாரத மொழிகளையும் மேம்படுத்தும் நோக்கத்துடன், “இந்தியாவின் அழிந்துவரும் மொழிகளைப் பாதுகாத்தல் மற்றும் புத்துயிர் அளித்து நிலைபெறச்

செய்தல் திட்டம்" (SPPEL) 45 கோடி ரூபாய் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- அரசு வேலைவாய்ப்பு தேர்வை 15 இந்திய மொழிகளில் நடத்த அரசு முடிவு செய்துள்ளது. எந்த ஒரு இளைஞனும் வேலை வாய்ப்பை இழக்காமல் இருக்க, மொழியியல் தடையை அகற்றும் நோக்கத்தில் இது உள்ளது. மேலதிகமாக, கூட்டு நுழைவுத் தேர்வு (JEE), தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (NEET) மற்றும் பல்கலைக்கழக மானியக் குழு (UGC) தேர்வுகளும் 12 உள்ளூர் மொழிகளில் நடத்தப்படுகின்றன.
- சமஸ்கிருதப் படிப்பை ஊக்குவிப்பதற்காக, நாடு முழுவதும் 15 மாநிலப் பல்கலைக்கழகங்களும், 3 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களும் இந்த நோக்கத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

## நமாமி கங்கை திட்டம்: தேசிய பெருமையின் வெளிப்பாடு

### வழங்கிய வாக்குறுதி

- கங்கை நதிக்கரையோரம் அமைந்துள்ள நகரங்களில் இருந்து 100% கழிவுநீரை நிர்வகிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட சாக்கடை உள்கட்டமைப்பு வெற்றிகரமாக முடிக்கப்பட்டு திறமையாக செயல்படுவதை உறுதி செய்வோம்.
- இந்த திட்டத்தில் ஆற்றங்கரையோரம் அமைந்துள்ள கிராமங்களில் திட மற்றும் திரவ கழிவு மேலாண்மைக்கு சிறப்பு ஏற்பாடுகள் இருக்கும்.

### நிறைவேற்றிய வாக்குறுதி

- "நமாமி கங்கே திட்டம்" 2014 முதல் 2023 வரையிலான காலகட்டத்தில் பாரத அரசாங்கத்தால் தூய்மையான கங்கைக்கான

தேசிய பணிக்கு (NMCG) ஒதுக்கப்பட்ட ரூ. 16,011.65 கோடியின் பாராட்டத்தக்க முதலீட்டைக் கண்டது.

- இந்த முன்னெடுப்பானது மொத்த சுத்திகரிப்புத் திறனில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது, குறிப்பாக கங்கை நதியின் பிரதான ஆற்றுவாய்க்கால் மீது அமைந்துள்ள நகரங்களில் 2589 MLD ஆக உயர்ந்துள்ளது. கிழக்கு கொல்கத்தா சதுப்பு நிலம் வழியாக தற்போது மேலதிகமாக 910 MLD கழிவுநீர் சுத்திகரிக்கப்படுகிறது.
- கங்கை நதியின் பிரதான ஆற்றுவாய்க்காலை ஒட்டி தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் 1104 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை (STP) நிறுவும் நோக்கத்தில் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த திட்டங்கள் தற்போது பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
- கங்கை நதி மற்றும் அதன் துணை நதிகளின் புத்துயிர் பெறுதல் மொத்தம் 450 திட்டங்களை உள்ளடக்கியது. இதன் மதிப்பிடப்பட்ட செலவு ரூ. 38,022.37 கோடி ஆகும்.

## சபரிமலை

### வழங்கிய வாக்குறுதி

- சபரிமலையைப் பொறுத்தவரை, சபரிமலை தொடர்பான நம்பிக்கை, பாரம்பரியம் மற்றும் வழிபாட்டு முறைகள் ஆகியவற்றை மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் விரிவான முறையில் முன்வைக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம்.

### நிறைவேற்றிய வாக்குறுதி

- இதன் விளைவாக, மோடி அரசாங்கம், அரசியலமைப்பு கட்டமைப்பில் உறுதியாக நிலைநிறுத்தப்பட்டு, நம்பிக்கை,

பாரம்பரியம் மற்றும் வழிபாட்டு சடங்குகளின் காரணத்திற்கும் பாடங்களுக்கும் அதன் சட்ட ஆதரவைத் தொடர்கிறது.

## உலகளவில் யோகாவை ஊக்குவித்தல்

### வழங்கிய வாக்குறுதி

- உலகளவில் உடல் நலம் மற்றும் ஆன்மீக புத்துயிர் பெறுவதற்கு யோகாவை ஒரு இன்றியமையாத நுட்பமாக பரப்புவோம்.
- யோகா சுகாதார மையங்கள், யோகா சுற்றுலா மற்றும் யோகா ஆராய்ச்சி ஆகியவற்றின் விரைவான பெருக்கத்தைத் தொடங்குவோம்.

### நிறைவேற்றிய வாக்குறுதி

- நமது மாண்புமிகு பிரதமர் திரு நரேந்திர மோடியின் வேண்டுகோளை ஏற்று, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை உடனடியாக ஜூன் 21 ஆம் தேதியை சர்வதேச யோகா தினமாக டிசம்பர் 11, 2014 அன்று அறிவித்தது.
- சர்வதேச யோகா தினம்: சர்வதேச யோகா தினத்தின் 9வது பதிப்பானது, ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் இதுவரை பதிவு செய்யப்படாத மிக உயர்ந்த பங்கேற்புக்கான கின்னஸ் சாதனையை உள்ளடக்கிய இரண்டு உலக சாதனைகளை படைத்தது.
- இந்த நிகழ்வானது 135க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான யோகா ஆர்வலர்களின் ஈர்க்கக்கூடிய வருகையைப் பெற்றது, ஒரு யோகா அமர்வில் பங்கேற்கும் தேசிய இனங்களின் பரந்த நோக்கத்திற்காக கின்னஸ் உலக சாதனையை நிறுவியது. பாரதத்தின் குஜராத்தில் அமைந்துள்ள சூரத், ஒரே இடத்தில் யோகாசனத்திற்காக அதிக அளவிலான தனிநபர்களைக் குவித்து கின்னஸ் சாதனை படைத்ததன் மூலம் உலக சாதனைகளில்

பங்களித்தது. இந்த நிகழ்வில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## பாரதிய பண்பாட்டு விழா

### வழங்கிய வாக்குறுதி

- ஐந்து வெவ்வேறு மாநிலங்களில் ஆண்டுதோறும் ஒரு சர்வதேச பண்பாட்டு விழா ஏற்பாடு செய்யப்படுவதை உறுதிசெய்வோம்.

### நிறைவேற்றிய வாக்குறுதி

- நிறைவடைந்தது: G20 பண்பாட்டுப் பணிக்குழு மற்றும் பண்பாட்டு அமைச்சர்கள் கூட்டம் பாரதத்தின் தலைமையின் கீழ் நடத்தப்பட்டது, அதன் 'காசி கலாச்சார பாதை' என்னும் தலைப்பிலான விளைவு ஆவணம் அனைத்து G20 நாடுகளிடம் இருந்தும் ஒருமனதாக ஒப்புதல் பெற்றது.
- "மேரி மாத்தி மேரா தேஷ்-மாதி கோ நமன் வீரோன் கா வந்தன்" என்ற தேசிய இயக்கம், நாட்டிற்காகத் தங்கள் இன்னுயிர்களைத் துறந்த துணிச்சலான நபர்களுக்கு ஒரு மாபெரும் அஞ்சலியாகத் திட்டமிடப்பட்டது.
- பாரதத்தின் G20 தலைமையின் கீழ், அரசாங்கம் நான்காவது G20 கலாச்சார பணிக்குழு கூட்டத்தை 2023 ஆகஸ்ட் 24 மற்றும் 25 தேதிகளில் வாரணாசியில் நடத்தியது.

## தரோஹர் தர்ஷன்

### வழங்கிய வாக்குறுதி

- 'தரோஹர் தர்ஷன்-ஒருங்கிணைக்கப்பட்ட இணையப் போர்டல்' மூலம் அனைத்து பொருத்தமான இடங்களையும் உள்ளடக்கிய ஒரு மெய்நிகர் சுற்றுப்பயணத் திட்டத்தை தொடங்குவோம்.

### நிறைவேற்றிய வாக்குறுதி

- அம்ரித் தரோஹர் திறன் மேம்பாட்டுத் திட்டம் - 2023ன் கீழ், இயற்கைச் சுற்றுலாவை வலுப்படுத்தும் வகையில், வசதியாளர்கள், வழிகாட்டிகள் மற்றும் பிற சுற்றுலா சேவை வழங்குநர்களுக்குப் பயிற்சி அளிக்க, மாற்று வாழ்வாதாரத் திட்டத்தை அரசாங்கம் நிறுவியுள்ளது.

## சமச்சீர் உரிமையியல் விதித்தொகுப்பு

### வழங்கிய வாக்குறுதி

- மிகவும் குறிப்பிடத்தக்க மரபுகளை இணைத்து அவற்றை சமகாலத்துடன் சீரமைக்கும் வகையில் ஒரு சீரான உரிமையியல் விதித்தொகுப்பை உருவாக்குவோம்.

### நிறைவேற்றிய வாக்குறுதி

- ஒரே மாதிரியான உரிமையியல் விதித்தொகுப்பு - பல தரப்பில் இருந்து தங்கள் கருத்து சமர்ப்பிப்பு தொடர்பான காலக்கெடுவை நீட்டிக்க பல்வேறு கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் விதமாக, சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் (ஜூலை 2023) கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடுவை இரண்டு வாரங்களுக்கு நீட்டிக்க சட்ட ஆணையம் முடிவு செய்துள்ளது.

# வெளியுறவு கொள்கை:

## வசுதைவ குடும்பகம்

### வழங்கிய வாக்குறுதி

- பேரிடர் நிவாரணம் மற்றும் மனிதாபிமான உதவிகளுக்கு 'முதல் பதிலளிப்பவராக' எங்கள் செயல்பாட்டை வலுப்படுத்துவோம்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- உலகளாவிய தளத்தில் மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணத்தில் (HADR) முதன்மை பதிலளிப்பவராக பாரத் உயர்ந்துள்ளது.
- ஆபரேஷன் தோஸ்த் (பிப்ரவரி 2023) - துருக்கி என்று முறையாக அறியப்பட்ட துர்க்கியே குடியரசைத் தாக்கிய பேரழிவு நிலநடுக்கங்களுக்குப் பிறகு, பாரத் உலகளாவிய ஒற்றுமைக்கு தனது ஈடுபாட்டுறுதியை வெளிப்படுத்தியது.
- ஆபரேஷன் கருணா (மே 2023) - சித்ராங் சூறாவளியால் ஏற்பட்ட அழிவைத் தொடர்ந்து மியான்மருக்கு பாரத் உதவி வழங்கியது. பாரத கடற்படைக் கப்பல்கள், மருந்துகள், உணவு மற்றும் தங்குமிடம் அடங்கிய அவசரகால நிவாரணப் பொருட்களுடன், பாதிக்கப்பட்ட சமூகங்களை ஆதரிப்பதில் பாரதத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.
- ஆப்கானிஸ்தான் மற்றும் உக்ரைனில் உள்ள சிக்கலான அரசியல் சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல், பாரதம் தனது மனிதாபிமான உதவிகளை தொடர்ந்து வழங்கியது.
- ஆப்கானிஸ்தானில், கோதுமை, மருந்துகள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களின் ஏற்றுமதி ஆண்டு முழுவதும் அனுப்பப்பட்டது, இது சவாலான காலங்களில் ஆப்கானிய மக்களுக்கு ஆதரவாக நிற்க பாரதத்தின் ஈடுபாட்டுறுதியை வலியுறுத்துகிறது.
- மருந்துகள் மற்றும் உணவுப் பொருட்கள் உட்பட பல மனிதாபிமான உதவிகள் உக்ரைனுக்கு அனுப்பப்பட்டன, இது மோதலின் முழு சக்தியையும் எதிர்கொள்ளும் ஒரு தேசத்துடன் பாரதத்தின் ஒற்றுமையை மேலும் உறுதிப்படுத்துகிறது.
- ஆபரேஷன் காவேரி : ஆபரேஷன் காவேரியின் கீழ், சிக்கித் தவிக்கும் இந்தியர்களை பாதுகாப்பாகத் திரும்புவதற்கு வசதியாக, சூடானுக்கு 24,000 கிலோ மனிதாபிமான உதவிகளை விமானத்தில்

ஏற்றி இந்திய விமானப்படை பாராட்டத்தக்க பணியைச் செய்தது. ஆபரேஷன் காவேரி 3,862 நபர்களை வெளியேற்றுவதில் வெற்றியைக் காட்டியது, இது 17 விமானங்கள் மற்றும் ஐந்து பாரத கடற்படை கப்பல்களை உள்ளடக்கிய ஒரு விரிவான மனிதாபிமான முயற்சி ஆகும்.

## அறிவு மற்றும் தொழில்நுட்பத்திற்கான உலகளாவிய ஒருங்கிணைப்பு

### வழங்கிய வாக்குறுதி

- 'சர்வதேச விண்வெளி தொழில்நுட்பக் கூட்டணி' ஒன்றை நிறுவுவோம்

### நிறைவேற்றிய வாக்குறுதி

- பாரதத்தின் விண்வெளித் துறையை தாராளமயமாக்கியதற்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு பாராட்டுக்கள், இது சமீபத்திய ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுக்கு வழிவகுத்தது.
- குறுகிய காலத்திற்குள், 189 விண்வெளி சார்ந்த ஸ்டார்ட்அப்கள் பாரதத்தில் நிறுவப்பட்டுள்ளன, இது தேசத்திற்கு நிலையான அடித்தளத்தை வழங்குகிறது.
- பாரதத்தின் குறிப்பிடத்தக்க விண்வெளி திறன்களை உலக சமூகம் அங்கீகரிக்கத் தொடங்கியுள்ளது.
- இந்திய விண்வெளிக் கொள்கை 2023-ஐ வெற்றிகரமாகச் செயல்படுத்துவதன் மூலம் 2033-ஆம் ஆண்டுக்குள் $44 பில்லியன் மதிப்புள்ள விண்வெளிப் பொருளாதாரத்தை அடைய முடியும்.
- பாரத் இன்று வரை விண்ணில் செலுத்திய 424 வெளிநாட்டு செயற்கைக்கோள்களில் 389, பிரதமர் மோடியின் ஆட்சியில் கடந்த ஒன்பது ஆண்டுகளில் ஏவப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களுடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தை

## வழங்கிய வாக்குறுதி

- புலம்பெயர்ந்த இந்தியர்கள் இடையே தொடர்புகளை வலுப்படுத்துவதற்காக 'பாரத்கவுரவ்' இயக்கத்தை தொடங்குவோம்.
- வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களுக்கு தகவல் மற்றும் சேவைகளை வழங்கும் முதன்மையான ஒற்றை அமைவிட வழிமுறையாக MADAD போர்ட்டலை வலுவூட்டுவோம்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- பாரதப் புலம்பெயர் மக்களிடம் இருந்து வலுவான தொடர்பு, தகவல் தொடர்பு மற்றும் பங்களிப்பை பிரதமர் மோடி பராமரித்து வருகிறார். அவரது சர்வதேச பயணங்களின் போது அனைத்து பாரத் சமூகங்களுடனும் அவரது நீடித்த ஆர்வம் மற்றும் தொடர்பு குறிப்பிடத்தக்க ஆதரவை எளிதாக்கியது, தேசத்தின் பார்வை மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துகிறது.
- வரவிருக்கும் 17வது பிரவாசி பாரதிய திவாஸ் மாநாடு, 2023 இல் திட்டமிடப்பட்டுள்ளது, இது வெளிநாட்டு இந்தியர்களுடன் ஈடுபடுவதற்கும் தொடர்புகொள்வதற்கும் மதிப்பிற்குரிய தளமாக செயல்படுகிறது, மேலும் புலம்பெயர்ந்தோர் இடையே தொடர்புகளை வளர்க்கிறது. PBD மாநாட்டிற்கான பதிவு 70 வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த 3,500 க்கும் மேற்பட்ட புலம்பெயர் உறுப்பினர்களிடம் இருந்து குறிப்பிடப்பட்டுள்ளது.

# உலகளாவிய மன்றங்கள் மூலம் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுதல்

## வழங்கிய வாக்குறுதி

- சர்வதேச அரங்கங்களில் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகள் மற்றும் அமைப்புகளுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை செயல்படுத்தவும்.
- மேலும் 'சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான நாடுகளின் குழு' ஒன்றை நிறுவுவதற்கு முயற்சி செய்யவும்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- பயங்கரவாதத்திற்கு நிதியுதவி அளிப்பது தொடர்பான 3வது அமைச்சர்கள் மாநாடு, 'பயங்கரவாதத்திற்கு பணம் இல்லை' என்ற தலைப்பில், 2022 நவம்பர் 18 மற்றும் 19 தேதிகளில் புதுதில்லியில் நடைபெற உள்ளது. இந்த மாநாடு இந்த விவகாரம் தொடர்பாக நாடுகள் இடையே புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான பாரதத்தின் முயற்சிகளை மேம்படுத்தும்.

# ஆழமான பலதரப்பு ஒத்துழைப்பு

## வழங்கிய வாக்குறுதி

- ஐக்கிய நாடுகள் சபை, G20, BRICS, SCO, காமன்வெல்த் மற்றும் பிற போன்ற தளங்கள் மூலம் சர்வதேச தீமைக்கு எதிராக ஒத்துழைப்பில் ஈடுபடுங்கள்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- ஐக்கியநாடுகள்சபையின்அனுசரணையில்சர்வதேசபயங்கரவாதம் தொடர்பான விரிவான மாநாட்டை (CCIT) விரைவாக ஏற்றுக்கொள்வதில் அவர்களின் ஆதரவிற்காக, நமது நலன்களுக்கு

இணக்கம் காட்டிய வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளை மோடியின் அரசாங்கம் வலியுறுத்தி கேட்டுக் கொண்டுள்ளது.

- அதிகரித்து வரும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை எதிர்த்துப் போரிடுவதில் இந்தப் பின்பற்றுதலின் குறிப்பிடத்தக்க பங்கை அது வலியுறுத்தியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டு முழுவதும், ஆஸ்திரேலியா, ஐரோப்பிய ஒன்றியம், இத்தாலி, சவுதி அரேபியா, சிங்கப்பூர், தஜிகிஸ்தான், யுனைடெட் கிங்டம் மற்றும் உஸ்பெகிஸ்தான் போன்ற பல்வேறு நாடுகள் மற்றும் நிறுவனங்களுடன் பயங்கரவாத எதிர்ப்பு (JWG-CT) கட்டமைப்பைப் பயன்படுத்தி இருதரப்பு பயங்கரவாத எதிர்ப்பு விவாதங்களில் பாரதம் ஈடுபட்டுள்ளது.
- ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் பயங்கரவாத எதிர்ப்புக் குழுவின் (CTC) தலைவராக பாரத் தனது பங்கைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. மேலும், 2022 அக்டோபர் 28 மற்றும் 29 ஆகிய தேதிகளில் மும்பை மற்றும் புது தில்லியில் CTC இன் சிறப்புக் கூட்டத்திற்கு பாரத் விருந்தினராக இருந்து வருகிறது. இந்த கூட்டத்தில் பாதுகாப்பு கவுன்சிலின் அனைத்து உறுப்பினர்களும் பங்கேற்றுள்ளனர்.
- விவாதங்களைத் தொடர்ந்து, புதிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதை எதிர்கொள்வதற்கான ‘டெல்லி பிரகடனம்’ ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத்தகைய சிக்கலான பிரச்சினைகளை எதிர்கொள்வதில் சர்வதேச சமூகத்தின் உறுதியான அர்ப்பணிப்பை இந்தப் பிரகடனம் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

# ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்புரிமை

## வழங்கிய வாக்குறுதி

- ஐக்கியநாடுகளின்பாதுகாப்புச்சபையில்நிரந்தரஉறுப்புரிமையைப் பெறுவதில் நாங்கள் ஈடுபாட்டுறுதியுடன் உள்ளோம்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

- பாரத் தேசம் ஐக்கிய நாடுகள் சபைக்கு உடனடி மற்றும் கணிசமான சீர்திருத்தங்களை தீவிரமாக ஆதரித்து வாதாடுகிறது, இதன் மூலம் உலகளாவிய சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றும் திறனை மேம்படுத்துகிறது. ஐநா பாதுகாப்பு கவுன்சிலை விரிவுபடுத்துவது குறித்து பாரத் குரல் கொடுத்து வருகிறது, இது உருவாகி வரும் புவிசார் அரசியல் நிலப்பரப்பை உண்மையாக பிரதிபலிக்கும் ஒரு நிறுவனத்தை நிறுவுவதற்கான இன்றியமையாத படியைக் குறிக்கிறது.
- மோடி அரசாங்கத்தின் மேற்பார்வையின் கீழ், பாரதம் இதேபோன்ற முன்னோக்கைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகளுடன் தொடர்ந்து ஒத்துழைத்து வருகிறது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் குறிப்பிடத்தக்க மறுசீரமைப்பு மற்றும் விரிவாக்கத்திற்கு ஐ.நா. உறுப்பினர்களுக்குள் ஆதரவை ஒருங்கிணைப்பதே இதன் நோக்கம்.
- பிரேசில், ஜப்பான் மற்றும் ஜெர்மனியுடன் கூட்டு முன்னெடுப்பில் - கூட்டாக G-4 ஆக அங்கீகரிக்கப்பட்டுள்ளது - பாரத் தற்போதைய பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலை இருபத்தைந்தாக விரிவுபடுத்துவதற்கான முன்மொழிவை முன்வைத்துள்ளது. இந்த முன்மொழியப்பட்ட திருத்தம் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா போன்ற பல்வேறு பிராந்தியங்களில் இருந்து ஆறு நிரந்தர மற்றும் நான்கு நிரந்தரமற்ற உறுப்பினர்களை உள்ளடக்கியது.

# இராஜதந்திர கூட்டு மற்றும் இணைப்புகளை மேம்படுத்துதல்

## வழங்கிய வாக்குறுதி

- வெளியுறவுக் கொள்கை ஆய்வுகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு விரிவான பல்கலைக்கழகத்தைத் தொடங்கத் திட்டமிடுங்கள்.

## நிறைவேற்றிய வாக்குறுதி

2027 ஆம் ஆண்டுக்குள் பாரத் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

- படிப்படியாக சிக்கலான உலகளாவிய நிலப்பரப்பில் பயணிக்க சிறப்புத்தேர்ச்சி தேவை.
- இந்திய வெளியுறவு சேவை (IFS) அத்தகைய சிறப்பு வாய்ந்த நிறுவனமாக கருதப்பட்டது. தற்சமயம் உலகிலேயே மிகப்பெரிய பாரத புலம்பெயர்ந்தோர், IFS இன் நிபுணத்துவத்தை மேலும் நியாயப்படுத்தும் பல்வேறு தேவைகள் மற்றும் கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். இந்த ஆற்றல்மிக்க கோரிக்கைகளை நிவர்த்தி செய்வதற்கும், தொடர்ச்சியான வளர்ச்சியை எளிதாக்குவதற்கும், IFS விரிவாக்கம் மற்றும் நிபுணத்துவம் பெறுவது மட்டுமல்லாமல், வரவிருக்கும் தசாப்தங்களில் உலகளாவிய தளத்தில் வளரும் பாரதத்தை ஒருங்கிணைத்து திறம்பட முன்னிறுத்துவது அவசியமாகிறது.
- நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கம், 2023 ஆம் ஆண்டில், IFS மறுமதிப்பீடு மற்றும் மறுசீரமைப்புக்கான ஒரு முன்மொழிவை அனுமதித்தது.
- இந்த முயற்சி அடுத்த ஐந்து ஆண்டுகளில் 200 க்கும் மேற்பட்ட கூடுதல் பதவிகளை உருவாக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

# சுருக்கத்தொகுப்பு (மோடி அரசு – 2-ம் பதவிக்காலம் (2019-2024) – எட்டப்பட்ட வளர்ச்சி மேம்பாடுகள்)

முதல்முறை ஆட்சிப்பொறுப்பு நல்ல அடித்தளத்தை வழங்கியிருக்கும் என்பதால், தொடர்ந்து 2வது முறையாக ஆட்சிப்பொறுப்பை ஏற்கும் எந்தவொரு அரசும் குறைவான சவால்களையே பொதுவாக எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஆனால், உலகையே நிலைகுலையச் செய்த கோவிட் – 19 பெருந்தொற்று தாக்கத்தின் காரணமாக, மோடி அரசின் 2வது பதவிக்காலம் தனித்துவமானதாகவும் சவால்கள் நிறைந்ததாகவும் இருந்தது. இப்பெருந்தொற்று ஏற்படுத்திய பாதிப்பை சமாளிக்க வளர்ச்சியடைந்த நாடுகள் கூட கடும் சிரமப்பட்டன. ஆனால், இந்த மோசமான பெருந்தொற்றிலிருந்து நமது நாட்டின் பொருளாதாரத்தையும் மற்றும் மக்களின் உயிரையும் காப்பதில் நமது மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளிப்படுத்திய ஈடுபாடு மற்றும் எடுத்த உறுதியான நடவடிக்கைகளின் காரணமாக நமது நாடு மோசமான விளைவுகளிலிருந்து காப்பாற்றப்பட்டது. நமது நாட்டை மீண்டும் வளர்ச்சிப் பாதைக்கு கொண்டுவந்து முன்னேற்றுவதற்கு பல சுகாதார முன்னெடுப்புகளும், திட்டங்களும் மற்றும் பொருளாதார மீட்சி செயல்திட்டங்களும் நமது பிரதமரால் மேற்கொள்ளப்பட்டன.

நமது மாபெரும் தேசமான பாரத்–க்கு சிறப்பான பயன்களை வழங்க முடியும் என்பதில் மோடி அரசு அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தது. அவரது ரத்தத்தில் தேசபக்தியும் மற்றும் அவரது

இதயத்தில் தேசத்தின் வளர்ச்சியும் இடம்பெற்றிருக்கும் ஒரு மகத்தான தலைவர் அவர். 2047-ம் ஆண்டுக்குள், உலகளவில் வளர்ச்சியடைந்த நாடாக பாரத்-ஐ உயர்த்த வேண்டும் என்பதே அவரது இலட்சியம். பாரத் –இன் முன்னேற்றமே அவரது கனவு.

மாண்புமிகு பிரதமர் மோடியின், மக்கள் நலம் சார்ந்த ஆளுகை மற்றும் நிர்வாகத்தினால் பாரத அன்னையின் பெருமை, கோவிட் பெருந்தொற்று காலத்தில் மீண்டும் உறுதியாக நிலைநிறுத்தப்பட்டது. வெளிநாட்டில் வசிக்கின்ற ஒவ்வொரு இந்தியரும் நமது நாட்டின் மீள்திறன் மற்றும் செயல்திறன் குறித்து பெருமையும், மதிப்பும் கொள்ளுமாறு மோடிஜியின் நடவடிக்கைகள் அமைந்தன. உலகின் மோசமான பொருளாதார சூழ்நிலைகளையும் மீறி பாரத்-இன் பொருளாதார நிலை, கடும் பாதிப்புகளின்றி நிலையாகவே பராமரிக்கப்பட்டது. ஊழல் என்ற சொல்லே மத்திய அரசின் நிர்வாகத்திலிருந்து முற்றிலுமாக நீக்கப்பட்டது. அந்நிய நேரடி முதலீடு அதிகம் கிடைக்கும் முதன்மையான நாடாக பாரத் உருவெடுத்தது. மேக் இன் இந்தியா, ஸ்டார்ட்அப் இந்தியா, முத்ரா போன்ற பல புதுமையான முன்னெடுப்புகளினால் உள்நாட்டு உற்பத்தியும், உற்பத்தி திறனும் பெருமளவு உயர்த்தப்பட்டன.

நிர்வாகத்திலும், அரசியலிலும், குடிமை செயல்பாட்டிலும் நிலவி வந்த பணி செய்யும் முறையில் வெளிப்படையாகத் தெரியக்கூடிய ஒரு மாற்றத்தை நம் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். சாமான்ய மக்களுக்கு சேவைகளை துரிதமாகவும், வெளிப்படைத் தன்மையோடும் வழங்குவதற்கு தொழில்நுட்பம் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டது. நிதி ஆயோக்–இன் ஆய்வறிக்கையின்படி 2015-16 மற்றும் 2019-21 நிதியாண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் வறுமையின் பல்வேறு நிலைகளில் இருந்த, 13.5 கோடி நபர்கள் வெளியேறினர் என்பது ஒரு வரலாற்று சாதனை.

நமது தேசத்தை ஆரோக்கியமானதாகவும், பாதுகாப்பானதாகவும் உணரச்செய்த சாதனையாளர் நமது பிரதமர். நாட்டின் எதிரிகள் வலுக்கட்டாயமாக சண்டையைத் தூண்டியபோது, வலிமையான நம்

நாட்டைப் பாதுகாப்பதோடு, தைரியமான நடவடிக்கையின் மூலம் உறுதியான செய்தியையும் மக்களுக்கு அவர் வழங்கினர். ராணுவப் படையினரின் நம்பிக்கையையும், தைரியத்தையும் மேலும் உயர்த்தவும் மற்றும் அவர்களது தேசபக்தி மற்றும் தியாகத்தின் மதிப்பை போற்றி உலகறியச் செய்யவும் ராணுவப் படைகளுக்கு திறனதிகாரமும், மேம்பாடும் சமஅளவில் வழங்கப்பட்டன. வரலாற்றில் முதன்முறையாக நமது ராணுவப் படைகள் மேலும் திறனதிகாரம் பெறுவதற்காக பல நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

நாட்டின் எல்லைப் பகுதியில் ராணுவப் படையினரோடு தொடர்ந்து 10 ஆண்டுகளாக ஒரு பண்டிகைத் திருநாளை (தீபாவளி) கொண்டாடி மகிழும் நமது பிரதமர் நரேந்திர மோடியின் தேசபக்தியை போற்றாமல் இருக்க முடியுமா? உலகில் இந்த சாதனையை நிகழ்த்திய ஒரே பிரதமர் இவர் மட்டுமே.

செல்லும் இடங்களில் எல்லாம் பாரத்-இன் வளர்ச்சி மற்றும் மேம்பாடு பற்றிய செய்திகளை அவர் சொல்லும்போது, ஒவ்வொரு நாட்டின் தலைவர்களும் நமது பிரதமர் மோடியின் பேச்சுக்கு மதிப்பளித்து கவனமாக கேட்டனர் என்பது நமது நாட்டிற்கு கிடைத்த பெரும் கௌரவமல்லவா? 60-க்கும் அதிகமான நாடுகளுக்கு பாரத்-இன் தலைமகனாக அவர் பயணித்து, நமது பெருமையை உலக அரங்கில் நிலைநாட்டியிருக்கிறார்.

2024-ம் ஆண்டில் நாட்டின் மகத்தான எதிர்காலத்திற்கு பிரதமர் மோடியின் உத்தரவாதம் தரப்படுகிறது. மோடிஜியின் சீரிய தலைமையின் கீழ், நமது நாடு நல்லரசாகவும், வல்லரசாகவும் விரைவில் உருவெடுப்பது நிச்சயம். அவரது அர்ப்பணிப்பு, பொறுப்பு, தளராத ஆற்றல், கலாச்சாரம் மீதான அக்கறை, ஊழலை எதிர்த்துப் போரிடும் வீரம், முன்னணி நாடுகளுடன் வலுவான நட்புறவு, அவரது குடும்பமான **“பாரத்-இன் 140 கோடி மக்கள் மீது அவர் கொண்டிருக்கும் வரம்பற்ற அன்பு”** ஆகிய சிறந்த பண்புகளுக்காக நமது அனைவரின் அன்புக்கும் உரிய பாரதப் பிரதமர் மோடிஜி அவர்களுக்கு எனது சிரம் தாழ்ந்த வணக்கம்.

# எதிர்கால பாரத் 2024-க்கான பிரதமர் மோடியின் உத்தரவாதம்: முதன்மையான 5 காரணங்கள்

## 1. கோவிட்–19 தொற்றுநோயிலிருந்து பாரத அன்னையைக் காப்பாற்றினார்

**100 வருட வரலாற்றில் மிக மோசமான தொற்றுநோயிலிருந்து, இன்று நாமும் நமது குடும்ப உறுப்பினர்களும் 2 காரணங்களால் காப்பாற்றப்பட்டுள்ளோம்.**

1. கடவுளின் ஆசீர்வாதம்

2. மோடி அரசின் அர்ப்பணிப்பு

**மார்ச் 11, 2020**: உலக சுகாதார அமைப்பு (WHO) கொரோனா வைரஸ் நோயை (COVID-19) அதிகாரப்பூர்வமாக ஒரு ‘தொற்றுநோய்’ என்று அறிவித்தது.

ஆனால், மார்ச் 11, 2020-க்கு முன்பே உடனடி நடவடிக்கைகளை எடுத்த உலகின் சில நாடுகளில் பாரதமும் ஒன்றாகும்.

கோவிட் தொற்றுநோய் காரணமாக உண்டான சூழலை எதிர்கொள்வதற்கு பாரத் அரசு தொடர்ந்து செயலூக்கமான நடவடிக்கைகளை எடுத்தது மற்றும் கோவிட்-19இன் அனைத்து அம்சங்களையும் எதிர்கொள்ளும் வகையில் நமது சுகாதார அமைப்பின் தயார்நிலையை மேம்படுத்தியது. தொற்றுநோய் காலத்தில், உலகளவில் குறைந்த நோய் பாதிப்பு மற்றும் இறப்பு விகிதங்களுடன்,

மிக உயர்ந்த நோய் மீட்பு விகிதங்களை பாரதம் பராமரிக்க முடிந்தது. நாட்டின் பொது சுகாதார முயற்சிகளுக்கு, கோவிட்-19க்கு எதிரான தடுப்பூசிகளை உருவாக்குவதில் அதன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திறன் வலுவான ஆதரவு தந்தது.

மரியாதைக்குரிய பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் தலைமையின் கீழ், கோவிட்-19-ஐ திறம்பட நிர்வகிப்பதற்கு, நமது நாடு 'முழு அரசாங்கம்' மற்றும் 'முழு சமூகம்' என்னும் ஓர் அணுகுமுறையை, செயலூக்கமான, முன்கூட்டியே தீர்மானித்த மற்றும் தரப்படுத்தப்பட்ட முறையில் பின்பற்றுவதன் மூலம், ஒரு முழுமையான எதிர்கொள்ளல் செயல்திட்டத்தை, செயல்படுத்தியது.

மோடி அரசாங்கத்தின் உத்தி - கட்டுப்பாடு, நிவாரண உதவிகள் மற்றும் தடுப்பூசி நிர்வாகம் என்பதாக இருந்தது. இந்த மூன்று நடவடிக்கைகளும் கோவிட்-19 பரவுவதைக் கட்டுப்படுத்தி, வாழ்வாதாரத்தைத் தக்கவைத்து, வைரஸுக்கு எதிராக நோய் எதிர்ப்புச் சக்தியை வளர்ப்பதன் மூலம் உயிர்களைக் காப்பாற்றுவதிலும் பொருளாதாரச் செயல்பாட்டை உறுதி செய்வதிலும் முக்கியமான பங்கு வகித்தன.

கோவிட் சிகிச்சைக்கு மருத்துவமனைகளில் தனி படுக்கைகள், மருந்துகள், தளவாடங்கள் அதாவது N-95 முககவசங்கள், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணம் (PPE) கருவிகள் மற்றும் மருத்துவ ஆக்சிஜன் ஆகியவற்றின் அடிப்படையில் சுகாதார உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியது, அதே நேரத்தில் சிறப்பு திறன் மையங்கள் மூலம் மனித வளத்தை மேம்படுத்துதல் மற்றும் இ-சஞ்சீவனி டெலிமெடிசின் சேவை, ஆரோக்ய சேது, கோவிட்-19 இந்தியா போர்டல் போன்ற டிஜிட்டல் தீர்வுகளைப் பயன்படுத்துதல் போன்றவையும் நடைபெற்றது. மருத்துவ பரிசோதனைக்கான உள்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதற்கும் சமமான முக்கியத்துவம் வழங்கப்பட்டது. முன்னெப்போதும் இல்லாத விகிதத்தில் 917.8 மில்லியன் (91 கோடி) கோவிட்-19 பரிசோதனைகள் செய்யப்பட்டன.

பாரத், உலகின் மிகப்பெரிய தடுப்பூசி இயக்கத்தை செயல்படுத்தியது. 97% முதல் தவணை மற்றும் 90% இரண்டாவது தவணை கவரேஜ்களில் நாடு முழுவதும் தடுப்பூசிகள் அளிக்கப்பட்டதன் மூலம், தகுதியுள்ள பயனாளிகளுக்கு 2.2 பில்லியன் (220 கோடி) தடுப்பூசிகள் போடப்பட்டது. அனைவருக்கும் சமமான அளவில் தடுப்பூசி வழங்குவதில் கவனம் செலுத்தும் வகையில், அனைத்து குடிமக்களுக்கும் தடுப்பூசிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

## கோவிட்—19க்கான உடனடி எதிர்வினை:

- நாட்டில் COVID-19 நிர்வாகத்தின் பல்வேறு அம்சங்களில் தகவலறிந்து முடிவுகளை எடுப்பதற்காக 11 அதிகாரமளிக்கப்பட்ட குழுக்கள், மோடி அரசால், 2020 மார்ச் 29 அன்று அமைக்கப்பட்டன.
- கோவிட்-19 நோயாளிகளை சரியான முறையில் நிர்வகிப்பதற்கு என்று மூன்று அடுக்கு சுகாதார வசதிகள் உருவாக்கப்பட்டது. (தனிமைப்படுத்தல் மையம், சுகாதாரப் பாதுகாப்பு மையம் & பிரத்யேக COVID19 மருத்துவமனை)
- கோவிட்19 பாதிப்புகளைக் கண்காணிக்கவும், நோய் பாதிப்பிற்கு உள்ளானவர்கள் அல்லது கோவிட்-19 பாதிக்கப்பட்ட நபருடன் தொடர்பில் இருந்தவர்களைத் தொடர்பு கொள்வதற்காகவும், பயனர்களின் இருப்பிடம் சார்ந்து செயல்படும் ஆரோக்ய சேது செயலி தொடங்கப்பட்டது.

## உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்:

- நாடு முழுவதும் வென்டிலேட்டர்களும் மற்றும் அதை இயக்குவதில் பயிற்சி பெற்ற 19,000 மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவப் பணியாளர்கள் இருக்கும்படியான ஏற்பாடு செய்யப்பட்டது.
- அரசாங்கம், 1563 பிரஷர் ஸ்விங் அட்சார்ப்ஷன் (PSA) ஆக்சிஜன் தயாரிக்கும் ஆலைகளுக்கு அனுமதி அளித்துள்ளது.

- கோவிட்-19 கண்டறியும் சோதனை ஆய்வகங்களின் எண்ணிக்கை 3062-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது
- கோவிட்-19 சிகிச்சையானது ஆயுஷ்மான் பாரத்- பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (AB-PMJAY) திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

## மாநிலங்களுக்கு நிதி உதவி:

- 2019-20 நிதியாண்டில் கோவிட்-19 தொற்றுநோயை நிர்வகிப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் தேசிய சுகாதார இயக்கத்தின் (NHM) கீழ் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு ரூ.1113.21 கோடி நிதி விடுவிக்கப்பட்டது.
- செப்டம்பர் 2020 முதல், பல்வேறு கோவிட்-19 தொடர்பான நடவடிக்கைகளுக்கு, மாநில பேரிடர் மீட்பு நிதியை (SDRF) பயன்படுத்த மத்திய அரசு அனுமதித்துள்ளது.
- அவசரகால கோவிட் எதிர்வினை நிதித்தொகுப்பின் (ECRP) கீழ், கோவிட்-19 நடவடிக்கைகளுக்கான மானியங்களை மத்திய அரசு விடுவித்தது. (2020 நிதியாண்டில் ரூ 8,257 கோடி & 2021 நிதியாண்டில் ரூ 6,075 கோடி)
- கோவிட்-19 அவசரகால எதிர்வினை & சுகாதார அமைப்பு தயாரிப்புத் தொகுப்பு: கட்டம்-IIக்கு மோடி அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. ஜூலை 1, 2021 முதல் ரூ.23,123 கோடியில் இது செயல்படுத்தப்படுகிறது

## கோவிட்—19 தடுப்பூசி தயாரிக்கும் திறன்:

- புனேவில் உள்ள M/s சீரம் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட் தயாரித்த கொரோனா வைரஸ் தடுப்பூசி கோவிஷீல்டு, மற்றும் M/s பாரத் பயோடெக் இண்டர்நேஷனல் லிமிடெட், ஹைதராபாத் தயாரித்த கொரோனா வைரஸ் தடுப்பூசி கோவாக்சின்.

- கோவிஷீல்டின் மாதாந்திர தடுப்பூசி உற்பத்தி திறன் தோராயமாக, மாதத்திற்கு 250-275 மில்லியன் டோஸ்களாக உள்ளது.
- கோவாக்ஸின் மாதாந்திர தடுப்பூசி உற்பத்தி திறன் தோராயமாக, மாதத்திற்கு 50-60 மில்லியன் டோஸ்களாக உள்ளது.
- இரு நிறுவனங்களும் தற்போதைய உற்பத்தித் திறனில் 90%-ஐ எட்டியுள்ளன

## கோவிட்–19 தடுப்பூசி:

- பாரத், உலகின் மிகப்பெரிய தடுப்பூசி இயக்கத்தை செயல்படுத்தியது. 97% முதல் தவணை மற்றும் 90% இரண்டாவது தவணை கவரேஜ்களில் நாடுமுழுவதும் தடுப்பூசிகள் அளிக்கப்பட்டதன் மூலம், தகுதியுள்ள பயனாளிகளுக்கு 2.2 பில்லியன் (220 கோடி) தடுப்பூசிகள் போடப்பட்டது.

## முக்கிய சிறப்பம்சங்கள்:

- வந்தே பாரத் மிஷனின் கீழ், பல்வேறு இடங்களிலிருந்து இந்திய நகரங்களுக்கு 766-க்கும் மேற்பட்ட விமான பயணங்கள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டன. கோவிட் 19 தொற்றுநோயால் பல்வேறு நாடுகளில் சிக்கித் தவித்த 11.70 லட்சம் பாரதக் குடிமக்கள் மே 6 2020 முதல் சிறப்பு விமானங்கள் மூலம் சொந்த ஊர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இதேபோல், ஊரடங்கு காரணமாக பாரதத்தில் சிக்கியிருந்த 1.66 லட்சத்திற்கும் அதிகமான வெளிநாட்டினர், அவர்களது சொந்த நாடுகளுக்கு விமானத்தில் அனுப்பப்பட்டுள்ளனர்.
- முன்னெப்போதும் இல்லாத அளவில் நாடு தழுவிய கோவிட்-19 தடுப்பூசி பிரச்சாரத்தை மேற்கொண்டதன் மூலம் பாரதத்தால் 3.4 மில்லியனுக்கும் அதிகமான (34 லட்சம்) உயிர்களைக் காப்பாற்ற முடிந்தது என்பதை ஸ்டான்போர்ட் அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

- கோவிட்19 தடுப்பூசி பிரச்சாரம் 18.3 பில்லியன் அமெரிக்க டாலர்கள் (ரூ. 1.56 லட்சம் கோடி) இழப்பைத் தடுத்தது, சாதகமான பொருளாதார தாக்கத்தை அளித்தது: ஸ்டான்போர்ட் அறிக்கை
- தடுப்பூசி பிரச்சாரத்தின் செலவைக் கருத்தில் கொண்டு பார்த்தால், நாட்டிற்கு 15.42 பில்லியன் அமெரிக்க டாலர்கள் (ரூ. 1.27 லட்சம் கோடி) நிகர லாபம் கிடைத்திருக்கிறது.
- நேரடி மற்றும் மறைமுக நிதி மூலம் 280 பில்லியன் அமெரிக்க டாலர்கள் [சர்வதேச பண நிதியத்தின் படி (IMF)] செலவழித்தது பொருளாதாரத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.
- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகம் (MSME) துறையை ஆதரிக்கும் திட்டங்களுடன், 10.28 மில்லியன் (1.2 கோடி) நிதிஉதவி MSME-களுக்கு வழங்கப்பட்டது, இதன் விளைவாக 100.26 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிற்கு [மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP)] 4.90% பொருளாதார தாக்கம் ஏற்பட்டது.
- பிரதான் மந்திரி கரிப் கல்யாண் அன்ன யோஜனா (PMGKAY)-வின் கீழ், 800 மில்லியன் (80 கோடி) மக்களுக்கு இலவச உணவு தானியங்கள் விநியோகிக்கப்பட்டன, இதன் விளைவாக சுமார் 26.24 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிற்கு பொருளாதாரத் தாக்கம் ஏற்பட்டது.
- பிரதம மந்திரி 'கரிப் கல்யாண் ரோஸ்கர் அபியான்' கீழ், 4 மில்லியன் (40 லட்சம்) பயனாளிகளுக்கு வேலை வழங்கப்பட்டது, இதன் விளைவாக ஒட்டுமொத்த பொருளாதார தாக்கம் 4.81 பில்லியன் அமெரிக்க டாலர்கள்

## 2. அயோத்தியில் ராமர் கோவில்

**21-ஆம் நூற்றாண்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க ராமர் கோவிலின் "பிரான் பிரதிஷ்டா" நிகழ்வு 2024 ஜனவரி 22 அன்று அயோத்தியில் நடந்தது.**

மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி, 11 நாள் விரதம் மற்றும் விழாவுக்கு முன்னதாக பல கோயில்களில் தரிசனம் ஆகியவற்றை முடித்துக் கொண்டு, ஸ்ரீ ராம் ஜென்மபூமி கோவிலில் நடைபெற்ற ‘பிரான் பிரதிஷ்டா’ சடங்குகளுக்குத் தலைமை தாங்கினார். ராஷ்ட்ரிய ஸ்வயம்சேவக் சங்கத்தின் (RSS) தலைவர் மோகன் பகவத் ஜி, மாண்புமிகு உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் மற்றும் மாண்புமிகு ஆளுநர் ஆனந்திபென் படேல் ஆகியோர் இச்சடங்குகளின் போது கருவறைக்குள் இருந்தனர்.

**ராமர் கோவில் - பாரதத்தின் கலாச்சார, ஆன்மீக மற்றும் பாரம்பரியத்தின் சின்னம்.**

500 ஆண்டு காலப் போராட்டம், ஆயிரக்கணக்கானோரின் உயிர் தியாகம், பல எதிர்ப்புகள், பல போராட்டங்களுக்குப் பிறகு, குழந்தை ராமர் (ராம் லல்லா) இழந்த மகிமையை மீண்டும் பெற்றுள்ளார், பகவான் ஸ்ரீ ராமர் தனது அசலான பிறந்த இடத்திற்குத் திரும்பினார்.

ஆக்கிரமிப்பாளர்களின் மனநிலை வெறுமனே நாடுகளைக் கைப்பற்றி வெற்றிகொள்ள முற்படுவதில்லை. ஒரு சிறந்த கலாச்சார சமுதாயத்தின் பெருமைக்கும் புகழுக்கும் ஆழமான பாதிப்புகளை ஏற்படுத்துவதில் அது மகிழ்ச்சி தேடுகிறது. முகலாய ஆட்சியாளர் பாபரின் தளபதி மீர் பாகி, அயோத்தியில் ராமர் கோயிலை அழித்து, தனது எஜமானருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஒரு மசூதியைக் கட்டினார். பாரதிய நம்பிக்கை, பெருமை மற்றும் மரபு ஆகியவற்றின் அடையாளத்தை நசுக்குவது அவரது நோக்கமாக இருந்தது.

1947-ல் நாடு சுதந்திரம் அடைந்த உடனேயே, அரசியல் தலைமைக்கும், அரசுக்கும் நமது இழந்த புகழையும் அடையாளத்தையும் கொண்டு வர ஒரு சிறந்த வாய்ப்பு கிடைத்தது. ஆனால், இது நடக்கவில்லை, நாம் 77 ஆண்டுகள் காத்திருந்தோம் (1947 முதல்).

ராம ஜென்மபூமிக்கான போராட்டம் இந்து சமுதாயத்தின் விடாமுயற்சி மற்றும் வீரியத்தின் அடையாளச் சின்னமாகும். படையெடுப்பாளர்கள் ஆட்சியாளர்களைத் தோற்கடித்தனர், சிலரை

மதமாற்றம் செய்து நிலத்தைப் பிரித்தனர், ஆனால், இந்து சமுதாயம் இந்த நாட்டின் நாகரீகத்தையும், கலாச்சார உணர்வையும் ஒருபோதும் கைவிடவில்லை. கடந்த 1500 ஆண்டுகளாக சுதந்திரப் போராட்ட வீரர்கள் சுயராஜ்ஜியம் பற்றிய சிந்தனையில் தெளிவாக இருந்தனர். அது ஒருபோதும் அரசியல் சுதந்திரத்தைப் பற்றியது அல்ல; ஆனால், நமது அந்த ஆன்மீக அடையாளத்தை சுதந்திரத்துடன் மீட்டெடுப்பதே ஆகும்.

ராம ராஜ்ஜியத்தின் எண்ணம் எப்போதும் தீமைக்கு எதிராகப் போராட நம்மைத் தூண்டியது. மத மேலாதிக்க சித்தாந்தத்திலிருந்து, எல்லா வழிகளையும் மதித்து, உண்மையாக ஏற்றுக்கொள்வதை நம்பும் பாரதத்தின் கருத்தாக்கத்தையும், ஜீவனையும் காப்பாற்றுவதே, இந்த நீண்ட மற்றும் தொடர்ச்சியான போராட்டத்தின் பின்னணியில் உள்ள உண்மையான எண்ணம் ஆகும்.

2014-இல் பிரதமர் மோடிக்கு கிடைத்த தெளிவான வெற்றி மற்றும் பெரும்பான்மையின் காரணமாக, ராமர் கோவில் மீதான அனைவரின் நம்பிக்கையும் உறுதிப்பாடும் மேலும் வலுப்பெற்றது. பிரதமர் மோடி நமது "ஜனநாயகக் கோவில் – அரசியலமைப்பு" மீது நம்பிக்கை வைத்து மதிக்கிறார். மோடி அரசாங்கத்தின் அரசியலமைப்பின் மீதான நம்பிக்கை மற்றும் மரியாதை வணக்கத்திற்கும், பாராட்டுதலுக்கும் உரியது.

இந்திய உச்ச நீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு 2019 நவம்பர் 9 அன்று கோவில் கட்டுவதற்கு ஆதரவாக ஒருமித்த கருத்துடைய முக்கிய தீர்ப்பை வழங்கியது. 5 ஆகஸ்ட் 2020 அன்று, ராமர் கோவிலுக்கான பூமி பூஜையை மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி நடத்தினார்.

ராமர் கோவிலின் கட்டிடக்கலைக்கான உத்வேகம் பாரதத்தின் வடக்கு மற்றும் தெற்கு பகுதியிலுள்ள கோயில் பாணிகளின் கூறுகளை ஒத்திசைவோடு ஒருங்கிணைக்கிறது. ராமர் கோவில் கட்டுமானத்தில் இரும்பு மற்றும் கான்கிரீட் பயன்படுத்தாதது நவீன கால கட்டுமானத்தில்

கற்பனைக்கு அப்பாற்பட்டது. முழுமையாக கட்டிமுடிக்கப்பட்ட ராமர் கோவில் குறைந்தபட்சம் 1000 ஆண்டுகளுக்கு மேலாக, நிலநடுக்கத்தை தாங்கும் திறனுடன், கடுமையான காலநிலையைத் தாக்குப்பிடிக்கும் திறன் கொண்ட ஒரு பொறியியல் அதிசயமாக இருக்கும்.

ராமர் கோவில் வளாகத்தின் முழு கட்டிடக்கலை அமைப்பும் "ஆத்மநிர்பர் பாரத்" (சுய சார்பு) கொள்கையைக் கடைபிடிக்கிறது, கழிவுநீர் அமைப்புகள், நீர் சுத்திகரிப்பு வசதிகள் மற்றும் பிரத்யேக மின் பாதை போன்ற அத்தியாவசிய அம்சங்களை உள்ளடக்கியது.

லார்சன் & டூப்ரோ நிறுவனம் (L&T) கோயில் கட்டுமானப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது, டாடா கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் (TCE) திட்ட மேற்பார்வைப் பொறுப்பை ஏற்றது. L&T மற்றும் TCE ஆகிய இரண்டு பெருநிறுவனங்களும் இந்த திட்டத்திற்கு சுயவிருப்பத்துடன் தானாக முன்வந்து பங்களிப்பை செய்கின்றன. ஐஐடி- மெட்ராஸ், ஐஐடி - கவுகாத்தி, ஐஐடி- டெல்லி, ஐஐடி - பாம்பே, ஐஐடி - கான்பூர், மத்திய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (CBRI) ரூக்கி, தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனம் (NGRI) ஹைதராபாத், ராக் மெக்கானிக்ஸ் நிறுவனம் - பெங்களூரு மற்றும் NIT புனே போன்ற பல்வேறு அறிவியல் மற்றும் பொறியியல் நிறுவனங்கள் கோவில் கட்டுமானப் பணியில் பல்வேறு கட்ட ஆராய்ச்சி, கட்டுமானம் மற்றும் திட்டமிடலில் பங்கேற்றன.

இந்த சிறந்த நிறுவனங்கள் மற்றும் அதன் ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்பிற்காக நாம் அனைவரும் நிச்சயம் நன்றியையும், மனமார்ந்த பாராட்டையும் தெரிவிப்பது நமது கடமையாகும்.

புனரமைக்கப்பட்ட கோவிலில் ராம் லல்லாவின் பிரான் பிரதிஷ்டை மூலம் பாரதத்தின் வரலாறு மீண்டும் எழுதப்பட்டுள்ளது. இந்த முக்கியமான நிகழ்வைக் காண வாய்ப்பு கிடைத்த நாம் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். பாரதத்தில் மட்டுமின்றி, உலகெங்கிலும் மத மற்றும் கலாச்சார ஆர்வத்துடன் நடந்த இந்த நிகழ்வு தொடர்பான

மகத்தான கொண்டாட்டங்கள், இது ஒரு அரசியல் நிகழ்வு மட்டும் அல்ல என்பதைக் குறிக்கிறது. ராம் லல்லாவின் பிரான் பிரதிஷ்தா, புதுப்பிக்கப்பட்ட, புத்துயிர் பெற்ற பாரதத்தின் தொடக்கமாகும்.

ராம ராஜ்ஜியத்தை நடைமுறைப்படுத்த ஒவ்வொரு ராம பக்தரும் பங்களிக்க வேண்டும். ராம் லல்லா தனது பிறந்த இடத்தை மீட்டெடுத்த தருணம், பிரமாண்டமான கொண்டாட்டத்திற்கான ஒரு சந்தர்ப்பமாகும். வரவிருக்கும் தலைமுறையினருக்காக - ஒரு நேர்மையான பாரதக் குடியரசைக் கட்டியெழுப்புவதற்கான கூட்டுத் தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டிய தருணம் இது.

## 3. சட்டப் பிரிவு 370 ஐ நீக்குதல்

1947 முதல், ஜம்மு & காஷ்மீர் பாரதத்தின் மிக முக்கியமான பகுதிகளில் ஒன்றாக இருந்தது, ஏழு தசாப்தங்களாக வெளிப்புற ஆக்கிரமிப்பு மற்றும் பயங்கரவாதத்தின் சுமைகளை இது தாங்க வேண்டியிருந்தது. நாட்டின் ஒருங்கிணைப்பிற்கான முக்கியத்துவத்தை மோடி அரசு கொண்டு வரும் வரை, நம்மில் பலருக்கு "சட்டப் பிரிவு 370" என்பது அந்நியமாகவும், புதிர் வார்த்தையாகவும் தோன்றலாம். பல தசாப்தங்களாக முந்தைய அரசாங்கங்களால் இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த நாட்டின் ஒருங்கிணைப்பு முன்னுரிமைக்கு எவ்வாறு உரிய கவனம் செலுத்தப்படவில்லை என்பதைப் பார்ப்பது நம்மை வருத்தத்தில் ஆழ்த்தக்கூடியது என்பதில் ஐயமில்லை.

பாரதிய ஜனதா கட்சி, துவக்கத்திலிருந்தே உண்மையான பாரதத்தின் உணர்வை வெளிப்படுத்தும் ஒரு அரசியல் கட்சியாக உள்ளது. அதன் முக்கிய நிகழ்ச்சி நிரலாகவும், தேர்தல் அறிக்கையில் தொடர்ந்து இடம்பிடிக்கும் அம்சமாவும் "சட்டப் பிரிவு 370 ரத்து" இருக்கிறது.

## பின்னணி:

ஜம்மு & காஷ்மீரின் மகாராஜா ஹரி சிங்கின் நடவடிக்கைக்கு பதிலடி கொடுக்கும் விதமாக, ஷேக் அப்துல்லாவிற்கு (ஜம்மு & காஷ்மீரின் உமர் அப்துல்லாவின் தாத்தா) ஜவஹர்லால் நேரு கொடுத்த பேரழிவுகரமான ஆதரவும், அப்துல்லா மீதான அவரின் பரிதாபகரமான நம்பிக்கையும், இந்த விவகாரத்தில் மவுண்ட்பேட்டனுடன் இணைந்து செயல்பட அவர் விருப்பம் தெரிவித்ததும், பெரும் குழப்பத்தை மட்டுமே சேர்த்தது. 1947-ஆம் ஆண்டில், இத்தகைய குழப்பம் மற்றும் உறுதியற்ற தன்மையின் பின்னணியில், ஜம்மு & காஷ்மீர் மக்கள் ஒரு மோசமான சூழ்நிலையை கைவரப் பெற்றனர். அப்போது, நேரு மட்டும் ஷேக் அப்துல்லாவை ஆதரிக்கவில்லை என்றால், ஜம்மு & காஷ்மீர் பாரதத்துடன் இணைவது ஒருவேளை அக்டோபர் 26, 1947-க்குப் பதிலாக ஆகஸ்ட் 1947-இல் நடந்திருக்கலாம்.

மற்ற அனைத்து மாநிலங்களைப் போலவே, இது ஒரு அரசியலமைப்பு ஒருங்கிணைப்பு செயல்முறையாகும், இது பாகிஸ்தானின் பக்கத்திலிருந்து ஊடுருவல் மற்றும் அடுத்தடுத்த போர்களின் காரணமாக தடுத்து நிறுத்தப்பட்டது. மேலும், ஜம்மு & காஷ்மீர் பிரச்சினையை நேரு ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச் சென்றார்; அது தேவையில்லாத ஒரு நடவடிக்கையாகும்.

சட்டப்பிரிவு 370 எனும் அசாதாரணமான தற்காலிக விதியை அரசியலமைப்பில் சேர்த்தது, ஷேக் அப்துல்லாவிடம் ஆட்சியை ஒப்படைப்பதற்கு தாமதப்படுத்தியது என ஜவஹர்லால் நேருவால் செய்யப்பட்ட இரண்டு தவறுகளும் ஜனநாயகத்தில் ஒரு விசித்திரமான சூழ்நிலையை உருவாக்கியது. ஒரே அரசியலமைப்பின் கீழ் ஆளப்படும் ஒரு நாட்டில் இரண்டு அரசியலமைப்புகள், இரண்டு பிரதமர்கள் மற்றும் இரண்டு கொடிகள் இருந்தன.

அரசியலமைப்பின் 370-ஆவது பிரிவு இரண்டு நோக்கங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டது.

- மாநிலத்தின் அரசியலமைப்பு சபை உருவாகும் வரை இடைக்கால ஏற்பாடாக என்னும் ஒரு இடைநிலை நோக்கம்
- போரினால் ஏற்படும் சூழ்நிலையினை அம்மாநிலம் எதிர்கொள்ள வேண்டுமென்பதன் காரணமாக ஒரு இடைக்கால ஏற்பாடான தற்காலிக நோக்கம்.

ஜம்மு & காஷ்மீர் சட்டப்பிரிவு 370-இன் பெயரில், இது ஜனநாயகத்தின் மீதான ஒரு திட்டமிட்ட கொலையாகும், இதன்மூலம் ஒரு தற்காலிக மற்றும் இடைநிலை தீர்வானது ,'நிரந்தர' 'சிறப்பு' அந்தஸ்தாக மாற்றியது. ஜம்மு-காஷ்மீர் மற்றும் பாரதத்தின் பிற பகுதிகளின் தேசியவாத சக்திகள் இத்தகைய ஜனநாயக விரோத விதிகளுக்கு எதிராகத் தொடர்ந்து எதிர்த்துப் போராடின.

## தாக்கம்:

ஜம்மு-காஷ்மீரில் இதுவரை 42,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர், ஏனெனில் பிரிவு 370 பிரிவினைவாத உணர்வை ஊக்குவிக்க பயன்படுத்தப்பட்டது மற்றும் இதன் காரணமாக பயங்கரவாதத்தின் பாதிப்பு அங்கு அதிகரித்தது.

பாரதக் கொடியை விமர்சிப்பதும், அவமதிப்பதும் அந்த மாநிலத்தில் குற்றமல்ல, உச்ச நீதிமன்ற விதிகளும் அங்கு பொருந்தாது என்ற நிலையே இருந்தது.

ஒரு காஷ்மீரி பெண் ஜம்மு-காஷ்மீருக்கு வெளியே யாரையும் திருமணம் செய்து கொண்டால், அவள் குடியுரிமையை இழக்கிறாள். மேலும் அப்பெண் ஒரு பாகிஸ்தானியரை மணந்தால், அந்த ஆண் ஜம்மு-காஷ்மீர் குடியுரிமை பெறுவார். ஜம்மு-காஷ்மீருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் (RTI) பொருந்தாது. ஜம்மு-காஷ்மீருக்கு வெளியே இருக்கும் யாரும் அங்கு நிலம் வாங்க முடியாது. ஜம்மு-காஷ்மீருக்கு நிதி அவசரநிலைகள் பொருந்தாது. வெளியில் இருந்து யாரும் ஜம்மு-காஷ்மீருக்குள் வந்து குடியேற முடியாது. ஜம்மு-காஷ்மீரில் வேலை வாய்ப்புகள் மிகக் குறைவாகவே இருந்தன,

எனவே நிறைய இளைஞர்கள் பயங்கரவாதத்தால் ஈர்க்கப்பட்டனர். மாநிலத்தின் உள்நாட்டு மொத்த உற்பத்தி (GDP) மிக குறைவாகவும் மற்றும் ஊழல் மிக அதிகமாகவும் இருந்தது. 370-ஆவது பிரிவின் கீழ் 3 பிரபல குடும்பங்கள் மட்டுமே ஆட்சியையும், அதிகாரத்தையும் அனுபவித்தன.

## மோடி அரசின் நடவடிக்கைகள்:

ஆகஸ்ட் 5, 2019 அன்று, ஜம்மு காஷ்மீரில் இருந்து சட்டப்பிரிவு 370-ஐ ரத்து செய்ய பிரதமர் திரு நரேந்திர மோடிஜி ஒரு தொலைநோக்கு முடிவை எடுத்தார். 11 டிசம்பர் 2023 அன்று, 5 நீதிபதிகள் கொண்ட மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு, 370-ஆவது பிரிவை நீக்கும் மோடி அரசின் முடிவை ஒருமனதாக உறுதி செய்தது.

சட்டப்பிரிவு 370 ரத்து செய்யப்பட்ட பிறகு, ஏழைகள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களின் உரிமைகள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன, மேலும் பிரிவினைவாதமும் கல்லெறிதலும் இப்போது கடந்த கால விஷயங்களாக மாறிவிட்டன. விவசாயிகள், பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் ஏழை மக்களை உள்ளடக்கிய சாதனை படைக்கும் நலத்திட்டங்களால் ஜம்மு & காஷ்மீர் மக்கள் இப்போது அதிகாரம் பெற்றிருக்கின்றனர்.

## பிரதமர் மோடியின் கீழ் ஜம்மு & காஷ்மீர் அடைந்த மாற்றம்:

- ஜம்மு & காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் அனைத்து மத்திய சட்டங்களும் அமல்படுத்தப்பட்டன மற்றும் ஜம்மு & காஷ்மீர் வரலாற்றில் முதல் முறையாக 3-அடுக்கு பஞ்சாயத்து ராஜ் அமைப்பு நிறுவப்பட்டது.
- பிரதமரின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழான 53 திட்டங்களில் 58,477 கோடி ரூபாய் மதிப்பிலான 32 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன.

- பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு (EWS) 10% இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது, 100% ஜம்மு & காஷ்மீர் கிராமங்கள் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத (ODF) நிலையை அடைந்தன.
- பிரதமர் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 3.84 லட்சம் வீடுகள் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது; ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் 13.54 லட்சம் குழாய் நீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- உஜ்வாலா யோஜனா திட்டத்தின் கீழ் ஏழைப் பெண்களுக்கு 12.53 லட்சம் இலவச எல்பிஜி எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- இலவச சுகாதாரத் திட்டத்தின் கீழ் 82.22 லட்சம் பயனாளிகள் (AB-PMJAY-SEHAT)
- PMGSY திட்டத்தின் கீழ் 8,086 கிமீ கிராமப்புற சாலைகள் 4 ஆண்டுகளில் போடப்பட்டுள்ளன
- 7 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள், 50 புதிய பட்டயக் கல்லூரிகள், 28 பி.எஸ்சி., நர்சிங் கல்லூரிகள் மற்றும் 19 பி.எஸ்சி., துணை மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட்டன. ஐஐடி ஜம்மு, ஐஐஎம் ஜம்மு மற்றும் எய்ம்ஸ் ஜம்மு ஆகியவை இப்போது செயல்படுகின்றன.
- ஆகஸ்ட் 2019 முதல் அரசாங்கத்தில் 31,830 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. 7.4 லட்சம் சுய வேலைவாய்ப்புகள் (2021 முதல்) உருவாக்கப்பட்டுள்ளன.
- PM KISAN திட்டத்தின் கீழ் 12.55 லட்சம் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் ரூ.2,517 கோடி நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது.
- சட்டப்பிரிவு 370 ரத்து செய்யப்பட்ட நான்கு ஆண்டுகளில் பயங்கரவாத சம்பவங்களில் 70 சதவீதம் குறைந்துள்ளது. 2004 முதல் 2014 வரை காஷ்மீரில் மொத்தம் 2829 பாதுகாப்புப் படையினர் மற்றும் பொதுமக்கள் கொல்லப்பட்டனர், 2014 முதல் 2023 வரை 891 பாதுகாப்புப் படையினர் மற்றும் பொதுமக்கள்

தங்களது உயிரை இழந்துள்ளனர், இது முன்பை விட 70 சதவீதம் குறைவு.

- கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி ரூ.2000-ல் இருந்து இரட்டிப்பாகியுள்ளது. 2021-22ல் 563 கோடியாக இருந்தது 2022-23ல் ரூ.1116.37 கோடி.
- மோடி அரசு 19.02.2021 அன்று ஜம்மு & காஷ்மீர் யூனியன் பிரநாட்டின் தொழில் வளர்ச்சிக்கான புதிய மத்தியத் துறை திட்டத்தை, தொழில் வளர்ச்சியை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்துடன், ரூ. 28,400 கோடி மதிப்பீட்டில் அறிவித்துள்ளது.

## 4. பட்டியல் சாதி (SC) & பட்டியல் பழங்குடி (ST) சமூகங்களுக்கு அதிகாரமளித்தல்

2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, நமது நாடு முழுவதும் எஸ்சி & எஸ்டி (SC & ST) மக்கள் தொகை முறையே 16.6% & 8.9% ஆக உள்ளது. பிரதமர் மோடி தலைமையின் கீழ், தலித்கள், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அரசின் நலத் திட்டங்களிலிருந்து அதிகபட்ச பலன்களைப் பெற்று, அதாவது தங்களுக்கு உரிய கண்ணியத்தை பெற்று வருகின்றனர்.

SC & ST மக்கள் தங்கள் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு போதுமான ஆதரவுடன் உற்பத்தி, பாதுகாப்பான மற்றும் கண்ணியமான வாழ்க்கையை நடத்தக்கூடிய சூழல் நிலவும் உள்ளடக்கிய சமுதாயத்தை உருவாக்குவதே பிரதமர் மோடியின் பார்வை. தேவையான இடங்களில் கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூக மேம்பாடு மற்றும் மறுவாழ்வுத் திட்டங்கள் மூலம் மக்களுக்கு ஆதரவளித்து அதிகாரம் அளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. வரலாற்றில் முதன்முறையாக மக்கள் நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பிரதமர் மோடி - டாக்டர் அம்பேத்கரின் உண்மையான சீடர் மற்றும் சுயசார்பு பாரதம் பற்றிய அம்பேத்கரது தொலைநோக்குப் பார்வை அவரால் முன்னெடுக்கப்படுகிறது. டாக்டர் அம்பேத்கரின்

சமூக சீர்திருத்தக் கண்ணோட்டத்தை நடைமுறைக்கு மாற்றிய முதல் பிரதமர் மோடிதான்.

இளம் பாரதம் பிரதமர் மோடியால் டாக்டர் அம்பேத்கரின் இலட்சியத்துடன் இணைக்கப்பட்டது. டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையம் 2017-இல் திறக்கப்பட்டது. பஞ்சதீர்த் - டாக்டர் அம்பேத்கரின் வாழ்க்கையுடன் தொடர்புடைய இடங்களை மேம்படுத்துவதன் மூலம் அவருக்கு அஞ்சலி செலுத்துதல் (மவ்வில் அவரது பிறந்த இடம், இங்கிலாந்தில் படிக்கும் போது அவர் வசிக்கும் இடம், அவர் பௌத்தத்தைத் தழுவிய தீக்ஷா பூமி, அவர் பரிநிர்வாணம் அடைந்த டெல்லியில் உள்ள மகாபரிநிர்வான் ஸ்தல் மற்றும் மும்பையில் உள்ள அவரது நினைவிடமான சைத்ய பூமி) இப்போது நிகழ்ந்திருக்கிறது.

மோடி அரசாங்கம் SC/ST (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தை வலுப்படுத்தியது மற்றும் SC/ST மக்களுக்கு அதிக பாதுகாப்பை உறுதி செய்தது.

SC/ST மக்கள் மீது பிரதமர் மோடிக்கு அபரிமிதமான மரியாதை, மதிப்பு, அக்கறை உள்ளது. SC/ST மக்களுக்கு அதிகாரமும் மதிப்பும் வழங்கப்பட வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருக்கிறார். நமது வரலாற்றில் முதன்முறையாக, தொடர்ந்து இரு முறை அரசாங்கத்தின் மாண்புமிகு குடியரசுத் தலைவர்கள் SC & ST பிரிவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். (முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ராம் நாத் கோவிந்த் & மாண்புமிகு குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு)

## பட்டியல் சாதி மேம்பாடு:

- தேசிய பட்டியல் சாதியினர் நிதி மற்றும் மேம்பாட்டு கழகம் (NSFDC) - மானியத்துடன் கூடிய வட்டி விகிதக் கடன்களை, வருமானம் ஈட்டும் திட்டங்கள் மற்றும் கல்வி நோக்கங்களுக்காக, குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3 லட்சம் வரை உள்ளவர்களுக்கு வழங்குகிறது.

- ஜூன் 30, 2023 நிலவரப்படி, NSFDC-ஆனது கடன் அடிப்படையிலான திட்டங்களின் கீழ் தோராயமாக 85.90 லட்சம் குடும்பங்களுக்கு ரூ.7648.89 கோடிகளை அளித்துள்ளது. NSFDC திறன்பயிற்சிதிட்டங்களுக்குரூ.274.26கோடிகளைஒதுக்கியுள்ளது. இதனால், 1,88,727 பயனாளிகள் பயனடைகின்றனர்.
- SC மாணவர்களுக்கான தேசிய பெல்லோஷிப்கள் (NFSC) - 19,500-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெறும் வகையில் 2099 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. (2014 முதல் 2022 வரை)
- பிரதான் மந்திரி அனுசுசித் ஜாதி அபியுதாய் யோஜனா (PM- AJAY) - 2023-24 நிதியாண்டில் இந்தத் திட்டத்தின் பட்ஜெட் செலவு ரூ. 2050 கோடி. இத்திட்டமானது திறன் மேம்பாடு, வருமானம் உருவாக்கம் மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றின் மூலம் கூடுதல் வேலை வாய்ப்புகளை உருவாக்கி, SC சமூகங்களின் வறுமையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முத்ரா திட்டம் – வழங்கப்பட்டுள்ள 44.46 கோடி கடன்களில், 10.22 கோடி கடன்கள் SC/ST பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ெட்ரிக்கிற்கு முந்தைய உதவித்தொகை திட்டத்தின் கீழ், கல்வி உதவித்தொகையாக ரூ. 369.03 கோடி 18,32,628 SC மாணவ பயனாளிகளுக்கு அளிக்கப்பட்டது. (2023)
- SC மாணவர்களுக்கான மெட்ரிக்கு பின்னான உதவித்தொகை திட்டத்தின் கீழ் 34,58,538 SC பயனாளிகளுக்கு உதவித்தொகை ரூ. 3546.34 கோடி அளிக்கப்பட்டது. (2023)
- 2023-24 ஆம் ஆண்டுக்கான, இலக்குப் பகுதிகளில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கான உறைவிடக் கல்விக்கான திட்டம் (SHRESHTA) திட்டத்தின் கீழ் மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (CBSE) /மாநில வாரியங்களால் இணைக்கப்பட்ட 142 தனியார் உண்டு உறைவிடப் பள்ளிகளில் 2564 SC மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

- SC-களுக்கான தேசிய வெளிநாட்டு உதவித்தொகை (NOC) – 2023-இல் மட்டும் மொத்தம் 107 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.
- 2014-15 முதல் SC மாணவர்களின் சேர்க்கையில் குறிப்பிடத்தக்க அளவில் 44% அதிகரிப்பு (2014-15 இல் 46.07 லட்சத்தில் இருந்து 2021-22 இல் 66.23 லட்சம்)
- 2014-15 (21.02 லட்சம்) உடன் ஒப்பிடுகையில், 2021-22ல் (31.71 லட்சம்) பெண் SC மாணவர்களின் சேர்க்கை 51% அதிகரித்துள்ளது.
- SC/ ST மற்றும் பெண் தொழில்முனைவோருக்கான ஸ்டாண்டப் இந்தியா (1 கோடி வரை கடன்கள்) - 47,073 பயனாளிகள் பயனடைந்தனர். (தோராயமாக)

## பட்டியல் பழங்குடியினர் மேம்பாடு:

***“நமது பழங்குடி சமூகங்கள் செழிக்கும் போது இந்தியா முன்னேறும், பழங்குடி சமூகங்களின் நலனே எங்கள் முதன்மையான முன்னுரிமை” - பிரதமர் மோடி.***

சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டிலேயே முதன்முறையாக, பழங்குடி சமூகத்தின் கலை, கலாச்சாரம் மற்றும் சுதந்திரத்திற்கான செயல்பாடு மற்றும் நாட்டை கட்டியெழுப்புவதில் அவர்களின் பங்களிப்பு பெருமையுடன் நினைவுகூரப்படுவதுடன், அவர்கள் மிகப்பெரிய அளவில் கௌரவிக்கப்படுகிறார்கள்.

- 401 ஏகல்வ்யா மாதிரி உறைவிடப் பள்ளிகளில் (EMRS) 1.2 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் சேர்ந்துள்ளனர். EMRS-களில் பெண் மாணவர்களின் எண்ணிக்கை (60,815) ஆண் மாணவர்களை (59,255) விட அதிகமாக உள்ளது. EMRS-க்கு 38,000 ஆசிரியர்கள் மற்றும் துணைப் பணியாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர்
- பிரதான் மந்திரி ஜன்ஜாதி ஆதிவாசி நியாய மகா அபியான் திட்டத்தை (PM JANMAN) பிரதமர் தொடங்கி வைத்தார். குறிப்பாக, பாதிக்கப்படக்கூடிய பழங்குடியின குழுக்களின்

(PVTGs) ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக சுமார் 24,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் பிற பாரம்பரிய வனவாசிகள் (வன உரிமைகளை அங்கீகரித்தல்) சட்டம், 2006 (சுருக்கமாக FRA) வனத்தில் வசிக்கும் பட்டியல் பழங்குடியினர் மற்றும் பிற பாரம்பரிய வனவாசிகளுக்கு, அவர்களின் வன உரிமைகளை அங்கீகரித்து அவர்களுக்கு வழங்குவதற்காக பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது.
- மே 2014 வரை வழங்கப்பட்ட மொத்த சமூக உரிமைகள் 23,578 ஆக இருந்த நிலையில், 2014 முதல் ஜூன் 2023 வரையிலான காலகட்டத்தில் நாடு முழுவதும் 86,621 சமூக உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.
- 2014-15 (16.41 லட்சம்) உடன் ஒப்பிடுகையில், 2021-22ல் (27.1 லட்சம்) ST மாணவர்களின் சேர்க்கையில் 65.2% கணிசமான அதிகரிப்பு
- 2021-22ல் (13.46 லட்சம்), 2014-15ல் இருந்து (7.47 லட்சம்) பெண் ST மாணவர்களின் சேர்க்கையில் குறிப்பிடத்தக்க 80% அதிகரிப்பு
- 2022-23 நிதியாண்டுடன் ஒப்பிடும்போது, 2023-24 நிதியாண்டில் பழங்குடியினர் விவகார அமைச்சகத்திற்கான பட்ஜெட் ஒதுக்கீடு 70.69% அதிகரித்து ரூ. 12461.88 கோடி ஆக உள்ளது.
- 2023-24 நிதியாண்டுக்கான அட்டவணைப்படுத்தப்பட்ட பழங்குடியினருக்கான மேம்பாட்டு செயல் திட்டத்திற்கு (DAPST) ரூ.1,17,943.73 கோடி ஒதுக்கீடு
- பழங்குடியினர் விவகார அமைச்சகம் 32.22 லட்சம் பழங்குடியின மாணவர்களுக்கு நேரடி பலன் பரிமாற்றம் (DBT) மூலம் 1 ஏப்ரல் 2023 முதல் டிசம்பர் 27, 2023 வரை உதவித்தொகையை வழங்கியது.
- வன உரிமைச் சட்டத்தின் கீழ் 31.10.2023 வரை 1.8 கோடி ஏக்கருக்கு மேல் 23.43 லட்சம் நிலப் பட்டாக்கள் விநியோகிக்கப்பட்டன.

# 5. சிறுபான்மையினருக்கு அதிகாரமளித்தல்

மோடி அரசு, சிறுபான்மையினரின் நலன் மற்றும் மேம்பாட்டிற்காக, குறிப்பாக சமூகத்தில் பொருளாதார ரீதியில் நலிவடைந்த மற்றும் குறைந்த சலுகை பெற்ற பிரிவினர் ஆகியோரின், சமூக-பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறது. பிரதமர் மோடி தலைமையில் கடந்த 10 ஆண்டுகால நல்லாட்சியில் பல வரலாற்று சிறப்பு மிக்க நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சிறுபான்மையினருக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களின் பலன்கள் உண்மையில் உத்தேசிக்கப்பட்ட பயனாளிகளை சென்றடைவதை உறுதி செய்வதற்காக, இந்த அமைச்சகத்தின் பல்வேறு திட்டங்களின் கீழ் கல்வி உதவித்தொகை / உதவித்தொகை / திறன் நிதியுதவி உட்பட அனைத்தும் நேரடி பலன் பரிமாற்றம் (DBT) முறை மூலம் பயனாளிகளின் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

- சிறுபான்மை சமூகங்களின் நலனுக்கான பிரதமரின் புதிய 15 அம்சத் திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது.
- பிரதான் மந்திரி விராசத் கா சம்வர்தன் (PM VIKAS) திட்டம் - இதன் கீழ் 9,63,448 பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது (2023)
- பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம் (PMJVK) - சமூக சொத்துகளான உள்கட்டமைப்பு திட்டங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் - 49,000 பெரிய திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது.
- தேசிய சிறுபான்மையினர் மேம்பாட்டு மற்றும் நிதிக் கழகம் (NMDFC) - ரூ. 8,300 கோடிகளை 22.5 லட்சத்திற்கும் அதிகமான பயனாளிகளுக்கு வழங்கியுள்ளது, அவர்களில் 85%-க்கும் அதிகமான பயனாளிகள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
- ஹஜ் யாத்திரை 2023 - முதன்முறையாக, மெஹ்ரம் இல்லாத பெண் (LWM) திட்டத்தின் கீழ் ஹஜ் பயணத்திற்கு தனியாக விண்ணப்பிக்க

பெண்கள் அனுமதிக்கப்பட்டனர். 4000-க்கும் மேற்பட்ட பெண்கள் இதனால் பயனடைந்தனர்.

- இந்திய நாடாளுமன்ற வரலாற்றில், முத்தலாக் சட்டத்திற்கு எதிரான மசோதா சட்டமாக்கப்பட்ட ஆகஸ்ட் 1, 2019, ஒரு வரலாற்று சிறப்புமிக்க நாள். முத்தலாக் வழக்குகள் சுமார் 82 சதவீதம் குறைந்துள்ளது
- திறன் மேம்பாடு - 98,240 சிறுபான்மையின பெண்கள் பயன்பெற ரூ.1251 கோடி ஒதுக்கீடு (2019-2022)
- பிரதமர் மோடியின் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ், வெறும் 3 ஆண்டுகளில் 83 லட்சம் ஏழை மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

  (பெரும்பாலும் இஸ்லாமியர்கள்; அதையடுத்து கிறிஸ்தவர்கள்)

- சிறுபான்மை சமூகங்களைச் சார்ந்த பெண்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் - 3 ஆண்டுகளுக்கு ரூ.1028 கோடிக்கு மேல் வழங்கப்பட்டது. (2019-2022) .
- பிரதமர் - அனைவருக்கும் வீட்டு வசதி (கிராமப்புற) திட்டத்தின் கீழ், 30% பயனாளிகள் முஸ்லிம் பெண்கள் (மொத்தமுள்ள 2.94 கோடி பயனாளிகளில்)
- பிரதமர் கிசான் சம்மன் நிதி (PM SAMMAN NIDHI) திட்டத்தின் மூலம் 33% முஸ்லிம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர் (மொத்தமுள்ள 11.27 கோடி பயனாளிகளில்)
- 2014 வரை, 4.5 சதவீத முஸ்லிம்கள் மட்டுமே அரசு ஊழியர்களாக இருந்தனர், கடந்த ஒன்பது ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 10.5 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- முத்ரா திட்டம் – வழங்கப்பட்ட 44.46 கோடி கடன்களில் 13.33 கோடி கடன்கள் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- சிறுபான்மை சமூகங்களுக்கு 5 கோடிக்கும் அதிகமான கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. 50% பயனாளிகள் பெண் மாணவர்கள்.

- ஏழை முஸ்லீம் பெண் குழந்தைகள் பள்ளி இடைநிற்றல் விகிதம் 70% (2014) -லிருந்து 30%-ஆக குறைந்தது.
- பிரதமர் ஷாதி ஷாகன் திட்டம் (PM Shaadi Shagun)- முஸ்லீம் பெண்களுக்கு மட்டுமானது. தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் தகுதியான விண்ணப்பதாரர்களான பட்டதாரி பெண்களுக்கு, அரசு அவர்களின் திருமணத்தின் போது ரூ.51,000 வழங்குகிறது.
- "முத்ரா யோஜனா", "ஜன் தன் யோஜனா", "ஆயுஷ்மான் பாரத் யோஜனா", "கிசான் சம்மன் நிதி", "உஜ்வாலா யோஜனா", "ஸ்வச் பாரத் மிஷன்", அத்துடன் குடிநீர் மற்றும் மின்சாரத் திட்டங்களில் சுமார் 22 முதல் 37 சதவிகித பயனாளிகள் பலவீனமான மற்றும் பிற்படுத்தப்பட்ட சிறுபான்மையின சமூகத்தினர் ஆவர்.

இஸ்லாமிய நாடுகளுடன் பாரதத்தின் உறவுகள் முன்னெப்போதையும் விட சிறப்பாக உள்ளது. பிரதமர் மோடியின் தனிப்பட்ட இராஜதந்திர தொடர்பு பாரதத்துக்கு சிறந்த பலன்களை அளித்துள்ளது மற்றும் பிரதமர் மோடியின் வளர்ச்சி மற்றும் நல்லாட்சியை முஸ்லிம் நாடுகள் பாராட்டுகின்றன. வரலாற்றில் முதன்முறையாக, முஸ்லிம் நாடுகளின் மிக உயர்ந்த சிவிலியன் விருதுகளை நமது பிரதமர் பெற்றார்.

- ஏப்ரல் 2016-இல், சவூதி அரேபியாவிற்கு விஜயம் செய்தபோது, பிரதமர் நரேந்திர மோடிக்கு சவுதி அரேபியாவின் உயரிய குடிமக்கள் கவுரவமான – 'மன்னர் அப்துல்அஜிஸ் சாஷ்' வழங்கப்பட்டது.
- ஆப்கானிஸ்தானின் உயரிய குடிமக்கள் கௌரவமான 'காஜி அமீர் அமானுல்லா கான் ஸ்டேட் ஆர்டர்' பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டது.
- 2018-ஆம் ஆண்டில், பிரதமர் நரேந்திர மோடி பாலஸ்தீனத்திற்கு வரலாற்று சிறப்புமிக்க விஜயம் செய்தபோது, அவருக்கு பாலஸ்தீன அரசின் 'கிராண்ட் காலர்' விருது வழங்கப்பட்டது.
- 2019-இல், பிரதமருக்கு 'ஆர்டர் ஆஃப் சயீத்' விருது வழங்கப்பட்டது. இது ஐக்கிய அரபு எமிரேட்ஸின் உயரிய குடிமக்கள் கௌரவமாகும்

- 'நிஷான் இசுதீன் சிறப்புமிக்க ஆட்சியின் ஆர்டர்' வெளிநாட்டுப் பிரமுகர்களுக்கு வழங்கப்படும் மாலத்தீவின் உயரிய கவுரவம் 2019-இல் பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டது.
- பிரதமர் மோடி 2019-இல் புகழ்பெற்ற 'கிங் ஹமாத் ஆர்டர் ஆஃப் ரினைசன்ஸ்' விருதைப் பெற்றார். இந்த கௌரவத்தை பஹ்ரைன் வழங்கியது.
- பிரதமர் நரேந்திர மோடி எகிப்தின் உயரிய அரசு விருதான - 'ஆர்டர் ஆஃப் தி நைல்' – ஐ, அதிபர் அப்தெல் ஃபத்தாஹ் எல்-சிசியிடம் இருந்து பெற்றார்.

# முடிவுரை

"இந்து தர்மம்" – "இந்து" என்ற சொல் சனாதனம் அல்லது நித்தியமான அனைத்தையும் குறிக்கிறது; "தர்மம்" என்ற சொல் "நிலைத்திருப்பது" என வரையறுக்கப்படுகிறது. இந்து தர்மம் என்பது ஒவ்வொரு அம்சத்தையும் நித்தியமாக ஆதரிக்கும் அனைத்தையும் உள்ளடக்கியது - தனிநபர், குடும்பம், குறிப்பிட்ட சமூகம், பரந்த சமூகங்கள் மற்றும் இயற்கையும் இதில் அடங்கும்.

– உலக இந்து காங்கிரஸ் மாநாட்டின் போது
டாக்டர் மோகன் ஜி பகவத் (2023)

பழங்காலத்தில் இருந்த நம் முன்னோர்கள் **"கிறின்வந்தோ விஸ்வம் ஆராயம்"** என்ற மகத்தான கொள்கையினை வெளிப்படுத்தி இருந்தனர், இது "முழு உலகையும் மிகச்சிறந்ததாக ஆக்குவோம்" என்றும்; **"வசுதைவ் குடும்பகம்"** என்றும் எளிமையாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது முழு உலக மக்களையும் ஒரே கூட்டுக் குடும்பம் எனக் குறிக்கிறது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, இது நமது புகழ்பெற்ற நாடான பாரதத்தின் அடையாளத்தையும் பண்பாட்டுப் பங்களிப்பையும் உலகின் பிற பகுதிகளுக்கு வழங்கியது.

நமது மதிப்பிற்குரிய பிரதமர் திரு நரேந்திர மோடி, "இந்து தர்மத்தின்" கொள்கைகளை தனது சிறந்த ஆட்சியின் மூலம் நமது நாட்டிலும்; உலக அரங்கிலும் நிலைநிறுத்துகிறார்; அவற்றை மதிக்கிறார், கடைப்பிடிக்கிறார் மற்றும் முன்னெடுத்துச் செல்கிறார்.

2024 தேர்தல் பாரதிய ஜனதா அல்லது பிரதமர் மோடிக்கு மட்டுமல்ல. இது நமது கூட்டு எதிர்காலத்திற்கான ஒரு முக்கிய தேர்தலாகும். 140 கோடி மக்கள்தொகை கொண்ட நாம், பிரதமர் மோடியையும், நாட்டை முன்னேற்றுவதற்கான அவரது உறுதியான முயற்சியையும் முழு மனதுடன் ஆதரிக்கிறோம் என்பதை முழு உலகிற்கும் வெளிப்படுத்தி நிரூபிக்க வேண்டியது கட்டாயம் ஆகும். இது, நம் நாட்டை அடுத்த கட்டத்திற்கு உயர்த்துவதற்குத் தேவையான திறன் மற்றும் அதிகாரத்தை அளிக்கும்.

ஒவ்வொரு தனிநபரும், நிறுவனமும் அவர்கள் அளிக்கும் வாக்குறுதிகளாலும், அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற அவர்கள் செய்யும் செயல்கள் வழியாகவும் அளவிடப்படுகிறார்கள். கடந்த 10 ஆண்டுகளில், மோடி அரசாங்கம், குறிப்பாக பொருளாதாரத்தில் பின்தங்கிய நமது மக்களிடையே, வாழ்க்கை நிலை மாற்றம் மற்றும் அதிகாரமளித்தல் போன்ற பல நலத்திட்டங்கள், முன்னெடுப்புகள், திட்டங்கள் மற்றும் திட்டப்பணிகளை வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது. பிரதமர் மோடி, கடந்த 23 ஆண்டுகளாக தனது விடாமுயற்சியின் மூலம் "எல்லாவற்றையும் விட நாட்டின் நலனும் மேம்பாடும் முதன்மையானது" என்ற நெறிமுறைகளில் அசைக்க முடியாத தனது ஈடுபாட்டை நிரூபித்துள்ளார்.

பிரதமர் மோடி, நமது நாட்டுக்கு சேவை செய்வதில் ஏழு முக்கிய பாத்திரங்களை ஏற்று செயல்படுகிறார்: அவை யாவன:

1. **ஏழைகளுக்கு மகனாக**
2. **குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் அக்கறையுள்ள தந்தையாக**
3. **இளைஞர்களுக்கு வழிகாட்டியாக**
4. **தீவிர தேசபக்தி கொண்ட படைவீரராக**
5. **அர்ப்பணிப்புள்ள கட்சி ஊழியராக**
6. **சீர்திருத்தவாதியாக**
7. **சர்வதேச அளவில் பாரதத்தின் புகழ்பெற்ற தலைவராக**

அவரது 10 ஆண்டு கால வலுவான அர்ப்பணிப்பு மற்றும் திறமையான நல்லாட்சி நிர்வாகத்தை பாராட்டுவதற்கு நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். இந்த புகழ்மாலை, பாரதத்தின் 140 கோடி குடிமக்களுக்குப் பொருத்தமான பரிசாக அமையும். நமது மாண்புமிகு பிரதமர் மோடியின் பல்வேறு முன்னெடுப்புகளிலும், சவால்களை சமாளித்து மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திய அவரது அயராத பணிகளின் ஒவ்வொரு கட்டத்திலும், அவரோடு துணைநின்று உறுதியுடன் ஆதரவளித்த அனைவருக்கும் ஒரு பதில் மரியாதை அளிக்க வேண்டும் என்கிற உத்வேகமே இந்தப் புத்தகத்தை எழுத என்னைத் தூண்டியது.

நன்றி!

**பாரத் மாதா கி ஜெய்.**

# நமது பிரதமர்
# நமது வருங்காலம்





## நமது நாடு
## நமது வாக்கு



ISBN 979-8-89277-942-5

9 798892 779425

notionpress.com